தரம்

# 13 கிறிஸ்தவம்

## ஆசிரியர் வழிகாட்டி

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)




சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

**தேசிய கல்வி நிறுவகம்**

மஹரகம, ஸ்ரீ லங்கா

Web: www.nie.lk Email: info@nie.lk

**அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**

# கிறிஸ்தவம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 13

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

மஹரகம

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

கிறிஸ்தவம்

தரம் 13

ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு 2018

தேசிய கல்வி நிறுவகம்

ISBN

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால்
நுகேகொட, கங்கொடவில, உடஹமுள்ள புகையிரத வீதி, இல 44 இல்
அமைந்துள்ள நியோ கிராபிக் (தனியார்) நிறுவனத்தில்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.



## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

இலங்கை மாணவர்களுக்குத் தரமானதொரு கல்வியைப் பெற்றுக்கொடுத்தல் எனும் இலக்கைக் கொண்ட கல்வி அமைச்சின் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஆசிரியர்களிடமிருந்து கிடைக்கின்ற பங்களிப்பு மகத்தானதாகும். துரிதமாக மாற்றமுறும் ஒரு சமூகத்தில் நவீன மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கக்கூடிய பிரஜைகளை உருவாக்குவதில் ஆசிரியரின் பொறுப்பு மகத்தானதாகும்.

காலத்தின் தேவைகருதி இற்றைப்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தை வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் அமுல்படுத்துவதில் ஆசிரியருக்குக் கைகொடுக்கும் ஆசிரியர் வழிகாட்டியானது கல்வியில் மிக முக்கியமானதொரு சாதனமாகும். உலகக் கல்வி நோக்கங்களை நிறைவுசெய்யும் நோக்குடன் அரசு கொண்டுசெல்லும் செயலொழுங்குகள் வெற்றியளிப்பது வகுப்பறைக்குள் ஏற்படுகின்ற விழிப்புணர்ச்சி மூலமேயாகும். இதற்காக ஆசிரியரை பலப்படுத்துவதற்கு கல்வி அமைச்சானது தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்கின்றது.

அறிவு மேலோங்கியுள்ள ஒரு சமூகத்தில், புதிய கல்வி ஆய்வுகளுக்குத் தூண்டுதல் வழங்கி, பாரம்பரிய அறிவு ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட சரியான சமநிலை ஆளுமையுடன்கூடிய எதிர்கால சந்ததியொன்றைக் கட்டியெழுப்பும் இலக்கை நோக்கிப் பயணிக்கும் ஆசிரியர்களுக்கு சிரம் பணிகிறேன். உலகின் ஏனைய பிரபல்யமிக்க நாடுகளுடன் போட்டியிடக்கூடிய மாணவர்களுக்கு, எமது தாய்நாட்டைச் சிறந்ததொரு களமாக்குவதில் ஆசிரியர்களின் ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாசிரிய வழிகாட்டியை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட வளவாளர்களுக்கும் தேசிய கல்வி நிறுவகத்திற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், அச்சிட்டு விநியோகிக்கும் நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு வழங்கிய கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

# முன்னுரை

சமுதாய முன்னேற்றத்துக்காகப் பெரும் சேவையாற்றுவோரில் ஆசிரியர்கே முன்னிலை வகிக்கின்றனர். சுயமான வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற் மாணவர்களுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே.

2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கிணங் உயர்தரத்திலான கற்பித்தல் செயற்பாட்டை வெற்றிகரமாக மேற்கொள் ஆசிரியர்களுக்கு வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இவ்வாசிரிய வழிகாட்டியை அச்சிட்டு விநியோகிப்பதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்கள நடவடிக்கை மேற்கொள்கின்றது. தேசிய கல்வி நிறுவகம்மூலம் ஆக்கப்பட்டுள் இவ்வாசிரியர் வழிகாட்டியானது, மாணவர்களுக்குச் சிறந்ததொரு கற்றல் சூழ அமைத்துக் கொடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை ஆசிரியர்களாகி உங்களுக்குப் பெற்றுத் தரும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இம்முயற்சி, ஒரு சிறந்த பெறுபேற்றைத் தருவது இவ்வாசிரியர் வழிகாட்டியை பயன்படுத்திப் பெறும் அனுபவங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளி பயன்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சியின் மூலமேயாகும். இந்நற்செயலுக்கா அர்ப்பணிக்கக் கூடிய உங்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ.டீ. பத்மினி நாளிகா**

*கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,*

*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,*

*இசுருபாய,*

*பத்தரமுல்ல.*

28.03.2018

## பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி மாபுல்கொட சுமனரத்ன தேரர்

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்.

# கலைத்திட்டக் குழு

ஆலோசனை : கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்

இணைப்பாளர் : அருட்பணி. N. காமினி பெரேரா இ.ச.
உதவி விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்.
அருட்பணி. எஸ். அந்திரியாஸ் ஏ. பர்ணாந்து அ.ம.தி.
உதவி விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்.

எழுத்தாளர் குழு :

- திருமதி. எஸ்தர் பத்மினி பெரேரா, முதுமாணி,
  ஆசிரிய ஆலோசகர், களனி கல்வி வலயம்.
- திரு. எஸ். ஜீ. கே. டி. எல். சீ. பிரசாத், முதுமாணி,
  உப அதிபர்,
  புனித ஜோசப் ஆண்கள் பாடசாலை, கொழும்பு -14.
- திரு. டப்ளியு. ஜே. பி.ே ஐ. எம். டி. பெரேரா
  ஆசிரிய ஆலோசகர், கொழும்பு கல்வி வலயம்,
  கொழும்பு - 13.
- அருட் சகோதரி. நிமல்கா,முதுமாணி,
  ஆசிரியர்,
  புனித ஜோசப் ஆண்கள் பாடசாலை, நுகேகொட.
- திருமதி. எல். நிலந்தி டீ சில்வா
  மெதடிஸ் மகா வித்தியாலயம்,
  மொறட்டுவ.
- திருமதி. றாடீகா சமந்தி மென்டிஸ்
  புனித தோமஸ் வித்தியாலயம்,
  மௌண்ட்லவெனியா.
- அருட்பணி. ஜுட் தஸநாயக்க, முதுமாணி,
  விரிவுரையாளர்,
  கல்வியியற் கல்லூரி, பிங்கிரியா.
- செல்வி. டி. ஐ. ஜோசப்,
  ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம், கொழும்பு
- செல்வி. பிரான்சிஸ்கா ராஜயோகினி, முதுமாணி,
  புனித ஜோசப் பெண்கள் பாடசாலை, கொழும்பு – 14.
- செல்வி. ஏஞ்சல் மேரி
  ஆசிரியை, புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயம்,
  கொழும்பு 13.
  திருமதி. தி. ஜெ. போல் அன்ரனி, கலைமாணி,
  ஓய்வு பெற்ற அதிபர்.

ஆலோசகர் குழு

- அதிமேதகு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை
  தலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலியக் கல்வி ஆயர் மன்ற ஆணைக்குழு
- அதிமேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை
  உப தலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலியக் கல்வி ஆயர் மன்ற ஆணைக்குழு
- அருட்பணி. ஐவன் பெரேரா
  தேசிய பணிப்பாளர், கத்தோலிக்க பாடசாலைகள்.
- வண. தயா செல்டன் வெலிக்கட ஆராய்ச்சி,
  பணிப்பாளர்,

  புனித யோசேவாஸ் இறையியல் கல்வியகம்,

  பொரளை.
- அருட்பணி. ஜோர்ச் எல். பெர்னான்டோ,
  உதவிக் கல்விப் பணிப்பாளர்,
  சமயப் பிரிவு – கல்வி அமைச்சு.

  இசுருபாய.
- அருட்பணி. கிறிஸ்தோப்பர் பால்ராஜ்
  அதிபர்,
  புனித தோமஸ் கல்லூரி,

  பண்டாரவளை.
- அருட்பணி. டப்ளியு. பி. எபநேசர் ஜோசப்
  பொதுச்செயலாளர்,
  இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்.
  கொழும்பு - 07
- பேராசிரியர். சேர்லி லால் விஜேசிங்க,
  விரிவுரையாளர்,
  களனிப் பல்கலைக்கழகம்
- அருட்பணி. பியல் ஜானக பர்னாந்து
  தேசிய பணிப்பாளர், திருவிவிலிய, மறைக்கல்வி, கல்வி ஆணைக்குழு

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

கத்தோலிக்க நெறிக்கு ஏற்ப வளமான வாழ்வுக்கு அவசியமான தேர்ச்சிகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்வியுடன் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு இடமளித்து ஆசிரிய வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவு மையம் சார்ந்த பரீட்சை முறைகளின் கீழ் சிறந்த பெறுபேறுகளையும் அறிவையும் ஊட்டுகின்ற கல்வி முறையானது சிறந்தது அல்ல என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். கல்வியின் மூலம் உள்ளமும் கைகளும் ஊட்டம் பெற வேண்டும். இந்த இலக்கை நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியில் இவ் ஆசிரியர் வழிகாட்டி நூலானது தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் வழிகாட்டியானது பாட நூலுக்கும் பாடத்திட்டத்திற்கும் ஏற்ப எழுதப்பட்டுள்ளது. எனவே கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை இந்த வரையறைக்குள் ஒழுங்கமைத்துக் கொள்வது எமது கடமையாகும்.

- பாடப் பிரவேசமானது மிக முக்கியமானதாகையால் மாணவரின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பாடத்தை ஆரம்பியுங்கள்.
- பாடப் பிரவேசத்திற்கும் பாட விருத்திக்கும் அவசியமான தர உள்ளீடுகளைப் பயன்படுத்துங்கள்.
- மாணவரைச் சிறு குழுக்களாகப் பிரித்து, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உசிதமான இடத்தினைத் தெரிவு செய்யுங்கள்.
- கற்றல் பேறுகளில் மாணவரின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் செயற்படுங்கள்.
- மாணவரின் விசுவாசத்தை விருத்திசெய்வதற்கு உறுதுணையாக இருங்கள்.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் கட்டாயமானதல்ல. அதற்கு வேறு முறைகளையும், பொருத்தமான வகையில் பாவிக்கலாம். இருப்பினும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் முக்கியமானதாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் கிறிஸ்தவ மத விழுமியங்களை வளர்ப்பதிலும், பிரயோகிப்பதிலும் அதிக கவனத்தைச் செலுத்துங்கள்.

பாட ஆரம்பம் முதல் இறுதிவரை கணிப்பீடு செய்வதுடன் ஆற்றல், ஆற்றலற்ற நிலைக்கேற்ப பின்னூட்டல் மற்றும் முன்னூட்டலைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். நேர அட்டவணை தயாரிக்கும் போது இரண்டு பாடவேளைகளும் அடுத்தடுத்து அமையாது பாடத்தை நெறிப்படுத்துவது உங்களுடைய பொறுப்பாகும். பாடத்திற்கு எதிர்ப்பார்க்கப்படும் கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகளுக்கு ஏற்றவாறு பாடத்தைத் தயார்செய்யுங்கள். மதிப்பீட்டின்போது புள்ளி வழங்கும் முறைகளை மாணவருக்கு முன்னரே அறிவியுங்கள். நீங்கள் மாணவருக்கு வழங்கும் பயிற்சிகளைப் பிழையின்றிப் பரிசீலனை செய்துகொள்ளுங்கள்.

பாடங்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுச்சூழல் என்ற பகுதியானது பெற்றோர் முதியோரின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுதல் உகந்தது. அதற்கான அறிவுரைகளை அதிபர், பாட ஆசிரியர் மூலமாகப் பெற்றோர்களுக்கும், முதியோருக்கும் வழங்குதல் வேண்டும்.

சமயத்துறை - கத்தோலிக்க திருமறை

தேசிய கல்வி நிறுவகம்.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி | **iii** |
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | **iv** |
| முன்னுரை | **v** |
| பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | **vi** |
| கலைத்திட்டக் குழு | **vii-viii** |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | **ix** |
| தேசிய இலக்குகள், அடிப்படைத் தேர்ச்சிகள் | **xi-xii** |
| பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | **xiii** |
| அறிமுகம் | **xiv** |
| பாடத்திட்டம் | **xv-xvi** |
| கிறிஸ்தவ மறை | **xvii-xxv** |
| கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல் | **1-103** |

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏறபடுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |

2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

**7.** "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை *(*2003)

## பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. தமது வாழ்வை உருவாக்கத் திருவிவிலியத்தை ஆதாரமாகக் கொள்வார்.
2. படைப்பிலே மிக உன்னத படைப்பான மனிதனைப் படைத்தவரை அறிந்துக் கொள்வார்.
3. கிறிஸ்துவினுடைய தூதுப் பணியையும் அவருடைய அனுபவங்களையும் ஏற்றுக் கொண்டு முழுமையான கிறிஸ்தவராக வாழ்வார்.
4. இறைவார்த்தை, அருளடையாளங்கள், பொதுவழிபாடுகள் வழியாக ஊட்டம் பெற்று கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்றுபகர்வார்.
5. மறையைக் கற்றலும் வாழ்தலும் ஒரே செயன்முறை என்பதை விளங்கிக் கொள்வார்.
6. இறைகட்டளைகளையும், மலைப்பொழிவின் படிப்பினைகளையும் அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ விழுமியங்களைத் தமது வாழ்வில் வாழக் கற்றுக் கொள்வார்.
7. செபத்தின் வல்லமையால் ஊட்டப்பெற்று இறை வரப்பிரசாதங்களை அனுபவிப்பார்.
8. தமது சமூகத்தில் பல்வேறு செயற்பாடுகளால் கிறிஸ்துவின் அளவு கடந்த அன்பைப் பரப்புவார்.
9. தம்மைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலானது இறைவனால் வழங்கப்பட்ட கொடை என்பதை உணர்ந்து, அதனைப் பாதுகாத்து, விருத்தி செய்வதற்கான ஆற்றலையும் அறிவையும் பெறுவார்.
10. ஒழுக்க விழுமியங்களையும், மனிதமாண்பையும் பேணிக்காத்து கிறிஸ்துவுக்குரிய பண்புகளோடு உயிருள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுவார்.
11. கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாப்பதோடு, ஏனைய மதங்களையும் மதித்து வாழப் பழகுவார்.
12. இலங்கைப் பிரஜை என்ற வகையில் தமது நாட்டின் மீது பற்றையும், மதிப்பையும் வளர்த்துக்கொள்வார்.

## விடயத்திற்குரிய தேர்ச்சிகள்

1. திருவிவிலியம் தொடர்பான முழுமையான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பயனுள்ள முறையில் பயன்படுத்துவார்.
2. இறைவெளிப்பாட்டைத் தமது வாழ்வில் செயற்படுத்தும் முகமாக விசுவாச வாழ்வு வாழ்வார்.
3. அருளடையாளங்கள் வழியாகக் கிறிஸ்துவுடன் ஒன்றித்து முழுமையான கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்றுபகர்வார்.
4. இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பு வாழ்வு வாழ்வார்.
5. செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும், மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வார்.

# அறிமுகம்

சிறந்த பண்பாடுள்ள நல்லொழுக்க நெறிகளைக் கொண்ட பிரஜைகளை உருவாக்குவதே ஒவ்வொரு சமுதாயத்தினதும் குறிக்கோளாகும். இக் குறிக்கோளை நிறைவேற்ற ''மறை'' பாரிய பணியினை ஆற்றிவருகின்றது. சமய அடிப்படையில் வாழும் ஒவ்வொருவரும் தனது வாழ்வில் சிறந்த ஒழுக்க விழுமியங்கள் பழக்க வழக்கங்களைத் தன்னகத்தே கொண்டவராக விளங்குவர். சமயப் போதனையை வழங்கி அதன் அடிப்படையில் வாழ்வைக் கட்டி எழுப்பும் மனித சமூகத்தினை உருவாக்குவதில் மறைக்கல்வியின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாகும்.

பாடசாலைக் கலைத்திட்டத்தின் படி, உள்ளடக்கப்பட்ட பாடங்களிலே மனித வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக விளங்குவது மறைக்கல்வியே ஆகும். ஏனெனில் மறைக் கல்வியில் கற்பிக்கப்படுவது, எவ்வாறு வாழ்வினை வெற்றிக் கொள்வது என்பதை விட எளிமையான வாழ்க்கை முறையினைக் கட்டியெழுப்பி வழக்கப்படுத்திக் கொள்வது எவ்வாறு என்பதனையே ஆகும். அவ்வாறான வாழ்க்கை நெறியின் மூலம் கிடைக்கும் பலன்கள் இவ்வுலக வாழ்வை விட நாம் நம்பியிருக்கும் நித்திய வாழ்விற்கான தேவையாக அமையும்.

கத்தோலிக்கரான எமது மறையானது கத்தோலிக்க மறையாகும். இம் மறையினை 11 வருடங்கள் கற்று 12ம் தரத்திலே கிறிஸ்தவ நெறியினைக் கற்பதற்கு பிரவேசிக்கும் மாணவ மாணவிகளுக்கு இம்மறை தொடர்பாக மேலும் பல விடயங்களைக் கற்பதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இங்கே கிறிஸ்தவ மறையானது முதல் 11 ஆண்டுகளாகக் கற்றதனை விட ஆழமான முறையில் கற்பதற்கு க.பொ.த உயர்தர கற்கை நெறிக்கு உட்பிரவேசிக்கும் மாணவ மாணவிகளுக்கு அரிய வாய்ப்பாக அமைகிறது.

இக் குறிக்கோளினை நிறைவு செய்யும் நோக்கோடு இப் பாடநெறியானது அமைக்கப்பட்டுள்ளது. இப் பாடப் பரப்பினூடாக 10 தேர்ச்சிகளின் கீழ் 30 தேர்ச்சி மட்டங்கள் நிரல் படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் 15 தேர்ச்சி மட்டங்கள் 5 தேர்ச்சிகளின் கீழ் 12ஆம் தரத்திலும் ஏனைய 15 தேர்ச்சி மட்டங்கள் 5 தேர்ச்சிகளின் கீழ் 13ம் தரத்திலும் கற்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

க.பொ.த உயர் தர வகுப்புகளுக்கு உட்பிரவேசிக்கும் கட்டிளமைப் பருவத்தில் இருக்கும் மாணவ மாணவிகள் தமது வாழ்க்கையின் ஊடாக கிறிஸ்துவிற்குச் சான்று பகர, சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றி கொண்டு, கிறிஸ்து மைய வாழ்வினை வாழ்வதற்கு உயர்தர மறைக்கற்கை நெறியின் ஊடாக வழி சமைக்கப்படுகின்றது.

## பாடத்திட்டம்

1. 6.0 : அருளடையாளங்களினால் வாழ்வடைவார்.

    6.1 : அருளடையாளங்களில் திருமுழுக்கு அழைப்பு வழியாக எமது கடமைகள், பொறுப்புக்ளை உண்ர்ந்துகொள்வதோடு அதைச் செயலாக்கவும், சமூக நற்பணிகளில் ஈடுபடுவதன் மூலமும் திருமுழுக்கு அழைப்பிற்குச் சான்று பகருவோம்.

    6.2 : வாழ்வழிக்கும் உணவாகிய நற்கருணை விருந்தினால் ஊட்டம் பெற்று இறை இயேசுவை அனுபவிக்கவும், பிறருடன் இணைந்து தியாகம், அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

2. 7.0 : தாம் எதிர்கொள்ளும் சவால்களைத் தூய ஆவியின் வல்லமையால் வெற்றிகொண்டு நம்பிக்கைக்குச் சான்று பகர்வார்

    7:1 : தூய ஆவியாரின் வல்லமையைப் பெற்றுக்கொள்வதோடு தொடக்க திருச்சபையில் தூய ஆவியின் செயற்பாடுகளைப் பற்றிக் கற்றறிவதோடு நாம் திருச்சபைக்கும், எமக்கும் எதிராக எழும் சவால்களை வெற்றி கொள்ளத் தயக்கமின்றி நற்செய்தியைப் போஷிக்கவும் முன்வருவோம்.

    7.2 : கத்தோலிக்கத் திருச்சபை எதிர்கொண்ட சவால்கள், எழுந்த பேதகங்கள் தொடர்பான தகவல்களைக் கற்று எமது நம்பிக்கைக்கு எதிராக எழும் சவால்களை வெற்றிகொள்வதோ்டு பிறருடன் ஒத்துழைப்புடன் செயற்படுவோம்.

    7:3 : திருச்சபைத் தந்தையர்கள்தொடர்பான தகவல்களைத் தேடியறிந்து திருச்சபையின் மறை உண்மைகளின்படி வாழ்வதோடு பிறருடைய நம்பிக்கையை வளர்ப்பதற்கு ஒத்தழைப்புடன் செயற்படுவோம்.

    7:4 : திருச்சபைக்கு எதிராக எழுந்த பேதகங்கள் அவற்றை வெற்றி கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பொதுச்சங்கங்கள் தொடர்பான தகவல்களைத் தேடியறிந்து தூய ஆவியின் துணையோடு மறைப்பேதங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்போம்.

3. 8.0 : பயணம் செய்யும் திருச்சபையின் வழிநடத்தலுக்குத் தூய ஆவியின் துணையைப் பெற்றுக்கொள்வார்.

    8.1 : ஆரம்பப் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை கல்வி முன்னேற்றத்திற்குத் திருச்சபை ஆற்றிய பணிகள், பங்களிப்புக்கள் பற்றி இப்பாடத்தினூடாகக் கற்றுக் கொள்வோம்

    இதன் மூலம் ஒவ்வொரு கிறஸ்தவனும் கல்வியறிவு அற்றவர்களுக்கு கல்வியறிவைப் பெற்றுக் கொடுத்தல் தமது பொறுப்பு என்பதை உணர்ந்து செயற்படுவதோடு சமூக முன்னேற்றத்துக்கும் பிறருடன் இணைந்து செற்படுவோம்.

    8.2 : புதிய சிந்தனைகளுக்கு வழிவகுத்த கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் தூய அகுஸ்தீனார் தூய அக்குவைனாசின் வாழ்வையும் அவர்கள் ஆக்கங்களையும் கற்றுத் திருச்சபையின் புதிய சிந்தனை மாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வருவோம்.

    8.3 : இலக்கியத்துறைக்குத் திருச்சபை ஆற்றிய பங்களிப்பை நன்கு விளங்கிக்

கொள்வதோடு நூலாக்கம், இசை, கட்டிடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றில் பங்களிப்பச் செய்த முறையைத் தமதாக்கிக் கலைத்துறை வளர்ச்சிக்கு எமது ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்குவோம்.

9. 9.0 : இலங்கையில் கிறிஸ்தவ தனித்துவத்தின் மூலம் நற்செய்தியின் பணியாளராகச் சான்று பகர்வார்.

9:1 : ஆசிய நாடுகளில் கிறிஸ்தவத்தின் வரலாற்றை நன்கு ஆய்வு செய்து அங்கு கிறிஸ்நவம் பரவிய விதம் பற்றிய தகவல்களைச் சேகரித்து நாமும் ஏனையோருக்கு நற்செய்தியை எடுத்துச் செல்லுவோம்

9.2 : போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்வருகையினால் இலங்கையில் கிறிஸ்தவம் பரவி வளர்ச்சியடைந்த முறையும் எதிர்கொண்ட சவால்களும் வெற்றி கொண்ட முறைகளையும் பற்றி நன்குகற்று இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வோம்.

9:3 : சுதந்திர இலங்கையில் கிறிஸ்தவம் தொடர்பான தகவல்களைச் சேகரித்துத் துறவற சபைகள் மேற்கொண்ட பணிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து நாமும் மறைப் பணியோடு கூடவே பிறர் நலப் பணிகளை மேற்கொள்வோம்.

10. 10.0 : மனித மாண்பைப் பாதுகாப்பதோடு வேற்றுமையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்பார்.

10.1: திருச்சபையின் சமூக படிப்பினைகள் தொடர்பான தகவல்களை அறிந்து மனித மாண்பு தொடர்பான திருச்சபையீன் படிப்பினைகளை எமது வாழ்வாக்குவதோடு மனித மாண்பைப் பேணும் செயற்பாடுகளில் பிறரோடு இணைந்து கொள்வோம்.

10:2: கிறிஸ்தவ சபைகளின் நோக்கம், தோற்றம், அவற்றின் வளர்ச்சி தொடர்பான தகவல்களைச் சேகரித்து அவற்றின் நல்ல பண்புகள் சமூகக் கருத்துக்கள் என்பவற்றை முன்மாதிரியாகக் கொண்டு பிறரோடு ஒன்றித்துச் செயற்படுவோம்.

10:3: கிறிஸ்தவ சபைகளைப் பற்றி நன்கு அறிந்து கொண்டு நாம் பல்சமய உரையாடல்கள் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஒற்றுமையாக வாழ்வோம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 6.0 அருளடையா-ங்களினால் ழ்வடைவார். | 6.1. திருமுழுக்கு அழைப்பு வழியாகத் தமது கடமைகளையும் பாறுப்புக்களையும் உரிய முறையில் நிறைவேற்றுவார். | • இயேசுவின் திருமுழுக்கு<br>மாற் 1:11<br>திருப்பாடல் 2:7<br>எசா 42:1 | • திருமுழுக்கு அழைப்பின் வழியாக நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.<br>• திருமுழுக்குப் பெற்ற ஒருவர், குரு, இறைவாக்கினர், ஆயன் ஆகிய பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• திருமுழுக்கு அழைப்பின் வழியாக நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பற்றித் திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• திருமுழுக்கு அழைப்பிற்குச் சான்று பகர்வார்.<br>• திருமுழுக்கு அழைப்பின் வழியாகச் சமூக சேவையில் ஈடுபடுவார். | 15 |
| | 6.2 நற்கருணை விருந்தினால் ஊட்டம் பெற்று அர்ப்பணிப்புடன் வாழ்வார். | • வாழ்வளிக்கும் உணவு<br>- யோவா 6:51-58<br>• நற்கருணையை ஏற்படுத்துதல்<br>- மத் 26: 26-28<br>- மாற் 14: 22-24<br>- லூக் 22: 14-20<br>- 1கொரி 11: 23-25<br>• தகுதியுடன் நற்கருணையைப் பெற்றுக் கொள்ளல்<br>- 1கொரி 11:27-32 | • வாழ்வளிக்கும் உணவு தொடர்பான தகவல்களைத் திரட்டுவார்.<br>• திவ்விய நற்கருணையில் நம்பிக்கை கொள்ளவேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• வாழ்வளிக்கும் உணவு தொடர்பாகத் திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• தகுதியுடன் நற்கருணையை உட்கொள்வார்.<br>• பிறருடன் இணைந்து அர்ப்பணிப்-புடனும் தியாகத்துடனும் செயற்படுவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 7.0 தாம் எதிர்கொள்ளும் சவால்களைத் தூய ஆவியின் வல்லமையால் வெற்றிகொண்டு நம்பிக்கைக்குச் சான்று பகர்வார். | 7.1 தூய ஆவியின் வல்லமையைப் பெற்று நிறைவாக வாழ்வார். | • தூய ஆவியின் வருகை திப 2:1-4:1<br>• தொடக்க திருச்சபையின் பண்புகள்<br>- திப 2:42-47<br>- 4:32-37<br>• திருத்தொண்டர்களை நியமித்தல் திப 6:1-7<br>• மறைசாட்சிகள் மரணம்<br>- ஸ்தேவான் திப 7:54-60<br>- யாக்கோபு திப 12:1-2<br>• பிற இனத்தவருக்கு நற்செய்தி திப 8:4-17, 10:1-48, 8:26-40<br>• எருசலேம் பொதுச்சங்கம் திப 15:1-21 | • பெந்தக்கோஸ்து தினம் முதல் திருச்சபை விருத்தியடைந்த விதம் பற்றிய தகவல்களைக் கோவைப் படுத்துவார்.<br>• தூய ஆவியால் நிறைந்து நற்செய்தி-க்குச் சான்று பகர வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• பெந்தக்கோஸ்து தினம் முதல் திருச்சபை விருத்தியடைந்த விதம் பற்றிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• தயக்கமின்றி நற்செய்தியைப் போதிக்க முன்வருவார்.<br>• திருச்சபைக்கு எதிராக எழும் சவால்-களை வெற்றிகொள்ள ஒத்துழைப்பு வழங்குவார். | 25 |
| | 7.2 நம்பிக்கையைப் பாதுகாத்துச் சவால்களை வெற்றி கொள்வார். | • மறைக் கலாபனைகள் பத்து<br>• மிலான் அரச சாசனம். | • கத்தோலிக்க திருச்சபையின் பேதக காலம் தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• சவால்கள் முன்னிலையில் நம்பிக்கையைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• கத்தோலிக்க திருச்சபையின் பேதக காலம் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• நம்பிக்கைக்கு எதிரான சவால்களை வெற்றி கொள்வார்.<br>• சவால்களை வெற்றி கொள்வதற்குப் பிறருடன் ஒத்துழைப்பார். | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 7.3 நம்பிக்கையினால் ஊட்டம் பெற்றுத் திருச்சபையின் போதனைகளின் படி வாழ்வார். | • திருச்சபைத் தந்தையர்களின் அறிமுகம்<br>• தூயவர்கள் ஜஸ்டின், அத்தனாசியார், ஜெறோம், அலெக்சாந்திய பிலிப், அகுஸ்தீன், ஒரிஜன், தெர்த்தூலியன் (ஒவ்வொருவர் பற்றிய சுருக்கமான அறிமுகம்) | • திருச்சபைத் தந்தையர் தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• இறைநம்பிக்கையை வளர்த்துக் கொள்வதோடு திருச்சபையின் சத்தி- யங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• திருச்சபைத் தந்தையர் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பர்.<br>• தூய திருச்சபையின் மறை உண்மை- களின் படி வாழ்வார்.<br>• பிறருடைய நம்பிக்கையை வளர்ப்பதற்கு ஒத்துழைப்புடன் செயற்படுவார். | 25 |
| | 7.4 இறையியல் உண்மைகளைச் சரியாகக் கற்பிப்பார். | • மறைப் பேதக அனைத்துலக பொதுச் சங்கங்கள்<br>  • நிசேயா<br>  • கொன்ஸ்தாந்திநோபிள்<br>  • எபேசு<br>  • கல்சிடோன் | • ஆரம்பத்தில் வெற்றிகண்ட நான்கு பொதுச்சங்கங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.<br>• மறை படிப்பினைகளின் சத்தியங்களைச் சரியாகக் கற்பிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• வெற்றியடைந்த நான்கு பொதுச் சங்கங்கள் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• தூய ஆவியின் வல்லமையினால் மறைக் கலாபனைகளுக்கு எதிராக குரல் கொடுப்பார்.<br>• மறை போதக உண்மைகளைப் பாதுகாக்க ஒற்றுமையுடன் செயற்- படுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 8.0 பயணம் செய்யும் திருச்சபையின் வழிநடத்தலுக்குத் தூய ஆவியின் துணையைப் பெற்றுக்கொள்வார். | 8.1 ஆரோக்கியமான விமர்சனங்களுக்கு ஏற்ற முறையில் பதில் அளித்துப் பிநச்சினைகளுக்குத் தீர்வு காண்பார். | • 4-16ம் நூற்றாண்டு வரை திருச்சபையின் வரலாறு, சுருக்கம், கல்வி<br>• திருச்சபை பிளவுபட்டதன் பின்னணி மாட்டின் லூதர் கல்வின், சுவிங்ளின் 8வது ஹென்றி அரசன். | • கி.பி 4-16ம் நூற்றாண்டு வரை உலக திருச்சபை வரலாறு தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• ஆரோக்கியமான விமர்சனங்களுக்கு ஏற்ற முறையில் பதில் அளிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• கி.பி 4-16ம் நூற்றாண்டு வரை உலக திருச்சபை வரலாறு தொடர்பாகச் சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• ஏற்றுக்கொள்ளப்பட்ட சபைகளின் மத்தியில் சபையின் ஒற்றமையை வளர்ப்பார்.<br>• தேசிய ஒற்றுமை மற்றும் சமயங்களுக் கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பார். | 25 |
| | 8.2 காலத்திற்கேற்ப திருச்சபையை நேரிய வழியில் நடாத்திச் செல்லப் பங்களிப்பை வலுதுகுவார். | • சீர்திருத்தமும் மறுமலர்ச்சியும்<br>• துறவற சபைகள்<br>• திரித்தெந்தின் சங்கம்.<br>• 16-21ம் நூற்றாண்டுவரை திருச்சபை வரலாறு<br>• நவீன காலம்<br>• பிரான்சியப் புரட்சி<br>• 1ம் வத்திக்கான் சங்கம்<br>• சிறப்பு மிக்க திருத்தந்தையர்கள்.<br>• 2ம் வத்திக்கான் சங்கம். | • 16-21ம் நூற்றாண்டு வரை திருச்சபையின் வரலாறு பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• காலத்துக்கு ஏற்ப ஏற்படும் மாற்றங்-களுக்கு நல்ல முறையில் முகம் கொடுக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• 16-21ம் நூற்றாண்டு வரை திருச்-சபையின் வரலாறு பற்றிய தகவல்-களைத் திரட்டி ஆக்கமாக முன்வைப்பார். | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | | • திருச்சபைத் தந்தையர்கள் முன்வைக்கும் படிப்பினைகள் வழிகாட்டல்களைத் தமது கத்தோலிக்க வாழ்க்கைக்குச் சார்பாக மாற்றிக் கெள்வார்.<br>• திருச்சபையின் மறுமலர்ச்சிக்காக முன்வைக்கப்படும் நிகழ்ச்சிகளில் பிறரோடு ஒத்துழைத்துச் செயற்படுவார். | |
| 9.0 இலங்கையில் கிறிஸ்தவ தனித்துவத்தின் மூலம் நற்செய்தியின் பணியாளராகச் சான்று பகர்வார். | 9.1 போர்த்து-கேயரின் வருகைக்கு முன் இலங்கையில் கிறிஸ்தவ மதம் பின்பற்றப்பட்டு வ்தமைக்கான தாரங்களைத் தடிப்பார்ப்பார். | • போர்த்துகேயரின் வருகைக்கு முற்பட்ட காலத்தில் கிறிஸ்தவ மறை.<br>• போர்த்துகேயர் வருகைக்கு முன் இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வந்தமைக்கான சான்றுகள்.<br>  • கொஸ்மஸ் இன்டிக்கோ<br>  • அநராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலுவை<br>  • சிகிரியா காலத்தில் இருந்த மிகார எனும் சேனாதிபதி திருத்தூதர் தோமாவின் சீடர்கள் இந்நாட்டில் இருந்தார்கள் என்பதற்கான சான்று.<br>  • முகலன் அரசன் காலத்தில் கிறிஸ்தவ இலட்சினை பொறிக்கப்பட்ட தங்க நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டமை (கி.பி 911)<br>• இலங்கையில் அக்காலத்தில் அரச மந்திரிசபையில் 7 பேர் கிறிஸ்தவர்கள் ஆவர்.<br>• பென்ஜமின் என்பவரது குறிப்பின் படி இலங்கையில் 12ம் நூற்றாண்டளவில் 2300 யூதக் கிறிஸ்தவர்களும், குருக்களும், தேவாலயங்களும் இருந்தமை. | • இலங்கைத் திருச்சபை வரலாறு தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• இலங்கையில் கத்தோலிக்க தனித்துவத்தினைப் பாதுகாக்க வேண்டும் என்பதனை ஏற்றுக்கொள்வார்.<br>• இலங்கைத் திருச்சபை வரலாறு தொடர்பான தகவல்களைச் சேகரித்து ஆக்கமாக முன்வைப்பார்.<br>• பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து கத்தோலிக்க நம்பிக்கையைப் பாதுகாப்பார்.<br>• தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப உதவி புரிவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 9.2 இலங்கைத் திருச்சபையின் வரலாற்றின் வழி மறைத்தூதுவராகப் பணியாற்றுவார். | • போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் கிறிஸ்தவம்<br>• போர்த்துக்கேயர் இந்தியாவை அடைதல்<br>• போர்த்துக்கேய கிழக்கிந்திய கம்பனிகள்<br>• பத்றோ ஆடோ<br>• லோறன்ஸ்சோ த அல்மெய்டா இலங்கைத் தீவை வந்தடைதல்.<br>• மறைத்தூதுவர்கள் இலங்கைத் தீவுக்கு வருகை தரல்.<br>• போர்த்துக்கேய மறைத்தூதுவர்களின் முயற்சிகள் வெற்றியளித்தமைக்கான காரணிகள்.<br>• போர்த்துக்கேய மறைத்தூதுவர்களின் குறைகள்<br>• போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கருக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட துன்புறுத்தல்கள்.<br>• விஜய பண்டாரவின் துன்புறுத்தல்கள்.<br>• கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய அரச வாரிசுக்கள்.<br>  • இளவரசன் தர்மபாலன்<br>  • ஜெயவீர பண்டார<br>  • கரலியட்ட பண்டார<br>  • வீர சுந்தர பண்டார<br>  • தொனா கத்தரினா(குசுமாசன தேவி)<br>  • யாழ்ப்பாண அரச குடும்ப இளவரசன், இளவரசி தொன் சுவான் யமசிங்க<br>• போர்த்துக்கேய ஆட்சியின் பெறுபேறுகள் | • போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க மறை தொடர்பான தகவல்களைக் கோவைப் படுத்துவார்.<br>• போர்த்துக்கேயர் காலத்து மறைத் தூதுவர்களின் சேவையினை வரவேற்பார்.<br>• போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க மறை தொடர்பாகச் சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• கத்தோலிக்க தனித்துவத்தினைப் பாதுகாக்க ஒத்துழைப்பார்.<br>• மறைத்தூதுப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 9.3 சவால்களை எதிர்கொள்வதோடு நம்பிக்கைக்குச் சான்று பகர்வார். | • ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் கிறிஸ்தவம்<br>• ஒல்லாந்தரின் இலங்கை வருகை.<br>• போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் நிலவிய கருத்து வேறுபாடு<br>• கத்தோலிக்கருக்கு எதிரான ஒல்லாந்தரின் கொள்கை<br>• ஒல்லாந்தர் கத்தோலிக்கரைத் துன்புறுத்துவதற்கான காரணம்.<br>• ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களை எதிர்கொண்ட இந்நாட்டு கத்தோலிக்கரின் நடவடிக்கைகள்.<br>• ஒல்லாந்தர் காலத்தில் கல்வி<br>• ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் உருவான பண்புகள்.<br>• தூய யோசேவாஸ் அடிகள் இலங்கையில் ஆற்றிய பணிகள்.<br>• தூய யோசேவாஸ் அடிகளாரின் மறைத்தூதுக் கொள்கை.<br>• யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் ஆற்றிய பணிகள்.<br>• ஒறத்தோரியன் சபை மறைத்தூதுவர்கள் ஆற்றிய பணிகள்.<br>• பிலிப்புஸ் பல்தேவுஸ் அடிகளார் இலங்கைக்கு ஆற்றிய பணிகள். | • ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க மறை தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• தூய யோசேவாஸ் அடிகளாரின் தலைமைத்துவத்திலே ஒறட்டோரியன் சபையின் குருக்கள் இந்நாட்டில் கத்தோலிக்க திருச்சபைக்குச் செய்த சேவையினை வரவேற்பார்.<br>• சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• மறைபரப்பாளராகச் செயற்படுவார்.<br>• கத்தோலிக்க திருச்சபை ஊட்டம் பெறச் செய்ய ஏனையோருடன் ஒத்துழைப்பார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 9.4 கிறிஸ்தவ மறைத்தூதுப்பணி ஊடாகப் பல்வேறு துறைகளுக்கு ஆற்றப்பட்ட பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வார். | • பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் கிறிஸ்தவ மதம்.<br>• மதச் சுதந்திரம்<br>• கத்தோலிக்கருக்கு முழுமையான சுதந்திரம் பெற்றுக் கொடுத்த (Magna carta) சட்டம்.<br>• வெளிநாட்டு மறைத்தூதுவர்களின் வருகையும் அவர்களது சேவையும்.<br>• இலண்டன் மறைத்தூதுக் குழுவினர் - 1805<br>• பப்டிஸ்ட் மறைதூதுக் குழுவினர் - 1812<br>• வெஸ்லியன் மறைத்தூதுக் குழுவினர் - 1814<br>• அமெரிக்க மறைதூதுக் குழுவினர் - 1816<br>• சபை மறைத்தூதுச் சங்கம் (C.M.S) - 1818 | • பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் கிறிஸ்தவ மறை பற்றிய தகவல்ளைச் சேகரிப்பார்.<br>• கிறிஸ்தவ மறைத்தூது சங்கத்தி-னூடாக இலங்கையில் சமய சமூக துறைகளுக்குக் கிடைத்த ஒத்துழைப்பை வரவேற்பார்.<br>• சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• உண்மைக் கிறிஸ்தவனாக செயற்படுவார்.<br>• சமய சுதந்திரத்தைப் பேண ஒத்துழைப்பார். | 25 |
| | 9.5 தேசிய தலத்திருச்சபையைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்வார். | • சுதந்திர காலத்தில் இலங்கையில் கிறிஸ்தவ மதம்.<br>• சுதந்திரத்தின் பின் இலங்கைத் திருச்சபை எதிர்கொண்ட பிரச்சினைகள்.<br>• பாடசாலைகளை அரசு சுவீகரித்தமை.<br>• வைத்தியசாலைகள் அரசுடமையாக்கப் பட்டமை.<br>• வெளிநாட்டுக் கன்னியர்களின் தாதிகளின் வீசா மறுக்கப்பட்டமை.<br>• கிறிஸ்தவ சமயத்தவர்கள் மீதான இரக்கமற்ற விமர்சனங்கள்.<br>• இனரீதியான மோதலும் அமைதிச் செயற்பாடும்.<br>• பிரிந்து சென்ற கிறிஸ்தவ இயக்கங்கள். | • சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலத்தில் இலங்கையில் கிறிஸ்தவ மறை தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• சுதந்திரத்துக்குப் பின் தேசிய மயமாக்கலுக்காகத் திருச்சபை எடுத்த முயற்சிகளை வரவேற்பார்.<br>• கோவைப் படுத்திய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• இலங்கைத் திருச்சபையின் தேசிய மயமாக்கலுக்காகப் பாடுபடுவார்.<br>• தேசிய திருச்சபை ஊட்டம் பெற ஒத்துழைப்பார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • தேசிய மயமாக்கலில் எடுக்கப்பட்ட முயற்சிகள்.<br>• சுதந்திர காலத்தில் மறைமாவட்டப் பரம்பல்.<br>• தேசிய குருத்துவப் பயிற்சிகள். | | |
| 10.0 மனித மாண்பைப் பாதுகாப்பதோடு வேற்றுமையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்பார். | 10.1 இன்றைய சமூக வாழ்விலே கிறிஸ்தவ கடமைகளைச் சரிவர நகபிறைவேற்றுவார். | • மனித மாண்பு<br>• பெண்ணியம் பற்றிய கிறிஸ்தவ சிந்தனை<br>• மனித முன்னேற்றம் தொடர்பாகக் கிறிஸ்தவனின் பங்களிப்பு<br>• கிறிஸ்தவனின் சமூக வாழ்வு (கிறிஸ்தவ திருமணத்தின் தூய்மை)<br>• முரண்பாடுகளைக் களைதலும், சமாதானத்தை ஏற்படுத்தலும்.<br>• சூழலைப் பாதுகாத்தலில் கிறிஸ்தவனின் பொறுப்பு. | • மனித மாண்பைப் பேண கிறிஸ்தவர்கள் செயற்பட வேண்டிய முறை பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.<br>• ஏனையோருக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• மனித முன்னேற்றத்திற்காக உழைப்பார்.<br>• மோதல்களைக் களைந்து சமாதானமாக வாழ்வார். | 15 |
| | 10.2 ஒரே திருச்சபையைக் ˙டியெழுப்புவதில் ஒற்றுமையாகச் செயற்படுவார். | • கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமை<br>• இலங்கையின் முக்கியமான கிறிஸ்தவ சபைகள்<br>• கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமை தொடர்பில் திருவிவிலிய ஆதாரம்.<br>- இயேசுவின் இறை வேண்டல்<br>யோவா 17:19-26<br>1கொரி 1:10-13<br>• சபைகளின் ஒற்றுமைக்காக முன்னெடுக்கப்படும் முயற்சிகள்<br>WCC<br>வத்திக்கான் சங்க வெளியீடு 2<br>BEM<br>ARCIC 1,2<br>• சபையின் ஒற்றுமைக்காக இலங்கைத் திருச்சபை முன்னெடுத்த முயற்சிகள். | • கிறிஸ்தவ திருச்சபையின் ஒற்றுமை தொடர்பான தகவல்களைத் திரட்டுவார்.<br>• திருச்சபையின் ஒற்றுமைக்காகச் செயற்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• சபை ஒருமைப் பாட்டிற்காகச் செபிப்பார்.<br>• ஏனைய சபைகளுக்கு மதிப்பளிப்பார். | 15 |

# கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்

**தேர்ச்சி 6.0 : அருளடையாளங்களினால் வாழ்வடைவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 : திருமுழுக்கு அழைப்பு வழியாகத் தமது கடமைகளையும் பொறுப்புகளையும் உரிய முறையில் நிறைவேற்றுவார்.**

**பாடவேளைகள் : 15**

**கற்றல் பேறுகள் :**

- திருமுழுக்கு அழைப்பின் வழியாக நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பற்றிய தகவல்களைத திரட்டுவார்.
- திருமுழுக்குப் பெற்ற ஒருவர் குரு, இறைவாக்கினர், ஆயன் ஆகிய பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- திருமுழுக்கு அழைப்பின் வழியாக நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பற்றித் திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- திருமுழுக்கு அழைப்பிற்குச் சான்று பகர்வார்.
- திருமுழுக்கு அழைப்பின் வழியாகச் சமூக சேவையில் ஈடுபடுவார்.

### 6.1.1 இயேசுவின் திருமுழுக்கு

- இயேசுவின் திருமுழுக்கு எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறது என்பதை நற்செய்தியாளர் நால்வரும் இந்த நிகழ்வில் குறிப்பிட்டுள்ளனர். (மத் 3:13-17, மாற் 1:9-11, லூக் 3:21-22, யோவா 1:32-34) திருமுழுக்கு யோவான் மனமாற்றத்தின் திருமுழுக்கைப் போதித்தார்.
- பாவமன்னிப்படைய மனம்மாறித் திருமுழுக்குப் பெறுங்கள் (லூக் 3:3) இத்தகைய பின்னணியில் திருமுழுக்கு யோவானிடமிருந்து திருமுழுக்குப் பெற இயேசு வந்தார். இயேசுவிடம் எந்தப் பாவமும் இல்லாததால் திருமுழுக்கு யோவான் இயேசு திருமுழுக்குப் பெறுவதைத் தடுக்க முயன்றார். (மத் 3:14)
- ஆயினும் இயேசுவால் யோவானுக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரை என்னவென்றால் இறைத்திட்டத்தை நிறைவேற்ற அதற்கு இடமளிக்கும்படி திருமுழுக்கு யோவானிடம் இயேசு கூறினார். (மத் 3:15) இதனூடாகத் தரப்படும் முக்கியமான செய்தி என்னவென்றால் பாவத்திலிருந்து மனிதனை மீட்க இவ்வுலகிற்கு வந்த எந்தவொரு பாவமும் அறியாத இயேசுகிறிஸ்து பாவிகளோடு திருமுழுக்குப் பெற்றுப் பாவியாக எண்ணப்பட்டார் என்பதாகும்.
- இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றுத் தண்ணீரிலிருந்து கரைக்கு வந்தபோது வானம் திறக்கப்பட்டது. இதன் மூலம் மனிதன் இறைவனிடமிருந்து பிரிந்து இருப்பது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது என்பது தெளிவாகின்றது. விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே ஒரு தொடர்பாடல் இடம் பெறுவதாகும். (எசா 64:1-2)
- அப்போது தூய ஆவியானவர் புறாவைப் போல் அவர் மீது அமர்ந்தார். அது ஓர் சிறிய பெந்தகோஸ்து போல் அமைந்தது. உலக ஆரம்பத்தின் போது தண்ணீரின் மேல் அசைவாடிய கடவுளின் ஆவியை நினைவு படுத்துகின்றது. (தொ.நூ 1:2)
- இயேசு தனது முதற் போதனையின் போது எசாயா நூலில் இருந்து பின்வரும் பகுதியை எடுத்துரைத்தது அதனாலேயே ஆகும். ''ஆண்டவருடைய ஆவி என் மேல் உள்ளது ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார்.'' (லூக் 4:18)
- இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றுத் தண்ணீரில் இருந்து கரைக்கு வரும் போதே வானிலிருந்து ஒரு ஒலி ஒலித்தது. அந்த ஒலி இயேசுவின் அழைப்பை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அந்த ஒலியை மாற்கு இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ''என் அன்பார்ந்த மகன் நீயே உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்.'' (மாற் 1:11) இங்கு இயேசுவின் அழைப்பு பழைய ஏற்பாட்டு மொழியில் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த ஒலியின் பொருளைப் பழைய ஏற்பாட்டுடன் தொடர்பு படுத்தியே புரிந்துகொள்ள முடிகிறது. ''நீயே

என் அன்பார்ந்த மகன்'' எனத் திருப்பாடல் 2:7லும் ''உன் பொருட்டுப் பூரிப்படைகிறேன்'' என எசாயா 42:1லும் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

- திருப்பாடலில் இரண்டாவது பாடல் அரச அருட்பொழிவின் போது பாடப்பட்டதாகும். அதற்கேற்ப ''நீயே என் அன்பார்ந்த மகன்'' என்பதன் வழியாக இயேசு ஒரு அரசன் என்பது எடுத்துக் காட்டப்படுகிறது. ஆயினும் இயேசு உலக அரசர் போன்றவர் அல்ல கடந்த கால இஸ்ரயேல் அரசர்களை விட முற்றிலும் வேறுபட்டவர் ஆவார்.
- இயேசு அழைக்கப்பட்டிருப்பது இருக்கையில் அமர்ந்திருக்கும் அரசராக இருப்பதற்கல்ல பணியாளனாக, அரசனாக, துன்புறும் அரசனாகுவதற்காகவே எசாயா 42ல் துன்புறும் ஊழியனின் பாடலில் அடங்கியுள்ள ''இவர் பொருட்டுப் பூரிப்படைகிறேன்'' என்பதோடு திருப்பாடல் 2ஐத் தொடர்பு படுத்தி இயேசுவின் அழைப்பு எடுத்து காட்டப்படுவது அதனாலேயே ஆகும்.
- பணியின் மற்றும் துன்புறுதலின் வழியாக அரசராக அழைக்கப்பட்ட இயேசு திருமுழுக்குப் பெற்றுப் பாலைவனத்திற்குச் சென்றார். பாலைவனத்தில் இயேசு மூவித சோதனைக்கு முகம் கொடுக்கின்றார்.
    1. கல்லை மாற்றித் தனது வல்லமையை வெளிப்படுத்த (வல்லமை)
    2. தேவாலயத்தின் உச்சியிலிருந்து பாயும் போது தேவ தூதர்களால் பணிவிடை பெறுபவராகப் புகழைப் பரப்ப (புகழ்)
    3. சாத்தானை வணங்கி அனைத்து நாடுகளைக் கைபற்றுவதற்கு (செல்வம்)
- இஸ்ரயேல் அரசர்கள் வல்லமை, புகழ் மற்றும் செல்வம் ஆகியவற்றின் மீது தங்களது அரசைக் கட்டி எழுப்பினாலும் இயேசுவின் அரசில் அவை நிராகரிக்கபடுகின்றன. செல்வம், வல்லமை, புகழ் ஆகியவற்றின் மீது கட்டி எழுப்பப்பட்ட அமைப்பில் மற்றவர்களைச் சுரண்டி துன்பதிற்குள்ளாக்குகின்றனர். ஆயினும் பணி மற்றும் அடுத்தவரின் முயற்சியினால் கட்டப்பட்ட அமைப்பானது சகோதரத்துவம், கூட்டுறவு மற்றும் ஒன்றிப்பின் அமைப்பாகும்.
- துன்புறும் - அரசன் பணியின் அரசன் அல்ல என்பது திருத்தூதர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. எனவே தான் பெரிய யாக்கோபு மற்றும் யோவான் ஆகிய திருத்தூதர்கள் இயேசு மாட்சிமையோடு வரும் போது வலம் மற்றும் இடப்புறம் அமரக் கேட்டுக் கொண்டனர். (மாற் 10:35-40) இதைக்கேட்டுக் கொண்டிருந்த ஏனைய சீடர்கள் கோபப்படுகின்றனர். (மாற்கு 10:41)
- தன்னைப் போன்று சீடர்களும் பணியின் - அரசர்களாக இருக்க வேண்டும் என்பது யேசுவின் போதனையாக இருந்தது. (மாற் 10:42-45) அவ்வாறாயின் திருமுழுக்கு பெற்ற எம் அனைவரின் அழைப்பும் பணியின் - அரசர்களாக இருப்பதாகும்.

### 6.1.2 திருமுழுக்கின் அழைப்பினுள் கிறிஸ்தவர்களாகிய எமது கடமைகளும் பொறுப்புக்களும்.

- திருமுழுக்குப் பெறும் போது ஒவ்வொரு கிறிஸ்தவரும் குருவாக, இறைவாக்கினராக மற்றும் அரசராக கிறிஸ்மா தைலத்தால் அபிஷேகம் செய்யப்படுகின்றனர். இதன் காரணமாக திருமுழுக்குப் பெற்ற அனைவருக்கும் குருத்துவ, இறைவாக்கு, அரச கடமைகள் அளிக்கப்படுகிறன.

1. **குருத்துவ கடமைகளும் பணியும்.**

- குரு என்பவர் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடைநிலையினராக இருக்கின்றார். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் தனித்துவமான இடைநிலையாளர் கிறிஸ்து என எபிரேயருக்கு எழுதிய கடிதம் எடுத்துக் காட்டுகின்றது.
- திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவனும் பொதுக் குருத்துவத்தைப் பெற்றுள்ளார். அதற்கு ஏற்ப அவன் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் நடுநிலையாளனாக உள்ளான். அவன் இடைநிலையாளனாவது ஏனையவர்களுக்காகச் செபிக்கும் அளவிற்கே திருப்பிலியில்

சொல்லப்படும் விசுவாசிகள் மன்றாட்டு, பரிந்துரைச் செபம் எனவும் அழைக்கப்படுகின்றது.

- அதில் விஷேட விதமாக ஏனையவர்களுக்காகச் செபிக்கின்றோம் ஆயினும் எமது பரிந்துரைச் செயலை விசுவாசிகள் மன்றாட்டோடு மட்டும் நிறுத்திவிடக் கூடாது. அன்றாட தனிச் செபங்களில் எமது மற்றும் எமக்கு நெருங்கியவர்களின் தேவைகளுக்காக மட்டும் அல்ல எமக்கு நெருக்கமற்றவர்களின் பொதுவான தேவைகளுக்காகச் செபித்து மெய்யான குருவாக ஏனையவர்களுக்காக நாம் அனைவரும் இறைவன் முன் நிலையில் பரிந்துரை செய்ய வேண்டும்.

2. **மேய்ப்பு (அரச) பணி**

- மேய்ப்பர் ஒரு தலைவன். தலைவன் பணியாளனாக வேண்டும் என்பது இயேசுவின் முக்கிய படிப்பினையாக இருந்தது. (யோவா 13:13-14) அவர் அவ்வாறு போதித்தது மட்டும் அல்ல இறுதி இராவுணவின் போது அவர் அதைச் செயலினால் உறுதிப்படுத்தினார். (13:4-5)
- அவ்வாறாயின் நாமும் பணிபுரியும் தலைவர்களாக ஆக வேண்டும். இயேசுவின் திருமுழுக்கின் போது வானிலிருந்து ஒலித்த குரலொலியின் அர்த்தமும் அதுவே என மேலே நாம் கற்றுள்ளோம்.
- . நாமும் திருமுழுக்குப் பெறுவது பணியாள் – தலைவனாகுவதற்காகவே என்பதை மறந்து விடக் கூடாது.(யோவான் 10:11-16)
- இயேசு ஒரு நல்லாயனாக இருக்கின்றார். அவர் தான் கூறியதை வார்த்தைக்கு மட்டும் வரையறுக்காது தாம் கூறியபடியே தன் ஆடுகளுக்காகத் தன் உயிரையே தியாகம் செய்தார். அவ்வாறு செய்து மனுகுலத்திற்கு விடுதலையைப் பெற்றுத்தந்தார்.
- நாமும் பல்வேறு துறைகளில் மேய்ப்பவர்களாகச் செயற்படுகின்றோம். அங்கு எமது கடமையாக இருப்பது என்னவென்றால் அந்தத் துறையில் தலைவனாக மிளிர்வது அல்ல எமது தலைமைத்துவத்தின் கீழ் பணி பெறுபவர்களுக்காகப் பலியாவதாகும். இயேசு அவ்வாறு தன்னைப் பலியாக்கியது மனுக் குலத்தின் மீது காட்டிய அளவற்ற அன்பினாலேயே. அதனால் நாமும் எமது மந்தைகளுக்காகப் பலியாக வேண்டியது அவர்கள் மீது வைத்துள்ள அன்பின் நிமித்தமே.

3. **இறைவாக்கினரின் பணி**

- இறைவாக்கினர் என்பவர் இறைவனுக்காகப் பேசுபவர். காலத்தின் அறிகுறிகளை அறிந்து ஒருவருடைய நிலை, பதவி, தமக்குக் கிடைக்கும் பிரதிபலன் என்பவற்றைக் கூட எதிர்பார்க்காது இறைசெய்தியை வழங்குபவர். (எரே 11:2) பழைய ஏற்பாட்டில் செய்தி மற்றும் செய்தியை வழங்குனர் என இரு நபர்களாவர்.
- ஆயினும் புதிய ஏற்பாட்டில் செய்தி மற்றும் செய்தியை வழங்குபவர் என இருவர் அல்ல ஒருவரே. இயேசு இறைவார்த்தையாக இருப்பது போல இறைவார்த்தையை வெளிப்படுத்துபவருமாயிருக்கிறார்.
- திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவனும் ஒரு இறைவாக்கினராவான். இறைவார்த்தையைப் பறைசாற்ற வேண்டுமென்றால் நாம் சரிவர இறைவார்த்தையைக் கற்றிருக்க வேண்டும். இறைவார்த்தையைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் நாம் ஒவ்வொரு நாளும் இறைவார்த்தையை வாசிக்க வேண்டும். அப்படியென்றால் ஒவ்வொரு நாளும் திரு விவிலியத்தில் ஒரு அதிகாரம் அல்லது திருவிவிலியத்தின் ஒரு பகுதியை வாசித்து அதனைத் தியானிக்க நேரத்தை ஒதுக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் வாசிக்கின்ற இறைவார்த்தையின் படி வாழ்ந்து நமக்குக் கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் உச்சப்பயனைப் பெற்றுத் தமது சொல்லாலும் செயலாலும் வாழ்க்கையாலும் இறைவார்த்தையைப் பறைசாற்ற வேண்டும்.

- மேலும் உண்மைக்குச் சான்று பகர்ந்து நீதிக்காக முன்னின்று சமத்துவத்திற்காகச் செயற்பட்டு இறைவனுக்காகப் பேசுபவராக இருக்க வேண்டும்.

கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.

- திருமுழுக்கு அழைப்பிற்கு ஏற்ப கிறிஸ்தவர்களாகிய நாம் நிறைவேற்ற வேண்டிய மூன்று கடமைகளை பெயரிட்டு, அவற்றை விளக்குக.
- பாலைவனத்தில் இயேசு கிறிஸ்து முகம் கொடுத்த மூவித சோதனைகளை பெயரிடுக.
- திருமுழுக்கு அழைப்பினை பெற்ற கிறிஸ்தவனாகிய நீர் சமூகத்தினுள் வாழ வேண்டிய முறையினை ஐந்து காரணிகள் ஊடாக விளக்குக.

**உசாத்துணை நூல்கள்.**


1. BROWN, R.E., FITZMYER, J.A. & MURPHY, R.E., **New Jerome Biblical Commentary,** Theological Publications in India, Bangalore, 2013.
2. தசனாயக, யூட் (அருட்தந்தை), பிரசாத ஸ்நாபனய, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 8, 2011
3. சுத்த பைபலய அத்தியன பிடபத்த (புதிய ஏற்பாடு 1), இலங்கை வேதாகம சங்கம், கொழும்பு 3, 1995

**தேர்ச்சி 6.0 : அருளடையாளங்களினால் வாழ்வடைவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.2 : நற்கருணை விருந்தினால் ஊட்டம் பெற்று அர்ப்பணிப்புடன் வாழ்வார்.**

**பாடவேளைகள் : 15**

**கற்றல் பேறுகள் :**

- வாழ்வளிக்கும் உணவு தொடர்பான தகவல்களைத் திரட்டுவார்.
- திவ்விய நற்கருணையில் நம்பிக்கை கொள்ளவேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- வாழ்வளிக்கும் உணவு தொடர்பாகத் திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- தகுதியுடன் நற்கருணையை உட்கொள்வார்.
- பிறருடன் இணைந்து அர்ப்பணிப்புடனும் தியாகத்துடனும் செயற்படுவார்.

### 6.2.1 வாழ்வு தரும் உணவு (யோவான் 6:51-58)

- திருவிவிலிய அறிஞர்களின் கருத்துப்படி யோவான் நற்செய்தியில் ‘‘தசை’’ என்றுபயன்படுத்தப்பட்டுள்ள சொல் மிகவும் பழமையானதாக இருப்பதோடு ஒத்தமை நற்செய்தியிலும் 1கொரிந்தியரின் திருமுகத்திலும் ‘‘உடல்’’ எனும் சொல் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது.
- அவர்களின் கருத்துப்படி இயேசுவும் கூட தசை என்ற சொல்லையே பயன்படுத்தினார் என்பதாகும். ‘‘சார்க்ஸ்’’ எனும் சொல் தசை அல்லது வாழுகின்ற உடல் என்று பொருள்படும்.
- தசையை ‘‘உண்ணுதல்’’ என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க சொல் ‘‘த்ரோகயின்’’ ஆகும். அதன் கருத்து மென்று உண்ணுதல் என்பதாகும். அதன்படி ‘த்ரோகயின்’ என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பது உவமை வடிவில் அல்ல என்பதாகும். எனவே நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ள அவரின் திருவுடலை மெய்யாகவே உண்ணவேண்டும் என்பது எடுத்துக்காட்டப்படுகிறது.
- நிக்கதேமு ‘‘மீண்டும் பிறத்தல்’’ பற்றிப் பேசும் போது அதனை உடல் சார்ந்த பிறப்பாக விளங்கிக் கொண்டார். ‘‘சமாரியப் பெண் வாழ்வு தரும் தண்ணீர் பற்றிப் பேசும் போது அது குடிக்கப்பயன்படுத்தும் இயற்கையான தண்ணீராகப் புரிந்துகொண்டார்.
- அது போலவே யூதர்களும் ‘‘தசை’’ என்பதை விளங்கிக் கொண்டது சொற்பொருளான பௌதீக தசையைப் பற்றியே ஆகும். செமதிக் வழக்கிலும் மறைமுகமாக ஒன்றைச் சொல்லும் பண்பு உண்டு. (திருப்பாடல் 27:2) அதன் மூலம் பொருட்படுவது அவமரியாதை செய்வதாகும். இங்கு ‘‘தசை’’ என்று மறைமுகமாக ‘‘நற்கருணை நாதரை’’ பொருட்படுத்துகிறது என்பதை யூதர்களால் விளங்கிகொள்ள இயலவில்லை. உடலை உட்கொள்ளுவதை விட இரத்தத்தை குடிப்பது அவசியம் எனக் கூறும் போது அது மிகக் கடுமையான ஒரு செயலாகும்.

  ஏன் என்றால் இரத்தத்தில் உயிர் அடங்கி இருப்பதாகவும் வாழ்வு இறைவனுக்கு மட்டும் சொந்தம் என யூதர்களின் நம்பிக்கையாக இருந்ததால் இரத்தத்தோடு தொடர்புடைய உணவு – பானங்கள் யூதர்களுக்குத் தடைசெய்யப்பட்டிருந்தது. (தொ.நூ 9:4, இ.ச 12:16)
- யோவான் நற்செய்தி கி.பி 100 அளவில் எழுதப்பட்டது. அப்பம் பெருகியதன் அருளடையாளத்தின் பின்னர் கலிலேயருக்கு நற்கருணை நாதரைப்பற்றி ஆழமான மறையுண்மையை விளங்கிக்கொள்ள முடியவில்லை ஆயினும் கி.பி 100ல் யோவானின் குழுவிற்கும் அதன் பின்னர் நற்செய்தியை வாசித்தோர் இன்று வாசிப்போருக்கும் திவ்விய நற்கருணை பற்றிய ஆழமான மறை உண்மைகளை எந்தவொரு ஐயமுமின்றி விளங்கிகொள்ளலாம்.

### 6.2.2 திவ்விய நற்கருணையை ஏற்படுத்துதல்

- ஒத்தமை சந்செய்தியாளர்கள் மூவரும் (மத்தேயு 26:26-28, மாற்கு 14:22-24, லூக்கா 22:19-20)

தூய பவுல் அடிகளார் (1கொரி 11:23-26) இயேசு திவ்விய நற்கருணையை ஏற்படுத்துதலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்த நான்கு குறிப்புக்களிலும் சிறு சிறு வேறுபாடுகள் இருப்பது நான்கு எழுத்தாளர்களும் இரண்டு பாரம்பரியங்களைப் பின்பற்றி இருப்பதாலாகும்

- புனித லூக்கா மற்றும் புனித பவுல் அந்தியோக்கிய பாரம்பரியத்தையும், புனித மாற்கு மற்றும் புனித மத்தேயு எருசலேம் பாரம்பரியத்தையும் பின்பற்றி உள்ளனர். முற்காலத்தில் அந்தியோக்கிய மற்றும் எருசலேம் கிறிஸ்தவ திருச்சபைகளின் இராவுணவு இடம்பெற்ற முறைகள் அந்த அறிக்கைகளுக்கு அடிப்படையாக இருந்துள்ளது.
- அந்தப் பாரம்பரியங்களுக்குரிய சொற்கள் மற்றும் வாசகங்களில் சிறு சிறு மாற்றங்கள் இருந்த போதிலும் திருவழிபாடு (திருப்பலி), வழிபாட்டில் பொதுவான அம்சங்களே காணப்படுகின்றன.
- திவ்விய நற்கருணையை ஏற்படுத்துதல் தொடர்பாகப் புதிய ஏற்பாட்டில் உள்ள அறிக்கைகளுள் மிகப் பழைமையான அறிக்கையாக இருப்பது 1கொரி 11:23-26 ஆகும். புனித பவுல் கொரிந்தியருக்கு தம் முதலாவது திருமுகத்தை கி.பி 56ம் ஆண்டுப் பகுதியிலேயே எழுதினார்.
- இந்தப் பகுதியில் அடங்கியுள்ள நான் உங்களுக்குக் கற்பித்த இந்தச் சடங்கினை இறைவனிடமிருந்தே பெற்றுக் கொண்டேன் என்பதன் வழியாக விளங்கிக்கொள்ள வேண்டியது இயேசு ஒரு காட்சி அல்லது கனவு வழியாகவோ வெளிப்படுத்திய வெளிப்பாடல்ல.
- இயேசுவிடமிருந்து நேரடியாக இந்த வழிபாட்டைப் பெற்ற திருத்தூதர்களால் நிறுவப்பட்ட திருச்சபையின் திருவழிபாட்டின் ஊடாகப் பெற்றதாகும். புனித பவுலின் மனமாற்றத்தின் பின்னர் அவர் அதிகமாகச் சீரிய அந்தியோக்கிய திருச்சபையின் திருவழிபாடுகளில் இருந்து சடங்குகளைப் பெற்றிருக்கலாம் என நம்பப்படுகின்றது.
- புனித லூக்காவும் அந்தியோக்கிய திருச்சபையோடு தொடர்புபட்டிருந்தார். எனவே புனித பவுல் மற்றும் புனித லூக்கா அந்தியோக்கிய பாரம்பரியத்தைப் பின்பற்றி உள்ளதைப் புரிந்து கொள்ள முடிகிறது. மாற்கு 14::22-24, மத்தேயு 26:26-28, லூக்கா 22:19-20 மற்றும் 1கொரிந்தியர் 11:23-26 வாசகப் பகுதிகளை கீழே தரப்பட்டுள்ள அட்டவணை மூலம் தெளிவாகப் பார்க்கலாம்.

| | அந்தியோக்கிய பாரம்பரியம் | | எருசலேம் பாரம்பரியம் | |
|---|---|---|---|---|
| | 1கொரி 11:23-26 | லூக் 22:19-20 | மாற் 14:22-24 | மத் 26:26-28 |
| காலம் | ஆண்டவராகிய இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவில் | நேரம் ஆனதும் | அவர்கள் உண்டு கொண்டிருந்த போது | அவர்கள் உணவருந்திக் கொண்டிருந்த போது. |
| அப்பத்துடன் தொடர்புடைய செயல் | அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அதைப் பிட்டு | அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அதைப் பிட்டு அவர்களுக்கு கொடுத்தது | அவர் அப்பத்தை எடுத்து கடவுளைப் போற்றி அதைப் பிட்டு அவர்களுக்கு கொடுத்தது | இயேசு அப்பத்தை எடுத்து கடவுளை போற்றி அதைப் பிட்டு சீடர்களுக்கு கொடுத்தது |
| அப்பம் மீது வார்த்தை | இது உங்களுக்கான என் உடல் இதை என் நினைவாகச் செய்யுங்கள் | உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல் எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள் | இதைப் பெற்று கொள்ளுங்கள் இது என் உடல் | இதை பெற்று ண்ணுங்கள் இது என் உடல் |
| காலம் | இரவு உணவின் பின் | உணவு அருந்தியபின் | | |
| கிண்ணத் தோடு தொடர்பு -டைய செயல் | கிண்ணத்தை எடுத்து | கிண்ணத்தைக் கொடுத்து | அவர் கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்தார் | பின்பு கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்தது. |
| கிண்ணத்தின் மீது வார்த்தைகள் | இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிடுதிலை ப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. நீங்கள் இதிலிருந்து ம்போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்.. | இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் திருதி லைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. | இது என் உடன்படிக்கையின் இரத்தம் பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம். இனிமேல் இறையாட்சி வரும் அந்நாளில் தான் நான் திராட்சைப்பழ இரசத்தைக் குடிப்பேன் அதுவரை ஒரு போதும் குடிக்கமாட்டேன். | இதிலுள்ளதை அனைவரும் பருகுங்கள் ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம். பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம். இனிமேல் என் தந்தையின் ஆட்சிவரும் அந்நாளில் தான் நான் உங்களோடு திராட்சைப்பழ இரசத்தைக் குடிப்பேன். அதுவரை குடிக்க மாட்டேன் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். |

### 6.2.3 அந்தியோக்கியப் பாரம்பரியத்தின் முக்கிய அம்சங்கள்

- ''என் நினைவாக இதைச் செய்யுங்கள்'' எனக் கூறுதல்
- கிறிஸ்துவின் ''இரத்தத்தினால் ஆன புதிய உடன்படிக்கை'' எனக் கூறுதல்.
- ''உணவருந்திய பின்'' எனும் சொல்லைப் பயன்படுத்துதல்
- சொற்கள் பயன்படுத்தபட்டிருப்பது விருந்தில் பங்கேற்பவர்களுக்காகவே: ''உங்களுக்காக''
- அப்பத்தினால் அடையாளப்படுத்துவது இயேசுவின் வாழ்வு எங்களுக்காகப் பலியாவதாகும் ''இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் என் உடல்''

**எருசலேம் பாரம்பரியத்தின் முக்கிய அம்சங்கள்**

- அப்பத்தை எடுத்து ''ஆசீர்வதித்தல்'' எனக் கூறுதல்
- கிண்ணத்தை எடுத்து ''நன்றி கூறுதல்'' (அந்தியோக்கில் நன்றி கூறுவது அப்பத்தை எடுத்தேயாகும்.)
- இரத்தம் சிந்தப்படுவது ''அநேகமானோருக்காக''/ உங்களுக்காக

### 6.2.4 தகுந்த முறையில் நற்கருணை பெறுதல். (1கொரி 11:17-32)

- கொருந்திய சபையில் திவ்விய நற்கருணை விருந்தின் போது இடம் பெறும் அம்சங்களைப் பற்றிப் புனித பவுல் அதிகமாகக் கண்டிக்கின்றார். திவ்விய நற்கருணை விருந்துக்கு முன்னர் ஒன்றிப்பின், அன்பின் (அகப்பே) விருந்து நடாத்துவது வழக்கமாக இருந்தது. ஆயின் அதனை அன்பின் விருந்தாக ஆக்கிக்கொள்வதற்குப் பதிலாகப் பிரிவினைகளை உருவாக்கிய விருந்தாக இருந்தது. ஒருவர் பசியோடு இருக்கும் போது வேறு சிலர் வெறிக்கும் அளவுக்குக் குடிவெறியில் இருக்கிறார்கள். அவ்வாறு செய்வோர் ஏழைகளை வெட்கத்திற்கு உள்ளாக்கினார்கள். (1கொரி 11:17-22).

  அது மட்டுமன்றிச் சிலர் திவ்விய நற்கருணையைத் தகுதியற்ற விதமாகப் பெறுகின்றனர். அவ்வாறு செய்வதன் மூலம் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறார்கள். எனவே ஒவ்வொருவரும் தம்மையே சோதித்தறிந்த பின்னரே இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருக வேண்டும். ஆன்ம சோதனையில் ஈடுபடுவது தனது குற்றத்தை அறிந்து அவற்றிற்காக மன்னிப்புப் பெற்றுக்கொள்வதற்கே ஆகும். இதனைக் கத்தோலிக்க திருச்சபையில் ''ஆன்மீக ஆயத்தம்'' என அழைப்பர். ஆன்மீக ஆயத்தம் என்பது திவ்விய நற்கருணை பெற முன்னர் பாவங்களில் இருந்து விடுபடுதலாகும். திவ்விய நற்கருணையைப் பெறுவதற்கு ஆன்மீக ஆயத்தத்தின் அவசியத்தைப் புனித பவுல் எடுத்துக் கூறுவதோடு, 'டிடாக்கே' எனும் நூலில் இல 14லில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ''உங்கள் பலி தூய பலியாக இருப்பதற்கு, முதலில் நீங்கள் ஒப்புரவின் பின்னர் ஒன்று கூடி அப்பத்தைப் பிட்டு நன்றி கூறுங்கள்''.

  சாவான பாவம் காரணமாகத் திவ்விய நற்கருணை உட்கொள்ள ஆன்மீகத்தில் தகுதியற்றோர் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெறுவதோடு அற்ப பாவநிலையில் உள்ளவர்கள் திருப்பலி ஆரம்பத்திலேயே தமது பாவங்களுக்கு மனஸ்தாபப்பட்டு மன்னிப்பைப் பெற்று திவ்விய நற்கருணை உட்கொள்ளத் தகுதியுள்ளவர்களாக வேண்டுமென்பது கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினையாகும். சாவான பாவத்தோடு இருக்கும் ஒருவர் திருப்பலிக்கு முன்னர் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறச் சந்தர்ப்பமில்லை எனில் தன்னுடைய பாவங்களுக்கு மனஸ்தாபப்பட்டுச் சந்தர்ப்பம் கிடைத்த உடன் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்ள உறுதிப்பூண்டு திவ்விய நற்கருணை பெறலாம். (திருச்சபைச் சட்டம் 916)

  கத்தோலிக்க திருச்சபை, திவ்விய நற்கருணையைப் பெற இருக்க வேண்டிய சரீர ஆயத்தம் பற்றியும் பேசுகிறது. சரீர ஆயத்தம் என்றால், திவ்விய நற்கருணையைப் பெற முன்னர் குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலமாவது எவ்வகை உணவையும் உட்கொள்ளாது

உபவாசம் இருத்தல். ஆயினும் விரும்பியவர்களுக்கு அதற்கு மேற்பட்ட நேரத்திற்கும் உபவாசம் இருக்க முடியும். இக்காலத்திற்குள் தண்ணீர், மருந்து என்பன அருந்துவதற்குத் தடையில்லை ஒரு மணிநேர உபவாசம் நோயாளருக்கும் மற்றும் அவர்களைப் பராமரிப்போருக்கும் அவசியமில்லை. இந்த உடல் ரீதியான உபவாசம், ஆன்மீக ஆயத்தத்திற்கும், திவ்விய நற்கருணைக்கு அளிக்கும் மதிப்பிற்கும் அடையாளமாகும். எனவே திவ்விய நற்கருணையைப் பெற்றுக்கொள்ள முன்னர் ஒருமணிநேர உபவாசத்தை அனுசரித்தல் பற்றி எழுதப்பட்டுள்ள சட்டத்தினை அனுசரித்துத் திருப்தி அடைவதை விடச் சட்டத்தின் பின்னே உள்ள பிரதான கருத்தை விளங்கி அர்த்தமுள்ள விதத்தில் அதனைப் பின்பற்றுதல் முக்கியமானதாகும்.

**கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.**

- ‘‘வாழ்வளிக்கும் உணவு’’ எனும் தலையங்கத்தினை ஐம்பது சொற்களில் விளக்குக.
- திவ்விய நற்கருணையை ஏற்படுத்தல் தொடர்பாக அந்தியோக்கிய பாரம்பரியம் மற்றும் எருசலேம் பாரம்பரியம் இரண்டினையும் ஒப்பிட்டு விளக்குக.
- திவ்விய நற்கருணையையை தகுந்த முறையில் பெறும் ஐந்து வழிகளை எழுதுக.

**உசாத்துணை நூல்கள்**


1. BROWN, R.E., FITZMYER, J.A. & MURPHY, R.E., **New Jerome Biblical Commentary**, Theological Publications in India, Bangalore, 2013.
2. தசனாயக, யூட் (அருட்தந்தை), திவ்விய சத்பிரசாத வாஹன்சே, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 8 2011
3. பிரனாந்து, குயின்டஸ் (அருட்தந்தை), ‘‘நவ கிவிசுமதுல திவ்விய சத்பிரசாதய’’, தஹம் தியம்ப, 5 வெளியீடு, ஜூன் பிரதி, புபுது அச்சகம், றாகம, 2005.
4. சுத்த பைபலய அத்தியன பிடபத்த (புதிய ஏற்பாடு 1), இலங்கை வேதாகம சங்கம், கொழும்பு 3. 1995

**தேர்ச்சி 7.0** : **தாம் எதிர்கொள்ளும் சவால்களைத் தூய ஆவியின் வல்லமையால் வெற்றி கொண்டு நம்பிக்கைக்குச் சான்று பகர்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1** : **தூய ஆவியின் வல்லமையைப் பெற்று நிறைவாக வாழ்வார்.**

**பாடவேளைகள்** : **25**

**கற்றல் பேறுகள்** :

- பெந்தகோஸ்து தினம் முதல், திருச்சபை விருத்தியடைந்த விதம் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவார்.
- தூய ஆவியால் நிறைந்து நற்செய்திக்குச் சான்று பகர வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வார்.
- பெந்தக்கோஸ்து தினம் முதல் திருச்சபை விருத்தியடைந்த விதம் பற்றிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- தயக்கமின்றி நற்செய்தியைப் போதிக்க முன்வருவார்.
- திருச்சபைக்கு எதிராக எழும் சவால்களை வெற்றி கொள்ள ஒத்துழைப்பு வழங்குவார்.

### 7.1.1 பெந்தக்கோஸ்து நாள் முதல் ஆரம்பகால சபையின் வளர்ச்சி

**அறிமுகம்**

- இயேசு கிறிஸ்து இறைமகன் என்றும், மீட்பர் என்றும் ஏற்றுக் கொண்டு நம்பிக்கையோடு அவருடைய போதனைகளின் படி வாழ்கின்ற, அவருடைய பெயராலே திருமுழுக்குப் பெற்ற குழுவே கிறிஸ்தவ சபை எனப்படும்.
- திருச்சபையின் ஆரம்பகாலம் அல்லது வரலாறு எனப்படுவது மூன்று நூற்றாண்டுகளில் சபையில் ஏற்பட்ட வளர்ச்சி அதாவது சபை நிறுவப்படுதல், வளர்ச்சி, நிறைவேற்றிய பணி, திருச்சபைக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள், எதிர் கொண்ட சவால்கள் என்பவையே ஆகும்.
- இக்காலம் திருச்சபையில் ஏற்பட்ட தவறான கருத்துகள் திருத்தியமைக்கப்பட்ட காலமாகும்.
- கிறிஸ்து தனது பணியின் ஆரம்பத்திலேயே பன்னிரண்டு திருத்தூதுர்களைத் தேர்ந்தெடுத்து, நியமித்து அவர்களை ஆயத்தம் செய்தார். அவர்களுக்குச் செயன்முறைப் பயிற்சி அளித்துத் திருச்சபைக்கு அத்திவாரமிட்டார்.
- திருத்தூதர்கள் பன்னிருவரைத் (12) தவிர மேலும் எழுபது பேரைத் தமது பணிக்காக இயேசு சேர்த்துக்கொண்டார்.
- பேதுரு இக்குழுவுக்குத் தலைமைத்துவம் வகித்தார்.
- தூய ஆவியின் வருகையை எதிர்பார்த்து இருக்கும்படி திருத்தூதர்களுக்குக் கூறியதோடு அவர்களுக்குப் புதியதொரு எதிர்பார்ப்பினைக் கொடுத்துக் கிறிஸ்து விண்ணேற்றமடைந்தார்.

.

### 7.1.2 தூய ஆவியின் வருகை - திப. 2:1-41

- இயேசு கூறியதற்கமைய தூய ஆவியின் வருகையை எதிர்பார்த்த வண்ணம் எருசலேமில் மேல்மாடி அறையில் மரியாவும் திருத்தூதர்கள் பன்னிருவரும் உட்பட சீடர்கள் 120 பேர் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்.
- யூதர்களால் நடாத்தவிருந்த பெந்தக்கோஸ்து திருவிழாவன்று தூய ஆவியானவரின் வருகை இடம் பெற்றது.
- திடீரென்று பெருங்காற்று வீசுவதுபோன்று ஓர் இரைச்சல் வானிலிருந்து உண்டாகி அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தன.

- தூய ஆவியார் அவர்களுக்குக் கொடுத்த பேச்சாற்றலால் பிற மொழிகளில் பேசத் தொடங்கினர்.
- யூதரின் பெந்தக்கோஸ்து திருவிழாவைக் கொண்டாடுவதற்கு எருசலேமுக்கு அனைத்து நாடுகளிலிருந்தும் வருகை தந்ததிருந்த இறைபற்றுள்ள யூத மக்கள் அங்கிருந்தனர். இந்தச் சத்தத்தைக் கேட்டதும் மக்கள் குழப்பமடைந்தனர். தத்தமது சொந்த மொழிகளில் பேசுவதைக் கேட்டு அவர்கள் மலைத்துப் போயினர். கிறிஸ்தவ மறையானது ஓர் இனத்துக்கோ ஒரு நாட்டுக்கோ மட்டுப்படுத்தப்பட்டதன்று என்பது இதிலிருந்து தெளிவாகிறது.
- பல்வேறு மொழிகளில் பேசிய சீடர் குழுவினர் கலிலேயரென்பது அவர்களை வியப்படையச் செய்தது.
- இயேசுவின் சீடர்கள் தூய ஆவியால் நிரம்பப் பெற்றவுடன் தங்களுக்குள் இருந்த பயம் நீங்கப் பெற்றதோடு தைரியத்தோடு பெந்தக்கோஸ்து திருவிழாவுக்கு வருகை தந்த அனைவர் முன்னிலையிலும் எருசலேம் கோவிலில் போதித்தனர். இச் சீடர்கள் மீது தூ ய ஆவியாரின் செயற்பாடு முழுமையாகப் பெறப்பட்டமையானது உறுதி செய்யப்படுகின்ற ஓர் காரணியாகும்.
- இதனைக் கண்ட சிலர் இவர்கள் இனிய மதுவினால் மயக்கமுற்றிருக்கலாமென ஏளனம் செய்தனர்.
- இறைவாக்கினர் யோவேலின் இறைவாக்கை இது நிறைவாக்குகிறதெனப் பேதுரு எடுத்துக் கூறினார். இவ்வாறு தூய ஆவியாரின் வருகையானது திருச்சபையின் ஆரம்பத்தையும் புதியதொரு யுகத்தின் ஆரம்பத்தையும் எடுத்துக் காட்டுகிறது. திருச்சபையின் பிறந்தநாள் என பெந்தக்கோஸ்து நாள் அழைக்கப்படுகிறது.
- திப 2:14-21க் கேற்ப பேதுரு தலைமைத்துவம் ஏற்று பேசி கிறிஸ்துவே யூதமக்கள் எதிர்பார்த்த மெசியா என்பதைத் தைரியமாகக் கூறினார்.
- யூதர்களினால் இயேசு கொல்லப்பட்டார் எனவும், கடவுள் அவரை உயிர்த்தெழச் செய்தார் எனவும் நாங்களே இதற்குச் சாட்சிகள் எனவும் பேதுரு தைரியத்தோடு வெளிப்படுத்தினார்.
- பேதுருவின் முதலாவது அருளுரையின் காரணமாக மூவாயிரம் பேர் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு மனமாற்றம் அடைந்து திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில் இணைந்து கொண்டனர்.
- இவ்வாறாகத் தூய ஆவியாரின் இவ்வுலக வருகையோடு திருச்சபையானது நாளுக்கு நாள் வளர்ச்சியுற்றது (திப. 4:4).

### 7.1.3 ஆரம்பகால திருச்சபையின் பண்புகள் - திப 2:42-47, 4:32-37

- பெந்தக்கோஸ்து தினத்தில் தூய ஆவியின் வருகையோடு தைரியமடைந்து முதல் திருத்தூ தர்களின் போதனைகளை ஏற்றுக் கொண்ட அனேகமானோர் இயேசுவை ஏற்றுக்கொண்டனர்.
- இவ்வாறு ஏற்றுக்கொண்ட மக்கள் திருமுழுக்குப் பெற்றதோடு நம்பிக்கையோடு கட்டியெழுப்பப்பட்ட சமூகமாக வாழ்ந்தனர்.
- பெரும்பாலான யூத மக்களிடையே சிறியதொரு கூட்டமாக திருமுழுக்குப் பெற்றவர்கள் வாழ்ந்த போதிலும் ஏனைய யூதர்களை விட வேறாக இனங்காணக்கூடிய விதத்தில் விசேடமான பண்புகளைக் கொண்டிருந்தனர்.
- தி.ப. 2:42ற்கேற்ப திருத்தூதர்கள் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் (திருப்பிலியிலும்) இறை வேண்டலிலும் நிலைத்திருந்தனர்.
- இவர்கள் நம்பிக்கையில் வளர்ச்சியுற்றதோடு அன்னியோன்னியமாக உதவி செய்து பொறுப்போடு செயலாற்றினர்.
- ஆரம்பகால கிறிஸ்தவர்கள் எருசலேம் கோவிலிலும் தொழுகைக் கூடங்களிலும் கடவுளைப் போற்றுவதிலும் தமது வீடுகள் தோறும் ஒன்று கூடி அப்பம் பிடுவதிலும் (திருப்பலி) நிலைத்திருந்தனர்.

- நம்பிக்கை கொண்டோர் அனைவரும் தமது உடைமைகளைப் பொதுவாய் வைத்துக் கொண்டனர்.
- ஒரே குடும்பமாகவும் ஒரே சமூகமாகவும் கடவுளைப் போற்றியதோடு மற்றவர்களின் தேவைகளுக்காகத் தம்மை அர்ப்பணிப்பதையும் ஆரம்பகால கிறிஸ்தவ சபையில் உன்னிப்பாகக் காணக்கூடியதாக இருந்தது.
- அவர்களது வாழ்க்கை முன்மாதிரிகையானதாகவும், மனதைக் கவரும் விதத்திலும் அமைந்திருந்தது.
- ஆரம்பகாலக் கிறிஸ்தவ சபையானது கடவுளின் உதவியையும் அருளையும் பெற்றமையால் நாளுக்கு நாள் வளர்ச்சியுற்றது.

### 7.1.4 திருத்தொண்டர்களை நியமித்தல் (தி.ப. 6:1-7)

- ஆரம்பகால கிறிஸ்தவர்கள் இரக்கப் பணிகளுக்கு முதலிடம் கொடுத்தனர். அத்தோடு விதவைகள், அநாதைகள், முதியவர்கள் ஆகியோரிடம் விசேட கவனிப்பையும் அக்கறையையும் செலுத்தினர்.
- சீடர்களின் எண்ணிக்கை பெருகிய போது பந்தி பரிமாறுவதிலும் சிற்சில குறைபாடுகளும் பெலவீனங்களும் மேலெழுந்தன.
- பந்தியில் பரிமாறும்போது கிரேக்க மொழி பேசும் கைம்பெண்களுக்கும் எபிரேய மொழி பேசும் யூதர்களுக்கும் அநீதி நிலவுவதாகக் கிரேக்க மொழி பேசுகின்ற யூதர்கள் முறைப்பாடு செய்தனர். கடவுளுடைய வார்த்தைகளைக் கற்பிப்பதை விட்டுவிட்டுப் பந்தியில் பரிமாறும் பணியில் ஈடுபடுவதைத் திருத்தூதர்கள் செய்வது முறையல்ல என்பதால் தூய ஆவியின் அருளும், வல்லமையும், ஞானமும் நிறைந்தவர்களுமான நல்ல மனிதர்கள் ஏழு பேர் நியமிக்கப்பட்டனர்.
- அவர்கள் ஸ்தேவான், பிலிப்பு, பிரக்கோர், நிக்கானோர், தீமோன், பர்மனா, யூதம் தழுவிய அந்தியோக்கிய நகரத்து நிக்கொலா என்பராவார்.
- திருத்தொண்டர்கள் சமூகப்பணிகளுக்காக நியமிக்கப்பட்ட போதிலும் ஸ்தேவான், பிலிப்பு ஆகியோர் மறையைப் போதிப்பதிலும் திருமுழுக்குக் கொடுப்பதிலும் ஈடுபட்டனர்.

### 7.1.5 மறைசாட்சிகள் (தி.ப. 7:54-60)

**ஸ்தேவான்**

- திருச்சபை வளர்ச்சியடைந்து எண்ணிக்கையில் அதிகரித்தவுடன் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களிடமிருந்த பகை அதிகமாகியது. படிப்படியாக யூத - கிறிஸ்தவ பகை அதிகரித்தது.
- யூதர்களால் கொலை செய்யப்பட்ட இயேசுவே மெசியா எனவும் இறைமகன் எனவும், வருகை தர இருந்த மெசியாவைப் பற்றிய முன் கூறப்பட்ட இறைவாக்குகள் இயேசுவின் வழியாக நிறைவேற்றப்பட்டன எனவும் உறுதியாகக் கூறுவதற்கு ஸ்தேவான் பயமின்றி முன்வைத்தார்.
- ஸ்தேவான் எப்பொழுதும் திருச்சட்டத்தை எடுத்துக்காட்டிப் பேசினார்.
- யூதர்கள் மோசேயின் சட்டத்திற்கும் கோவிலுக்கும் முதலிடம் கொடுத்த போதிலும் கிறிஸ்தவர்கள் இயேசுவின் போதனைகளின் படி திருச்சட்டத்தையும் விட அன்போடு செயற்படுவதற்கு முதலிடம் கொடுத்தனர்.
- இவ்வாறான சூழலிலே யூதத்தலைவர்கள், சதுசேயர், பரிசேயர், தலைமைக் குருக்கள் ஆகியோர் கிறிஸ்தவ மறையின் வளர்ச்சியைப் பார்த்துப் பயந்தார்கள். இதனால் அவர்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர்.

- அவர்கள் ஸ்தேவானின் வார்த்தைகளைக் கேட்ட போது அவருக்கு எதிராக எழுந்தனர். ஸ்தேவான் தூய ஆவியின் வல்லமை நிறைந்தவராய் வானத்தை உற்றுநோக்கிக் கடவுளின் மகிமையையும், கடவுளுடைய வலது பக்கத்தில் இயேசு வீற்றிருப்பதையும் கண்டு ''இதோ வானம் திறந்திருப்பதையும் மானிடமகன் கடவுளது வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கிறேன்'' என்று தைரியத்தோடு கூறினார்.
- அவர் கூறியவற்றின் காரணமாக அவரை எருசலேம் நகருக்கு வெளியே இழுத்துக் கொண்டு போய் கல்லாலெறிந்தார்கள். அவர் தனது சாவின் முன்பாகவும் ''ஆண்டவராகிய இயேசுவே எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும்'' என்று வேண்டிக் கொண்டார். மேலும் உரத்த குரலில் ''ஆண்டவரே! இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும் என்று சொல்லி உயிர்விட்டார்.
- இவ்வாறு மரண வேளையிலேயும் ஸ்தேவான் தன்மீது கல் எறிந்தவர்களுக்கு மன்னிப்பு அளித்தார்.
- ஆகவே ஆரம்பகால கிறிஸ்தவ சபையில் இயேசுவின் பெயராலே உயிர் நீத்த முதலாவது மறைசாட்சி இவராவார்.
- ஸ்தேவானின் இறப்பின் பின் கிறிஸ்தவர்களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட துன்புறுத்தல்களின் காரணமாக கிறிஸ்தவர்கள் பயந்து பாதுகாப்புத் தேடி கிராமப் பிரதேசங்களுக்கு ஓடிச் சென்றனர். இதற்கிடையில் சிலர் திருச்சபையில் சேர்ந்து கொண்டனர். இவ்வாறு சிதறுண்ட கிறிஸ்தவர்கள் தாம் சென்ற இடங்களில் எல்லாம் நற்செய்தியைப் பரப்பினர்.

**பெரிய யாக்கோபு (திப 12:1-2)**

- முதலாவது ஏரோது அகிரிப்பா திருச்சபையிலுள்ள சிலரைத் துன்புறுத்தினான்.
- இவன் யோவானின் சகோதரனான யாக்கோபை வாளால் வெட்டிக் கொன்றான் (திப.12:1-2).

### 7.1.6 பிற இனத்தவருக்கு நற்செய்தி (திப. 8:4-18, 10:1-48)

**சமாரியாவில் நற்செய்தி பரவுதல் (திப. 8:4-18)**

- திருத்தொண்டர் பிலிப்பு நற்செய்தி அறிவித்தல், தீய ஆவிகளை வெளியேற்றல், நோயுற்றோரைக் குணம் பெறச் செய்தல், திருமுழுக்குக் கொடுத்தல் போன்றவற்றில் ஈடுபட்டார்.
- சமாரியா நகரில் சீமோன் எனும் மாய வித்தைக்காரன், எத்தியோப்பிய அனமச்சர் ஆகியோருக்கும் பிலிப்புவே திருமுழுக்குக் கொடுத்தார்.
- சமாரியர் இறைவார்த்தையை ஏற்றுக் கொண்டனர் எனக் கேள்விப்பட்டவுடன் எருசலேமில் இருந்த பேதுருவையும் யோவானையும் அவர்களிடம் அனுப்பினர்.
- பேதுருவும் யோவானும் அவர்களுக்குத் தூய ஆவியைப் பெற்றுக் கொடுக்கும் படியாக இறைவனிடம் வேண்டினார்கள். தங்கள் கைகளை அவர்கள் மீது வைத்து அவர்களுக்குத் தூய ஆவியாரைப் பெற்றுக் கொடுத்தனர்.

**பிலிப்பும் எத்தியோப்பிய அளமச்சனும் (திப. 8:26-40)**

- ஆண்டவரின் தூதர் பிலிப்புவிடம் எருசலேமிலிருந்து காசாவுக்குச் செல்லும் வழியாக தெற்கு நோக்கிப் போ என்றார். அங்கு சந்திக்கின்ற எத்தியோப்பிய அலிக்கு நற்செய்தியை அறிவிக்கும்படி அவர் கட்டளையிட்டார். ஆண்டவர் கூறியபடி பிலிப்பு எத்தியோப்பிய இனத்தவரைச் சந்தித்ததோடு அவர் வாசித்துக் கொண்டிருந்த எசாயாவின் நூலில் குறிப்பிடப் பட்டுள்ள திருவிவிலியப் பகுதியிலிருந்து தொடங்கியதோடு இயேசுவைப் பற்றிய முழு நிகழ்வுகளையும் போதித்தார்.

- எத்தியோப்பிய இனத்தவர் இயேசுவை ஏற்றுக்கொண்டதோடு திருமுழுக்கும் பெற்றார்.
- இவ்வாறாகப் பிற இனத்தவருக்கு நற்செய்தி அறிவிக்கும் பணியில் அனேக சீடர்கள் ஈடுபட்டதோடு, ஏற்றுக் கொண்டோர் திருமுழுக்கும் பெற்றுக் கொண்டனர்.

**பேதுருவும் கொர்னேலியுவும் (தி.ப. 10:1-48)**

- யூத மக்களுக்கு இரக்கச் செயல்கள் பல புரிந்து இடைவிடாது இறை வேண்டலில் ஈடுபட்டு இத்தாலியா எனப்பட்ட படைப்பிரிவில் நூற்றுவர் தலைவருமாக இருந்த கொர்னேலியு செசாரியாவில் வாழ்ந்த இறைப்பற்றுள்ளவராவார்.
- பேதுரு எனப்படும் சீமோனை தனது வீட்டுக்கு அழைப்பதற்காக ஒரு தூதர் வழியாகக் கடவுள் கொர்னேலியுவுக்கு அறிவுரை கூறினார்.
- கடவுளுடைய குரலுக்குச் கீழ்படிந்து கொர்னேலியு தனது வேலையாட்கள் மூவரை யோப்பாவிற்கு அனுப்பினார். பேதுரு விசேட காட்சியொன்றின் மூலம் தான் நிறைவேற்ற வேண்டிய பணியினைப் பற்றி விளங்கிக் கொண்டார்.
- பேதுரு கொர்னேலியுவின் ஊழியர்களின் செய்தியைக் கேட்டு அன்று அவர்களுக்குத் தங்குவதற்கு இடம் கொடுத்து மறுநாள் கொர்னேலியுவின் இல்லத்திற்கு அவர்களுடன் புறப்பட்டார்.
- கொர்னேலியுவும் அவருடைய உறவினர்களும் பேதுருவின் வருகைக்காகக் காத்திருந்தனர்.
- கொர்னேலியுவின் இல்லத்தில் பேதுரு நற்செய்தியை அறிவித்தார்.
- பேதுரு இயேசுவின் வல்லமையுள்ள செயல்களையும், பணியையும், பாடுகளையும், மரணத்தையும், உயிர்ப்பையும் பற்றியும் அதிகாரத்தோடு பேசினார்.
- பேதுரு பேசிக் கொண்டிருக்கும் போதே அதனைக் கேட்ட அனைவர் மீதும் தூய ஆவியார் வந்திறங்கியதால் அவர்களுக்குத் திருமுழுக்கு கொடுக்கும் படி கட்டளை இடப்பட்டது.
- பிற இனத்தவர் மேல் தூய ஆவியானவர் வருகை தருவதைப் பற்றி விருத்தசேதனம் பெற்ற யூதர்கள் வியப்படைந்தனர்.

**எருசலேம் சங்கம் (திப. 15:1-21)**

- இயேசுவில் நம்பிக்கை கொண்ட பிற இனத்தவர் விருத்தசேதனம் செய்து கொள்ளக் கட்டளையிட வேண்டுமெனப் பரிசேயரின் கட்சியினரும் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்ட சிலரும் தர்க்கித்தனர்.
- திருத்தூதர்களும் மூப்பர்களும் இவ் விடயத்தைக் குறித்து நீண்ட நேர விவாதத்தில் ஈடுபட்டனர்.
- பேதுரு எழுந்து பேசுகையில் மீட்புப் பெறுவது இயேசுவின் அருளால் மட்டுமே என்பதை விளக்கமாகக் கூறினார்.
- பவுல், பர்னபா ஆகியோரின் பணிகளைப் பற்றி எடுத்துரைத்ததை அங்கு திரண்டிருந்தோர் கேட்டுக் கொண்டிருந்தனர்.
- கடவுள் பிற இனத்தவரிடமிருந்து தமக்கென மக்களைத் தேர்ந்துகொள்ள ஆரம்பத்திலிருந்தே செயற்பட்ட விதத்தினையும் சீமோன் எடுத்துரைத்த விதத்தையும் இறைவாக்கினரின் போதனைகளையும் யாக்கோபு விளக்கமாக எடுத்துரைத்தார்.
- எனவே பிற இனத்தவர்கள் மத்தியில் கடவுளிடம் திரும்புவோருக்கு மேலும் சுமைகளைச் சுமத்தாது பின்வரும் விடயங்கள் தொடர்பாக முடிவு எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.
- விருத்தசேதனம் தேவையற்றதெனவும் சிலைகளுக்குப் படைக்கப்பட்டுத் தீட்டுப்பட்டவை, பரத்தமை, கழுத்து நெரிக்கப்பட்டுச் செத்தவை, இரத்தத்தை அருந்துதல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டுமென முடிவு எடுக்கப்பட்டது.
- விருத்தசேதனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது.

**கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.**

- தூய ஆவியாரின் வருகை நிகழ்ந்த விதத்தினை விளக்குக.
- ஆரம்பகால திருச்சபையின் பண்புகளை எழுதுக.
- பிற இனத்தவர் மத்தியில் நற்செய்தி பரப்பப்பட்ட விதத்தினை விளக்குக.
- எருசலேம் சங்கம் எடுத்த முடிவுகளை எழுதுக.

## உசாத்துணை நூல்கள்

1. திருவிவிலியம் - தமிழ் பொது மொழிபெயர்ப்பு இரண்டாம் பதிப்பு 2006, இலங்கை.

**தேர்ச்சி 7.0 : தாம் எதிர்கொள்ளும் சவால்களைத் தூய ஆவியின் வல்லமையால் வெற்றி கொண்டு நம்பிக்கைக்குச் சான்று பகர்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.2: நம்பிக்கையைப் பாதுகாத்துச் சாவல்களை வெற்றி கொள்வார்.**

**பாடவேளைகள் : 25**

**கற்றல் பேறுகள் :**

- சவால்கள் முன்னிலையில் நம்பிக்கையைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
    - கத்தோலிக்க திருச்சபையின் பேதகாலம் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன் வைப்பார்.
    - நம்பிக்கைக்கு எதிரான சவால்களை வெற்றி கொள்வார்.
    - சவால்களை வெற்றி கொள்வதற்குப் பிறருடன் ஒத்துழைப்பார்.

### 7.2.1 முதலாம் கலாபனை: பேரரசன் நீரோவின் காலம் (கி.பி. 64-68)

- கிறிஸ்தவர்களுக்கு எதிராகத் துன்புறுத்தல்களை ஆரம்பித்த முதலாவது உரோமைப் பேரரசன் நீரோ ஆவார்.
- பல மாகாணங்களை அழிவுக்கு உட்படுத்தியதால் உரோமையில் ஏற்பட்ட தீவைப்புக்குச் கிறிஸ்தவர்களே பொறுப்புக்கூற வேண்டியவர்களாவர் என அவர்களைக் கொடூரமாகத் துன்புறுத்துவதற்குப் பேரரசன் செயற்பட்டான்.
- தாம் கிறிஸ்தவர்கள் எனக் கூறிச் சாட்சிபகர்ந்தோருக்கும், உளவு பார்த்து அதனால் கைது செய்யப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் மரண தண்டனை வழங்குவதற்கு நீரோ நடவடிக்கை எடுத்தான்.
- கிறிஸ்தவர்களின் உடலில் காட்டு மிருகங்களின் தோலைப் போர்த்தி மக்களின் நகைப்புக்குட்படுத்தி நாய்களுக்கு இரையாக்குதல், சிலுவையில் அறைதல், உயிரோடு எரித்தல், கிறஸ்தவர்களுக்குக் குங்குலியத்தையும், கந்தகத்தையும் தடவி நடைவிளக்குகளாக நீரேவின் தோட்டத்தில் ஒளியூட்டப் பயன்படுத்துதல் போன்ற கொடிய துன்புறுத்தல்கள்களுக்கு உள்ளாக்கினான்.
- பேதுரு, பவுல் ஆகியோர் நீரோவின் கொடிய கலாபனைக் காலத்தில் கொலை செய்யப்பட்டனர்.
- இக்கலாபனையின்போது உரோமையக் கிறிஸ்தவர்கள் மறைசாட்சிகளானதோடு நம்பிக்கையில் கிறிஸ்தவ மறை மேலும் வளர்ச்சியுற்றது.

### 7.2.2 இரண்டாவது கலாபனை: பேரரசன் தொமீசியனின் - காலம் கி.பி. 95-96

- நீரோவைப் போன்று தொமீசியனும் கிறிஸ்தவர்களை மிகவும் கொடுமையாகத் துன்புறுத்திய பேரரசன் ஆவான்.
- தனது செனற்சபையில் பிரச்சனைகளை ஏற்படுத்திக்கொண்ட இவன் தனது அதிகாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த எல்லோரையும் கொலை செய்தான்.
- இரகசிய உளவாளிகள் வழியாகக் கிறிஸ்தவர்கள் பற்றிய தகவல்களைத் தேடிக்கொண்ட இவன் எந்தவொரு வழக்கு விசாரணைகளும் இன்றிக் கிறிஸ்தவர்களை நர்டுகடத்தல், மனிதாபிமானமற்ற முறையில் கொலை செய்தல், கொடூரமான தண்டனை வழங்குதல் போன்ற செயல்களில் ஈடுபட்டான்.
- புனித யோவானைப் பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்டது இப்பேரரசனின் காலத்திலேயாகும்.

- கிறிஸ்தவனான தனது மருமகன் பிளாவியுஸ் கிளெமென்சைக் கொண்றான். தனது மனைவியான பிளாவியா தொமித்தில்லாவை நாடுகடத்துவதற்குத் தொமிசியன செயற்பட்டான்.
- கிறிஸ்தவ வாழ்விலிருந்து வெளிக்கொணரப்பட்ட சகோதர அன்பையும், அமைதியையும், இரக்கத்தையும் போன்று, தூய்மையையும் இவன் இழிவாகக் கருதினான்.
- பேரரசனைக் கடவுளென வணங்கும்படி கட்டளையிட்ட தொமீசியன் தன்னை கடவுளென வணங்காதவர்களை நாத்திகன் என அறிமுகம்செய்து அவர்களுக்குக் கொடூரமான தண்டனை விதித்தான்.
- சின்ன ஆசியாவிலுள்ள கிறிஸ்தவர்களையும் கொடிய முறையில் துன்புறுத்துவதற்குப் தொமீசியன் செயற்பட்டான்.
- இத்துன்புறுத்தல்களைத் தாங்கிக் கொள்ள முடியாத சில கிறிஸ்தவர்கள் தேவதைகளுக்கு பலி ஒப்புக்கொடுப்பதற்கு இணங்கினர்.
- கொடூரமான மனிதத் தன்மையற்ற கலாபனைக் காலத்திற்கு முகம்கொடுப்பதற்கு நேர்ந்த போதிலும் கிறிஸ்தவ மறை அதிக அதிகமாக வளர்ச்சியுற்றது.

### 7.2.3 மூன்றாவது கலாபனை: பேரரசன் திராஜனின் காலம் - கி.பி. 98-117

- திராஜன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய பேரரசன் ஆவான்.
- இக்காலத்தில் கைதுசெய்யப்பட்ட கிறிஸ்தவர்களை அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்க உரோமைய தேவதைகளை வணங்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினான்.
- நிரூபிக்கப்பட முடியாத பொய்க்குற்றங்களின் அடிப்படையில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவது திராஜனினால் மேற்கொள்ளப்படவில்லை.
- கிறிஸ்தவர்களுக்கும், யூதர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அறிந்துகொள்ளாத திராஜன் யூதர்கள் கலகம் செய்த சந்தர்ப்பங்களில் அக்கலகங்களைக் கட்டுப்படுத்துவதற்காக கிறிஸ்தவர்களை அதிகமாக துன்புறுத்த முற்பட்டான்.
- கிறிஸ்தவ பக்தர்களாக இருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்பது ஆளுனரான பிளினிக்கும் பேரரசன் திராஜனுக்கும் இடையில் உள்ள கடிதத் தொடர்பின் வழியாக அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.
- அந்தியோக்கிய ஆயரான புனித இஞ்ஞாசியார் கொடிய விலங்குகளுக்கு இரையாக்கப்பட்டது இக்கலாபனைக் காலத்திலேயே ஆகும். எருசலேம் பேராயர் டேமியன், புனித டெமற்றில்டா ஆகியோரும் இக்காலத்தில் மறைசாட்சிகளாயினர்.
- மறைசாட்சி மரணத்திற்கு உள்ளாகிய புனித இக்னேசியஸ் தனது மரணத்திற்கு முன் சிமெர்னா ஆயர் பெலிகார்ப்பு உட்பட பலருக்கு எழுதிய கடிதங்களின் வழியாக கலாபனையின் வன்செயல்களை எடுத்துக்காட்டியுள்ளார்.
- கலாபனைகள் வந்தபோதிலும் கிறிஸ்தவர்களின் நம்பிக்கையினுள் கிறிஸ்தவ மறையைத் தழுவியவர்களின் எண்ணிக்கை வளர்ச்சி அடைவது ஆச்சரியத்துக்குரிய விடயமாகும்.
- கிறிஸ்தவர்கள் தமது உயிருக்கான அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாமல் நம்பிக்கையோடு நிலத்துக்குக் கீழிருந்த கல்லறை வீடுகள் அல்லது கற்றகும்களில் வழிபாடுகளுக்காக ஒன்றுகூடியமை முக்கியமான நிகழ்வாகும்.

### 7.2.4 நான்காவது கலாபனை: பேரரசன் மாற்குஸ் அவுரேலியன் காலம் (கி.பி 161-180)

- இவன் பேரரசினுள் அமைதியைப் பாதுகாப்பதற்காகக் கிறஸ்தவர்களை அடக்கும் செயல்களில் ஈடுபட்ட ஒரு பேரரசன் ஆவான்.
- இக்காலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு கொள்ளைநோய்கள் ஆகிய இயற்கை அனர்த்தங்களைப் போலவே மிலேச்ச கோத்திரத்தின் ஆக்கிரமிப்புக்களுக்கும் கிறிஸ்தவர்களே பொறுப்புக் கூறவேண்டும் எனப் பேரரசன் உட்பட அதிகாரமுடையோரால் தீர்மானம் எடுக்கப்பட்டது.
- உரோமைய தேவர், தேவதைகளுக்குப் பலிசெலுத்த மறுக்கின்ற கிறிஸ்தவர்களினாலேயே பேரரசுக்கு அழிவு ஏற்பட்டுள்ளது என இவர்கள் கூறினர்.
- மிக அதிகமானதும், உக்கிரமமானதுமான கலாபனைகளுக்குக் கிறஸ்தவர்கள் முகங்கொடுக்க நேரிட்டதோடு அவை மிக நீண்ட கலாபனைகளாகவும் இருந்தன.
- இக்காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு மரண தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு சுரங்கங்களில் அடிமைவேலைகளுக்காகவும் அவர்கள் அமர்த்தப்பட்டனர்.
- இக்காலத்தில் புனித ஜஸ்ரின், புனித சிசிலியா, புனித பெலிகார்ப் ஆகியோர் மறைசாட்சிகளாக உயிர்த்தியாகம் செய்தனர்.
- எவ்வளவு கலாபனைகள் வந்தபோதும் கிறிஸ்தவமறை பரவுவது இடைவிடாது தொடர்ந்தது விசேட அம்சமாகும்.

### 7.2.5 ஐந்தாவது கலாபனை: பேரரசன் செப்திமுஸ் செவருஸின் காலம் (கி.பி. 202-211)

- இப்பேரரசனால் கிறிஸ்தவ மறையைத் தழுவுவது முழுமையாகவே தடைசெய்யப்பட்டிருந்தது..
- அரசு கிறிஸ்தவர்களைத் தேடிச்சென்று தண்டனை கொடுத்தது.
- சமூகமாக கிறிஸ்தவர்களைக் கொன்றுவிட முயற்சி எடுக்கப்பட்ட காலமாகும்.
- மிகக் கொடூரமான தாக்குதல்களுக்குக் கிறிஸ்தவர்கள் முகங்கொடுக்க நேரிட்டது.
- புனித எரேனியுஸ், புனித பெர்பேத்துவா ஆகியோர் மறைசாட்சிகளாயினர்.
- கலாபனைகள் மத்தியில் பரவிய கிறிஸ்தவ மறையின் ஒளி பேரரசின் எல்லா திசைகளிலும் பரவத் தொடங்கியது.

### 7.2.6 ஆறாவது கலாபனை: பேரரசன் மாக்சிமியனின் காலம் (கி.பி. 235-238)

- முதல் முறையாகக் கொடூரமாகக் கிறிஸ்தவ குருக்கள், ஆயர்களைத் துன்புறுத்துவது பேரரசன் மாக்சிமியன் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது.
- குருக்களதும், ஆயர்களதும் நம்பிக்கையை உடைத்தெறிந்து கிறிஸ்தவ மறையின் பரம்பலைத் தடுப்பதற்காக இவன் செயற்பட்டான்.
- கிறிஸ்தவர்களைப் போன்று குருக்களும் ஆயர்களும் நாடுகடத்தப்பட்டு, அடிமைகளாக்கப்பட்டமை இடம் பெற்றது.

**கலாபனை முறைகள்**

- குருக்கள், ஆயர்கள், திருத்தந்தையர்கள் தேடப்பட்டுச் சுரங்கங்களில் வேலைகளுக்கு அடிமைகளாக நாடுகடத்தப்பட்டனர்.
- மரண தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட்டது.

**மறைசாட்சிகள்**

- குருக்களும், ஆயர்களும், திருந்தையரும் இக்காலத்தில் மறைசாட்சிகளாயினர்.
- புனித திருத்தந்தை அந்தேருஸ் இதில் ஒருவராவார்.

### 7.2.7 ஏழாவது கலாபனை: பேரரசன் தேசியுஸின் காலம் (கி.பி 249-251)

- முதல் முறையாகப் பேரரசு முழுவதும் கலாபனை இக்காலத்திலேயே பரவியது.
- இக்காலம் ஒரு கொடூரமான கலாபனைக் காலமாகக் கிறிஸ்தவர்கள் முகங்கொடுக்க வேண்டி நேரிட்டது.
- கிறிஸ்தவ மறையை முழுப் பேரரசிலிருந்தும் வேரோடு அழிப்பதாக வெளிப்படுத்திய பேரரசன், கொடிய இம்சைகளுக்கு இரையாக்குவதின் வழியாக கிறிஸ்தவர்களை அழிப்பதற்கு தனது அனுமதியை வழங்கினான்.
- எவ்வாறாயினும் கிறிஸ்தவர்களை அரச மறைக்கு திருப்புவதே தவிர அவர்களை வேரோடு அழிப்பதற்கு அல்ல என்பதே சிப்ரியன் (சேபியஸ்) அறிக்கையிட்டுள்ளான்.
- பேரரசனைத் தெய்வமாக வணங்குவதற்கு கட்டாயப்படுத்துவது இங்கு காணப்படும் முக்கியமான அம்சமாகும்.
- பேரரசில் உள்ள அனைத்து மக்களும் உரோமையத் தேவர், தேவதைகளை வணங்க வேண்டும் என பேரரசன் கி.பி 250ல் கட்டளை ஒன்றை பிறப்பித்தான்.
- பேரரசனின் சிலைகளுக்கு பலி ஒப்புக்கொடுப்பதற்கும் தேவதைகளை வணங்குவதற்கும் அவர்களைக் கட்டாயப்படுத்தி லிபெலூஸ் (Libellus) என்ற சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு அனைத்துக் குடிமக்களையும் கட்டாயப்படுத்தினான்.
- லிபெலுஸ் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கும் கட்டளை விதிக்கப்பட்டது.
- சிலர் போலியான லிபேலூஸ் சான்றிதழை விலைகொடுத்து வாங்கித் தம்மோடு வைத்திருக்க முயன்றனர்.
- பேரரசனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்ததாகக் காட்டிக்கொண்ட இச்சான்றிதழை வைத்திருந்த அனைவரும் மரணத்திலிருந்து தப்பிக்கொண்டதோடு ஏனையோர் கொலை செய்யப்பட்டனர்.
- இக்கலாபனையிலிருந்து தப்புவதற்காக அனேகமான கிறிஸ்தவர்கள் பாலைவனங்களுக்குச் சென்று தவ வாழ்வில் ஈடுபட்டனர்.

**மறைசாட்சிகள்.**

- புனித பபியன், புனித அகத்தம்மாள்
- புனித அலெக்சாந்தர் ஆகியோர் இக்காலத்தில் மறைசாட்சிகளாயினர்.
- கலாபனைகளுக்கு உள்ளாகாதபோது கிறிஸ்தவர்கள் அடையாளங்களுடன் வளர்ச்சியடைந்தமையைக் காணலாம்.

### 7.2.8 எட்டாவது கலாபனை: பேரரசன் வலேரியனின் காலம் (கி.பி 254-260)

- இக்காலத்தில் பேரரசு முழுவதுமே கலாபனைகள் நிகழ்ந்தன.
- கிறிஸ்தவர்கள் விக்கிரக தெய்வங்களுக்குப் பலியிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டனர்.
- கொடூரமான கலாபனைக் காலத்துக்குக் கிறிஸ்தவர்கள் இங்கு முகங்கொடுக்க நேரிட்டது.

**கலாபனை முறைகள்**

- குருக்கள், ஆயர்கள், திருத்தந்தையர்கள் சிறை பிடிக்கப்பட்டனர்.
- கிறிஸ்தவ கோவில்கள் தீக்கிரையாக்கப்பட்டன.
- கிறிஸ்தவ நூல்கள் அழிக்கப்பட்டன.
- உரோமைய தேவர், வேதைகளுக்குப் பலியிட வேண்டுமெனக் கிறிஸ்தவர்கள் வற்புறுத்தப்பட்டனர்.
- கிறிஸ்தவர்களின் உரிமைகள் இரத்து செய்யப்பட்டன.
- மரண தண்டனை விதிக்கப்பட்டது.

**மறைசாட்சிகள்**

- புனித லோரன்ஸ், புனித லவுரேஞ்சியார்
- புனித திருத்தந்தை 2வது சிக்டஸ் (சிக்துஸ்)
- இக்காலத்தில் கொடூரமான கலாபனையின் மத்தியிலும் கிறிஸ்தவ மறை விரைவான வளர்ச்சியை நோக்கிச் சென்றதென வரலாறு சான்று பகர்கின்றது.

### 7.2.9 ஒன்பதாவது காலபனை: பேரரசன் அவுரேலியன் காலம் (கி.பி 274-280)

- இக்கலாபனை உரோமைய செனட்சபை அங்கத்தவர்களின் பக்கச்சார்பினைப் பெற்றுக் கொள்வதற்காகவே ஆரம்பிக்கப்பட்டது.
- பேரரசன் தனது அதிகாரத்தை உறுதி செய்து கொள்வதற்காகவும், உரோமைய பேரரசின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்காகவும் கிறிஸ்தவ மறையை அழிப்பதில் ஈடுபட்டான்.

**கலாபனை முறைகள்**

- எரித்துக் கொல்லப்படுதல்
- காட்டு விலங்குகளுக்கு இரையாக்குதல் போன்ற துன்புறுத்தல்களுக்கு முகங்கொடுக்க கிறிஸ்தவர்களுக்கு நேரிட்டது.

**மறைசாட்சிகள்**

- திருத்தந்தை புனித பெலிஸ்

### 7.2.10 பத்தாவது கலாபனை: பேரரசன் தியோக்கிளிசியன் காலம் (கி.பி. 284-305)

- கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட பயங்கரமான கலாபனைக் காலம் இதுவாகும்.
- பேரரசன் தியோக்கிளிசியன் பேரரசின் ஆட்சியின் கோட்பாடுகளை மாற்றியமைப்பதற்கு முயற்சி எடுத்தான்.
- இவன் கிறிஸ்தவ மறையை வேரோடு அழிக்க வேண்டும் என்ற நோக்கத்திலிருந்தான்.
- உரோமைய பேரரசில் இருந்த கிறிஸ்தவப் படை அதிகாரிகளைப் பணி நீக்கம் செய்துவிட்டு உயர் அதிகாரிகளுக்கு உரோமைய தேவர், தேவைதைகளுக்குப் பலி ஒப்புக்கொடுக்கும் படி இவனால் கட்டளையிடப்பட்டது.
- கி.பி. 303இல் நான்கு கடும் ஆணைகளை வெளியிட்டுக் கிறிஸ்தவக் கலாபனையை இரண்டு மூன்று மடங்குகளாக அதிகரிக்கச் செய்த பேரரசன் இவன் ஆவான்.

- பேரரசில் வாழும் அனைவரும் அரசு மூலம் நியமிக்கப்படும் தேவர், தேவதைகளுக்குப் பலி செலுத்த வேண்டும்.
- கிறிஸ்தவர்களைக் கொன்று விடாதிருக்கப் பேரரசன் முன்பு செய்திருந்த தீர்மானம் மாற்றப்பட்டு கிறிஸ்தவர்களை முழுமையாகக் கொலை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**கலாபனை முறைகள்**

- புனித நூல்களையும் கோவில்களையும் எரித்தல்.
- உரோமைய தேவ, தேவதைகளுக்குப் பலி செலுத்துமாறு கிறிஸ்தவர்களைக் கட்டாயப்படுத்தல்.
- கிறிஸ்தவர்களை அரச பணியிலிருந்து நீக்குதல்.
- கிறிஸ்தவ அடிமைகளை விடுதலை செய்வதற்கு எதிராக சட்டம் பிறப்பிக்கப்பட்டது.
- கிறிஸ்தவ மறையைப் பகிரங்கமாகக் கைவிடுவதாக வாக்குக் கொடுக்க நேரிட்டது.
- மறைசாட்சிகளின் கல்லறைகளையும் கட்டடங்களையும் அழித்தல்.
- கிறிஸ்தவர்களைத் துண்டங்களாக வெட்டிக் கொன்றுவிடுதல்.
- மரங்களிலும் தூண்களிலும் கட்டி எரித்தல்.
- கடினமான வேலைகளுடன் சிறையிலடைத்தல்.
- நாடுகடத்தப்படல்.
- கொடிய காட்டு மிருகங்களின் நடுவில் எறிதல்.
- சிரச்சேதம் செய்தல்.
- எரியூட்டப்பட்ட இரும்புக் கதிரைகளில் அமரச் செய்து எரித்தல்.
- கண்களைப் பிடுங்குதல்.
- இறக்கும் வரை பட்டினியாக இருக்கச் செய்து இறக்கும் படி செய்தல்.
- உடலை இரண்டாகக் கிழித்தல்.

**மறைசாட்சிகள்**

- புனித செபஸ்தியார்.
- புனித அக்னஸ் அம்மாள்.
- புனித லூசியா ஆகியோர் இக்கால மறைசாட்சிகளாவர்.
- கலாபனைகளின் மத்தியிலும் தாம் கிறிஸ்தவர்கள் எனச் சொல்லிக் கொண்டு கிறிஸ்தவ மறையின் தனித்துவத்தை உயர்வாகக் காட்டிய கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையின் வேகத்தில் எந்வொரு குறைவும் இருக்கவில்லையென வரலாற்று அறிஞரான எயுசேபியுஸ் கூறியுள்ளார்.
- கிறிஸ்தவ மறையை வேரோடு அழிப்பதற்குப் பேரரசனும் இவனுக்கு உட்பட்ட குழுவினரும் செயற்பட்டபோதும், இறை உதவியுடனும் தூய ஆவியாரின் வல்லமையாலும் கிறிஸ்தவ மறை வளர்ச்சி அடைந்தது.

### 7.2.11 கலாபனைக் காலத்தில் மிளிர்ந்த விசேட பண்புகள்

1. சவால்களுக்குப் பயமின்றி முகங்கொடுத்தல்.

2. நம்பிக்கையைப் பாதுகாப்பதற்காக முயற்சிகள் எடுத்தல்.
3. சவால்களுக்கு முகங்கொடுக்கும் போது நம்பிக்கையில் பலமடைதல்.
4. கலாபனைகளுக்கு முகங்கொடுப்பதன் வழியாகத் தூய ஆவியாாரின் வல்லமையை அனுபவித்தல்.
5. எப்பொழுதும் நம்பிக்கைக்குச் சான்று பகர்தல்.
6. கலாபனைகளின் மத்தியிலும் நம்பிக்கையோடு கிறிஸ்தவ மறை வளர்ச்சியடைதல்.

**மிலான் சாசனம் (கி.பி. 313)**

- கி.பி 313இல் மிலான் சாசனம் வெளியிடப்பட்டதோடு பேரரசன் கொன்ஸ்தாந்தினால் கலாபனைக் காலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
- கிறிஸ்தவ அடையாளங்களுடனான கொடிகளையும் ஆயுதங்களையும் உயர்த்தியவாறு யுத்தத்திற்குப் புறப்பட்டதால் எதிரிகளை வெற்றிகொள்ள முடிந்ததால் பேரரசன் கொன்ஸ்தாந்தின் சுதந்திரமாக மறையை வழிபடுவதற்கும் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்தான்.
- மிலான் சாசனத்தின் காரணமாக கிறிஸ்தவர்களுக்குச் சுதந்திரமான காலம் உதயமானது.

**கி.பி. 313இல் மிலான் சாசனத்தின் வழியாக**

- பேரரசில் வாழ்கின்ற அனைவருக்கும் தமது மறையைப் பின்பற்ற முழுமையான சுதந்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டது.
- கிறிஸ்தவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களும் மீண்டும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன.
- கிறிஸ்தவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த எல்லாச் சட்டங்களும் இரத்துச் செய்யப்பட்டன.

**பின்னர் வழங்கப்பட்ட சலுகைகள்.**

- கிறிஸ்தவர்களின் சபாத் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
- எந்த விதமான குற்றங்களுக்கும் உள்ளான போதும் சிலுவையில் அறையும் தண்டனை இரத்துச் செய்யப்பட்டது.
- உரோமைய நம்பிக்கைகளில் இருந்த ஊழல்கள், சடங்கு முறைகள் தடைசெய்யப்பட்டன.
- கிறிஸ்வதக் குருக்கள் வரிகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.
- பேரரசில் நிர்வாகப் பதவிகள் வகிப்பதற்கு கிறிஸ்தவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
- சிலுவையின் அடையாளம் பேரரசின் உத்தியோக சின்னமாக்கப்பட்டது.
- திருத்தந்தைக்கு இலாத்திரன் மாளிகை மீண்டும் கொடுக்கப்பட்டது.
- முதல் சில நூற்றாண்டுகளில் கலாபனைகளின் சவால்களுக்கு முகங்கொடுத்த திருச்சபை நம்பிக்கையால் சக்திபெற்று கலாபனைக்கு மத்தியிலேயும் நம்பிக்கைக்குச் சான்றுபகர்ந்தது.
- தற்போதைய கிறிஸ்தவர்களாக வாழ்க்கைச் சவால்களுக்கு முகங்கொடுக்கும்போது இறைவனில் உள்ள நம்பிக்கையைச் சக்திபெறச் செய்தவற்கு ஆரம்பகால கிறிஸ்தவர்கள் எமக்குப் பெரியதோர் முன்மாதிரிகையைக் காட்டியுள்ளனர்.

கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.

- பல்வேறு நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய பேரரசர்களும் அவர்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய விதத்தையும் எழுதுக.
- பல்வேறு நூற்றாண்டுகளில் மறைசாட்சிகளின் பெயர்கள் உள்ளடக்கப்பட்ட பட்டியலொன்றைத் தயார் செய்யவும்.
- மிலான் சாசனம் என்பது என்ன என விளக்குக.
- கலாபனைக் காலத்திலே காணக்கூடியதாக இருந்த விசேட பண்புகளை எழுதவும்.

**உசாத் துணை நூல்கள்.**


1. அதி. மேதகு. பர்னாந்து. ஜே. எலெக்ஸ், நூத்தன கத்தோலிக்க சபாவ, 2008.
2. பேராசிரியர். சோமரத்ன, ஜீ. பீ. வி கிறிஸ்து சாசனயே இத்தியாசய, முதற் பகுதி.
3. Frend, W.H.C., Martyrdon Perception, **Early Church, 1981.**

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 7.0** | **:** | **தாம் எதிர்கொள்ளும் சவால்களைத் தூய ஆவியின் வல்லமையால் வெற்றி கொண்டு நம்பிக்கைக்குச் சான்று பகர்வார்.** |
| **தேர்ச்சி மட்டம் 7.3** | **:** | **நம்பிக்கையினால் ஊட்டம் பெற்றுத் திருச்சபையின் போதனைகளின் படி வாழ்வார்.** |
| **பாடவேளைகள்** | **:** | **25** |
| **கற்றல் பேறுகள்** | **:** | |

- திருச்சபைத் தந்தையர் தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.
- இறைநம்பிக்கையை வளர்த்துக் கொள்வதோடு திருச்சபையின் சத்தியங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வார்.
- திருச்சபைத் தந்தையர் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- தூய திருச்சபையின் மறை உண்மைகளின்படி வாழ்வார்.
- பிறருடைய நம்பிக்கையை வளர்ப்பதற்கு ஒத்துழைப்புடன் செயல்படுவார்.

## 7.3.1 திருச்சபைத் தந்தையர்கள் (The Church Fathers)

- ஆரம்பகாலக் கிறிஸ்தவ சபையின் தூய்மையான கிறிஸ்தவ மறையையும் நம்பிக்கையையும் பாதுகாப்பதற்காகச் சரியான கேள்வி ஞானமுள்ள கற்பித்தலிலும், போதிப்பதிலும், எழுத்தாற்றலிலும் பங்களிப்புச் செய்த ஆரம்பகால கல்வியாளர்களின் குழுக்கள் திருச்சபையின் தந்தையர்கள் என இனங்காணப்பட்டனர். ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ எழுத்தாளர் திருச்சபையின் தந்தையர் என அழைக்கப்பட்ட போது கவனத்திற் கொள்ளப்பட்ட விடயங்கள் நான்காகும்.
    1. முன்வைக்கப்பட்ட மறையின் பிழையின்மை (Orthdoxy)
    2. தூய்மையான வாழ்வு (Sanctity)
    3. திருச்சபையின் அனுமதி (Apostolicity)
    4. வாழ்ந்த காலப்பகுதி (Antiquity)

**சபைத்தந்தையரின் பணிகள்**

- ஆரம்பகாலச் சபையின் படிப்பினைகளுக்கு முரணான படிப்பினைகளான பேதகங்களுக்குப் பதில் அளித்தலின் வழியாகத் தூய கிறிஸ்தவ மறையைப் பாதுகாப்பது சபைத் தந்தையரின் முக்கிய பணியாக இருந்தது. இதே போன்று யூத மற்றும் பிற மறைகளினால் எழுந்த பிரச்சினைகளுக்குப் பதில்களை விளக்கமாகக் காட்டுவதும் இவர்களது இன்னுமொரு பொறுப்பாகும். தூய கிறிஸ்தவ மறையைப் பாதுகாப்பது இவர்களது ஒரே பொறுப்பாக இருந்ததோடு திருச்சபையின் பதவி நிலை அதிகாரத்தினால் நியமிக்கப்பட்ட ஆயர்களான இவர்களின் போதனை நூல்களின் வழியாக, திருச்சபை மறை உண்மைகளுக்கு வரலாற்று அடிப்படையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் இயலுமாயிருந்தது. சபைத் தந்தையரின் படிப்பினைகளின் வழியாகக் கிறிஸ்தவ மறை பாதுகாக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் கிறிஸ்தவ மறையின் வளர்ச்சியிலும் இது தாக்கத்தை ஏற்படுத்தியது.
- சபைத் தந்தையர்கள் பற்றிய கற்றல் என்பது நம்பிக்கையின் மீது கட்டியெழுப்பப்பட்ட இறையியல் விஞ்ஞானமாகும்.
- சபைத் தந்தையர்களின் எழுத்தாக்கங்களின் வழியாக முன்வைக்கப்பட்ட படிப்பினைகள் சபைத் தந்தையர் மறை (Patrology) அல்லது சபைத் தந்தையரின் இலக்கியம் எனவும் அழைக்கப்பட்டது.

**சபைத் தந்தையர்களின் இலக்கிய மொழி**

- சபைத் தந்தையர்கள் தமது ஆக்கங்களை நூல் வடிவமாக்குவதற்காகப் பயன்படுத்திய மொழிக்கேற்ப அவர்கள் கிரேக்க மற்றும் இலத்தீன் தந்தையர்கள் என அழைக்கப்பட்டனர்.

| கிரேக்க தந்தையர்கள் | இலத்தீன் தந்தையர்கள் |
|---|---|
| பசில் | அம்புறோஸ் (அமிர்தநாதர்) |
| ஜோன் கிறிசோஸ்தம் | (அகுஸ்தினார்) அகஸ்தீன் |
| அத்தனாசியார் | பெரிய கிரகோரியார் |
| நசியானசிஸ் கிரகோரியார் | ஜெரோம் |

- திருத்தந்தை 8வது பொனிபஸ், அம்புரோஸ், ஜெரோம், அகஸ்ரீன், கிரோகரி ஆகியோர் திருச்சபையின் மறை மாமேதைகளாக அழைக்கப்பட்டனர்.

### 7.3.2 அப்போஸ்தலிக்க தந்தையர்கள் (Apostolic Fathers)

- திருத்தூதர்களுக்கு மிக நெருங்கிய உறவு முறையான தந்தையர்கள் இப்பெயரில் அழைக்கப்பட்டனர். இவர்களின் ஒரு குழுவினர் திருத்தூதர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்ததோடு ஏனைய குழுவினர் திருத்தூதுர்களின் படிப்பினைகளை அவர்களது சீடர்களின் வழியாகப் பெற்றுக் கொண்டோராவர்.
- இக்குழுவினர் திருத்தூதர்களின் காலம் முடிவடைந்த கட்டத்தில் சபையில் சேர்ந்த எழுத்தாளர் குழு என அழைக்கப்பட்டனர்.
- அப்போஸ்தலிக்க தந்தையர்களின் எழுத்தாக்கங்கள் நூல்களில் உள்ளடங்கிய விடயங்களில் பெரும்பாலானவை புதிய ஏற்பாட்டின் படிப்பினைகளோடு தொடர்புபடுத்தப் பட்டுள்ளதென விளக்கமாகக் காணக் கூடியதாயுள்ளது.
- இக்கடிதங்கள் பல்வேறு சபைகளில் மேலெழுந்த பிரச்சினைகளுக்குப் பதில்களாக எழுதப்பட்டவைகளாகும்.
- அவ்வாறே சபையின் காலத்திற்கு உகந்த தொனிப்பொருளில் எழுதப்பட்டமையால் அவை ஆயரின் கடிதங்கள் (Pastoral Letters) எனவும் அழைக்கப்பட்டன.
- அப்போஸ்தலிக்க தந்தையர்கள் என உரோமையில் கிளமென்ட், அந்தியோக்கிய இஞ்ஞாசியார் (இக்னேசியஸ்), சிரேனின் பொலிகாப், ஹர்மஸ், ஹயராப்போலிஸ் (Hierapolis) பப்பியாஸ் ஆகியோர் அடங்குவர்.

**அப்போலோஜிஸ்த எழுத்தாளர்கள் என்னும் தர்க்கவியலாளர்.**

- "அப்போலோஜியா" என்பது கிரேக்க சொல்லிலிருந்து பிரிந்து வந்ததாகும். 'பாதுகாப்பது' என்பது இதன் பொருளாகும். இதற்கமைய கிறிஸ்தவ மறைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பேதகங்கள் பிழையான கருத்துக்கள், குற்றங்கள், சவால்கள் என்பனவற்றிற்குப் பிரதி பதில் அளிப்பதற்கும் விடயங்களை விளக்குவதற்கும் முன்வந்த சபைத் தந்தையர்கள் அப்போலோஜிஸ்த எழுத்தளர்களாக அழைக்கப்பட்டனர்.
- இவர்கள் இதற்காகப் பயன்படுத்திய முறைகள் தர்க்கிக்கின்ற தன்மையைக் கொண்டதனால் இவ்வெழுத்தாளர்கள் தர்க்கவியலாளர் எனவும் அழைக்கப்பட்டனர்.
- இவ்வெழுத்தாளர்களின் ஆக்கங்களில் இரண்டு பொது நோக்கங்களைக் காணக்கூடியதாக உள்ளது.
  1. பிற மறையினருக்கும் யூத மறையினருக்கும் கிறிஸ்தவர்கள் இடையூறு விளைவிக்கக் காரணமானவர்கள் இல்லை என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளமை
  2. பிறமறை கற்றவர்களுக்குக் கிறிஸ்தவ மறை பற்றி வழி காட்டுதல்.

- சோக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில் ஆகிய பெரிய தத்துவ மேதைகளின் கோட்பாட்டு முறைகள் கிறிஸ்தவ மறையின் வழியாக உறுதி செய்யப்படுகின்றதெனவும் அவற்றின் சிறு குறைபாடுகள் கிறிஸ்தவ மறையில் முழுமையடைகிறதெனவும் இவர்கள் சாதாரணமாக எடுத்துக் காட்டினர்.
- இம்முயற்சியின் பெறுபேறாக கிறிஸ்தவ மறை முதன் முறையாகக் கலைச் சொற் தொகுதியுடன் இவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.
- தர்க்கவியலாளரிடையே மிகவும் திறமையுள்ளவரென ஏற்றுக்கொள்ளப்பட்டவர் மறைசாட்சியான புனித ஜஸ்டின் ஆவார்.

**மறைசாட்சியான புனித ஜஸ்டீன் (கி.பி. 100-165)**

- பாலஸ்தீனாவில் பிறந்த புனித ஜஸ்டின் ஓர் தத்துவஞானியாவார். பேரரசில் போகாத இடமெல்லாம் நடந்து ஸ்டோயின், அரிஸ்டோட்டில், பைத்தாகரஸ், பிளேட்டோ ஆகிய தத்துவஞானிகளின் செல்வாக்குடைய ஆசிரியர்களிடம் அங்கத்துவத்தைக் கற்றபோதும் அவர் தேடிய உண்மை அதுவல்ல.
- முப்பதாவது வயதளவில் கிறிஸ்தவ மறையைத் தழுவிய ஜஸ்டின் தத்துவ ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் கிறிஸ்தவ மறையைக் கற்றார்.
- கிறிஸ்தவ மறை வேறெந்த மறையையும் விட உயர்ந்ததாகும்.
- அவர் தேடிய உண்மை கிறிஸ்தவ மறையில் மட்டுமே உள்ளதென்றும் விளங்கிக் கொண்டார்.
- கிறிஸ்துவின் படிப்பினைகளுக்காக மனிதர் உயிர்த்தியாகம் செய்கின்றனர். சோக்ரடீஸ் போன்ற பெரிய தத்துவஞானிகளின் படிப்பினைகளுக்காக எவரும் உயிர்த்தியாகம் செய்வதற்கு முன்வர மாட்டாரெனவும் வெளிப்படுத்தினார்.
- இரண்டாம் நூற்றாண்டின் பிரசித்தமான சபைத் தந்தையாக ஜஸ்டின் விளங்கினார்.
- கி.பி 165 அளவில் பேரரசன் மாற்கு அவுரேலியனின் கீழ் இடம்பெற்ற கலாபனையின்போது உரோமைய தேவ, தேவதைகளுக்குப் பலி ஒப்புக்கொடுக்க மறுத்தமையால் மேலும் கிறிஸ்தவ பக்தர்கள் ஆறுபேரோடு ஜஸ்டினும் சிரச்சேதம் செய்து கொல்லப்பட்டார்.
- அன்னை திருச்சபையானது ஆனி மாதம் முதலாம் திகதி ஜஸ்டினின் திருவிழாவைக் கொண்டாடுகிறது.

**திருச்சபைக்கு ஆற்றிய பங்களிப்பு**

- யூத இனத்தவரால் கிறிஸ்தவ மறைக்குப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.
- அதே போன்று யூத சூழலில் எலெனிஸ்த சமூகத்துக்குள் (கிரேக்க சமூகத்துக்குள்) நுழையும் போது அவர்களுக்குத் தத்துவஞானிகளின் சவால்களுக்கும் முகம் கொடுக்க நேரிட்டது.
- இவ்வாறான பின்னணியில் கிறிஸ்தவ மறையின் உண்மைகளைத் தேடி முன்வைப்பது ஜஸ்டினின் பணியாய் அமைந்தது.
- மனிதனுக்கு முழு விடுதலையைப் பெற்றுக்கொடுக்கின்ற உண்மையான தத்துவங்கள் கிறிஸ்தவ மறையில் உள்ளது எனவும் விளங்கிக் கொண்டு, கிறிஸ்தவர்களுக்கு அறிவுறுத்துவதற்காக உரோமையில் தத்துவ பீடங்கள் சிலவற்றை ஆரம்பித்தார்.
- இவர் எபேசில் உயர் கல்வி நிறுவனமொன்றில் கற்பித்தலில் ஈடுபட்டார்.
- அந்தோனியுஸ் பியூஸிற்கும் உரோமைய செனட் சபைக்கும் இவர் எழுதிய அப்போலோஜியா கொள்கைத் திரட்டு ஆகிய மடல்கள், (நூல்கள் இரண்டும்) ‘‘திரிபோவுடன் உரையாடல்’’ (Dialogue with Trypo) எனும் நூலும் இவர் எழுதிய நூல்களில் மிகவும் முக்கியமானவையாகின்றன.

**அலெக்சாந்திரியா புனித அத்தனாசியார் (கி.பி 295-373)**

**வாழ்க்கைப் பின்னணி**

- அலெக்சாந்திரியாவில் பிறந்த இவர் சிறுவயது முதல் தவ வாழ்வில் பற்று வைத்திருந்தார்.
- அப்போஸ்தலிக்க மறையைப் பாதுகாப்பதற்காக முயற்சி எடுத்தமையால் துன்புறுத்தல்களுக்கும் நாடுகடத்தலுக்கும் உள்ளானார். எனினும் மறை சார்ந்த கோட்பாடுகளின் வழியாக மறையைப் பாதுகாப்பதில் அத்தனாசியார் முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட்டார்.
- திருச்சபையானது மே மாதம் 2ம் திகதி இவரின் திருவிழாவைக் கொண்டாடுகிறது.

**சபைக்களித்த பங்களிப்பு**

- அத்தானிசியார் திருத்தொண்டராக இருந்தபோது அலெக்சாந்திரியாவின் ஆயரின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.
- கி.பி 325ல் நிசேயா திருச்சங்க அமர்வில் பங்கு பற்றவும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு ஆரிய பேதகத்திற்கு எதிராக அதிகாரத்துடன் குரலெழுப்ப இவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.
- ஆரிய பேதகத்தைச் திருச்சபையின் வழியாக ஒழிப்பதற்கு அத்தனாசியார் முன்னோடியாக இருந்தார்.
- கிறிஸ்து பிதாவிலிருந்து செனித்தவர் எனினும் உண்டாக்கப்பட்டவர் அல்ல, பிதாவோடு ஒரே பொருளானவர். (Homo - Ousios one in being with the father) எனும் நிசேயா விசுவாசப்பிரமாணத்தின் முக்கிய இறையியல் எண்ணக்கருவைத் திருச்சபைக்கு அத்தனாசியார் கொடையாக வழங்கியுள்ளார்.
- பிற்காலத்தில் அலெக்சாந்திரியாவின் ஆயராக நியமிக்கப்பட்ட அத்தனாசியார் நிசேயா விசுவாசத்தை உறுதி செய்வதற்குப் பாரிய முயற்சி எடுத்தார்.
- இவர் திருவிவிலியத்துக்கு எழுதிய அருஞ்சொல் விளக்கத்தைப்போன்று மரியாவின் கன்னித்தன்மை பற்றிய பல நூல்களையும் எழுதியுள்ளார். இவருடைய பல நூல்கள் ஆரிய பேதகத்திற்கு எதிராக எழுதப்பட்டவையாகும்.
- மறைபொருளில் எழுதுவது இவரது நூல்களில் காணப்படும் விசேடமான பண்பாகும்.
- அத்தனாசியார் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட தொனிப் பொருளில் திருவிவிலியத்தை அறிமுகப்படுத்தினார்.
- அதே போன்று தூய ஆவியார் பிதாவினின்றும் சுதனினின்றும் புறப்படுகிறார் என்பது இவரது கருத்தாகும்.
- இறையியலாளராக அத்தனாசியார் கத்தோலிக்க திருச்சபையின் மரபு ரீதியான நம்பிக்கையின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

**புனித ஜெரோம் கி.பி 347-420**

**வாழ்க்கைப் பின்னணி**

- தல்மாத்தியா நகரில் பிறந்த இவர் உரோமையில் கல்வி கற்றார். குருத்துவத்தைப் பெற்ற பின் கி.பி 380ம் ஆண்டளவில் கொன்ஸ்தாந்திநோபிலுக்கு சென்று நாசியவின் புனித கிரகோரியாரின் கீழ் திருநூல்களைக் கற்றார்.
- கி.பி 385ம் ஆண்டளவில் புனித தேசத்திற்குச் சென்று பெத்லகேமில் துறவற மடத்தில் கடும் தவ வாழ்வை மேற்கொண்டார்.
- இவர் கி.பி 420ல் இறைவனடி சேர்ந்தார்.
- தாய்த்திருச்சபை இவரது திருவிழாவை புரட்டாதி 30ம் திகதி கொண்டாடுகிறது.

**திருச்சபைக்கு ஆற்றிய பங்களிப்பு**

- திருத்தந்தை புனித டமாசுஸின் செயலாளராகப் பணியாற்றுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தமையால் விவிலியத்தில் ஏற்றுக்கெள்ளப்பட வேண்டிய இணைத்திருமுறை நூல்களைத் (Cannonical Books) தீர்மானிப்பதற்காக கி.பி 397ல் இரண்டவது கார்த்தேஜ் திருச்சங்கத்திற்கு உதவி செய்வதற்கு இவருக்கு இயலுமாயிருந்தது.
- எபிரேய, இலத்தீன் கிரேக்க மொழிகளில் சிறந்த அறிவு இருந்தமையால் திருத்தந்தை புனித டாமாசுஸிற்கு திருவிவிலியத்தை எபிரேய மொழியிலிருந்து இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்கும் பாரிய பொறுப்பும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
- வல்கேத் (Vulgate- பொதுமக்களின் பிரதி) என்ற பெயரில் இம்மொழி பெயர்ப்புப் பிரசித்தி பெற்றது.
- ஜெரோமின் ஆற்றல்கள் எடுத்துக்காட்டக் கூடியனவாகவும் இவரின் நூல்களில் ‘‘விசேட நபர்களின் வாழ்க்கை முறை வரலாறு’’ (Lives of Illustrious men) எனும் நூலில் பேதுரு தொடக்கம் திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த 135பேர் இதில் அடங்குகின்றனர்.
- பிற்காலத்தில் தூயவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்கு இந்நூல்கள் முன்னோடியாகிறது.
- ‘‘இணைத்திருமுறை நூல்களும் யூத எழுத்தாக்கங்களும் எனும் நூலின் வழியாக இணைத்திருமுறை நூல்களுக்கும் யூத நூல்களுக்கும் இடையே உள்ள தொடர்பு விளக்கப்பட்டுள்ளது.
- ஒரிஜின் அடிப்படைத் தத்துவம் ஆகிய நூல்களை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்துள்ளதும் ஜெரோமே ஆவார்.
- இறையியல் எழுத்தாளர், மறை விற்பன்னர், பேச்சாளர், தபோதனர், மொழிவல்லுனர் எனத் தற்கால திருச்சபை ஜெரோமை ஏற்றுக்கொள்வது அவர் நிறைவேற்றியுள்ள பணியினாலேயே ஆகும்.

**அலெக்சாந்திரியாவின் புனித சிறில் (கி.பி 376-444)**

**வாழ்க்கைப் பின்னணி**

- அலெக்சாந்திரியாவில் பிறந்த இவர் இறைபக்தியில் வளர்ந்த பாரம்பரிய கிறிஸ்தவனாவார்.
- அன்னை திருச்சபை ஆனி மாதம் 27ம் திகதி இவரது திருவிழாவைக் கொண்டாடுகின்றது.

**திருச்சபைக்காற்றிய பங்களிப்பு**

- கி.பி 412ல் அலெக்சாந்திரியாவின் ஆயராக நியமிக்கப்பட்ட இவர் சிலை வழிபாட்டு நம்பிக்கைக்களுக்கும் பிழையான கோட்பாடுகளுக்கும் எதிராகப் போராடினார்.
- விசேடமான கொன்சாந்திநோபிளின் ஆயரான நெஸ்தோரியஸ் ஆரம்பித்த நெஸ்தோரிய பேதகத்திற்கு எதிராகக் கடினமான குரலெழுப்பினார்.
- நெஸ்தோரிய பேதகம் பற்றிய தீர்மானம் எடுப்பதற்கு கி.பி 431ல் திருத்தந்தை 1வது செலெஸ்ரினால் கூட்டப்பட்ட எபேசு திருச்சங்கத்தில் மறைவல்லுனராகக் கடமையாற்றினார்.
- இவரது நூல்களில் திருவிவிலிய விளக்கம், திறித்துவம் பற்றி எழுதிய நூல்கள், (ஆரியசின் பேதகத்தை விமர்சித்து அதனை பிழையென உறுதி செய்தமை) ஐந்து அதிகாரங்கள் (நோஸ்தோரியசின் போதனைகள் அனைத்தையும் விமர்சித்து அதிலுள்ள பிழைகளைச் சுட்டிக்காட்டினார்.

- தூய ஆவியார் மற்றும் சபையின் வழிபாடுகள் (இங்கு ஐந்நூல் பற்றி விளக்கமளிக்கப்-பட்டுள்ளது) ஆகியவற்றைக் காணலாம்.

**புனித அகுஸ்தீனார் (கி.பி 354-430)**

**வாழ்க்கைப் பின்னணி**

- வட ஆபிரிக்காவின் தகாஸ்தே என்ற சிறிய பட்டணத்திலே பிறந்துள்ளார்.
- தகாஸ்தே (தற்கால அல்ஜீரியா) உரோமையைச் சேர்ந்த பிராந்தியமானதால் தாய்மொழி இலத்தீன், கல்வி ஊடக மொழியாகவும் அரச மொழியாகவும் இருந்தமையால் அதைப்பற்றிய சிறந்த அறிவு இவருக்கு இருந்தது.
- கி.பி 410ம் ஆண்டளவில் விசிகோத் குலத் தலைவரினால் உரோமை அழிக்கப்பட்ட பின் ஏற்பட்ட இருண்ட காலத்தின் அனுபவமும் இவருக்கு இருந்தது.
- உரோமையில் பெற்ற உயர் கல்வியின் பின்னர் கார்த்தேஜ் கல்வி நிறுவனத்தின் பேராசிரியராகக் கற்பித்தல் பணியில் ஈடுபட்டார்.
- இவரது அன்னை பக்தியுள்ள கிறிஸ்தவளாகவும் தந்தை பிறமறையைச் சேர்ந்தவராகவும் இருந்ததால் மறை பற்றியுள்ள அனுபவம் இருக்கவில்லை எனினும் தனது அன்னை மொணிக்காவினது நிரந்தரமான செபத்தினால் மிலான் ஆயர் அம்புரோசின் போதனைகளுக்குச் செவிமடுத்து அவரினால் திருமுழுக்குப் பெற்று வாழ்க்கை மாற்றத்திற்கு அடித்தளமிட்டார்.
- இவரது வாழ்வின் இறுதிக் காலம் கி.பி 430ல் வட ஆபிரிக்காவின் ஹிப்போ பிரதேசத்தின் வாண்டல் குலத்தவரின் கீழ் இருந்தமையால் அனுபவங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது.
- அவரது வாழ்வின் இறுதிக்காலம் துறவற மடத்தில் கழிந்ததோடு இறையன்புக்குச் சாட்சி பகர்ந்து விண்ணகம் எய்தினார்.
- அன்னை திருச்சபை ஆவணி மாதம் 28ம் திகதி இவரது திருவிழாவைக் கொண்டாடுகிறது.

**திருச்சபைக்கு ஆற்றிய பங்களிப்பு**

- அகுஸ்தீனார் ஓர் குருவாகவும் பின்னர் ஹிப்போவின் ஆயராகவும் திருச்சபைக்குப் பாரிய பணியாற்றினார்.
- சென்மபாவம் (Original sin) நியாயமான போர் (Just War) ஆகிய எண்ணக்கருக்கள் பற்றிய கருத்துக்களை முன்வைத்தார்.
- ஒரு காலத்தில் மனிக்கேய பேதகத்தின் பால் ஈர்க்கப்பட்டபோதும் இவர் தேடிய உண்மை அங்கு இல்லாமையால் அதனைப் புறக்கணித்து இறுதியாக இறைவனுக்குள் மட்டும் இயல்பான உண்மை உள்ளதென ஏற்றுக்கொண்ட இவர் இறைவனின் அன்பை ஆழமாக அனுபவிப்பதற்கான அதிஸ்டத்தைப் பெற்றார்.
- கிறிஸ்தவ சபையின் வரலாற்றில் விசேடமான சபைத் தந்தையர் என அழைக்கப்பட்ட இவர் இலத்தீன் சபைத் தந்தையர்களின் இடையே உயர்வானவராகவும் அழைக்கப்பட்டார்.
- அவருடைய நூல்களுக்கிடையே பாவசங்கீர்த்தனம் (தன்னிலை ஏற்று) (The confession அவருடைய குழந்தைப்பருவம், இளமைப்பருவம் பற்றிய அனேக விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நூல் மேலைத்தேய முதலாவது சுயசரிதை எனவும் ஏற்றுக்கெள்ளப்பட்டது)
- இறைநகர் (The city Of God திருச்சபையை ஆன்மீக நகர் எனக்காட்டுகிறது. (பிற மறைகளின் குற்றச்சாட்டுகளிலிருந்து கிறிஸ்தவ மறையை மீட்டெடுப்பதற்காகச் செயலாற்றினார்.)

- அதே போன்று மூவொரு இறைவன் பற்றிய இறையியல் நூல் தவ வாழ்வு, தியானமுறை, (113 நூல்கள்) அறிவுரை மடல்கள் (218), போதனை (500) என்பவற்றையும் எழுதினார்.

**ஒரிஜன் (கி.பி 185-254)**

- எகிப்திலுள்ள அலெக்சாந்திரியாவில் பிறந்த இவர் அலெக்சாந்திரிய கிளெமென்டின் சீடராவார்.
- ஒரிஜின் ஒரு சிந்தனையாளரும், கல்விமானும், இறையியல் வல்லுனரும், சிறந்த எழுத்தாளருமாய் இருப்பதினால் முக்கியத்துவம் பெறுகின்றார்.
- கத்தோலிக்க சிந்தனையைக் கிரேக்க தத்துவ மொழியில் முன்வைப்பதற்கு அடிப்படையாக இருந்தவர் ஒரிஜன் ஆவார்.

**திருச்சபைக்கு ஆற்றிய பங்களிப்பு**

- அலெக்சாந்திரியாவின் குருகுலத்தின் தலைவர் என வரலாறு இவரை அழைக்கிறது.
- திருவிவிலியத்தைப் பற்றி நிபுணத்துவ அறிவு இருந்தமையால் பழைய ஏற்பாட்டு சில நூல்களுக்கு விளக்கவுரை தரும் நூல்களையும், விளக்கங்கள் கொடுத்தமையாலும் இவருக்குப் பின்னர் திருவிவிலியத்திற்கு விளக்கமளிக்கும் மரபு உருவாகியது. திருவிவிலியத்தை விளக்கும்போது மூன்று முறைகளைப் பயன்படுத்துவதற்கு ஒரிஜன் வழிகாட்டியவர் ஆவார். அவை

  1. Literal - சொற்கருத்தோடு திருவிவிலியத்திற்கு விளக்கமளித்தல்.
  2. Psychological - உளவியல் முறையில் திருவிவிலியத்துக்கு விளக்கமளித்தல்.
  3. Spiritual or Allegoricial - ஆன்மீக அல்லது அலகோரிக்கல் முறையில் திருவிவிலியத்திற்கு விளக்கம் அளித்தல்.

- ஒரிஜன் திருச்சபைக்கு ஆற்றிய பங்களிப்பு அவருடைய நூல்களில் சிறந்த முறையில் விளங்குகின்றது. இவருடைய 'ஹெக்சப்லா' (He apla- ஒன்றாக இணைந்த ஆறு) என்ற நூல் எபிரேயம் மற்றும் கிரேக்கம் போன்று சமமான ஆறு பிரிவுகளில் முன்வைக்கப்பட்டுள்ளது.
- செசாரியாவில் ஒரிஜன் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்நூல் புனித ஜெரோமினால் பயன்படுத்தப்பட்டுள்ளமைக்குச் சான்றுகள் உள.
- இந்நூல் திருவிவிலியத்தின் விளக்கமும், விமர்சனமும் பற்றி எழுதிய முக்கிய நூலாகும்.
- செல்சியுஸ் (Celsus) என்ற கிறிஸ்தவ எதிரியான சிந்தனையாளரின் The True Discourse என்ற நூலுக்கு எதிராக எழுதப்பட்ட நூலானதோடு அடிப்படைக் கோட்பாடுகள் (Deprincipiis) திருமறைதத்துவங்கள் பற்றிய கைநூலுமாகும்.
- இறைவன், உலகம், மனித சுதந்திரம், இறைவெளிப்பாடு ஆகிய கிறிஸ்தவ மறைக் கோட்பாடுகள் பற்றி ஆழமான தத்துவங்களை இதன் வழியாகத் தந்துள்ளார். அதே போன்று செபம், உயிர்த்தியாகம் செய்வதற்கான அறிவுரைகள் பற்றி இந்நூலானது அவரது ஆற்றல்களை எடுத்துரைக்கும் நூலாகும்.

**தெர்த்தூலியன் கி.பி 160-220**

**வாழ்க்கைப் பின்னணி**

- வட ஆபிரிக்காவில் கார்த்தேஜ் நகரில் உரோமைய நூற்றுவத் தலைவனின் மகனாகப் பிறந்தார். பிற இனத்தவராகிய இவர் பிற்காலத்தில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். கிரேக்க, இலத்தீன் மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற இவர் ஒரு சட்டத்தரணியாகத் தொழில் புரிந்தார்.

**திருச்சபைக்கு ஆற்றிய பங்களிப்பு**

- அக்காலத்தில் வட ஆபிரிக்காவில் தாக்கத்தினை ஏற்படுத்திய கிறிஸ்தவ மறை கலாபனையினால் கிறிஸ்தவர்கள் அனுபவிக்க வேண்டி ஏற்பட்ட பல்வேறு இன்னல்களை நேரில் பார்த்துள்ளார்.
- தெர்த்துலியன் அப்பாவி கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதை உரோமைய ஆட்சியாளர்களுக்கு ''மறைசாட்சிகளின் இரத்தம் கிறிஸ்தவர்களை உருவாக்கும் வித்தாகும்'' என்ற பெறுமதிவாய்ந்த கூற்று அவருடைய அனுபவங்கள் வழியாக வெளிப்படுத்தப்படும் ஒன்றாகும்.
- பேதகங்களின் விமர்சனம் இவருடைய நூல்களில் முக்கியத்துவம் வாய்ந்தது. கிறிஸ்தவ எதிராளிகளுக்கு எழுதப்பட்ட மிகப் பெறுமதி வாய்ந்த ''அப்போலோஜியா'' என்ற நூலும் துறவற வாழ்வு பற்றி எழுதப்பட்டுள்ள நூல்களும் திருச்சபைக்குச் செய்த பணியினை நன்றாக எடுத்துக் காட்டுகிறது.
- ஆரம்ப காலத்தில் சபையின் எழுத்தாளர்கள் மத்தியில் விசேட இடம் தெர்த்துலியனுக்கு உரித்தாவதோடு கிறிஸ்தவ மறையை விளக்கிக் கூறுவதற்காகக் கோட்பாட்டியல், இறையியல், தர்க்கவியல் ஆகிய விடயங்களை முதன்மைப்படுத்தி நூல்களை எழுதியிருப்பது இவரது எழுத்துப்பணியின் விசேட பண்பாகும்.
- இப்பங்களிப்பினால் இவர் 'கிறிஸ்தவ இலத்தீன் இலக்கியத்தின் தந்தை' என அழைக்கப்பட்டார்.

**கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.**

- ஆரம்பகாலச் சபையில் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்காக துணையாயிருந்த சபைத் தந்தையர்கள் பற்றி விளக்குக.
- சபைத் தந்தையர்களின் மனப்பாங்குகளையும் தூய்மையான வாழ்வினையும் முன்மாதிரிகையாகக் கொண்டு சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுப்பீர்கள்.
- கிறிஸ்தவ மறை உண்மைகளை விளங்கிக்கொண்டு உமது விசுவாசத்தை எவ்வாறு வளப்பீர்கள் என எழுதுக.
- திருச்சபையின் மறை உண்மைகளுக்கு எதிராக எழுகின்ற சவால்களுக்குத் தைரியமாக முகங்கொடுககும் முறையினை பட்டியட்படுத்துக.

**உசாத் துணை நூல்கள்**


1. John L. Mckenzie., ***Dictionary of the Bible,*** Geoffrey Chapman Ltd, London, 1968.
2. Alan Schreck., ***The Compact History of the Catholic Church,*** St. Paul Press, Bangalore, India, 1987.
3. Jean Comby., ***How to Read Church History (Volume 1),*** SCM Press Ltd, London, 1985.
4. Brevard S. Childs., ***Biblical Theology of the Old and New Testaments,*** SCM Press Ltd, 1992.
5. அருட். தந்தை .ஜெயசூரிய, (அமதி), சாந்த சபா இத்தியாசய, மலலசேகர அச்சகம், பானதுறை, 1968
6. டயஸ், ஒஸ்டின், கிறிஸ்து தர்மய விபாக அத்வெல, பிரசாந்த் பிரின்டஸ், வத்தள,1998.

**தேர்ச்சி 7.0 : தாம் எதிர்கொள்ளும் சவால்களைத் தூய ஆவியின் வல்லமையால் வெற்றி கொண்டு நம்பிக்கைக்குச் சான்று பகர்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.4: இறையியல் உண்மைகளைச் சரியாகக் கற்பிப்பார்.**

**பாடவேளைகள் : 20**

**கற்றல் பேறுகள் :**

- ஆரம்பத்தில் வெற்றிகண்ட நான்கு பொதுச்சங்கங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.
- மறை படிப்பினைகளின் சத்தியங்களைச் சரியாகக் கற்பிக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- வெற்றியடைந்த நான்கு பொதுச் சங்கங்கள் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- தூய ஆவியின் வல்லமையினால் மறைக் கலாபனைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பார்.
- மறை போதக உண்மைகளைப் பாதுகாக்க ஒற்றுமையுடன் செயற்படுவார்.

### 7.4.1 பின்னணி

- ஆரம்பகாலக் கிறிஸ்தவ சபையின் வரலாற்றினை நோக்கும் போது உரோமைய பேரரசினுள் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் கிறிஸ்தவர்கள் கடுமையான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினர். எனினும் திருச்சபைக்கு எதிராகச் சுமத்தப்பட்ட வெளியக ரீதியான கலாபனைகளையும் தாக்கங்களையும் விடக் கடுமையான தாக்கங்கள் திருச்சபைக்குள்ளேயே உருவானமை துரதிஷ்டமான நிகழ்வாகும்.
- மறை மற்றும் ஒழுக்க சட்டத்திட்டங்கள் பற்றி ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளும் கருத்து வேறுபாடுகளும் விசேடமாக மறை தொடர்பான பேதகக் கருத்துகள் அல்லது தப்பான கருத்துக்கள் திருச்சபையினுள்ளே சிக்கலான நிலையினை ஏற்படுத்துவதற்குக் காரணமாகியது.
- இவ்வாறான பின்னணி திருச்சபையின் ஒற்றுமைக்கு மட்டுமன்றி பேரரசின் ஒற்றுமைக்கும் அமைதிக்கும் எச்சரிக்கையாக இருந்தது.
- இவ்வாறான சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவ சபையின் மறை உண்மைகளை விளக்குவதற்கும் பேதகங்களின் கருத்துகள் பிழையானவை என எடுத்துக் காட்டுவதற்கும் அவற்றை இழிவாகக் கருதுவதற்கும் திருச்சங்கங்களைக் கூட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.

### திருச்சங்கள் (Ecumenical Councils)

- உரோமையில் ஆயர்களின் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் தலைமையில் உலக ஆயர்கள் ஒன்றுகூடித் திருச்சபையின் முன்னேற்றம் கருதியும் சபையின் வாழ்க்கைக்கு எதிராகச் சுமத்தப்படும் பாதுகாப்பற்ற நிலையுடனான பிரச்சினைகளின்போது மறை மற்றும் ஒழுக்கம் தொடர்பான அதிகாரப்பூர்வமான அறிவிப்புகள் அல்லது வெளியீடுகளை வெளிப்படுத்துவதற்கு ஒன்று கூடுவதான சங்கமே திருச்சங்கம் எனப்படும்.
- திருச்சங்கம் ஒன்றுக்காக அழைப்பு விடுத்தல், நடாத்துதல், அனுமதி வழங்குதல் என்பன திருத்தந்தையின் முக்கிய பணியாகும்.
- அவருடைய அனுமதி இன்றித் திருச்சங்கம் ஒன்றை நடாத்த முடியாது.
- திருச்சபையின் வரலாற்றிலே இவ்வாறான 21 திருச்சங்கங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
- இதில் முதலாவதாக கி.பி 325இல் நடந்தேறிய திருச்சங்கம் நிசேயா என்பதோடு இருபத்தொராவதாக இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் நடைபெற்றது. இது 1962-1965ஆம் ஆண்டுகளிடையே நடந்தேறியது.

**பேதகங்கள் (Heresies)**

- திருச்சபையின் படிப்பினைகளுக்கு எதிரான போதனைகள் யாவும் பேதகங்களாகும். இவ்வாறான தவறான கருத்துக்கள் திருச்சபைக்குள்ளேயே எழுந்தமை விசேடமானதாகும்.

**ஆரம்பகால திருச்சங்கங்கள்**

- கி.பி 325-451 வரை நான்கு திருச்சங்கங்கள் கூட்டப்பட்டுள்ளன. இவை 'கிறிஸ்துவியல் பொதுச் சங்கம்' என்று அழைக்கப்படும்.
- கிறிஸ்துவைப் பற்றிய கருத்து வேறுபாடுகளை உடன்பாட்டுக்குக் கொண்டுவருவதன் அடிப்படை நோக்கமே இவ்வாறு அழைக்கப்படுவதற்கான காரணமாகும்.
- இல்லாவிட்டால் கிறிஸ்துவைப் பற்றிய தவறான கருத்துள்ளவர்களால் முன்வைக்கப்பட்ட திருச்சபையின் படிப்பினைகளுக்கு முரணான கருத்துக்களையும் போதனைகளையும் ஏற்றுக்கொள்ள மறுத்தல் மற்றும் திருச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சரியான மறையை எடுத்துக் காட்டுவது இவ் ஆரம்பகால திருச்சங்கங்களின் அடிப்படையான பணியாக இருந்தது.
- இச்சங்கங்கள் நடைபெறுகின்ற நகரங்களின் பெயர்களாளேயே அவை அழைக்கப்படுகின்றன.
- பிற்காலத்தில் நடாத்துவதற்கு இருந்த சங்கங்களைப் பெயரிட்டு அழைக்கும் போதும் அதே மரபினைப் பின்பற்றுவதன் மூலம் அவை நடாத்தப்பட்ட இடங்களின் பெயரால் பிரசித்தி பெற்றுள்ளன.
- ஆரம்பகாலத்தில் நான்கு திருச்சங்கள் நடாத்தப்பட்டன. இத்திருச்சங்கங்கள் நான்கும் பேரரசின் கீழைத்தேய பிரதேசங்களைச் சேர்ந்த நகரங்களில் நடைபெற்றன.
- ஆரம்பகாலத்தில் திருச்சபை அதிகமாக இப்பிரதேசங்களில் வளர்ச்சியுற்றமையாலும் பேரரசனின் புதிய தலைநகரமான கொன்ஸ்தாந்திநோபிலில் வசிப்பதற்குச் சென்றமையாலும் அத்திருச்சங்கங்கள் கீழைத்தேய நகரங்களில் நடத்துவதற்கான முக்கிய காரணமாக எடுத்துக்காட்டலாம்.
  1. நிசேயா திருச்சங்கம் (கி.பி 325)
  2. கொன்ஸ்தாந்திநோபிள் சங்கம் (கி.பி 381)
  3. எபேசு திருச்சங்கம் (கி.பி 431)
  4. கல்சிடோன் திருச்சங்கம் (கி.பி 451)

**நிசேயா திருச்சங்கம் - கி.பி. 325**

- இத்திருச்சங்கத்தை நாடத்துவதற்கு ஆரிய பேதகமே (Arianism) முக்கிய காரணமாக அமைந்தது.
- கிறிஸ்தவ குருவான ஆரியஸ் (Arius) கி.பி 323இல் பேதக படிப்பினைகளை முன்வைத்தார்.
- இயேசு இறைவனல்ல, நித்தியரல்ல, பிதாவுக்குச் சமமானவரும் அல்ல என இவர் கூறினார். எனவே கிறிஸ்து இறைவனின் படைப்புகளில் மூத்தவரென இவர் வெளிப்படுத்தினார்.
- இதனால் கிறிஸ்துவுக்கு உண்மையான இறைதன்மை இல்லை என்றும், பிதாவுடன் ஒரே பொருளானவர் அல்ல என்றும் அவர்கள் மேலும் விவாதித்தனர்.
- மகன் படைப்புக்களில் மூத்தவர் என்பதால் இறைத்தூதுவர்களை விட உயர்ந்த நிலையில் இருப்பினும் இறைவனை விடக் கீழ் நிலையில் உள்ளார் என்பது இவரின் கருத்தாகும்.
- (Subordinationism) பாடுகளின் வழியாக மரண வேதனையைப் படுகின்ற, பட்டுக்கொண்டிருக்கிற மீட்பராகிய கிறிஸ்து இறைவனாக முடியாது. கிறிஸ்து மனிதருக்கும் இறைவனுக்குமிடையில்

தொடர்பினை ஏற்படுத்துகின்ற மத்தியஸ்தர் மட்டுமே என்பது இவரது கருத்தாகும்.

- மூவொரு இறைவன் பற்றியும் இவர் தவறான கருத்தினை முன்வைத்தார். இவரின் கருத்தின்படி மூவொரு இறைவன் அறிவு சார்ந்த ஓர் எண்ணக்கரு மட்டுமே ஆகும். நித்திய ஓரே இறைவன் மட்டுமே உள்ளார். கிறிஸ்து அவரது மகனாயினும் அவர் படைக்கப்பட்டவர். படைப்பில் உன்னத படைப்பு கிறிஸ்துவாக இருப்பினும் அவருக்குள் இறைதன்மை இல்லை. ஆகவே அவரை இறைமகன் என்று சொல்ல முடியாது. தூய ஆவியாரும் இறைவனல்ல அவரும் படைக்கப்பட்டவர் என்பதே இவரது கருத்தாகும்.
- ஆரியஸ் தனது கருத்துக்களைப் போதித்தாரே தவிர அவற்றை நூல்களாக எழுதிவைக்கவில்லை. எனினும் பிற்காலத்தில் அவை நூல் வடிவம் ஆனபோதிலும் அவற்றில் இன்று தாலியா (Thaleia) என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற சில பாடல்களில் பகுதிகள் மட்டுமே எஞ்சியுள்ளன.
- இப்பாடல்களில் கூறப்படுவது யாதெனில் மகனின் நற்குணங்களினால் இறைமகன் என்ற பெயர் அவருக்குக் கொடுக்கப்பட்டது எனவும் அவர் மூவொரு இறைவனில் இரண்டாவதாக இருப்பதாயினும் பிதாவைப்போன்று நித்தியரல்ல என்பதுமாகும்.
- இவ்வாறான கருத்துக்கள் கிறிஸ்தவ மறை உண்மைகளை விகாரப்படுத்திக் காட்டுவதாகும். கிறிஸ்துவின் இறைத்தன்மையை ஏற்றுக்கொள்ள மறுப்பதனால் உலகிற்கு உரிமையாக்கிக் கொடுத்த மீட்பை அர்த்தமில்லாமல் செய்யும் ஓர் செயலாக இது அமைகின்றது.
- இப்படிப்பினைகள் பற்றி மக்கள் மத்தியில் பல்வேறு கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டன. ஆகவே பேரரசின் ஒற்றுமையை, அமைதியைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட பேரரசன் கொன்ஸ்சாந்தின், திருத்தந்தை முதலாவது சில்வெஸ்தரின் அனுமதியோடு கி.பி 325ல் நிசேயா திருச்சங்கத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டது.
- எகிப்து, பாலஸ்தீனா, சிரியா, சின்ன ஆசியா, ஆபிரிக்கா, ஸ்பெயின், கோல் (பிரான்ஸ்), இத்தாலி ஆகிய பேரரசர்கள் பல்வேறு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 314 ஆயர்கள் அடங்கிய கூட்டமொன்றும் இதில் பங்குபற்றியுள்ளது.
- அங்கு ஆரியசின் கருத்துக்கள் உடனேயே திருச்சங்கத்தினால் ஏற்றுக்கொள்ள மறுக்கப்பட்டது. அக்கருத்தை திருத்தியமைத்து திருச்சபையின் மறையுண்மைகள் முன்வைக்கப்பட்டன.
- சர்வேசுரனின் ஏக சுதனாய்ச் செனித்த ஒரே ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து, கடவுளினின்று கடவுளாக இருப்பதோடு செனித்தவர் உண்டாக்கப்பட்டவர் அல்ல. பிதாவோடு ஒரே பொருளானவர். (Of the Same Substance) என்றும் அறிக்கையிட்டது.
- இவ்வியடங்கள் கிறிஸ்தவ இறையியல் போதனைகளுக்கேற்ப ஒழுங்கு செய்வதற்கு அத்தனாசியார் விசேடவிதமாக உதவி செய்ததோடு கிறிஸ்துவினுடைய இறைச்சுபாவம் பற்றிய கருத்துகள் ‘‘பிதாவோடு ஒரே பொருளானவர்’’ எனும் எண்ணக்கரு (One in being with the Father) திருச்சபையின் மறையுண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- திருச்சங்கத்தினால் ஆரியசும் அவரது ஆதரவாளர்களும் திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டனர்.
- அதேபோன்று (Homo - Ousios) ஒரே பொருளானவர் என்பது திருவிவிலியச் சொல் அல்ல என்பதால் திருச்சபையின் மறையுண்மைகளை ஏற்றுக்கொள்ள விரும்பாத ஆயர்கள் குழுவொன்று திருச்சபையிலிருந்து நீக்கப்பட்டனர்.
- எனினும் நிக்கோமீதியாவின் (Nico media) ஆயராக இருந்த எவுசேபியஸ் ஆதரவாளர்களின் உதவியோடு பேதகக் கருத்துக்களைப் பேரரசில் உள்ள கீழைத்தேய நாடுகளில் பரப்பினார்.

**கொன்சாந்திநோபிள் திருச்சங்கம் - கி.பி 381**

- ஆரிய பேதகத்தோடு மேலெழுந்த இன்னுமொரு தப்பறையான கொள்கை "முக்கியமற்ற பேதகம்" ஆகும்.
- (Subordinationism) மூவொரு இறைவனில் வீற்றிருக்கும் கிறிஸ்து இறைவனுக்குச் சமமானவர் அல்ல என்பதும் தூய ஆவியானவர் இவர்கள் இருவரைவிட கீழ்நிலையில் உள்ளார்
- மூவொரு இறைவனில் மூவொருவருக்கிடையில் சமமின்மை என்பதே இப்பேதகத்தின் தப்பறையான கொள்கையாகக் கொள்ளப்படுகிறது.
- இப்பேதகமானது திருச்சபையின் ஒருமைப்பாட்டிற்கும் அமைதிக்கும் தடையாய் இருந்தது. இந்நிலைமையை விளங்கிக் கொண்ட பேரரசன் தியோடோசியஸ் கி.பி 381ல் கொன்சாந்தி நோபிளில் ஓர் திருச்சங்கத்தை நடாத்துவதற்குத் திருத்தந்தையின் அனுமதியைப் பெற்றுக்கொண்டார்.
- கீழைத்தேய ஆயர்கள் 150 பேர்களின் பங்குபற்றுதலோடு இத்திருச்சங்கம் நடந்தேறியது. இங்கு நிசேயாச் திருச்சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட மறையுண்மைகள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டன.
- நம்பிக்கையோடு அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட "பிதாவோடு ஒரே பொருளானவர்" எனும் இறையியல் எண்ணக்கரு (Son is one in being with the Father) மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.
- இப்போது திருப்பலியில் சொல்லப்படுகின்ற நிசேயா விசுவாசப்பிரமாணத்தைப் பயன்படுத்துவதற்குக் கட்டளையிட்டதும் இத்திருச்சங்கத்திலேயே ஆகும்.
- பேதகங்களின் கருத்துக்களை விலக்கிவிட்டு திருச்சபையின் மறையுண்மைகளை உறுதிப்படுத்துவதற்காகப் பசில், நாசியானஸ் கிரகோரி, நிசா கிரகோரி ஆகியோர் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர்.
- திருச்சபையின் ஒழுங்கும் நிர்வாகம் தொடர்பாக இங்கு எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் கொன்சாந்துநோபிளின் ஆயரின் பதவி உரோமைய ஆயரின் பதவிக்கு இரண்டாவது இடத்தைப் பெறுவது எனும் வெளிப்பாடு பிற்காலத்தில் கீழைத்தேய மற்றும் மேலைத்தேய கலகத்திற்கு வழிகாட்டிய இன்னொரு விடயமாகும்.
- இத்தீர்மானத்தை எடுப்பதற்குக் காரணமான மேலைத்தேய உரோமைய நாடுகளின் ஆயர்கள் இத்திருச்சங்கத்திற்குப் பங்குபற்றாதமையே காரணமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- எனவே ஆறாவது நூற்றாண்டு வரை கொன்ஸ்தாந்துநோபிளின் திருச்சங்கத்தைப் பொதுச்சங்கமாக மேலைத்தேய நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட தாமதமானமைக்கான காரணம் இதுவே.

**எபேசு திருச்சங்கம் (கி.பி. 431)**

- கொன்சாந்திநோபிளின் ஆயர் நெஸ்தோரியுசால் (Nestorius) கிறிஸ்துவின் இறைத்தன்மையைப் பற்றியும் அவருக்குள் மனிதத்தன்மையும் இறைத்தன்மையும் தொடர்புபடுவது பற்றிய தவறான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.
- கிறிஸ்துவிற்குள் இறைத்தன்மையும் மனிதத் தன்மையும் வெவ்வேறாக உள்ளன. எனவே இரு ஆட்களாய் இருக்கிறார். அவ்வாறு இல்லையெனில் இறைத்தன்மையிலும் மனிதத் தன்மையிலும் உள்ள இரு ஆட்கள் கிறிஸ்துவுக்குள் வீற்றிருப்பதாகவும் அவர் வெளியிட்டார்.
- நற்கருணையில் நாம் மனித கிறிஸ்துவையே உட்கொள்கின்றோம் என நெஸ்தோரியுஸ்

வாதத்தினரின் கருத்தாய் இருந்தது.

- இதே போன்று மரியாவின் உதரத்திலே மனிதத் தன்மையான கிறிஸ்துவே கருவுற்றிருந்தார். ஆகவே மரியாளைத் தேவதாய் என அழைக்கக் கூடாது (Non - Theotokos) மரியாள் மனித கிறிஸ்துவின் தாய் மட்டுமே என்பதும் நெஸ்தோரிய வாதத்தினரின் கருத்தாய் அமைந்தது.
- இவ்வாறான தவறுகளை நீக்குவதற்குத் திருத்தந்தை மேதகு செலஸ்தீனின் அனுமதியோடும் பேரரசன் தியோடோசியசின் உதவியோடும் கி.பி 431இல் திருச்சங்கமொன்று கூட்டப்பட்டது.
- அலெக்சாந்திரியாவின் ஆயர் சிறில் சபையில் மறை உண்மைகளை உறுதி செய்வதற்காகத் தலைமை தாங்கினார்.
- அதற்கமைய கிறிஸ்து ஒரே ஆள் மட்டுமேயாகும். அவருக்குள் இறைத்தன்மையும் மனிதத்தன்மையுமாகிய இரு சுபாவங்களும் ஒன்றித்திருக்கின்றன. அதனால் கிறிஸ்து உண்மையான இறைவனும் உண்மையான மனிதனுமாவார்.
- அவ்வாறே மரியாவின் உதரத்தில் மனுவுரு எடுத்துக் கருவுற்றவர் இறைமகனாகிய இயேசுக் கிறிஸ்துவே என்பதால் தேவதாய் (Theotokos) என்னும் கௌரவப் பெயரைக் கொடுக்க முடியும் என்றும் சபையில் மறை உண்மைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டன.
- மரியா தேவதாய் என ஏற்றுக்கொள்வதற்குத் திருச்சபையில் மரியாவியல் (Mariology) உறுதிசெய்வதற்கு மேலும் ஒரு காரணமாக இருந்தது.
- எபேசு திருச்சங்கத்தின் முடிவை நெஸ்தோரியுஸ் அடங்கிய குழுவினர் ஏற்றுக்கொள்ளாதமையால் அவர்கள் திருச்சபையிலிருந்து நீக்கப்பட்டுப் பேரரசிலிருந்து நாடுகடத்தப்பட்டனர்.

**கால்செதோன் திருச்சங்கம் (கி.பி. 451)**

- கொன்ஸ்தாந்திநோபிளிலே ஒரு துறவியான இயூத்திக்கேஸ் (Eutyches) கிறிஸ்துவின் சுபாவம் தொடர்பாகத் தப்பறையான கருத்துக்களைப் போதித்தார். கிறிஸ்துவுக்குள் ஒரே இறை சுபாவம் மட்டும் இருப்பதோடு மனித சுபாவம் ஓரளவு மட்டுமே உள்ளது என்பது இவரின் கருத்தாகும்.
- இக்கருத்து இயூத்திக்கேய பேதகம் (Eutychianism) எனப் பரவியது. இக்கருத்துக்கள் கிறிஸ்துவுக்குள் ஒன்றிணைந்து இருக்கின்ற மனித சுபாவத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பதாகும்.
- மனுவுரு எடுத்த பின்னர் கிறிஸ்துவுக்கு ஒரே சுபாவம் மட்டுமே உள்ளது. (Mono - Physic) அது இறை சுபாவம் என்பது அவரது கருத்தாகும். இது கிறிஸ்துவின் மனித சுபாவத்தை மறுக்கும் ஒன்றானதால் குறித்ததோர் அளவுக்கு அது சுயரூப பேதகம் எனப்படுகிறது. ஆகையால் இக்கருத்து மோனோத்தேலா பேதகம் (Monophysitism) எனவும் அழைக்கப்படுகிறது.
- கொன்ஸ்தாந்திநோபிளின் ஆயர் பிளேவியன் இயூத்திக்கஸ்ஸின் போதனைகளைப் பேதகங்களாக எடுத்துக்காட்டியுள்ளார். ஆனாலும் இயூத்திக்கஸ் தனது கருத்துக்கள் சரியானவை என வெளிப்படுத்திப் பேரரசனின் உதவியையும் நாடினான். எனவே பேரரசன் இரண்டாவது தியோடோசியா கி.பி 451இல் சின்ன ஆசியாவில் கால்செதோன் நாட்டிலே திருச்சங்கமொன்றைக் கூட்டியதோடு திருத்தந்தை பெரிய சிங்கராயரின் அனுமதியோடு அவருடைய பிரதிநிதி ஒருவரின் ஆயர்கள் 550 பேரின் பங்கேற்புடன் இத்திருச்சங்கம் நடைபெற்றது.

- கிறிஸ்துவின் இறைசுபாவத்திலிருந்து மனித சுபாவத்தைப் பிரிக்க முடியாதென்பதால் அவர் உண்மையான இறைவனும் உண்மையான மனிதனுமாய் இருக்கிறார் என்பது கால்செதோன் திருச்சங்கத்தில் உறுதி செய்யப்பட்டது.
- இது 'கால்செதோன் வரைவிலக்கணம்' எனவும் அழைக்கப்படுகிறது.
- இங்கு நிசேயா வெளிப்பாடுகளே மேலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதனைத் தவிர துறவற, குருத்துவ குழுக்களுக்கான சட்டக்கோவையொன்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| பேதகம் | முன்-வைத்தவர் | மறை உண்மையை உறுதி செய்த திருச்சங்கம் | மறை உண்மையை உறுதி செய்த சபைத் தந்தையர் | சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மறையுண்மைகள் |
|---|---|---|---|---|
| ஆரிய பேதகம் (ஆரியஸ் பேதகம்) | ஆரியுஸ் | நிசேயா திருச்சங்கம் (கி.பி 325) | அலெக்சாந்திரிய புனித அத்தனாசியார் | கிறிஸ்து பிதாவோடு ஒரே பொருளானவர். செனித்தவர் உண்டாக்க-ப்-பட்டவர் அல்லர். |
| முக்கியமற்ற பேதகம் | | கொன்ஸ்தாந்திநோபிள் திருச்சங்கம் (கி.பி 381) | பசில், நாசியான்ஸ் கிரகோரி, நிசா கிரகோரி | நிசேயா மறை உண்மைகள் மீண்டும் உறுதியானது. விசுவாச பிரமாணத்தைப் பயன்படுத்துவதற்குக் கட்டளை இடப்பட்டது. |
| நெஸ்தோரிய பேதகம் | நெஸ்தோர-ியுஸ் | எபேசு திருச்சங்கம் (கி.பி. 431) | அலெக்சாந்திர-ிய ஆயர் புனித சிறில் | கிறிஸ்து ஒரே ஆள். அவருக்குள் இறை சுபாவமும், மனித சுபாவமும் ஒன்றிணைந்-துள்ளன. மரியாள் தேவதாய் ஆவார். |
| இயூத்திக்-கேய பேதகம் (மோனோத்-தேலா) பேதகம் | இயூத்தி-க்கஸ் | கல்செதோன் திருச்சங்கம் (கி.பி 451) | கொன்ஸ்தாந்-திநோபிள் ஆயர் பிளேவியன் | கிறிஸ்து உண்மையான இறைவன் உண்மையான மனிதன். கல்செதோன் வரை விலக்கணம் ஒழுங்கு செய்யப்பட்டது. |

**கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.**

- பேதகங்களினால் திருச்சபைக்கு ஏற்பட்ட தாக்கத்தினை விளக்குக.
- கிறிஸ்துவியல் திருச்சங்கங்களின் பெயர்களை எழுதி அவற்றினாலான பணியினை ஆராய்க.
- திருச்சபையின் மறை உண்மையினுள் வாழ்வதற்கு முயற்சி எடுத்தலும் தீர்மானமெடுத்தலும் உங்களுடைய கடமை எனக் கருதி அதனைப் பற்றிய ஆலோசனைகளை முன்வைக்கவும்.
- எமக்குக் கொடையாகத் தரப்பட்டுள்ள நம்பிக்கையைப் பாதுகாக்குமாறு செயற்படுவதற்கான இளைஞரான நீங்கள் செயற்படும் விதத்தினை எடுத்துக்காட்டுங்கள்.

## உசாத் துணை நூல்கள்


1. Mckenzie, L.John ., **Dictionary of the Bible,** Geoffrey Chapman Ltd, London, 1968.
2. Schreck Alan ., **The Compact History of the Catholic Church,** St. Paul Press, Banga lore, India,1987.
3. Comby Jean., **How to Read Church History (Volume I),** SCM Press Ltd, London, 1985.
4. Childs, S.Brevard, **Biblcal Theology of the Old and New Testaments**, SCM Press. Ltd, 1992.
5. அருட். தந்தை .ஜெயசூரிய, (அமதி), சாந்த சபா இத்தியாசய, மலலசேகர அச்சகம், பானதுறை, 1968
6. டயஸ், ஒஸ்டின், கிறிஸ்து தர்மய விபாக அத்வெல, பிரசாந்த் பிரின்டஸ், வத்தள, 1998.

**தேர்ச்சி 8.0 : பயணம் செய்யும் திருச்சபையின் வழிநடத்தலுக்குத் தூய ஆவியின் துணையைப் பெற்றுக்கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8:1 : ஆரோக்கியமான விமர்சனங்களுக்கு ஏற்ற முறையில் பதில் அளித்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார்.**

**பாடவேளைகள் : 25**

**கற்றல் பேறுகள் :**

- கி.பி 4 தொடக்கம் 16ம் நூற்றாண்டு வரை உலக திருச்சபை வரலாறு தொடர்ப தகவல்களைக் கோவைப்படுத்துவார்.
- ஆரோக்கியமான விமர்சனங்களுக்கு ஏற்ற முறையில் பதில் அளிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- கி.பி 4- 16ம் நூற்றாண்டு வரை உலக திருச்சபை வரலாறு தொடர்பாகச் சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- ஏற்றுக்கொள்ளப்பட்ட சபைகளின் மத்தியில் சபையின் ஒற்றுமையை வளர்ப்பார்.
- தேசிய ஒற்றுமை மற்றும் சமயங்களுக் கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பார்.

**8.1.1 திருச்சபை வரலாறு**

**நான்காம் நூற்றாண்டில் கத்தோலிக்க திருச்சபை**

- இந் நூற்றாண்டில் திருச்சபையிலும் சமூகத்திலும் பல பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன.
- நூற்றாண்டு ஆரம்பத்தில் பேரரசுகளால் திருச்சபை துன்புறுத்தல்களை எதிர்நோ்ககியது.
- பேரரசர் கொன்ஸ்சாந்தினால் மிலான் அரச சாசனத்தைப் பிரகடனம் செய்ததை அடுத்து திருச்சபைக்கு மறை சுதந்திரம் கிடைத்தது.
- அவர் இலத்தீன் பண்பாட்டின் இதயமாகிய உரோமையைக் கைவிட்டுப் பேரரசின் தலைநகரம் கிரேக்க பண்பாட்டின் மத்திய நிலையமாகிய கொன்ஸ்தாந்திநோபிளைத் தனது வசிப்பிடமாக்கிக் கொண்டார்.
- கிரேக்க பண்பாடு அங்கே வளர்ச்சியடைந்தது.
- கத்தோலிக்க மக்களின் தொகை படிப்படியாக அதிகரித்தது.
- கிரேக்க உரோமை உயர் நிறுவனங்கள் பல உருவாகியதோடு அவற்றில் கல்வி கற்பதற்கு கிறிஸ்தவர்களே படிப்படியாக நாடிச்சென்றனர்.
- திருச்சபைக்கு எதிராக எழுந்த தப்பறைகளையும், வேத பேதகங்களையும் தீர்த்து வைக்கத் திருச்சபையின் தந்தையர்கள் பின்வங்காமல் முன் சென்றனர்.

**ஐரோப்பாவில் கத்தோலிக்க திருச்சபை பரவுதல்**

**ஐந்தாம் நூற்றாண்டில் கத்தோலிக்க திருச்சபை**

- ஐந்தாம் நூற்றாண்டில் பேரரசின் ஆட்சி நிர்வாகம் அரசியல் செயற்பாடுகள் ரீதியாக கிழக்கு மேற்கென இரண்டாகப் பிளவு படத்தொடங்கியது.
- பேரரசின் கிழக்குப் பகுதி கிரேக்க மொழிக்கும், மேற்கு பகுதி இலத்தீன் மொழிக்கும் முக்கியத்துவம் கொடுத்தது.
- கி.பி 410ல் ''அலெரிக்கின்'' தலைமைத்துவத்தின் கீழ் விசிகோத் எனும் கோத்திரத்தினர் உரோமையை அழித்தது. மேற்கு பேரரசுக்கு அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- இக் காலத்தில் புனித அகுஸ்தினாரின் பணி மிக முக்கியமானது. கி.பி 410ல் விசுகோத் எனும் மிலேச்ச கோத்திரத்தினர் உரோமையை சின்னாபின்னமாக்கினர். பேரரசின் பிரதான நகரங்கள் எல்லாம் வரிசை முறைப்படி ஒவ்வொரு மிலேச்சரின் கோத்திரங்களால் கைப்பற்றப்பட்டன. ஆனால் இந்த செயற்பாடுகளினால் புனித அகுஸ்தினார் மனந்தளரவில்லை. ''இறைவனின் நகரம்'' எனும் அவரின் அதி சிறந்த நூலில் மனிதனின் சொந்தத் தாய் நாட்டை எந்த பகைவர்களாலும் முற்றுகையிட முடியாது என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்.

- கி.பி 430ல் ''வன்டல்'' கோத்திரத்தினரும் உரோமையைத் தாக்கினர். ஆனால் இறுதிவரை அவர் தனது முன்மாதிரிகையாலும் போதனையாலும் தனது மக்களைத் தைரியப்படுத்தினார்.
- அதனைத் தவிர வன்டல், ஹன்ஸ் எனும் கோத்திரத்தினரும் மேற்குப் பேரரசின் வெவ்வேறு பிரதேசங்களைக் கைப்பற்றினர்.
- கி.பி 476 ஆண்டளவில் மேற்குப் பேரரசு முழுவதையும் கோத்திரத்தினர் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர்.
- உரோமையில் ஏற்பட்ட நிலையற்ற அரசியலினால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு உடல் மற்றும் ஆன்மீக ரீதியாக ஊட்டமளிக்கவும் அவர்களுக்கு வழிகாட்டவும், பாதுகாக்கவும் திருச்சபையின் தலைமைப்பீடம் உதவியது.

  உதாரணம்: திருத்தந்தை முதலாம் லியோ(கி.பி 440-461) 'அட்டில்லா' எனும் ஹன்ஸ் கோத்திரத்தின் தலைவரின் தாக்குதலிலிருந்து உரோமையைப் பாதுகாத்தல்.

**பெலாஜிய பேதகம்**

- பிரித்தானியாவில் துறவியாகவிருந்த பெலாஜியுஸ்சின் போதனையே பெலாஜிய பேதகமாகும். மனிதனின் மனித சுபாவம் சென்மபாவத்தினால் அழிவுற்றது என்ற கொள்கையை முற்றாக நிராகரித்தார். பாவத்திலிருந்து விடப்பட்டுத் தானே தன் மீட்பைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அதற்காக இறையருளும் இறையுதவியும் அவசியமில்லையெனவும் வெளிப்படுத்தினார். இறையருளும் உதவியும் அவசியமில்லையெனவும், மனிதன் கிறிஸ்துவைப் போல் நல்வாழ்வு வாழ்வதன் மூலம் மீட்பைப் பெறமுடியுமெனவும் எடுத்துக் கூறினார்.
- பெலாஜியுசை எதிர்த்துப் போராடியவர்களுள் புனித அகுஸ்தினார் முக்கியமானவர். அநேகமாக மீட்பு இறையருளில் தங்கியுள்ளது. அதற்காக செய்ய வேண்டியது மிகச் சொற்பமே என்பது அவரது கருத்தாகும்.
- கி.பி 529ல் நடைபெற்ற இரண்டாம் ஒரேன்ஜ் பொதுச்சங்கம் பெலாஜியசின் கொள்கைக்கு எதிராக முன்வைத்த வாதத்தை மீளாய்வு செய்து மீட்பு பெற இறையருள் மிக முக்கியமானது. ஆனால் இறையருளைப் பெறுவதற்கு மனிதனின் முயற்சியும் அவசியமானது என்பதை எடுத்துக்கூறினார்.

**கீழைத்தேய திருச்சபை**

- கிழக்குப் பிரதேசத்தில் பொதுநிலையினர் துறவறத்தார் என அதிகளவு இடைவெளி இருக்கவில்லை. திருச்சபைக்கும் அரசுக்குமிடையேயும் அத்துணை இடைவெளி நிலவவில்லை. இத்தொடர்பு முஸ்லீம்களின் ஆக்கிரமிப்புவரை கிழக்குப் பேரரசில் நிலவியது.
- பல பேரரசுகள், இறையியலாளர்கள் திருச்சபையின் ஆட்சியாளராகச் செயலாற்றினர். ஆயர்களைத் தெரிவு செய்வதும் அவர்களை நீக்குவதும் அவர்களால் நடைபெற்றது.
- கிழக்குத் திருச்சபை அல்லது பைசாந்திய திருச்சபையில் தரமுயர்ந்த கருத்துக்கள் வணக்க முறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டது. (அச் சடங்கு முறைகள் இன்றும் நடைமுறையில் உள்ளன)
- அச் சடங்குகளில் இறைமறையுண்மைகளில் புனிதத்தன்மை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டது.
- வழிபாட்டு விழாக்கள் சடங்குகள் கவர்ச்சியுடையதாகவும் நாடக ரீதியாகவும் காணப்பட்டது.
- அவர்கள் தங்களுக்கே உரிய பொதுவழிபாட்டு முறைகளை அறிமுகப்படுத்தியதோடு அவைகள் மேற்குத் (இலத்தீன்) திருச்சபையில் அப்போது நடைமுறையிலிருந்த பொதுவழிபாட்டு முறைகளைவிட வித்தியாசமான வடிவமொன்றை எடுத்தன.
- கிழக்குத் திருச்சபையில் தேவதாய்க்கும், புனிதர்களுக்கும், புனித பண்டங்களுக்கும் கூடிய வணக்கமும் பக்தியும் கொடுக்கப்பட்டது.
- பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து அரசை ஆக்கிரமித்த மிலேச்ச இனத்தவரால் உரோமை

நாகரீகம் சிதைவடைந்தது. அவ் ஆக்கிரமிப்பின் யுகம் ஐரோப்பிய வரலாற்றில் காணப்பட்ட "இருண்ட யுகமாகும்". இதுவே உரோமை பேரரசின் முடிவுக்குக் காரணமாகியது.

- கி.பி 452ல் கொடிய கோத்திரமெனக் கூறப்படும் 'ஹன்ஸ்' கோத்திரத்தினரால் உரோமை நகருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது. 'அட்டில்லா' இக்கோத்திரத்தின் தலைவனாவான். அக்காலத்தில் உரோமை ஆயரான திருத்தந்தை முதலாம் லியோ அவனிடம் தைரியத்துடன் சென்று அந்நகருக்கு இரக்கம் காட்டுமாறு கேட்டுக்கொண்டார். மிலேச்ச தலைவன் இச்சாந்தமான முதியவரைப் புரிந்துகொண்டு நட்ட ஈடாக சிறிய பணத்தொகையை மாத்திரம் பெற்றுக் கொண்டு நகருக்குத் தீங்கிழைக்காமல் வந்த வழியே திரும்பிவிட்டான். அன்று தொடக்கம் திருத்தந்தை உரோமை நகரின் ஒரே தலைவராக நியமிக்கப்பட்டார்.
- அயர்லாந்து கோத்திரத்தினரை சீர்திருத்திய ஆசீர்வாப்பர், தூய பத்திரிசியார் ஆகிய கத்தோலிக்க துறவியர் இருவரும் கிறிஸ்தவ துறவற மரபுகளை ஒழுங்குமுறை செய்வதற்கு பெரும் முயற்சி எடுத்தனர்.

**ஆறாம் நூற்றாண்டில் கத்தோலிக்க திருச்சபை**

- உரோமைப் பேரசும் திருச்சபையும் பல்வேறு உறுதியற்ற தன்மைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. இந் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் பல்வேறு காரணங்களினால் திருச்சபையில் நிலவிய இறையியலுக்கும் ஆன்மீக புதிய யுகத்திற்கும் (திருச்சபைத் தந்தையர்களின் காலம்) முடிவுக்கான முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.
- பேரரசின் கிழக்குப் பகுதி இஸ்லாமிய ஆக்கிரமிப்பாளர்களினால் உறுதியற்ற நிலைக்கு முகங்கொடுத்தது.
- ஆரிய பேதக விசுவாசிகளைக் கத்தோலிக்க நம்பிக்கையின் கீழ் கொண்டுவர கத்தோலிக்க திருச்சபைக்கு முடிந்தது.
- பல்வேறு கோத்திரத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த மேற்கு அரசு அவர்களிடமிருந்து கைவிடப்பட்டது.
- கி.பி 532ல் பர்குன்டியன் கோத்திரத்தின் இராச்சியமும் கி.பி 533ல் வன்டன் கோத்திர இராச்சியமும் கி.பி 553 ஒஸ்திரோகோத் இராச்சியமும் வீழ்ச்சியுற்றன.
- கி.பி 496ல் கிளேவிஸ் எனும் பிரான்க் கோத்திரத்தின் அரசன் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியதோடு அவர் அக்காலத்தில் நிலவிய மேற்குச் சபைக்குப் பேருதவியளித்தார்.
- புனித பெற்றிக் (கி.பி 461) அயர்லாந்தில் திருமறையைப் போதித்துக் கடும் தவ வாழ்வையும் அறிமுகப்படுத்தினார்.
- துறவற வாழ்வைச் சீராக்குவதற்கு துர்சியாவின் புனித பெனடிற் கி.பி 529ல் மொன்டே கசினோ எனும் இடத்தில் எடுத்த முயற்சி கிறிஸ்தவ துறவற வரலாற்றில் முக்கியமானதாக கருதப்படுகிறது.
- உள, உடலை வருத்தி வேலை செய்தல் எனும் கொள்கையோடு செயற்பட்ட துறவற மடம் உரோமைய கலாச்சரத்தைப் பாதுகாக்கும், நற்செய்தியைப் பரப்பும் பிரதான நடு நிலையமாகியது.
- கி.பி 590ல் திருத்தந்தை மகா கிரகோரி உரோமை ஆயராக தெரிவு செய்யப்பட்டார்.
- திருத்தந்தை முதலாம் கிரகோரியின் கீழ் பெனடிற் சபையின் துறவிகள் மிகவும் பிரசித்திபெற்ற மறைத்தூதுவர்களாயினர்.
- பெனடிற்சபைத் துறவிகள் கல்விக்காக மிகச் சிறந்த பெரும் பங்களிப்புச் செய்தனர்.
- பெனடிற் சபை துறவிகள் கிறிஸ்தவ நம்பிக்கையின் செய்தியாளர்களாகவும், மேற்குக் கலாச்சாரத்தின் பாதுகாப்பாளர்களாகவும், சீர்திருத்த வாழ்க்கை முறைகளை அறிமுகப்படுத்துபவர்களுமாயினர்.
- புனித பெனடிற் துறவற மடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த திருவழிபாட்டு முறையை முழுத் திருச்சபைக்கும் பொருத்தமான முறையில் திருத்தந்தை கிரகோரி (கி.பி 540-

604) ஒழுங்கு செய்தார். “கிரகோரியாரின் சான்று” (Gregorian Chant) எனும் பெயரில் பின்பு அறிமுகமான இப்புதிய இசை முறையை கிறிஸ்தவ திருப்பலியில் இணைத்தவர் இவரேயாவார்.

- புனித கொலம்பா எனும் அயர்லாந்து இனத் துறவி செல்டிக் துறவற மடத்தை ஸ்கொட்லாந்தின் இயோனா எனுமிடத்தில் 563ல் ஆரம்பித்தார்.
- இவற்றின் பெறுபேறாக ஆறாம் நூற்றாண்டில் பிரித்தானிய தீவுகளில் அநேகர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர்.
- இந்நூற்றுண்டான்டின் இறுதியானது திருச்சபையின் வரலாற்றில் மத்திய காலத்தின் ஆரம்பமெனக் கருதப்பட்டது.

**ஏழாம் நூற்றாண்டில் கத்தோலிக்க திருச்சபை**

**அரசும் திருச்சபையும்**

- ஏழாம் நூற்றாண்டில் மனமாற்றத்தினால் கிறிஸ்தவர்கள் பெருமளவில் திருச்சபையில் சேர்ந்த காலமாகும்.
- இக்காலத்தில் திருச்சபைக்கும் அரசுக்குமிடையில் மோதல்கள் இடம் பெற்றன.
- திருச்சபைக்கும் பேரரசனுக்குமிடையே நிலவிய மிக நெருங்கிய தொடர்பின் பெறுபேறாகக் கிறிஸ்தவ இராச்சியமொன்று உருவாகியது. திருச்சபைக்கும் அரசுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது.
- சிற்சில முறையற்ற அழுத்தங்களால் திருத்தந்தையருக்கும் பேரரசர்களுகுமிடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. பேரரசர்கள் திருச்சபையின் நிர்வாகத்தில் ஏற்படுத்திய அனாவசியமான அழுத்தங்கள் இந்த முரண்பாடுகளுக்கு காரணமாயின.
- கத்தோலிக்க திருச்சபைக்கும் கிழக்கு ஓர்தடொக்ஸ் சபைக்குமிடையே முரண்பாடுகள் ஏற்பட்டன.

**எட்டாம் நூற்றாண்டில் கத்தோலிக்க திருச்சபை**

**மறைபரப்புப் பணி**

- எட்டாம் நூற்றாண்டில் பல்வேறு கோத்திரங்களைச் சார்ந்த மக்களின் மனமாற்றப்பணிகள் இன்னும் அதிகமாக முன்னேற்றமடைந்தன.
- கி.பி. 723-739 எனும் காலத்தில் பெனடிற் சபையைச் சேர்ந்த ஆங்கில இனத் துறவியான வின்பிரட் அல்லது பிற்காலத்தில் ஜெர்மனியில் திருத்தூதராக அழைக்கப்பட்ட புனித பொனிபசினால் ஆற்றப்பட்ட புதுமையான செயல்கள் அனேகரின் மனமாற்றத்திற்குக் காரணமாய் இருந்தன. இவர் திருத்தந்தையின் வழிகாட்டலின் கீழ் ஐரோப்பாவில் கிறிஸ்தவ நம்பிக்கையைக் கட்டியெழுப்பி இறைவனடி சேர்ந்தார்.

**கல்வித்துறை**

- கி.பி 768ல் பிராங்கர்களின் அரசனின் மரணத்திற்குப்பின் அவனது மகன் சாள்ஸ் (கி.பி 768-814) அரசனானான். அவனது ஆட்சிக் காலம் ஐரோப்பா முழுவதும் நீண்ட மாட்சிமையுடைய யுகமாக இருந்தது.
- பெரிய சாள்ஸ் அரசன் கல்வி நிலையை முன்னேற்றுவதற்காக உழைத்தார். இதற்காக அவர் தனது செயலாளரான ஆங்கில இனத்துறவியான அல்குயினின் தலைமைத்துவத்தின் கீழ் அறிவுள்ள ஒரு குழுவினரைத் தனது அரச மாளிகையில் ஒன்று சேர்த்தான்.
- தத்தமது பேராலயத்துக்கு அருகில் ஒரு பாடசாலையை ஆரம்பிக்கும்படி எல்லா ஆயர்களுக்கும் கட்டளை இட்டான்.
- பெரிய சாள்ஸ்சின் மரணத்தின் பின்பு பேரரசு இரண்டாகப் பிளவுபட்டமையினால் கல்வியை முன்னேற்றுவதற்கு இவர் எடுத்த முயற்சி வீழ்ச்சியடைந்தது.

- துறவற மடங்களைத் தவிர ஐரோப்பா முழுவதும் அறிவிலும் ஆன்மீகத்திலும் தளர்ச்சி நிலை ஏற்பட்டது.

**ஒன்பதாம் நூற்றாண்டில் கத்தோலிக்க திருச்சபை**

**மேற்குப் பேரரசின் வீழ்ச்சி**

- உள்ளாட்டு தாக்கங்களும் கிழக்கிலிருந்து வந்த வைக்கினஸ் கோத்திரத்தினர், ஹங்கேரியர், கிழக்கு தெற்குத் திசைகளிலிருந்து வந்த இஸ்லாமியர் இவர்களின் ஆக்கிரமிப்பினால் பேரரசின் பலம் நலிவடைந்தது.
- இதனால் பெரிய சாள்ஸ் அரசனின் காலத்தில் பேரரசில் நிலவிய அமைதியும் ஒற்றுமையும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.
- இந்த மேற்குப் பேரரசின் வீழ்ச்சியானது மேற்குக் கத்தோலிக்க திருச்சபையின் வீழ்ச்சிக்கும் காரணமாய் அமைந்தது.
- திருத்தந்தை முதலாவது நீக்கிலஸ்சுக்குப் பின்னர் திருச்சபையைச் சிறப்பாகவும் அதிகாரத்தோடும் நடத்துவதற்கு திருத்தந்தையார் எவரும் உருவாகவில்லை.
- கி.பி. 858-879 வரையான காலத்தில் உரோமையின் திருத்தந்தைக்கும் கொன்ஸ்தாந்திநோபிளின் பிதா பிதாக்களுக்குமிடையே சபையில் பிரிவினை ஏற்பட்டது.
- திருத்தந்தை முதலாவது நீக்கிலஸ்சின் அதிகாரப் பேராசை இப் பிரிவினைக்குக் காரணமாயிற்று.
- பிலியோக்குவே எனும் பகுதி நிசேயா விசுவாசப் பிரமாணத்தில் சேர்த்துக் கொண்டது. உத்தரிப்பு ஸ்தலம் பற்றிய திருச்சபையின் போதனைகள், இன்னும் சில விடயங்கள் தொடர்பாக கொன்ஸ்தாந்திநோபிளின் பிதாப் பிதாவான போஷியுஸ் என்பவரால் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.
- இந்நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் இஸ்லாம் மதம் கிழக்குச் சபையை அடிமைப்படுத்தியது.
- அரசின் நிலையற்ற தன்மை திருத்தந்தையர்களின் பலவீனம் என்பன மேற்குச் சபையின் வீழ்ச்சிக்கு வழிகோலியது.
- திருச்சபையில் குருக்களையும், துறவிகளையும் இவ்வுலகத் தலைவர்கள் ஆட்சி செய்தனர். இதன் விளைவாக அனேகர் கல்வியறிவற்றவர்களாகவும், கற்புநெறி தவறியவர்களாகவும், இருந்தனர். துறவற மடத்தின் வாழ்க்கை முறையிலிருந்து விலகி லௌகீகத்தில் உழன்று அழிவை நோக்கிச் சென்றனர்.
- இந்நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் இரு துறவிகளான மெதோடியசும் சிறிலும் கிழக்கு ஐரோப்பாவில் காஷார்ஸ் மறையைப் பரப்பும் தூதுப் பணிக்கு உதவி செய்தனர்.
- ஸ்லாவிக் கோத்திர மக்களுக்குப் புனித சிறில் புதிய அரிச்சுவடியொன்றை அறிமுகப்படுத்தினார். இவ் அரிச்சுவடி மொழியும் தமது கலாச்சாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவியாக அமைந்தது.

**மத்திய காலம் (10-12ம் நூற்றாண்டு)**

**பத்தாம் நூற்றாண்டில் கத்தோலிக்க திருச்சபை**

**முதலாம் ஒட்டோ மன்னன்**

- இது திருச்சபையின் ஆன்மீகம் நலிவடைந்த காலமாகும். திருத்தந்தையின் உத்தியோகபூர்வ அதிகாரம் உரோமைப் பேரரசில் முக்கிய பதவி வகித்த தகுதியற்ற உரோமைப் பிரபுகளினால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது.
- திருத்தந்தை பன்னிரண்டாம் ஜோன் (கி.பி 955-964) தீய நடத்தைமிக்க திருத்தந்தையாவார்.
- திருச்சபையின் அதிகாரம் முதலாம் ஓட்டோ என்ற ஜேர்மனிய இனத்தின் பேரரசரின் கைக்கு

மாறியது. ஒட்டோ உட்பட அவருக்குப் பின்வந்த பேரரசர்கள் கத்தோலிக்க திருச்சபையைத் தமது பேரரசின் ஆட்சிக்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தினர்.

- பேரரசர்கள் தங்களுக்கு விரும்பிய பொதுநிலையினரைத் திருச்சபையின் பதவிகளுக்குத் தெரிந்தெடுத்தனர். திருச்சபையில் திருத்தந்தையர், ஆயர்களை நியமிப்பதும் அவர்களுக்கு விருப்பமான முறையில் நிகழ்ந்தன.
- எனினும் ஜேர்மனிய பேரரசர்களால் நியமிக்கப்பட்ட திருத்தந்தையர்கள் மிகவும் நல்லவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருந்தனர்.

  உதாரணம்: திருத்தந்தை இரண்டாம் சில்வெஸ்டர் (கி.பி 990-1003)

**துறவற வாழ்வில் மறுசீரமைப்பு**

- துறவற வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மறுசீரமைப்புகள் இக்காலத் திருச்சபையில் உருவாகிய புத்துணர்ச்சிக்குப் பெருமளவில் பங்களிப்புச் செய்தன. பிரான்சில் குளுனி என்னும் இடத்தில் கி.பி 910ல் ஆரம்பிக்கப்பட்ட துறவற மடம் இங்கு முக்கிய இடம் பெறுகிறது. குளுனி துறவற சபை ஏனைய பெனடிக் துறவற சபைகளிலிருந்து வேறுபட்டது. பெனடிக் துறவற மடங்கள் மிகவும் சுதந்திரமாகச் செயல்பட்டதோடு குளுனி துறவற மடம் பிரதான துறவற மடத்துடன் மிக நெருக்கமாக இணைந்து செயல்பட்டது. ஒவ்வொரு துறவற இல்லங்களில் அல்லது துறவற மடங்களுக்குப் பொறுப்பாயிருந்த துறவிகள் குளுனி துறவற மடாதிபதிக்குத் தாழ்மையோடும், கீழ்ப்படிவோடும் பணியாற்றினர். இச்சிறிய துறவற மடங்களின் தலைமைத் துறவிகள் வருடங்தோறும் குளுனி துறவற மடாதிபதியுடன் ஒன்றுசேர்ந்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். கி.பி 1016ல் அக்காலத்திலிருந்து திருத்தந்தை 8ம் பெனடிற்றினால் குளுனி துறவறசபை மேலும் வளர்ச்சியடைய இடவசதி செய்து கொடுக்கப்பட்டது. பிற்காலத்தில் இவர்களும் செபத்திற்கும், உடலை வருத்தி வேலை செய்வதற்கும் அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்தனர். குளுனி துறவற மடங்கள் பிற்காலத்தில் ஐரோப்பாவில் செல்வந்த துறவற மடங்களாக விளங்கின. துறவிகள் தாமாகவே தேர்ந்தெடுத்த அபேத் எனும் சபையின் பிரதான தலைவர் திருத்தந்தைக்கு மட்டும் இரண்டாவதாக இருந்தார். பொதுநிலையினருக்கு அங்கு எவ்வித அதிகாரமும் இருக்கவில்லை. குளுனி துறவற மடத்தின் சிறந்த செயற்பாடுகளின் காரணமாக அனேக ஆயர்களும், கருதினால்மார்களும் தத்தமது மறைமாவட்டங்களிலே அவர்களின் துறவற மடங்களை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். அதேவேளை நெதர்லாந்து, இத்தாலி, ஸ்பெயின், இங்கிலாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளில் குளுனியர்களுக்கு அழைப்புக் கிடைத்தது.
- குளுனியர்களின் மறுசீரமைப்புகள் ஏனைய துறவற மடங்களிலும் மறுசீரமைப்பு ஏற்படுத்துவதற்குக் காரணமாகியதோடு புதிய துறவற வாழ்க்கை முறைகளை ஏற்படுத்துவதில் தாக்கங்களை ஏற்படுத்தியது. இதன் விளைவாக புனித றொமோல்ட் அடிகளினால் ஆரம்பிக்கப்பட்ட கமல்டோலெஸ் துறவற வாழ்வும் புனித புரூனோ அடிகளினால் ஆரம்பிக்கப்பட்ட கார்த்தூஷியன் துறவற வாழ்வும் விசேட இடத்தைப் பெற்றன.
- கி.பி 1098ல் மோலேஸ்மாஷின் துறவியான றொபட் என்பவரால் சிஸ்டர்சீயன் துறவறசபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் காரணமாக திருச்சபையில் அதிக மறுமலர்ச்சி ஏற்பட்டது.
- வல்தென்சியனியர் திருச்சபையின் சுகபோக வாழ்வை விமர்சித்து திருச்சபைக்கு ஏழ்மையை அறிமுகப்படுத்தினர்.

**பதினொராம் நூற்றாண்டில் கத்தோலிக்கத் திருச்சபை**

- பதினொராம் நூற்றாண்டில் ஓட்டோனியர்களின் பேரரசிலிருந்த ஜேர்மனிய பேரரசுகள் பெரும்பாலும் மேற்குச் சபையை ஆட்சி செய்தன. சபையின் நிலங்களின் உரிமையை அவர்களின் கீழ் வைத்திருந்ததோடு திருத்தந்தையர்களை ஆயர்களை நியமிப்பதும்

அவர்களது விருப்பப்படி இக்காலத்தில் நிகழ்ந்தது.

- இதன் பிரதிபலனாக லௌகீக தாக்கங்களினால் திருச்சபைக்குச் சுதந்திரம் அற்றுப்போகும் என்பதை அக்காலத்திலிருந்த திருத்தந்தையர்களும் ஆயர்களும் விளங்கிக் கொண்டனர்.

**திருத்தந்தை ஏழாவது கிரகோரியாரின் மறுசீரமைப்பு**

- கி.பி 1073ல் கர்தினால் ஹில்டே பிரான்ட் ஏழாவது கிறகோரி எனும் பெயரில் திருத்தந்தையாக பொறுப்பேற்றபின் இந்நிலை மந்தநிலையை நோக்கிச் சென்றது. கி.பி 1075ல் அவர் வெளியிட்ட "Dictus Papae" எனும் அறிக்கையில் திருத்தந்தையர்கள் தமது அதிகாரத்தை திருத்தூதர்களின் வழியாக கிறிஸ்துவிடமிருந்து பெற்றுள்ளதாகவும் அதனால் அவர்களிடமுள்ள அதிகாரம் மிகவும் உயர்ந்தது எனவும் அறிவித்தார்.
- திருத்தந்தை ஏழாவது கிரகோரியார் இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி அவர் திருத்தந்தையர்க்குத் திருச்சபையில் அதிகமான அதிகாரம் உள்ளது எனவும், அதன்படி பேரரசர்களையும் தமது அதிகாரத்தினால் நீக்கவும் இறைவனின் சட்டத்திற்கும் திருச்சபையின் சட்டத்திற்கும் பொருத்தமற்ற சட்டத்தை மாற்றுவதற்கும் அதிகாரம் உண்டு என்பதை அறிவித்தார்.
- திருத்தந்தையின் அவ்வதிகாரத்தைப் பயன்படுத்தித் திருத்தந்தை கிரகோரியார் திருச்சபையின் அனைத்துப் பிரிவுகளிலும் புதிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் முயற்சி செய்தார்.
- இவர் முதலாதவதாக பிரமச்சாரியத்தை பாதுகாக்கும் வாக்குறுதிக்குப் பிரமாணிக்கமாக இருப்பதற்கும் அருளடையாளங்களை வழங்கும்போது எந்த விதத்திலும் பணம் அறவிடக் கூடாது எனவும் குருக்களிடம் கேட்டுக்கொண்டார்.

**பன்னிரண்டாம் நுற்றாண்டில் கிறிஸ்தவ சபை**

- பதினோராம் நுற்றாண்டில் திருச்சபையின் வரலாற்றிலே இடம்பெற்ற துரதிவஷ்ட சம்பவம் என கி.பி. 1054இல் கிழக்கு, மேற்கு சபைகளுக்கிடையே ஏற்பட்ட திருச்சபையின் பிளவு (The Schism between the Eastern Church and the Western Church) குறிப்பிடப்படுகிறது.
- கிறிஸ்தவ சபையானது கத்தோலிக்க சபை, ஒர்த்தொடொக்ஸ் சபை எனப் பிளவுபட்டது. கத்தோலிக்க சபையின் தலைவராக திருத்தந்தையும், ஓர்த்தொடொக்ஸ் சபையின் தலைவராக பிதாப்பிதாவும் (Patriarch) உள்ளனர். இந்த சபையின் பிளவுக்கு இரு முக்கிய காரணங்கள் உள்ளன. ஒன்று சபையின் தலைமைத்துவம் (Dealing with the Primacy of the Pope); மற்றையது இறையியலாகும் (Dealing with the filioque).
- உரோமன் திருத்தந்தையின் தலைமைத்துவம் முழுத் திருச்சபைக்கும் பொதுவானதென மேற்கு சபை ஏற்றுக்கொண்டது. உரோமின் ஆயரும், கொன்ஸ்தாந்திநோபிளின் பிதாப்பிதாவும் திருச்சபையில் சமமான தலைமைத்துவம் வகிப்பவரென்பது கிழக்கு சபையின் கருத்து. இது திருச்சபையின் பிரிவுக்குக் காரணமாகியது. நிசேயா விசுவாசப் பிரமாணத்துக்கு கொன்ஸ்தாந்திநோபிளின் பிதாப்பிதாவால் "பிலியோகே" (Filioque) எனும் கூற்றைச் சேர்த்துக் கொள்வது அடுத்த காரணமாகும். இதனால், இச்சபைகள் இரண்டிலும் ஒரு சிலரை சபையிலிருந்து நீக்குதலும் இடம்பெற்றது.
- இந்த முரண்பாடுகள் கி.பி. 1965இல் திருத்தந்தை ஆறாவது பவுல், அக்காலத்திலிருந்த அதெனகோறஸ் பிதாப்பிதாவைச் சந்தித்து நட்புடன் உரையாடல் நடாத்தும்வரை நிலைத்தது. இதன் பலனாக இன்று இச்சபைகள் மத்தியில் ஒருமைப்பாடு நிலவியது.

**சிலுவைப்போர்**

- இலௌகீக தாக்கங்களிலிருந்து திருச்சபையின் ஆன்மீக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக திருத்தந்தையர்களுக்குப் போரில் ஈடுபட நேரிட்டது. இது இந்நூற்றாண்டில் நடைபெற்ற அபாக்கியமான நிகழ்வாகும். திருச்சபையைப் பாதுகாக்கும் நோக்குடன் திருத்தந்தையர்கள் ஆயுதங்களைக் கையிலேந்தி இஸ்ராயேலருக்கு எதிராகப் போர் செய்தனர்.

- புனித பூமியை இஸ்லாமியரிடமிருந்து மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அவர்களுடன் பெரிய போர்களுக்கு முகங்கொடுக்கத் திருத்தந்தையர் முன்வந்தனர். கிறிஸ்தவ நம்பிக்கையையும், கிறிஸ்தவ அடையாளத்தையும் பாதுகாப்பதற்காக இப்போர் ஆரம்பமானது. இங்கே எல்லா ஆயுதங்களிலும் சிலுவையின் அடையாளங்கள் பொறிக்கப்பட்டதால் இது சிலுவைப்போர் என அழைக்கப்பட்டது. போர் செய்து திருச்சபையைப் பாதுகாப்பது முக்கியமான செயல் என்பதை ஏற்றுக்கொண்டதால் நீண்ட காலம் இப்போர் நடைபெற்றது.
- திருத்தந்தை இரண்டாவது ஊர்பன் முதலாவது சிலுவைப் போருக்குத் தலைமை தாங்கினார். ஆன்மீக நோக்கத்தை முன்வைத்துப் போர் செய்தாலும் இலௌகீக செல்வங்களைச் சேர்ந்ததாக குற்றஞ்சாடடப்பட்டது.
- முதலாவது சிலுவைப்போரில் பெருந்தொகையானோர் உயிரிழந்தனர். அங்கே நடைபெற்ற இன்னுமொரு விளைவு கிரேக்க பிதாப்பிதாவை அவர் இருந்த இடத்திலிருந்து வெளியேற்ற முடிந்தது. இது சபைப்பேதகம் மேலோங்கக் காரணமாயிற்று. போரின் முடிவில் எருசலேமைக் கைப்பற்றுவதற்குத் திருச்சபையால் முடிந்தது.
- கி.பி 1146ல் இரண்டாவது சிலுவைப்போர் ஆரம்பமானதோடு இங்கேயும் பெருந்தொகையானோரைச் திருச்சபை இழந்தது. போரும் வெற்றியீட்டாத முயற்சியாயிற்று.
- கி.பி 1189ல் நடந்த மூன்றாவது சிலுவைப் போரில் மீண்டும் எருசலேமை கைப்பற்றுவதற்கும் புனித பூமியை நோக்கி பயணமாகும் அனைவருக்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இதனால் முடிந்தது. இந்தச் சிலுவைப்போரின் மத்தியிலும் சபையில் பேதகம் மென்மேலும் மேலோங்கச் செய்தது.

**கிறிஸ்தவ இறையியலின் வளர்ச்சி**

- இந்நூற்றாண்டில் துறவற மடங்களில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. துறவற மடங்களின் உதவியுடன் பேராலயங்களை அண்டிய பகுதிகளில் கட்டியெழுப்பப்பட்ட பாடசாலைகள் திருச்சபைக்கு மிகப்பெரிய சேவை ஆற்றின. இந்நூற்றாண்டில் இறையியல் உயிரூட்டம் பெற்றது. இதைக் கற்பிக்கும் பாடசாலைகள் இந்நூற்றாண்டில் ஆரம்பமானது. திருவிவிலியம், திருச்சபைத் தந்தையர்களின் போதனைகள், தத்துவவியல் என்பன கலந்த அறிவைக் கொடுப்பதற்குப் பாண்டித்திய இறையியலாளர் மிகவும் முயற்சி எடுத்தனர். நம்பிக்கைக்கும் அறிவிற்கும் இடையேயுள்ள தொடர்பை விளக்குவதற்கு அவர்கள் செயல்பட்டனர். இறையியலுக்கும், தத்துவவியலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளதென அவர்களால் முன்வைக்கப்பட்டன.
- பாண்டித்திய இறையியலின் தந்தையென அழைக்கப்படும் காண்டற்பரி புனித அன்சலம் இறையியல் என்பது விளக்கத்தினைத் தேடிச்செல்லும் விசுவாசமாகும் எனும் வரைவிலக்கணத்தை முன்வைத்தார்.
- அவருக்குப் பின் பீற்றர் அபேலார்ட், பீற்றர் லெம்பட் ஆகியோரும் இறையியலின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தனர். அவர்கள் இதற்காகப் பலவித நூல்களை எழுதி ஊக்கப்படுத்தினர்.
- இவற்றால் திருச்சபை உயிரூட்டம் பெற்றதோடு சிலுவைப் போரினால் ஏற்பட்ட விளைவுகளைச் சிறிது மறந்து ஆன்மீக வளர்ச்சிகளில் ஏற்பட்ட முன்னேற்றம் தொடர்பாகக் திருச்சபை மகிழ்ச்சியடைந்தது.

**பதின்மூன்றாம் நூற்றாண்டில் கத்தோலிக்க திருச்சபை**

- பதின்மூன்றாம் நூற்றாண்டில் புனித பிரான்சிஸ்சைப் பின்பற்றியோரைத் தவிர வேறு சில துறவற குழுக்களும் இந்நூற்றாண்டில் தோன்றின.
- இறையியல் கலைத்துறையைப்போல ஆன்மீக வாழ்க்கை முறையிலும் இந்நூற்றாண்டில் பாரிய முன்னேற்றம் காணப்பட்டது. இதற்கு மூலகாரணமாக இருந்த புனித அசீசியர் பிரான்சிஸின் சேவை (கி.பி 1182-1226) மிகவும் மகத்தானது.

- புனித பிரான்சிஸியாருக்கு எவ்விதமான சபைகளையும் உருவாக்கும் நோக்கம் இல்லையெனினும் அவருடன் இணைத்துக்கொள்ள அனுமதி கேட்டோரைத் தள்ளிவிட அவரால் முடியவில்லை. கி.பி 1226ல் அவர் இறக்கும்போது அவரைப் பின்பற்றி தவவாழ்வின் மூலம் திருமறையைப் போதிக்கத் தங்களை அர்ப்பணித்த பத்தாயிரத்துக்கு அதிகமானோர் பல நாடுகளில் இருந்தனர். பிரான்ஸிசின் துறவற சபை அவ்வாறு உருவாகியது.
- பிரான்சிஸின் சபையைத் தவிர அகுஸ்தீனார் கார்மேல் துறவற சபை, டொமினிக்கன் துறவற சபை என்பனவும் உருவாகின. டொமினிக்கன் துறவற சபை டொமினிக் கூஸ்மன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. திருமறை அறிவிப்புத் துறவற சபையென அழைக்கப்பட்ட இச்சபையினர் மறையுரையாற்றுவதுபோல் அதைப்பற்றிய நூல்களை எழுதவும் ஆர்வம் காட்டிய குழுவினராவார். புனித தோமஸ் அக்குவைனால் எனும் இறையியலாளரையும் உருவாக்கியது இச்சபையே.
- பல்கலைகழகங்களாகப் பின்னர் அறிமுகமான கல்விக் கூடங்கள் இந்நூற்றாண்டில் ஐரோப்பிய நிர்வாகங்களிலும் தோற்றம் பெற்றது. அவைகளும் பேராலயங்களுக்கு அருகாமையில் அமைந்தன.
- புனித தோமஸ் அக்குவைனாஸ் கி.பி 1225ல் இத்தாலியில் பிறந்தார். இவர் தத்துவ சாஸ்திரம், இறையியல், இயற்கை விஞ்ஞானம், சட்டம் போன்ற எல்லாத் துறைகளிலும் ஆர்வம் காட்டினார். கி.பி 1274ல் அவர் இறைவனடி சேர்ந்தார். அவரின் மிகச் சிறந்த நூ ல் ‘சும்மா தியலோஜிகா’

### 8.1.2 திருச்சபை பிளவுபட்டமைக்கான பின்னணி

**மாட்டின் லூத்தர் (1483-1546)**

- புனித ஒகஸ்தீனார் துறவற சபையைச் சேர்ந்த ஒரு குருவானவர்.
- விற்றன் பேர்க் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராவார்.
- திருச்சபையில் நடைமுறையிலிருந்த பல்வேறு செயற்படுகளால் மனம் தளர்ந்தார்.
- புனித பேதுருவின் பேராலயத்தை கட்டத் தேவையான பணத்தைப் பெறுவதற்குப் பரிபூரண பலன்களை விற்பனை செய்ததை எதிர்த்தார்.
- பரிபூரண பலன் விற்பனை உட்பட 95 கோட்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 1517ம் ஆண்டு கார்த்திகை மாதம் 1ம் நாள் குற்றப்பத்திரிகை ஒன்றை விற்றன்பேர்க் ஆலயக் கதவில் ஒட்டினார்.
- 1520ல் லூத்தர் தமது கோட்பாடுகளைக் கைவிட அறுபது நாட்கள் கொடுக்கப்பட்டன.
- அக்கோட்பாடுகளைக் கைவிட மறுத்ததினால் 1521ல் திருச்சபையிலிருந்து வெளிவேற்றப்பட்டார்.
- அவர் லூத்தரன் சபையை உருவாக்கினார்.

**லூத்தரின் பிரதான படிப்பினைகள்**

- கிறிஸ்தவர்களுக்கு மீட்புக்கிடைப்பது இயேசுக்கிறிஸ்துவில் கொண்டுள்ள நம்பிக்கையினால் மட்டுமே ஆகும்.
- இயேசுக்கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் இரண்டாகும். அவை திருமுழுக்கும், நற்கருணையும்.
- கிறிஸ்தவ சபை எல்லா விசுவாசிகளினதும் பங்களிப்பாகும்.
- இயேசுக்கிறிஸ்துவை தவிர ஏனையோருக்கு அடிமையாகக் கூடாது.
- கிறிஸ்தவ வாழ்வின் மையம் தெய்வீக படிப்பினைகள் அடங்கிய திருவிவிலியம் ஆகும்.
- ஆண் பெண் இரு பாலாருக்கும் குருத்துவத்திற்கான அழைப்புக் கிடைக்கலாம் குருமாருக்கு திருமணம் செய்யும் உரிமையுண்டு.

**ஜோன் கல்வின் (1509-1564)**

- பிரான்சில் பிறந்த ஜோன் கல்வின் பரீஸ் பல்கலைக்கழத்தில் இறையியலையும் சட்டத்தையும் கற்றார்.
- குருத்துவத்தின் பொறுப்புக்களையும் ஆழமான நம்பிக்கையையும் பற்றிக் கற்ற அவர் 1533ல் உரோமை சபையிலிருந்து விலகினார்.
- திருச்சபையில் தூய்மையை ஏற்படுத்துவது தனது முக்கிய பணியென்பதை அவர் விளங்கிக் கொண்டார்.
- 1536ல் சுவிட்சர்லாந்து சென்ற கல்வின் 'கிறிஸ்தவ மதக்கோட்பாடுகள்' எனும் நூலை வெளியிட்டார்.
- இந்நூலின் மூலம் ஜெனிவா மக்களுக்கு அவர் ஷோசலிசத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய மத சமுதாயத்தின் திட்டத்தை விளக்க முயன்றார்.
- மக்களின் ஒழுக்கத்தைப் பாதுகாப்பதே அச்சபையின் முக்கிய பணியாக இருந்தது. திருவிவிலியத்தில் குறிப்பிடாத எல்லா நம்பிக்கைகளையும் நிராகரித்தார். எல்லாம் திருவிவிலியத்தின் அடிப்படையில் இருக்கவேண்டுமென அவர் கூறினார்.
- உலகம் தொடங்கியது முதல் மீட்புப் பெறுபவர் பெறாதவர் யார் என்பதை இறைவன் தீர்மானித்துள்ளார் என அவரால் முன்வைக்கப்பட்டது. தனது போதனைகளையெல்லாம் திருவிவிலியத்தின் அடிப்படையில் செய்த கல்வின் திருவிவிலியம் இறை ஏவுதலால் எழுதப்பட்ட விசேட கொடை என்பதை வெளிப்படுத்தினார்.
- சென்ம பாவத்தின் காரணமாக இறைவெளிப்பாட்டைச் சரியான முறையில் விளங்கிக் கொள்வதற்கு மனிதனால் முடியாது என்பது அவரின் கருத்தாகும். இதற்கு இயேசு கிறிஸ்துவினதும் திருத்தூதர்களினதும் போதனைகள் பெரிதும் உதவுகின்றது எனவும் கூறினார்.
- திருத்துவத்தைப் (மூவொரு இறைவன்) பற்றிய பாரம்பரியமான எண்ணக்கருவை ஏற்றுக்கொண்ட கல்வின் இறைவன் தூய்மையான, நீதியான, இறைவனாகத் தொடக்கமுதல் வீற்றிருக்கிறார் எனக் கூறினார்.
- தனது கீழ்ப்படியாமையினால் பாவத்தில் வீழ்ந்த மனிதன் மீட்புப் பெறுவது விசுவாசத்தினால் மட்டும் எனவும், தூய்மையான ஒன்றிப்பு என்பது இயேசு கிறிஸ்துவின் சிலுவைப்பலியை நினைவு கூருவதெனவும் அப்ப இரசத்தை நம்பிக்கையோடு பெறுபவருக்கு இறையாசீர் கிடைக்கும் எனவும் போதித்தார்.
- சபையின் நிர்வாகத்திற்கு மிகவும் தகுதியுள்ளவர்கள் சிரேஷ்ட மறைபரப்பாளர்கள் மட்டுமே என அவர் தனது மறுசீரமைப்பில் கூறியுள்ளார்.

**ஹுல்ரிச் சுவிங்கிளி (கி.பி 1484-1531)**

- சுவிஸ்சலாந்திற்கும் பிரிவினை மதத்தின் வளர்ச்சியை அறிமுகப்படுத்தினார்.
- கி.பி 1519ல் சுவிட்சர்லாந்தில் குருவாக பணிசெய்யும்போது கத்தோலிக்க திருச்சபையில் மறுசீரமைப்பு ஏற்பட வேண்டுமென்று நம்பிக்கை வைத்தார். இது பற்றிப் போதித்தார்.
- அக்காலத்தில் கத்தோலிக்க திருச்சபையில் அதிகமான வழிபாட்டுச் சடங்குகளில் நிலவிய ஒழுங்கின்மையும் திருச்சபைக்குள் நிலவிய பண மோசடிகளையும் அவர் எதிர்த்ததோடு அதைப்பற்றித் தனது நூலிலும் விமர்சனம் செய்தார்.
- கத்தோலிக்க திருச்சபையில் இருந்து கொண்டே சீர்திருத்தவாத இயக்கத்தை உருவாக்கிய இவர் இதன் மூலம் திருச்சபைக்கு எதிராகச் செயற்பட முயற்சி செய்தார்.
- கி.பி 1529ல் மாட்டீன் லூத்தரை சந்தித்து மறையைப்பற்றிய தனது கருத்துக்களைக் கலந்துரையாட சுவிங்கிலிக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கே சுவிங்கிலி முன்வைத்த நற்கருணையில் இயேசு அப்ப இரச வடிவில் உண்மையாகவே பிரசன்னமாயிருக்கிறார் என்ற கருத்தை நீண்ட விவாதத்தின்பின் மாட்டீன் லூத்தர் கடுமையாக எதிர்த்தார்.

- ஹுல்ரிச் சுவிங்கிளி தனது போதனையை முன்னெடுத்துச் சென்று சுவிட்சலாந்தில் பிரிவினை மத இயக்கத்தின் தலைவராவதற்குப் பெருமுயற்சியுடன் செயற்பட்டார்.

**இங்கிலாத்துசபை அல்லது அங்கிலிங்கன் சபை**

- சீர்திருத்த சபைகளுக்கிடையில் அதிகமாக கத்தோலிக்க சபையின் வெளிப்பண்புகளைக் கொண்டிருக்கும் சபை இங்கிலாந்து சபை அல்லது அங்கிலிக்கன் சபையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கிலாந்து சபை என்பது இங்கிலாந்தில் எட்டாவது ஹென்றி ஆரசன் (கி.பி. 1507-1547) நல்லொழுக்கம், அரசியல் காரணங்களின் மீது உருவாக்கிய சபையெனக் கருதப்படுகிறது.
- எட்டாவது ஹென்றி அரசனுக்கு முன்பிருந்த திருத்தந்தையினால் நம்பிக்கையின் காவலர் (Defender of Faith) எனும் புகழ்மாலைக்குரிய அரசராவார். தனது அரசாட்சிக்கு உரிமையான வாரிசை இவ்வுலகில் உருவாக்க முடியாது போன குற்றத்துக்காக தனது மனைவியாகிய கத்தரீன் என்பவரை (Catherine of Aragon) விவாகரத்துச் செய்ய எடுத்த தீர்மானம் அவரைக் கத்தோலிக்க சபையிலிருந்து வெளியேறுவதற்குக் காராணமாகியது.
- அக்காலத்திலிருந்த திருத்தந்தை ஏழாவது கிளெமென்ட் அரசனின் விவாகரத்துக்காக கேட்டுக்கொண்ட கோரிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்தார். அக்காலத்தில காண்டற்பரியின் பேராயராக இருந்த கர்தினால் வோல்சே (Caridnal Wolsey) இன் வழியாகக் கேட்ட கோரிக்கையிலும் பெறுபேறு கிடைக்காதமையால் ஹென்றி அரசன் கி.பி. 1529இல் கர்தினால் வோல்சேயை அவரது பதவியிலிருந்து நீக்கிவிட்டு தனது அன்புக்குரிய சேர் தோமஸ் மூர் (Sir Thomas Moore) எனும் கத்தோலிக்க சட்டத்தரணியை இங்கிலாந்தின் துணைவேந்தன் ஆக (Chancellor of England) நியமித்துக் கொண்டார்.
- எனினும், சேர் தோமஸ் மூர் திருத்தந்தைக்கு மிகவும் கீழ்ப்படிவுள்ள ஓரு கத்தோலிக்கனாக தனது நண்பன் ஹென்றி அரசன் தனக்குத் தந்த பதவியை ஏற்பதற்கு முன் தனக்கு அரசனின் விவாகரத்து தொடர்பான பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிப்பதற்கு முடியாதென அரசனுக்கு அறிவித்திருந்தார்.
- இறுதியாக கி.பி. 1534இல் எட்டாவது ஹென்றி அரசன் இங்கிலாந்து சபையை அமைத்து அதன் தலைமைத்துவத்தையும் தானே உரிமையாக்கிக் கொண்டார். இவர் கத்தோலிக்க சபையுடனும் விசேடமாக உரோமாபுரியுடன் மிகவும் வெறுப்புடன் செயலாற்றினான். சேர் தோமஸ் மூர் என்பவரும் தனது பதவியை ஏற்றுக்கொள்ளும்போது இங்கிலாந்தின் அரசனின் முன்னிலையில் செய்ய வேண்டியிருந்த உறுதியளிப்பையும் கூட மறுத்துவிட்டார். அவர் செய்தவை சட்டபூர்வமாக இல்லையெனினும் இங்கிலாந்தின் சட்டமுறையில் நிலவிய மௌனத்தினால் சேர் தோமஸ் முருக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனினும் ஹென்றி அரசன் அவருக்கு மன்னிப்பு அளிக்காததோடு கி.பி. 1535இல் தோமஸ் மூரை சிரச்சேதம் செய்தான். இவ்வாறாக சேர் தோமஸ் மூர் கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாத்தமையினால் உயிரைத் தியாகம் செய்த வேதசாட்சியான நிலையையடைந்தார். பின்னொரு காலத்தில் றொசெஸ்டரின் ஆயராக (Bishop of Rovhester) இருந்த ஜோண் பிசரும் (John Fisher) பிற்காலத்தில் கத்தோலிக்க சபையால் தமது புனிதர் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.
- இங்கிலாந்து சபை ஆரம்ப காலத்தில் திருத்தந்தையின் அதிகாரத்தை மறுத்ததோடு கத்தோலிக்க சபையிலிருந்து விலகி பின்னர் கல்வின்வாதத்தோடு இணைந்து பெரும்பாலும் புரட்டஸ்தாந்து தன்மையை எடுத்தது. கி.பி. பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தில் கத்தோலிக்கர் மிகவும் கடுமையாகத் துன்பத்துக்குள்ளாக்கப்பட்டனர். திருத்தந்தைகுக் கீழ்ப்பட்டிருந்தவர்களை அரசியல் ரீதியாக அரசுக்கு எதிரான குழுவினர் என அவர்களைத் துன்புறுத்தினர். எனினும், பின்னர் காலத்தின் மாற்றத்தினால் இங்கிலாந்து சபையின் பெரும்பாலானோர் மீண்டும் கத்தோலிக்கராக மாறினர். இதன் மத்தியில் விசேடமாக இங்கிலாந்து சபையின் உயர் சபையைச் சேர்ந்த அங்கிலிக்கன் பிரிவினர் (High Church Anglcans) புரட்டஸ்தாந்து பண்புகளை விட கத்தோலிக்க பண்புகளைக் கொண்ட குழுவினராகக் காட்டப்பட்டனர்.

**ஜோன் வெஸ்லியும் சாள்ஸ் வெஸ்லியும்**

- 18ம் நூற்றாண்டிர் இவ்விரு சகோதரர்களால் மெதடிஸ் சபை ஆரம்பிக்கப்பட்டது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் காலத்தில் மெதடிஸ் என்ற பெயரால் மாணவர் சிலரைக் கொண்ட குழுவொன்றை அமைத்து திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டார்கள்.
- 1728ல் ஜோன் வெஸ்லி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். மாட்டின் லூத்தரின் கடிதத்தினால் அவரின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது.
- பயணிக்கும் போதகராக இங்கிலாந்தில் நகரப்புறங்களைப்போல் கிராமாப்புறங்களிலும் பணியாற்றிய தோடு அவரின் சிறப்பம்சமாக திறந்தவெளி போதனை இருந்தது.
- பெருந்திரளான மக்களைத் தம்பால் கவர்ந்தார். பாடல்களை இயற்றி அதன்மூலம் மக்களின் ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்த முயற்சி செய்தார்.
- 18ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் கஷ்டப்பட்ட சுரங்கத் தொழிலாளருக்கும் கிராமிய மக்களுக்கும் ஆன்மீக போஷணையைக் கொடுப்பதற்கு ஜோன் வெஸ்லியும், சாள்ஸ் வெஸ்லியும் பெரும் முயற்சி எடுத்தனர். தங்களது பிரச்சினைகள் காரணமாக மதுபானத்திற்கு அடிமையான இந்தச் சுர்ஙகத் தொழிலாளருக்கும் மக்களுக்கும் நற்செய்தியை அறிவித்து அவர்களை அந்நிலையிலிருந்து மீட்டு அவர்களுக்கு ஆன்மீக நலனைக் கொடுப்பதற்கு இச்சகோதரர்கள் இருவரும் முயற்சி செய்தனர்.
- மறைபரப்புப் பணிக்குப் பொதுநிலையினருக்குப் பயிற்சியளித்து 1744ல் முதல் முறையாக சம்மேளம் ஒன்றை நடத்துவதற்கு அவர்களால் முடிந்தது. குருக்கள் சிலர் உட்பட நூறு பேரளவு அங்கத்தவரைக் கொண்ட கூட்டத்தில் மெதடிஸ்த் சபையைச் சட்டப்படி ஸ்தாபிக்க அவர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

**வில்லியம் பூத்**

- 1865ல் வில்லியம் பூத் என்னபவரால் இரட்சணிய சேனை ஆரம்பிக்கப்பட்டது. இரட்சணிய சேவை மறைத்தூதுப்பணியிலும் சமூகப்பணியிலும் மிக உச்சாகமாக ஈடுபட்டது. மறைத்தூதுப்பணியை அடிப்படை நோக்கமாகக் கொண்டு இச்சபை திருவிவிலியத்தில் வெளிப்படுத்தப்படும் இறையியலை விசுவாசிகளுக்கு அறிவிக்க மிகவும் முயற்சி எடுக்கின்றது.
- இங்கிலாந்து சமூகத்தில் வாழ்ந்த ஏழை மக்களுக்கு நற்செய்தியைக் கொண்டு சென்ற வில்லியம் பூத் அம்மக்களின் பசியைப் போக்கவும், தூய்மையை ஏற்படுத்தவும், மீட்பின் செய்தியைப் பெற்றுக் கொடுக்கவும் மிக ஊக்கத்துடன் செயல்பட்டதால் இச்சபை S3 (Soup, Soap, Salvation) என்ற அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது என அறிஞர்கள் கூறுகின்றனர்.
- வில்லியம் பூத் இராணுவத்திற்குச் சமனான அமைப்பைக் கொண்டதான இரட்சனிய சேனையை ஆரம்பித்தார்.
- சபை அங்கத்தினர் அனைவரும் சபையில் பதவி வகிக்கும் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது அவரின் கட்டளையாகும்.
- இரட்சணிய சேனையின் பதவிகளுக்கு ஆண், பெண் இருபாலருக்கும் பங்குபெற வாய்ப்புப் பெற்றுக்கொடுத்தது மட்டுமல்ல அதிகாரத்திலிருக்கும் ஆண், அதிகாரத்திலிருக்கும் பெண்ணை மாத்திரமே திருமணம் செய்ய முடியும் என்ற நிபந்தனையும் இருந்தது.
- அருளடையாளங்கள் எதுவும் இல்லை.
- இரட்சணிய சேனைக்குப் புதிதாகச்வ சேர்க்கப்படுபவர் சபைக் கொடிக்கு மரியாதை செலுத்துதல், சத்தியப்பிரமாணம் செய்தல் என்பன நடைபெற வேண்டுமென பூத் சுட்டிக்காட்டினார்.

- தெருப்போதனையின் வழியாகப் பாடல்கள், வாத்தியங்களுடன் வழிபாடுகளை நடாத்துவதற்கும் எல்லோரும் இதில் பங்குபெற இடவசதிகளைச் செய்து கொடுக்கவும் வில்லியம் பூத் முயற்சி செய்தார்.
- இரட்சணிய சேனையின் அங்கத்தவர் அனைவரும் கிறிஸ்தவ பக்தர்களாக மறைதூதுப் பணியிலும், சமூகப்பணியிலும் ஈடுபட்டுச் சமூகத்தில் மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள வறியவர்களுக்கு உதவிசெய்ய முன்வர வேண்டுமென வில்லியம் பூத் கேட்டுக்கொண்டார்.
- வில்லியம் பூத் ஆடம்பரமற்ற எளிமையான வாழ்க்கை முறையைப் பின்பற்றி இரட்சணிய சேனையில் கிறிஸ்தவ பக்தர்களை ஈடுபடுத்தினார்.

கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.

- கி.பி 4 தொடக்கம் 16 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் உலக திருச்சபை வரலாறு பற்றி ஐந்து தகவல்களை எழுதுக.
- 10ம் நூற்றாண்டில் ஏற்பட்ட துறவர வாழ்வில் 5 மறுசீரமைப்புகளை எழுதுக.
- தேசிய ஒற்றுமை மற்றும் சமயங்களுக்கிடையிலான நல்லினக்கத்தை ஏற்படுத்த நீர் எவ்வாறு பங்களிப்பீர் என்பதனை 10 காரணிகள் ஊடாக விளக்குக.

**உசாத் துணை நூல்கள்**


1. பேராசிரியர். சோமரத்ன, ஜீ. பீ. வி கிறிஸ்து சாசனயே இத்தியாசய, 2011.
2. பேராசிரியர். சோமரத்ன, ஜீ. பீ. வி கிறிஸ்து சசுனே சன்சோதனைய.
3. HUBERT. JEDIN., History of the Chrisitian Church - 1989.
4. Dannel, Kevino., A Pocket Guide to Chrisitian History.

**தேர்ச்சி 8.0 : பயணம் செய்யும் திருச்சபையின் வழிநடத்தலுக்குத் தூய ஆவியின் துணையைப் பெற்றுக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.2 : காலத்திற்கேற்ப திருச்சபையை நேரிய வழியில் நடாத்திச் செல்லப் பங்களிப்பை நல்குவார்.**

**பாடவேளைகள் : 25**

**கற்றல் பேறுகள்**

- 16-21ம் நூற்றாண்டு வரை திருச்சபையின் வரலாறு பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவார்.
- காலத்துக்கு ஏற்ப ஏற்படும் மாற்றங்களுக்கு நல்ல முறையில் முகம் கொடுக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- 16-21 நூற்றாண்டு வரை திருச்சபையின் வரலாறு பற்றிய தகவல்களைத் திரட்டி ஆக்கமாக முன்னைப்பார்.
- திருச்சபைத் தற்தையர்கள் முன்வைக்கும் படிப்பினைகள் வழிகாட்டல்களைத் தமது ககத்தோலிக்க வாழ்க்கைக்குச் சார்பாக மாற்றிக்கொள்வார்.
- திருச்சபையின் மறுமலர்ச்சிக்காக முன்வைக்கப்படும் நிகழ்ச்சிகளில் பிறரோடு ஒத்துழைத்துச் செயற்படுவார்.

## 16 – 21 நூற்றாண்டு வரை திருச்சபை வரலாறு

### 8.2.1 துறவற சபைகளின் மறு சீரமைப்பும் புதிய துறுவற சபைகளின் தோற்றமும்.

- 16ம் நூற்றாண்டுகளில் சீர்த்திருத்தச் சபைகளின் புரட்சியின் பலனாகத் கத்தோலிக்க திருச்சபையில் சீர்திருத்தத்தை வலியுறுத்தி பல புதிய துறவற சபைகள் நிறுவப்பட்டன. அதே சமயம் ஏற்கனவே இருந்த துறவற சபைகளும் மறுசீரமைக்கப்பட்டன. திருச்சபையின் மறுசீரமைப்புச் செயலை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்குத் தூய்மையான செயலூ க்கமுள்ள குருக்களின் தலைமைத்துவம் தேவைப்பட்டது. திருச்சபையின் சீர்திருத்தத்தை நோக்காகக் கொண்டு நிறுவப்பட்ட துறவற சபைகளில் கார்மேல் சபை, கப்புச்சின் சபை, வின்சென்சியன் சபை, இயேசு சபை என்பனவைக் குறிப்பிடலாம்.

**கார்மேல் சபை**

- 12ம் நூற்றாண்டில் பலஸ்தீனத்திலுள்ள கார்மேல் மலையில் ஆரம்பமானது.
- இச்சபையின் துறவிகள் கார்மேல் மலையில் தனிவாசமும் கடுமையான தப வாழ்வும் வாழ்ந்தவர்கள்
- புனித சைமன் ஸ்டொக் இத் துறவற வாழ்வின் மரபுகளை இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்றார்.
- பல்கலைக் கழகங்களுக்கு அண்மையிலுள்ள நகரங்களில் கார்மேல் சபையின் மடங்கள் நிறுவப்பட்டதன் காரணம் அவர்கள் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாற்றினர் மறைப்பணிகளில் ஈடுபட்டனர்.
- கார்மேல் சபைத் துறவியான புனித அவிலா திரேசாள் (1515-1582) தனது துறவற சபையில் மறுமலர்ச்சியை உருவாக்க முயற்சி செய்தார்.
- கார்மேல் சபையின் ஆரம்பகால தப வாழ்வு, ஆழ்தியான நிலை வாழ்வையும் கொண்டு வருவதற்கு புனித அவிலா திரேசாள் எடுத்த முயற்சிகள் பலனளித்தன. இவருக்கு உறுதுணையாகப் புனித சிலுவை அருளப்பர் இருந்தார்.
- ''நிறை வாழ்வின் வழி'' (The way of Perfection) ''உள்ளக மாளிகை'' எனும் ஆன்மீக நூல்கள் புனித அவிலா திரேசாவினால் எழுதப்பட்ட சிறந்த ஆன்மீக நூல்களாகும்.

- புனித அவிலா திரேசாவின் உதவியுடனும் வழிகாட்டலுடனும் புனித சிலுவை அருளப்பர் (1542 – 1591) சீர்திருத்தத்திற்குத் துணையாய் இருந்தார். இவர் ஆன்மீக வாழ்வு பற்றிய பல நூல்களை எழுதியுள்ளார்.
- கார்மேல் சபை ஏற்றம் - The Ascent of mount carmel
- இருண்ட இரவு – The Dark Night of the Soul
- ஆன்மீகப் பாடல் - The Spirtual Canticle
- அன்பின் அணையாச் சுவாலை – The Living Flame of Love
- இவர்கள் இருவர் எழுதிய ஆன்மீக வாழ்வின் நூல்கள் பலரது வாழ்விற்கு மிகவும் உதவியாக இருந்தன.
- ஆன்மீக வாழ்வு ஆழ்தியான நிலைச் செபமும் பற்றிய இவர்களது ஆன்மீக ஆக்கங்கள் மிகவும் முக்கியமானவையாகும். ஆன்மீக வாழ்வில் இறையொன்றிப்பை அனுபவிப்பதற்கு தாழ்ச்சி இன்றியமையாதது என்னும் அறிவுரையின் படி குழந்தை இயேசுவின் புனித திரேசாள் தனது வாழ்வினால் சான்று பகர்ந்துள்ளார்.

**கப்புச்சின் சபை**

- 16ம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றிய துறவற சபைகளில் கப்புச்சின் சபை முக்கியமானது. 13ம் நூற்றாண்டில் ஆரம்பித்த பிரான்சிஸ்கன் துறவற சபையிலிருந்து 1525ல் இச்சபை தோன்றியது.
- அசீசியில் புனித பிரான்சிசின் சட்ட ஒழுங்குகளை மிக நுணுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் தொடக்க கால நற்செய்தி அறிவுரை வாழ்க்கை முறையை மீண்டும் வலியுறுத்தும் நோக்குடனும் கப்புச்சின் சபை ஆரம்பிக்கப்பட்டது.
- இவர்களுக்குத் தலைமை தாங்கிய பிரான்சிஸ்கன் சபையின் மத்தேயு டீ பஸ்ஸி என்பவரின் துணையுடன் தோன்றியதாகும்.
- ஆரம்பத்தில் சபைக்குத் திருச்சபைக்குள்ளேயிருந்தே தடைகள் வந்தாலும் இப்புதிய சபை தமது வளர்ச்சியை மெதுவாக முன்னெடுத்தது அவர்கள் தங்கள் போதிக்கும் பணியையும், மடவாச வாழ்க்கையையும் இணைத்து வாழ்ந்தனர். நோயாளரைப் பராமரிப்பதினாலும், கடின உழைப்பினாலும் கிடைத்த வருமானத்தைக் கொண்டு வாழ்ந்தனர். புரொட்டஸ்தாந்து சீர்திருத்த வாதிகளுக்கு எதிராகப் போதித்தனர். எளிமையான வாழ்வு வாழ்ந்தனர்.

**வின்செனசியன் சபை**

- புனித வின்செனட் டிபோல் சபையின் சீர்த்திருத்ததிற்கு முன்னின்று செயலாற்றியவர்.
- இவர் ஏழைகள் மட்டில் ஆழ்ந்த அன்பும் இரக்கமும் கொண்டவர்.
- கி.பி 1625ல் வின்சென் டிபோல் மறைமாவட்டக் குருக்களின் குழுவைப் (Congregation of the priests of the missions) பிரான்சில் ஆரம்பித்தார். மறைமாவட்டக் குருக்களின் புனிதத் தன்மையை வளர்ப்பதே இதன் நோக்கமாகும்.
- கத்தோலிக்க திருமறையைப் போதிப்பதும் சீர்த்திருத்த வாதிகளின் படிப்பினைகளுக்குப் பதில் அளிப்பதும் இவர்களின் பணியாகும். திருச்சபையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வின்செனசியன் சபை இரண்டு முறைகளைப் பின்பற்றியது.
    1. துறவற சபைகளை நிறுவி முன்மாதிரிகையான குருக்களை உருவாக்குதல்
    2. திருத்தெந்தின் பொதுச் சங்கப் பரிந்துரைகளுக்கு ஏற்றவாறு குருக்களை உருவாக்கும் பொறுப்பைத் துறவற சபையிடம் ஒப்படைத்தல்.
- புனித வின்செனசியன் போல் 1633ல் புனித வின்செனட் டி போலின் அன்புக் கன்னியர் சபையையும் (Sister of charity St. Vincent Paul) ஆரம்பித்தார்.

- இது பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட முதல் சபையாகும்.

**இயேசு சபை**

- திருச்சபையின் மறுசீரமைப்புப் பின்னணியில் உருவாகியது.
- புனித லொயோலா இக்னேசியஸ்சினால் கி.பி 1533ல் ஆரம்பிக்கப்பட்டது.
- அவர் போரில் காயமுற்றுப் படுக்கையில் இருந்த பொழுது வாசித்த கிறிஸ்துவின் வாழ்க்கையை, புனிதர்களின் வாழ்க்கை என்னும் நூல்கள் அவரின் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு ஊற்றுக்களாக அமைந்தன.
- பாமர மக்களுக்கும் ஏழைகளுக்குமென ஆரம்பிக்கப்பட்ட கல்விப் பணி பின்னர் இளவரசர்களுக்கும் அரசர்களுக்கும் வழங்கப்பட்டது.
- துறவற வார்த்தைப்பாடுகளை ஏற்றுத் தம்மை அர்ப்பணித்துத் திருத்தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்ததாக வாக்குறுதி எடுப்பது இசசபையின் சிறப்பம்சமாகும்.
- கத்தோலிக்க திருச்சபையின் மறையுண்மையைக் கற்பித்து பாதுகாப்பதுப் இவர்களது பணியாக இருந்தது.
- சீர்திருத்தச் சபைகள் வளர்ச்சியடைந்த காலத்தில் கத்தோலிக்க திருச்சபையின் மறுமலர்ச்சி இயேசு சபை குருக்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.
- ஆன்மீகத்திலும் இறையியலிலும் பூரணத்துவம் பெற்றவர்களுள் புனித லொயோலா இக்னேசியஸ்சினால் எழுதப்பட்ட 'ஆன்மீகப் பயிற்சிகள்' எனும் நூலும் புனித பீட்டர் கனீசியஸினால் எழுதப்பட்ட மறைக்கல்வி நூல்கள் மூன்றும் கத்தோலிக்க மறைக்கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியதோடு சீர்திருத்த சபையினராலும் புகழப்பட்டதோடு திரித்தெந்தின் பொதுச் சங்கத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இயேசு சபையின் குருவான புனித றொபர்ட் பெலார்மின் போன்றோர் திரித்தெந்தின் பொதுச் சங்கத்தில் இறையியலாளராகச் செயற்பட்டார்.

### 8.2.3 திரிதெந்தின் பொதுச்சங்கம் (1545 – 1563)

- சீர்திருத்த சபைகளின் போதனைகளுக்குப் பதிலளிப்பதற்காகவும் கத்தோலிக்க திருச்சபையை மீண்டும் பலப்படுத்தவும் திருச்சபையின் முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்தக் கூடிய செயற்பாடுகளைப் பற்றியும் கலந்துரையாடத் திரிதெந்தின் பொதுச்சங்கம் கூட்டப்பட்டது. 1545 மார்கழி 13ம் நாள் திருத்தந்தை மூன்றாவது பவுலினால் ஆரம்பிக்கப்பட்ட இப்பொதுச்சங்கம் 18 ஆண்டுகள் பலவித தடைகளுக்கு மத்தியில் இடைக்கிடையே இப் பொதுச்சங்கம் நடைபெற்றது. கத்தோலிக்க திருச்சபையின் உறுப்பாட்டை பகிரங்கப்படுத்துவதே இப் பொதுச்சங்கத்தின் நோக்கமாகும்.

**பொதுச்சங்கம் முன்வைத்த தீர்மானங்கள்.**

- திருவிவிலியம், பாரம்பரியம் ஆகிய இரண்டுமே திருமறை உண்மைகளின் ஊற்றாகும்.
- ஏழு அருளடையாளங்களும் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டவை.
- புனித ஜெரோமினால் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட வல்கெட் பிரதி என்னும் திருவிவிலியமே திருச்சபையின் அங்கீகாரம் பெற்றது.
- பழைய, புதிய ஏற்பாட்டில் எல்லா நூல்களும் இறை ஏவுதலால் எழுதப்பட்டன. திருமறை வசனங்கள் கடவுளிடமிருந்து வந்தவை. எனவே அவற்றிற்கு பொருள் கூறும் அதிகாரம் திருச்சபைக்கு மட்டும் உரியது.
- போதிக்கும் அதிகாரத்தையும் கற்பிக்கும் அதிகாரத்தையும் திருச்சபைக்குக் கிறிஸ்து வழங்கியுள்ளார்.
- புனித பேதுருவும் , அவருக்குப் பின் உரிய முறையில் திருத்தந்தையானவர்களுமே திருச்சபைக்குத் தலைவர். நம்பிக்கை, ஒழுக்கம் பற்றிய படிப்பினையின் போது திருத்தந்தை தவறா வரம் பெற்றவர்.

- திருப்பலி, கல்வாரிப்பலி, உத்தரிப்பு ஸ்தலம், புனிதர் வணக்கம், திருச் சுருபங்களை வைத்தல், பரிபூரண பலன்கள் என்பன திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.
- திருமணம் ஒரு அருளடையாளமாகும்
- திருமண பிணைப்பு என்றுமே பிரிக்கப்படாத ஒன்று
- மீட்பின் செயலில் இறைவனோடு மனிதனும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்
- மீட்பு நம்பிக்கையினால் மட்டுமல்ல, அதன் பலனாகிய நற்செயல்களும் அவசியம்.

**திரிதெந்தின் பொதுச்சங்கம் முன்வைத்த மறுமலர்ச்சித் திட்டங்கள்.**

- பரிபூரண பலன் பற்றிய போதனை முறையை நீக்குதல்
- மரியன்னை, புனிதர்களுக்குத் தகுந்த முறையில் வணக்கம் செலுத்த ஊக்குவித்தல்.
- குருத்துவ பயிற்சிக்காக ஒவ்வொரு மறைமாவட்டங்களிலும் குருமடங்களை நிறுவுதல்.
- நற்கருணை பெறுவதற்கு ஊக்குவித்தல்
- அடிக்கடி ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதற்கு ஊக்குவித்தல்.
- நற்கருணை ஆராதனையையும் நற்கருணை ஆசீரையும் பெறுவதற்கு ஊக்குவித்தல் திருச்சபையின் மறைப் போதகர்களுக்காக "திரித்தெந்தின் மறைக்கல்வி" என்னும் நூல் 1566ல் திருத்தந்தை 5ம் பயஸ் அவர்களினால் வெளியிடப்பட்டது.

**8.2.4 நவீன காலம் (1750 முதல்)**

**பிரன்சியப் புரட்சி (கி.பி 1789 – 1795)**

- பதினான்காம் லூயி அரசன் காலம் தொடக்கம் ஏகாதிபத்திய முடியரசு ஆட்சிமுறையே பிரான்சில் நடைபெற்று வந்தது. ஸ்டேட்ஸ் ஜெனரல் எனும் பிரான்ஸ் நாட்டுச் சட்டசபை 1614க்குப் பின் கூட்டப்படவில்லை.
- சாசனத்தை அரச கொள்ளைக்குப் பொருத்தமான முறையில் அமைத்துக்கொண்டனர். 1789ல் பிரான்சில் இவ்வாறு பலவீனமான நிலையே உருவாகி இருந்தது. அங்கிருந்த அதிகாரிகள் செயலற்றவர்களாக இருந்தனர்.
- நீண்ட காலமாகப் பிரான்சு பல யுத்தங்களைச் சந்தித்ததால் ஏற்பட்ட நட்டத்தைப் பின்பு வந்த அரசர்களால் ஈடுசெய்ய முடியவில்லை.
- நீண்ட காலமாக அரச மாளிகையில் இருந்த வீண் செலவுகளால், நட்டத்தை ஈடுசெய்ய முடியவில்லை. இழந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதும் கடினமானதாக இருந்தது.
- 1788ல் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. விவசாயிகள் மேல் சுமத்தப்பட்ட வரியின் பழு மேலோங்கியது. வரி வசூலிப்பதற்கு விதிமுறையொன்று இருக்கவில்லை. இந்நிலைமை ஏழை மக்களுக்கு மிகவும் அநீதியான செயலாக இருந்தது. இவ்வாறு ஏழை விவசாயிகளிடம் வசூலிக்கப்பட்ட வரிப் பணத்தில் அதிகமான தொகை நிதி சேமிப்புக்குப் பதிலாக அதை வசூலித்த அதிகாரிகள் உரிமையாக்கிக் கொண்டார்கள்.
- பெருந்தொகையான நிலங்களுக்கு உரிமையான பிரபுக்கள், மேல்மட்ட குருக்கள் வரி செலுத்துவதிலிருந்து விடுபட்டு விசேட வரப்பிரசாதம் பெற்ற பகுதியினராக வாழ்ந்தனர். ஏழை விவசாயிகள் துன்பப்பட்டனர். இக்காலத்தில் தோன்றிய மத்திய வகுப்புப் பிரபுக்களுக்கு இது சவாலாக இருந்தது.
- 1788ல் ஏற்பட்ட பொருளாதாரா நெருக்கடி, வேளாண்மை தவறியதால் ஏற்பட்ட பஞ்சம் இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் உணவின்றி மடிந்தனர். வாழ்க்கைப் பழுவைத் தாங்க முடியாத ஏழை மக்கள், தொழிலாளர் நாட்டின் நீதி முறை மாற்றப்பட வேண்டுமெனப் புரட்சி செய்தனர். சிலர் அடிமட்டக் குழுக்களும், பிரபுக்களும் அவர்களுடன் இணைந்து கொண்டனர்.

- நாட்டு மக்களின் விருப்பத்திற்கு அமையவே ஆளப்பட வேண்டுமென்ற ரூஸ்ஸோவின் கொள்கை அதற்கு உரமூட்டியது.
- வெறுமையான திறைசேரியால் நாட்டை சீர்ப்படுத்தவும், வரிப் பழுவை அதிகரிக்கவும் முடியவில்லை. அந்நிலைமையைச் சீராக்கவும் தீர்வு காண்பதற்கும் பிரான்ஸ் நாட்டில் சட்ட சபையான ''ஸ்டேட்ஸ் ஜெனரல் சபை'' (States General) கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதன் படி 1789.05.05ம் நாள் வெர்செயில்சில் நகரில் கூட்ப்பட்டது. அதில் புதிய அரசியல் சட்டத்தொகுப்பு உருவாக்கப்பட்டது.
- இச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளாத ஆயர்களையும் நூற்றுக்கனக்கான குருக்களையும் துன்புறுத்தினர். அப்போது ஆட்சியிலிருந்த XVI லூயி அரசன் (1793.1.21) சிரச் சேதம் செய்யப்பட்டார். குடியரசு மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஆயிரக்கனக்காகன பிரபுக்கள், குருக்கள், துறவியர் கொலை செய்யப்பட்டனர். பிரபுக்களும், நில உரிமையாளர்களும் நாடு கடத்தப்பட்டனர். ஏனையவர்கள் தமது பரம்பரை உரிமைகளைக் கைவிட்டனர். கி.பி 1793ல் கிறிஸ்தவத்தை அழிக்க வேண்டுமெனத் திட்டமிட்டுத் தொழில் விழா, அறிவு விழா, நற்செயல் விழா என்ற விழாக்களை நடாத்தி கிறிஸ்தவ திருநாட்களையும் ஞாயிறு தின ஆராதனையையும் தடை செய்தனர். பாரிஸில் புகழ் பெற்ற ஆலயத்தில் (நோட்ட டாம் பேராலயம்) ஸ்தாபிக்கப்பட்டிருந்த தேவ அன்னையின் பிரதான முதன்மையான சொரூபத்தை அப்புறப்படுத்தி ஆலய பீடத்தின் மேல் துர்நடத்தையுள்ள பெண்ணை நிறுத்தி இவள் தான் ''பகுத்தறிவின் கடவுள்' என வழிபட்டனர்.
- பிரான்சில் கிறிஸ்தவத்தின் முற்காலத்தை முற்றாக அழித்துவிடும் நோக்கத்துடள் கத்தோலிக்க நாட்காட்டியை நிராகரித்து அதற்குப் பதிலாக கூட்டரசு அமைக்க 1792 புரட்டாதி 22 நாள் தொடக்கம் ஆரம்பிக்கும் நாட்காட்டியும் பஞ்சாகமும் அமைக்கப்பட்டது. வார நாட்கள் ஏழிலிருந்து பத்தாக மாற்றப்பட்டு பத்தாம் நாள் ஞாயிறு தினம் ஓய்வு நாளாக்கப்பட்டது.
- கி.பி 1796ல் நெப்போலியன் போனப்பாட் பேரரசனாகிய பின் இத்தாலியைக் கைப்பற்றி திருத்தந்தை ஆறாம் பயஸ்சுடன் ஒப்பந்தம் செய்து திருச்சபைக்குச் சொந்தமான நாடுகள், நிலங்கள், விலையுயர்ந்த பல கைப்பிரதி நூல்கள், கலைப்பொருட்கள் அனைத்தையும் பெற்றுக் கொண்டான். ஆனால் 1798ல் உரோமையில் பிரான்சு நாட்டவர் ஒருவர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து நெப்போலியன் உரோமையை முற்றுகையிட்டு திருத்தந்தையின் உடைமைகளைச் சூறையாடி அவரை வாலன்சிற்கு நாடு கடத்தினான். அங்கு திருத்தந்தை ஆறாவது பயஸ் இறந்தார்.
- பின்பு திருச்சபையின் தலைவராக திருத்தந்தை ஏழாவது பியுஸ் 1800.03.14 நாள் பதவி ஏற்றார். மத பிரிவினர்களாலும், பலவித கொள்கைகளுடையவர்களாலும் நலிவுற்றிருந்த பிரான்சுக்கும் ஐரோப்பாவிற்கும் தேவையானது சமய அடித்தளம் என்பதை உணர்ந்த நெப்போலியன் திருத்தந்தை ஏழாவது பயஸ்சுடன் 1801.07.15 நாள் ஒப்பந்தம் செய்து திருச்சபையின் உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொடுத்தான். ஆலயங்கள் திறக்கப்பட்டன. துறவற சபைகள் தத்தம் பணிகளை மீண்டும் தொடங்கின. கத்தோலிக்க மதம் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டது. குருத்துவப் பயிற்சிக்கான குருத்துவக் கல்லூ ரிகள் ஆரம்பிக்கப்பட்ன. அநேக நிலையங்களை நடாத்துவதற்கான நிதியை அரசாங்கம் வழங்கியது.
- மீண்டும் நெப்போலியன் சர்வாதிகாரியாக மாறித் திருச்சபையைத் துன்புறுத்தத் தொடங்கினான் எனினும் திருத்தந்தை ஏழாவது பயஸ் துணிவுடன் நெப்போலியனை எதிர்த்து நின்று திருச்சபையைப் பாதுகாத்தார். எல்பா தீவில் சிறைப்பட்டிருந்த நெப்போலியன் அங்கிருந்து விடுதலையாகி பிரான்சுக்கு வந்தார். 1815.06.18 நாள் ஆங்கிலேயர் மற்றும் பிரான்சீய போர் வீரர்களோடு நடைபெற்ற போரில் நெப்போலியர் தோல்வியுற்றதால் புனித ஹெலேனா தீவுக்கு அனுப்பப்பட்டார். பின்னர் பிரான்சில் திருச்சபை சுதந்திரமாக வளரத் தொடங்கியது.

**8.2.5 பிரான்சியப் புரட்சியின் பின் திருச்சபையின் பங்களிப்பு**

**முதலாவது வத்திக்கான் பொதுச்சங்கம் (1869 – 1870)**

- லிபரல் வாதமும் இனவாதமும் மேலோங்கி இருந்தது. புரட்சிகரமான கருத்துக்கள் ஐரோப்பா முழுவதும் பரவி இருந்தது. திருச்சபைக்கும் அரசுக்குமிடையே இருந்த நல்லுறவு பிளவுபட்டிருந்தது. உரோமை இத்தாலியப் படை முற்றுகையிட ஆயத்தமாய் இருந்தது. உரோமையில் இவ்வாறான பின்னணியில் திருத்தந்தை ஒன்பதாவது பயஸ்சினால் 1868.06.29 நாள் முதலாவது வத்திக்கான் பொதுச்சங்கம் பிரகனப்படுத்தப்பட்டுத் திருத்தந்தையின் தலைமையில் 1869.12.08 நாள் உரோமை வத்திக்கான் நகரில் புனித பேதுரு பசிலிக்கா ஆலயத்தில் பொதுச்சங்கம் கூட்டப்பட்டது.

**இப்பொதுச் சங்கத்தின் முக்கிய நோக்கம்.**

- நம்பிக்கைக்கும் மதக்கோட்பாடுகளுக்கும் எதிராக எழுந்த பிழையான கருத்துக்களை மறுத்தல்
- மாறும் காலத்திற்குப் பொருத்தமான ஒழுக்க நியதிகளைத் தயாரித்தல்.
- கத்தோலிக்க திருச்சபையின் தன்மையையும், அடிப்படை உண்மைகளையும் விளக்கமாக விபரித்தல்.
- திருச்சபைக்கும் அரசுகளுக்குமிடையேயுள்ள உறவை விளக்குதல்.

**பொதுச்சங்கத்தின் தீர்மானங்கள்**

- திருச்சபையின் அடிப்படை உண்மைகள் இறைவன் உள்ளார் என்ற கோட்பாடு. இயற்கையும் இறைவனும் இறைவனின் வெளிப்பாடுகள், பகுத்தறிவிற்கும் இறை வெளிப்பாடுகளுக்குமிடையேயுள்ள தொடர்பு ஆகிய படிப்பினைகள் டேயி பீலியுஸ் (Dei Pilius) எனும் முதலாவது கொள்கைத் திரட்டில் அறிக்கையிடப்பட்டுள்ளது.
- திருத்தந்தை முழுத் திருச்சபையின் தலைவராகத் திருச்சபை ஏற்றுக்கொள்ள வேண்டிய நம்பிக்கை. மறைக்கோட்பாடுகள் பற்றிய உண்மையைப் பேசும் போது வழுவா வரத்துடன் பேசுகிறார் என ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1870.09.20ல் இத்தாலிய படையெடுப்புக்கள் உரோமையை முற்றுகையிட்டதால் திருச்சங்கம் இடைநிறுத்தப்பட்டது. பொதுச்சங்கத்தின் 51 கோட்பாடுகளை விவாதிக்க இருந்தாலும் 2 கோட்பாடுகள் மாத்திரமே விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**முக்கிய திருத்தந்தையர்கள் (கி.பி 1878 – 1963)**

**திருத்தந்தை பதின் மூன்றாம் சிங்கராயர் (Pope Leo xiii) (கி.பி 1878 -1903)**

- 19ம் நூற்றாண்டின் கடைசித் திருத்தந்தையாக இவர் 25 வருடங்கள் திருச்சபையை ஆட்சி செய்தார்.
- எல்லா ஞாயிறு தினங்களிலும் திருப்பலியின் போது மறையுரை நிகழ்த்த வேண்டுமென குருக்களுக்குக் கட்டளையிட்டார்.
- பிள்ளைகளுக்கான புதிய திருமறை நூலொன்றை எழுதினார்.
- குருக்கள் நடைமுறைப்படுத்தக் கூடிய சட்டக்கோவை ஒன்றைத் தயார் செய்து அதில் நாளாந்த செபமும், தியானமும் பற்றி விசேடமாகக் குறிப்பிட்டார்.
- பங்கில் தியானம், பெரிய ஞான ஒடுக்கம் ஆகியன நடாத்துவதற்குக் குருக்களை ஊக்கப்படுத்தினார்.
- அவர் ஆயராக இருக்கும் காலத்தில் 36 புதிய ஆலயங்களை அமைத்தார்.
- ரூசியாவிலும் ஸ்விஸ்டர்லாந்திலும் சமாதானத்தை ஏற்படுத்தினார்.

- இந்தியாவிலும் மூன்று மறைமாவட்டங்களை நிறுவினார்.
- வத்திக்கான் நூலகத்தைப் பொதுமக்கள் பார்வையிட அனுமதித்து வத்திகானில் புதிதாக காலநிலை ஆய்வு கூடமொன்றை நிறுவினார்.
- கி.பி 1902ல் திருவிவிலிய ஆணைக் குழுவை நிறுவினார்.
- அவர் எழுதிய சுற்றுமடல்களுள் சமூக நலனை முன்னிட்டு எழுதிய "தொழிலாளர் சாசனம்" என்றழைக்கப்படும் "றேரும் நோவாறும்" (Rerum Novarum) எனும் சுற்றுமடல் மிக உயர்ந்த இடத்தை வகிக்கிறது.
- இத்தாலியில் கத்தோலிக்க செயற்பாடுகளை ஆரம்பித்தார்.
- இலங்கையில் கொழும்பு, கண்டி, திருகோணமலை, காலி என்பன மறைமாவட்டங்களாக நிறுவியதோடு கொழும்பை உயர் மறைமாவட்டமாக உயர்த்தினார்.
- கிழக்கிந்திய நாடுகளுக்காக சுதேசிய குருக்களை உருவாக்க 1893.05.03 ல் அம்பிட்டியில் குருத்துவக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்தார்.
- இலங்கை, இந்தியாவிற்காக கி.பி 1894.09.23 நாள் தூதுவர் சேவையொன்றை ஆரம்பித்தார்.

**திருத்தந்தை 10ம் பத்தினாதர் (கி.பி 1903-1914)**

- அறிவிலும் ஆன்மீகத்திலும் சிறந்த திருத்தந்தையான இவர் சிறுவர், இளைஞர் மட்டில் கவனம் செலுத்தினார்.
- புத்தி விபரம் அறிந்த வயதில் முதல் நன்மை பெறுவதற்குச் சிறுவர்களை ஆயத்தம் செய்யுமாறு அறிவித்தார்.
- அடிக்கடி தினந்தோறும் நற்கருணையைப் பெறுவதற்கு விசுவாசிகளை ஊக்குவித்தார்.
- திருவழிபாட்டில் பலவித சீர்த்திருத்தங்களைச் செய்தார்.
- குருத்துவப் பயிற்சி பற்றிக் கூடிய கவனம் எடுத்தார்.

**திருத்தந்தை 11ம் பத்தினாதர். (கி.பி 1922 – 1939)**

- இவரின் காலத்தில் இத்தாலியில் பெனிட்டோ முசலோனி ஆட்சி செய்தான்.
- இத்தாலியில் பாசிசக் கொள்கைக்கு முகங் கொடுத்துத் திருச்சபையைப் பாதுகாக்க வேண்டியிருந்தது.
- திருச்சபையின் பாரம்பரிய உரிமைகளை அரசிடம் கையளிக்கத் திருத்தந்தை விரும்பவில்லை ஒரு சுதந்திர எல்லையில் சுதந்திரமாக ஆட்சி செய்வதே திருச்சபையின் உண்மையான சுதந்திரமென்றார்.
- திருத்தந்தையின் இக்கோட்பாட்டை ஏற்றுக்கொண்டதன் விளைவாக இத்தாலிய அரசுக்கும் திருத்தந்தைக்குமிடையே கி.பி 1929.02.11 நாள் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. இவ் ஒப்பந்தம் இலாத்திரன் ஒப்பந்தமென அழைக்கப்படுகின்றது.
- இலாத்தரன் ஒப்பந்தத்தின்படி வத்திக்கான் ஒரு தனிநாடாகவும், நடுநிலை நாடாகவும், அதன் ஆட்சியாளர் திருத்தந்தை எனவும் அறிவிக்கப்பட்டது
- பொது நிலையினரின் மறைத்தூதுப்பணியை முன்னேற்றுவதற்குச் செயற்பட்ட அவர் பொதுநிலையினர் பற்றி பலவித அறிவுரை மடல்களை எழுதினார்.
- "றேரும் நோவாறும்' என்ற சுற்றுமடலின் 40வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்கு இவர் குவாத்திர ஜெசிமோ ஆனோ (Quadragesimo Anno) என்ற சுற்றுமடலை வெளியிட்டார்.
- இத்தாலிய பாடசாலைகளில் மறைக்கல்வி போதிக்கப்பட வேண்டுமென்று அறிவித்தார்.
- இளைஞர்களுக்குக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பது திருச்சபையின் உரிமையும்

கடமையுமாகும் எனக் கூறிய இவர் நல்ல கத்தோலிக்கரையும் நல்ல குடிமக்களையும் உருவாக்கக் கத்தோலிக்கப் பாடசாலைகளில் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதன் முக்கியத்துவத்தை விளக்கி ''இளைஞரின் கிறிஸ்தவக் கல்வி'' என்ற சுற்றுமடலை 31.12.1929ல் வெளியிட்டார்.

- கத்ரோதலிக்கர் ஜெர்மனியில் உரிமையுடன் வாழ வேண்டுமென திருத்தந்தை 1933ல் ஹிட்லருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்.
- கிறிஸ்து அரசர் பெருவிழா கத்தோலிக்க திருச்சபையில் எங்கும் கொண்டாடப்பட வேண்டுமெனப் பிரகடனம் செய்தார்.

**திருத்தந்தை 12ம் பத்தினாதர் (கி.பி 1939 – 1958)**

- மொழியில் பேர்பெற்றவரும் உயர் பண்டிதருமான இவர் உயர்ந்த ஆன்மீக தன்மையுடையவராவார்.
- இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது உலகில் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி செய்தார்.
- தேவதாய் ஆன்ம சரீரத்துடன் பரலோகத்திற்கு ஆரோகணமானார் என்ற திருச்சபையின் நம்பிக்கையை விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்தார்.
- திருச்சபை பற்றிய ''கிறிஸ்துவின் மறை உடல்'' என்ற சுற்றுமடலை வெளியிட்டார்.
- பொது நிலையினரின் மறைத்தூதுப் பணி பற்றி அதீத கவனம் எடுத்தார்.
- 1943ல் வெளியிட்ட ''டிவிகோ அவிலான்றே ஸ்பிரிற்று'' என்ற சுற்று மடலில் விவிலிய செய்திகளை விஞ்ஞான நோக்குடன் ஆராய்ச்சி செய்வதற்கு ஊக்குவித்தார்.

**திருத்தந்தை 23ம் அருளப்பர் (கி.பி 1958 – 1963)**

- கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஒரு தனிச் செயலகத்தை ஏற்படுத்தினார்.
- கிறிஸ்தவ ஒன்றிப்பு என்ற இயக்கத்தின் முன்னோடியாய்த் திகழ்ந்தார்.
- உலக சமாதானதிற்காக உழைத்தார்.
- அவரின் கலந்துரையாடல் கொள்கை திருச்சபைக்கும் பிரிவினைச் சபைகளுக்கும் இடையிலான பிணக்குகளைத் தீர்த்து வைக்க உதவின.
- ''அன்னையும் ஆசிரியையும்'' (Mater Et Magistra) ''அவனியில் அமைதி'' (Pacem in Terris) எனும் சுற்றுமடலகளை எழுதினார்.
- அன்னையும் ஆசிரியையும்- மனித மாண்பு மதிக்கபட வேண்டுமென்றும், ஏழைகள் பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு மறைய வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.
- அவனியில் அமைதி தனி மனித மாண்பையும் சுதந்திரத்தையும் வலியுறுத்தி நல்ல மனிதர்கள் ஒருங்கிணைந்தால் சமாதான சமூகம் உருவாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம்**

- இருபதாம் நூற்றாண்டில் உலகில் விஞ்ஞானம் தொழில் நுட்ப வளர்ச்சிக்கான பாரிய அபிவிருத்தியைப் போல முன்னேற்றமும் ஏற்பட்டது. உலகம் வேகமாக முன்னோக்கிச் சென்றது. ஆனால் திருச்சபை பாராம்பரியம் எனும் வட்டத்தினுள் சிக்குண்டு காணப்பட்டது. திருச்சபையைக் காலத்திற்கேற்ப மறுசீரமைத்து அதற்குப் புத்துயிர் வழங்கிப் புதியதொரு சிந்தனையை அளித்து, ஆழமான பொருள் நிறைந்த விதத்தில் அது இவ்வுலகில் பணியாற்றிட வழிவகுக்கும் என்ற நோக்கம் திருத்தந்தை 23ம் அருளப்பருக்கு ஏற்பட்டது.
- திருத்தந்தையின் வழிநடத்தலின் கீழ் திருச்சபைக்குப் புத்துயிர் கொடுக்கும் நோக்குடன் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் கூட்டப்பட்டது. பல கிறிஸ்தவச் சபைகளுக்கிடையே

ஏற்பட்டிருந்த சந்தேகம், அவநம்பிக்கையைப் போக்கிச் சபைகளுக்கிடையே உறவை ஏற்படுத்தல் அவசியம் என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். ஒரே இறைவன் ஒரே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட மக்கள் என்பதால் அவர்கள் ஒன்றாய் செபிக்கவும் சமூக முன்னேற்றத்துக்காக ஒன்றாய் உழைக்கவும் அனுமதிப்பது அவசியம் என்பதை உணர்ந்து கொண்டார்.

- இக்காரணங்கள் முழுத் திருச்சபையின் கலந்துரையாடலுக்கும் அவதானத்திற்கும் எடுக்கப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்தத் திருத்தந்தை 23ம் அருளப்பர் தலைமையயில் 1962.10.11ல் இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூட்டப்பட்து. இதில் வேறு கிறிஸ்தவ சபை உறுப்பினரும் மேற்பார்வையாளராகக் கலந்து கொண்டனர். திருத்தந்தை 23ம் அருளப்பர் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தை ஆரம்பித்தாலும் திருத்தந்தை 6ம் சின்னப்பரால் 1965.12.08ல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.
- இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகள் அடங்கிய 16 வெளியீடுகள் வெளியிடப்பட்டன. அவற்றை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன
    - கோட்பாடுகள்
    - விதித் தொகுப்புக்கள்
    - அறிக்கைகள்

**கோட்பாடுகள் நான்காகும்.**

1. திருவழிபாடு பற்றிய கொள்கை விளக்கம்
2. திருச்சபை பற்றிய கோட்பாடு விளக்கம்
3. இறைவெளிப்பாடு பற்றிய கோட்பாட்டு விளக்கம்.
4. இன்றைய உலகில் திருச்சபை பற்றிய அருள்பணிக் கோட்பாட்டு விளக்கம்.

**விதிக் தொகுப்புகள் ஒன்பதாகும்**

1. சமூகத் தொடர்புகள் கருவிகள் பற்றிய விதித் தெகுப்பு
2. கத்தோவிக்க கீழைச் சபைகள் பற்றிய விதித்தொகுப்பு
3. கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிய விதித்தொகுப்பு
4. திருச்சபை ஆயர்களின் அருள்பணி பற்றிய விதித் தொகுப்பு
5. துறவற வாழ்வைப் புதுப்பித்தல் பற்றிய விதித் தொகுப்பு
6. திருப்பணிப் பயிற்சி பற்றிய விதித் தொகுப்பு
7. பொது நிலையினரின் திருத்தூதுப்பணி பற்றிய விதித்தொகுப்பு
8. திருச்சபையின் நற்செய்திப் பணி பற்றிய விதித்தொகுப்பு
9. திருப்பணியாளர்களின் பணியும் வாழ்வும் பற்றிய விதித்தொகுப்பு.

**அறிக்கைகள் மூன்றாகும்**

1. கிறிஸ்தவ கல்வி பற்றிய அறிக்கை
2. கிறிஸ்தவமல்லாச் சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு பற்றிய அறிக்கை
3. சமயச் சுதந்திரம் பற்றிய அறிக்கை

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் தீர்மானங்களும் கட்டளைகளும் முதலாவதாகப் பெரும் தாக்கத்தைத் திருவழிபாட்டில் ஏற்படுத்தியது.

**கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.**

- 16ம் நூற்றாண்டில் திருச்சபையின் சீர்த்திருத்தத்தை நோக்காகக் கொண்டு நிறுவப்பட்ட துறவர சபைகள் நான்கினை பெயரிடுக.

- திருத்தெந்தின் பொதுச்சங்கத்தில் முன்வைத்த ஐந்து தீர்மாணங்களையும் ஐந்து மறுமலர்ச்சி திட்டங்களையும் எழுதுக.
- 2ம் வத்திக்கான் சங்க படிப்பினைகள் அடங்கிய 16 வெளியீடுகளை ஆக்கப்பூர்வமாக முன்வைக்கவும்.

**உசாத் துணை நூல்கள்.**


1. பர்னாந்து, ஜெ. ஏ. நூத்தன கத்தோலிக்க சபாவ, வரையறுக்கப்பட்ட எம்.டீ குனசேன நிறுவனம், கொழும்பு 13, 1970.
2. தசனாயக, யூட் (அருட்தந்தை), ஸ்ரீ லங்கா கத்தோலிக்க சபா இத்தியாசய ஹ பெந்துனு ரதகுரு பதவி ஹ பெவிதி நிக்காயன் (1505-2013), கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 8, 2013.
3. தோமஸ் பீ.டீ (அருட்தந்தை), சுத்தோத்தம பியவருன் பிலிபந்த சங்சிப்த இத்தியாச பரிவர்தனய, அருட்சகோதரர், டி. ஜெ பிரிலி முத்துகுட ஆரச்சி, புபுது அச்சகம், றாகம, 1997.

**தேர்ச்சி 9:0** : **இலங்கையில் கிறிஸ்தவ தனித்துவத்தின் மூலம் நற்செய்தியின் பணியாளராகச் சான்று பகர்வார்.** :

**தேர்ச்சி மட்டம் 9:1** : **போரத்துகேயரின் வருகைக்கு முன் இலங்கையில் கிறிஸ்தவ மதம் பின்பற்றப்பட்டு வந்தமைக்கான ஆதாரங்களைத் தேடிப்பார்ப்பார்.**

**பாடவேளைகள்** : **10**

**கற்றல் பேறுகள்:**

- இலங்கைத் திருச்சபை வரலாறு தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.
- இலங்கையில் கத்தோலிக்க தனித்துவத்தினைப் பாதுகாக்க வேண்டும் என்பதனை ஏற்றுக்கொள்வார்.
- இலங்கைத் திருச்சபை வரலாறு தொடர்பான தகவல்களைச் சேகரித்து ஆக்கமாக முன்வைப்பார்.
- பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்துக் கத்தோலிக்க நம்பிக்கையைப் பாதுகாப்பார்.
- தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப உதவி புரிவார்.

### 9.1.1 அறிமுகம்

- இலங்கைத் திருச்சபையின் வரலாறு என்பது கிறிஸ்தவ மறை இலங்கையில் ஆரம்பமாகி வளர்ச்சிபெற்று இன்றுவரை வந்த பயணத்தைப் பற்றிய வரலாற்று விளக்கமாகும். இந்நாட்டில் திருச்சபை அரசியல், சமய, சமூக, கலாசாரம் எனும் சிறு பாதைகளின் வழியாகத் தடைகளையும் சவால்களையும் கடந்து இறை திட்டத்தின்படி பயணம் செய்த விதத்தினை இவ்வரலாற்றின் வழியாக நாம் அறிந்து கொள்ளலாம்.

**இலங்கைத் திருச்சபை வரலாற்றினைக் கற்பதன் முக்கியத்துவம்**

- இலங்கைத் திருச்சபையின் ஆரம்பத்தையும் அடையாளத்தையும் பற்றிய சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- திருச்சபையின் வரலாற்றிலே இறைவனுடைய மத்தியஸ்தத்தையும் செயற்பாட்டினையும் விளங்கி எமது நம்பிக்கை வாழ்வினைச் சக்திபெறச் செய்தல்.
- இந்நாட்டுத் திருச்சபையினைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்தவர்களைப் பாராட்டுவதோடு அவர்களது முன்மாதிரிகைகளுக்கேற்ப ஒழுகிச் சபையின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்போடு பணியாற்றச் சக்தியைப் பெறுதல்.
- சபையின் கடந்தகால வரலாற்றினைப் பார்த்து அதற்கேற்ப நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தகுந்த முறையில் ஒழுங்குபடுத்தல்.

**இலங்கைத் திருச்சபை வரலாற்றின் பிரதான காலகட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | போர்த்துக்கேயரின் வருகைக்கு முற்பட்ட காலம் | கி.பி 1505 க்கு முன் |
| 2. | போர்த்துக்கேயர் காலம் | கி.பி 1505 - 1658 |
| 3. | ஒல்லாந்தர் காலம் | கி.பி 1658 – 1796 |
| 4. | ஆங்கிலேயர் காலம் | கி.பி 1796 – 1948 |
| 5. | சுதந்திர காலம் | கி.பி 1948 ற்குப் பின் |

### 9.1.2 போர்த்துக்கேயரின் வருகைக்கு முற்பட்ட காலத்தில் கிறிஸ்தவம்

- இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையைப் பற்றி எழுதப்பட்ட வரலாறு 16ம் நூற்றாண்டில் ஆரம்பமானது. அதாவது கி.பி 1505ல் போர்த்துக்கேயரின் வருகையுடன் ஆரம்பமானது.

எனினும் இந்நாட்டில் கிறிஸ்தவ நம்பிக்கையின் உரிமை இதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே வந்ததென்பதைக் கூறவேண்டும். போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னர் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்துள்ளார்கள் என்பதற்கான சான்றுகள் பல உள்ளன.

**போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னர் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்துள்ளார்கள் என்பதற்கான சான்றுகள்**

**1. கொஸ்மஸ் இன்டிக்கோ என்னும் உல்லாசப் பயணியின் சான்று**

கி.பி 6ம் நூற்றாண்டில் அலக்சாந்திரியாவைச் சேர்ந்த கிரேக்க வர்த்தகரான இவர் இந்து சமுத்திரத்தில் உள்ள நாடுகளில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த போது அந்நாடுகளில் கிறிஸ்தவமதம் எவ்வாறு செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதைப் பற்றி அறிந்துகொண்ட விபரங்களைப் பின்னர் நூல் ஒன்றின் வடிவாக எழுதினார். அந்நூல் ஆங்கிலத்தில் The Christian Topography என அழைக்கப்படுகிறது. இதன்படி பாரசீகத்திலிருந்து கிறிஸ்தவ பக்தர் குழு ஒன்று இலங்கைக்கு வருகை தந்திருந்ததாகவும் அவர்களுள் குரு ஒருவரும் திருத்தொண்டர் ஒருவரும் இருந்தனர் எனவும் இறை ஆராதனைக்குரிய பொருட்கள் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2. அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்லில் பொறிக்கப்பட்ட சிலுவை**

கி.பி 1912ம் ஆண்டளவில் தொல்பொருள் ஆய்வுகளின்போது E. R. அயட்டன் என்ற தொல்பொருள் ஆய்வாளரினால் கல்லில் பொறிக்கப்பட்ட சிலுவை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது பாரசீக கிறிஸ்தவர்களுக்குச் சொந்தமானது என்பது இவரின் கருத்தாகும். அவ்வாறெனில் இது கொஸ்மஸ் குறிப்பிட்டிருந்த கிறிஸ்தவர்களாகவும் இருக்கலாம் என நம்பப்படுகிறது. எனினும் புராதன கருத்தின்படி இது திருத்தூதரான தூய தோமாவின் சீடருக்குச் சொந்தமானது என நம்பப்படுகிறது.

அநுராதபுர காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் படைவீரர்களாகவும் வர்த்தகத்தின் பொருட்டும் வருகைதந்தவர்களேயொழிய மறைபரப்பின் பொருட்டு இங்கு வருகை தரவில்லை. இவர்கள் வர்த்தகத்தின் பொருட்டு இலங்கைக்கு வந்த நெஸ்தோரிய கிறிஸ்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சிலுவை தென்னிந்திய ஆலயங்களில் காணப்படுகின்றது. சிலுவையின் நான்கு மூலைகளிலும் பூ வடிவம் போன்று காணப்படுகின்றது. தென்னிந்தியாவில் புனித தோமாவைப் பின்பற்றிய கிறிஸ்தவர்கள் பயன்படுத்திய சிலுவையும் இது போன்றதே. கொழும்பு ஜிந்துப்பிட்டியில் இவ்வாறான சிலுவை ஒன்றுடன் கூடிய கோபுரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**3. சிகிரிய காலத்தில் வாழ்ந்த மிகார சேனாதிபதி**

இலங்கையின் தொல்பொருள் ஆய்வாளாரான செனரத் பரணவிதாரண அவர்கள் கி.பி 5-7 அநுராதபுர இராட்சியத்தில் கிறிஸ்தவர்களின் ஆதிக்கம் இருந்தமைக்கான சான்றாக 'சிகிரியா என்னும் மூலவம்சத்தில்' இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். காசியப்பனுக்கும் (கி.பி 473 – 491) முகலனுக்கும் (கி.பி 491 – 508) பணியாற்றுவதற்காக தென்னிந்தியாவிலிருந்து வருகைதந்த படைவீரர்கள் இந்திய கிறிஸ்தவர்கள் ஆவர். மிகார சேனாதிபதியின் தலைமையின் கீழ் இங்கு வருகை தந்த இவர்கள் கிறிஸ்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் மிகாரவினால் 'அபிஷேக மக்களுக்காக' ஆலயம் ஒன்று கட்டப்பட்டு அதனை அர்ப்பணிப்பதற்காகக் கொண்டாட்டம் ஒன்றினை நடாத்தியதாகவும் சூல வம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. செனரத் பரணவிதாரணவின் கருத்துப்படி இங்கு 'அபிஷேக மக்கள்' எனக் குறிப்பிடப்பட்டவர் இயேசு கிறிஸ்து ஆவார். எனவே சிகிரியா காலத்தில் இந்நாட்டில் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்பதற்கு இது ஒரு முக்கிய சான்றாகும். முகலன் அரசனின் காலத்தில் கிறிஸ்தவ அடையாளங்கள் பொறிக்கப்பட்ட தங்க நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**4. திருத்தூதர் தூய தோமாவைப் பின்பற்றி வாழ்ந்த கிறிஸ்தவர்கள் இந்நாட்டில் இருந்தமைக்கான சான்று**

புனித தோமா இந்தியாவின் மலபார் துறைமுகத்திலிருந்து இலங்கைக்கும் மலாக்காவுக்கும் சென்றிருந்தார் என்பது மலபார் மக்களின் கருத்தாகும். இருப்பினும் கி.பி 52இல் புனித தோமா இந்தியாவிற்கு வருகை தந்து மறைபரப்புப் பணியில் ஈடுபட்டார் என்பதற்கான சான்றுகள் உள்ளன. அவரைப் பின்பற்றிய கிறிஸ்தவ விசுவாசிகள் குழு ஒன்று போர்த்துக்கேயர்கள் வருகைக்கு முன் இந்தியாவில் இருந்தார்கள் எனவும் அவர்களில் சிலர் பல்வேறு தேவைகள் காரணமாக இலங்கைக்கு வந்தார்கள் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. இது போர்த்துக்கேயர்கள் வருகைக்கு முன் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்தமைக்கான சான்றாகும்.

**5. அபுசைதோவின் குறிப்பு (கி.பி 911)**

இலங்கையில் அக்கால அரச சபையில் 4 கிறிஸ்தவர்கள் பணியாற்றியுள்ளமை

**6. பெஞ்ஜமின் றபாயின் குறிப்பு**

12ம் நூற்றாண்டில் இலங்கையில் குருக்களும் யூதக்கிறிஸ்தவர்கள் 2300 பேரும் ஆலயங்களும் இருந்தன.

**கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.**

- இலங்கை திருச்சபை வரலாற்றின் பிரதான காலகட்டங்களை பெரிட்டு அவற்றுக்குரிய ஆண்டுகளையும் எழுதுக.
- போத்துகேயரின் வருகைக்கு முற்பட்ட காலத்தில் கிறிஸ்தவம் இருந்தமைக்கான ஆறு சான்றுகளை எழுதுக.
- இளைஞராகிய நீர் முகங்கொடுக்கும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கத்தோலிக்க நம்பிக்கையை பாதுகாக்கும் முறையினை எழுதுக.

**உசாத்துணை நூல்கள்**


1. ஜே.டீ. பர்னாந்து, நவீன கத்தோலிக்க திருச்சபை, எம்.டீ. குணசேன புத்தகசாலை, கொழும்பு 11, 1970
2. யூட் தசாநாயக்க (அருட்தந்தை ஸ்ரீ லுங்கா கத்தோலிக்க மற்றும் இத்திகாசய (1505-2013) இலங்கை கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08, 2-13.
3. தோமஸ் பீ.டீ. (அருட்தந்தை), சுத்தோத்தம பியவருன் பிலிவந்த சங்கிறீஸ்த இத்திகாசய பரிவர்தனை, பீ.டீ. முத்துகுட சகோதரர், புவுது அச்சகம், றாகம, 1977.

**தேர்ச்சி 9:0** : **இலங்கையில் கிறிஸ்தவ தனித்துவத்தின் மூலம் நற்செய்தியின் பணியாளராகச் சான்று பகர்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9:2** : **இலங்கைத் திருச்சபையின் வரலாற்றின் வழி மறைத்தூதுவராகப் பணியாற்றுவார்.**

**பாடவேளைகன்** : **20**

**கற்றல் பேறுகள் :**

- போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க மறை தொடர்பான தகவல்களைக் கோவைப் படுத்துவார்.
- போர்த்துக்கேயர் காலத்து மறைத் தூதுவர்களின் சேவையினைப் பாராட்டுவார்.
- போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க மறை தொடர்பாகச் சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- கத்தோலிக்க தனித்துவத்தினைப் பாதுகாக்க ஒத்துழைப்பார்.
- மறைத்தூதுப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

**அறிமுகம்**

## 9.2.1 போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் கிறிஸ்தவ மதம் (கி.பி 1505 – 1657)

### 9.2.1.1. போர்த்துக்கேயர் கீழைத்தேய நாடுகளுக்கு வருகைதரல்

- 15ம் 16ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் ஒரு அங்கமாக நாடுகாண் பயணங்கள் அமைந்திருந்தன. போர்த்துக்கேயர் அநேக வருடங்களாக எல்லா இடங்களிலும் அலைந்து இறுதியில் ஆபிரிக்காவின் கேப் முனையைக் கடந்து கிழக்கு ஆபிரிக்காவின் கடற்கரைத் துறைமுகத்தை வந்தடைந்தனர். இம்முயற்சியின் பயனாக வாஸ்கோடகாமா இந்தியாவிற்குச் செல்லும் கடல் மார்க்கத்தைக் கண்டறிந்ததோடு கீழைத்தேய நாடுகளுடனான வர்த்தகமும் ஆரம்பமாயிற்று. போர்த்துக்கேயர் இந்தியாவின் கோவா நகரத்தைக் கீழைத்தேய வர்த்தக மையமாகக் கொண்டனர்.
- முஸ்லிம்களிடமிருந்த வர்த்தக ஏகபோக உரிமையைக் தமதாக்கிக்கொள்வது போர்த்துக்கேயர் கீழைத்தேய நாடுகளுக்கு வருகைதந்தமைக்கான மற்றுமொரு காரணமாகும்.
- போர்த்துக்கேயர் கீழைத்தேய நாடுகளுக்கு வருவதற்கு பிறிதொரு காரணம் மறையைப் பரப்புவது ஆகும். பத்றோஆடோ திட்டம் இவர்களைத் தூண்டியது.

### பத்றோஆடோ (Padroado) திட்டம்

- போர்த்துக்கல்லும் ஸ்பெயினும் தாம் கைப்பற்றிய நாடுகளில் கிறிஸ்தவ மறையைப் பரப்புவதற்காகத் திருச்சபையினால் அனுமதி வழங்கி செய்துகொள்ளப்பட்ட திட்டமே பத்றோஆடோ திட்டம் எனப்பட்டது. கி.பி 1493 – 05 – 04 அன்று திருத்தந்தை 6ம் அலக்சாண்டர் கத்தோலிக்க மறையைப் பரப்புவதற்காக ஐரோப்பிய மேற்கத்தைய நாடுகளுக்கு ஸ்பெயினையும் கீழைத்தேய நாடுகளுக்கு போர்த்துக்கல்லையும் நியமித்து அனுமதி வழங்கினார். இதுவே பத்றோஆடோ திட்டம் ஆகும். போர்த்துக்கேயர் இந்து சமுத்திரத்தில் நுழைவதற்கு முன்னரே இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் மறையைப் பரப்புவதற்கு உரிய அதிகாரம் உரோமைத் திருச்சபையினால் வழங்கப்பட்டிருந்தது.

### பத்றோஆடோ திட்டம் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்கள்

- அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளுக்கு மறைத்தூதுவர்களை அனுப்புதல்
- அவர்களைப் பாதுகாத்தல்
- பண உதவி வழங்குதல்
- ஆலயங்களையும் துறவற மடங்களையும் கட்டுதலும் அவற்றைப் பேணுதலும்
- மறைபரப்பு, கல்வி, இரக்கப்பணிகள் என்பவற்றுக்காக அடித்தளமிடுதலும் உதவி வழங்குதலும்

**லோறன்சோ த அல்மெய்டா இலங்கைத் தீவில் வந்திறங்குதல்**

- பிரான்சிஸ்கோ த அல்மெய்டா கீழைத்தேய போர்த்துக்கேய அரசின் ஆளுனராக இருந்த காலத்தில் இந்து சமுத்திரத்தில் மாலைதீவுக் கடற்பரப்பில் பயணம் செய்த கப்பல்களைப் கைப்பற்றும் முகமாக போர்த்துக்கேய கப்பலில் குழு ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக பிரான்சிஸ்கோ த அல்மெய்டாவின் மகன் லோறன்சோ த அல்மெய்டா இருந்தார். அவர்களின் மறைச் செயற்பாடுகளுக்காக பிரான்சிஸ்கன் சபை விசென்ற் என்ற குருவானவர் இருந்தார். இக்கப்பல் மாலைதீவை நோக்கிச் செல்வதை நோக்காகக் கொண்டபோதும் புயற்காற்றில் சிக்கியதால் எதிர்பாராதவிதமாக காலித் துறைமுகத்தை வந்தடைந்தது. தாம் வந்தடைந்தது இலங்கைத் தீவென அறிந்துகொண்ட இவர்கள் வடதிசைநோக்கிப் பயணம் செய்து 1505 – 11 – 15 அன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தனர்.
- பின்னர் அப்போதிருந்த கோட்டை அரசனாகிய 9ம் தர்மபராக்கிரமபாகுவிடம் அனுமதிபெற்று வர்த்தகப் பண்டகசாலை ஒன்றைக் கொழும்பில் அமைத்தனர். (1518) அதனருகில் சிறிய தேவாலயம் ஒன்றைக்கட்டி லோறன்சோ த அல்மெய்டா என்ற பெயர்கொண்ட புனிதரான லோறன்சியாரின் பெயருக்கு அதனை அர்ப்பணித்தனர். கப்பலில் வந்த அருட்தந்தை விசென்ற் அடிகளாரால் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இது போர்த்துக்கேயரின் வருகையின் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற முதலாவது திருப்பலி ஆகும். இது இலத்தீன் மொழியில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

**மறைத்தூதுவர்களின் இலங்கை வருகை**

- கி.பி 1521 விஜயபாகு கொள்கையின் பின்னர் 6ம் விஜயபாகுவின் புதல்வர்கள் மூவர் மத்தியிலும் பகிரப்பட்டது.
  1. மூத்தவனான 7ம் புவனேகபாகு – கோட்டை
  2. மத்தும பண்டார – றைகம
  3. இளையவனான மாயாதுன்னை – சீதாவக்கைக்கும்

  அரசர்களாயினர். கோட்டை அரசனான புவனேகபாகு சீதாவக்கை அரசனான மாயாதுன்னையிடமிருந்து தனது இராச்சியத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காகப் போர்த்துக்கேயரின் உதவியை நாடினான். அரச தூதுவரான சேலப்பு ஆராய்ச்சி போர்த்துக்கலில் லிஸ்பன் நகரை அடைந்து நான்கு கோரிக்கைகள் அடங்கிய விண்ணப்பத்தை முன்வைத்தான்.

  1. தனக்குப்பின் தனது பேரப்பிள்ளையான தர்மபாலாவுக்கு இராச்சியத்தை ஒப்படைக்க வேண்டும் எனவும்
  2. இதற்கு அடையாளமாக தான் அனுப்புகின்ற தர்மபாலாவின் தங்கச்சிலைக்கு முடிசூட்டவேண்டும் எனவும்
  3. தன்னையும் இளவரசன் தர்மபாலாவையும் பாதுகாக்க வேண்டும் எனவும்
  4. கத்தோலிக்க மதத்தைப் பரப்ப மறைத்தூதுவர்களை அனுப்பவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.
- தர்மபாலா இளவரசன் போர்த்துக்கல் மன்னர் 3ம் ஜோர்ச்சினால் கோட்டை அரசனாகப் பிரகடனப்படுத்தப்பட்டுத் தர்மபாலாவின் சிலைக்கு முடிசூட்டப்பட்டது. புவனேகபாகு மன்னனின் வேண்டுகோளின்படி கத்தோலிக்க மறைபரப்புப் பணியின்பொருட்டு 1543ல் ஜோண் த சில்வா த கொன்தே அடிகளாரின் தலைமையில் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த ஐவர் அடங்கிய குழு ஒன்று இலங்கைக்கு வருகை தந்தது.
  - அருட்பணி ஜோண் த விலா டீ கொன்தே அடிகளார்
  - அருட்பணி அந்தோனியோ பத்ராம் அடிகளார்
  - அருட்பணி பிரான்சிஸ்கோ டீ மொண்டிதே டீ பிரான்தோனே அடிகளார்
  - அருட்பணி சீமான் டீ கொயம்ரா அடிகளார்

- அருட்பணி கொன்சாலோ அடிகளார்

- புவனேகபாகு மன்னன் தமது இனத்தவர்கள் கத்தோலிக்க மதத்தைத் தழுவுவதை விரும்பவில்லை எனினும் மறைதுதூதுவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்துகொடுக்க அனுமதி வழங்கினான். தமக்கு உரித்தான பகுதிகளில் இடத்திற்கிடம் சிறிய தேவாலயங்கள் கட்டப்பட்டு மக்களுக்கு மதத்தைப் போதித்து திருமுழுக்கு அளிக்கப்பட்டு திருச்சபை நிறுவப்பட்டது. 1551ல் நீர்கொழும்பு, பாணந்துறை, களுத்துறை, பேருவளை, மஹ்கோனா, காலி, வெலிகம போன்ற கரையோரப் பிரதேசங்களில் அதிகளவு தேவாலயங்கள் கட்டப்பட்டன. அத்துடன் சிறிய கிறிஸ்தவ குழுமங்களையும் நிறுவினர். பாடசாலைகளையும் ஆரம்பித்து கிறிஸ்தவக் கல்வியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தனர். 1551ல் விஜயபாகு மன்னனின் மரணத்தின் பின்னர் இளவரசன் தர்மபாலா கோட்டை அரசனானான். 1557ல் இவன் கத்தோலிக்க மதத்தைத் தழுவி திருமுழுக்குப் பெற்றான். அருட்பணி. ஜோண் த சில்வா த கொன்தே அடிகளாரால் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. இலங்கையின் முதலாவது கத்தோலிக்க அரசன் இவனானதுடன் அவனின் குடும்பத்தார் பலர் கத்தோலிக்க மதத்தை ஏற்றுக்கொண்டனர்.
- தர்மபாலா அரசனுக்குப் பிள்ளைகள் இன்மையால் தனக்குப்பின் அரசுரிமையைப் போர்த்துக்கேய அரசனுக்கு நன்கொடை உறுதி மூலம் ஒப்படைத்தான். இதற்கேற்ப 1597ல் தர்மபாலா அரசனின் இறப்பிற்குப்பின் கோட்டை இராட்சியம் போர்த்துக்கேயர் வசமானது. எனவே அதிக சுதந்திரத்தோடு மதப்பிரச்சார நடவடிக்கைகள் கோட்டை அரசில் இடம்பெற்றன.
- இதனால் கோட்டை அரசு போர்த்துக்கேயருக்கு அடிபணிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை வரலாற்றில் இடம்பெற்றது. மறைபரப்புப் பணிக்காக வேறு சபைகளைச் சேர்ந்த மறைத்தூ துவர்களைக் கொண்டுவருவதற்கு அப்போது இலங்கைத் தீவிற்குப் பொறுப்பாக இருந்த கொச்சின் ஆயர் செயற்பட்டார். இதன் பேறுபலனாக 1602ல் இயேசு சபை மறைத்தூ துவர்களும் 1605ல் டொமினிக்கன் சபை மறைத்தூதுவர்களும் 1606ல் அகுஸ்தீனார் சபை மறைத்தூதுவர்களும் மறைப்பணியாற்ற முன்வந்தனர். கொச்சின் ஆயரினால் இவர்களின் பணிக்கான பிரதேசங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| இயேசு சபை | - | மகா ஓயா வடக்கு |
| அகுஸ்தீனார் சபை | - | சப்பிரகமுவ |
| டொமினிக்கன் சபை | - | 7 கோரளை |
| பிரான்சிஸ்கன் சபை | - | ஏனைய பிரதேசங்கள் |

- மறைத்தூதுவர்கள் மறைப்பணி மட்டுமல்லாது பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டனர். அத்துடன் கல்விக்கும் விசேட இடம் அளிக்கப்பட்டது. தேவாலயங்களுக்கருகில் சிறிய பாடசாலைகளை நிறுவி அடிப்படைக் கல்வியோடு சமயத்தையும் கற்பதற்கு வழிவகுத்தனர். இதனைத்தவிர இயேசு சபைக் குருக்கள் 'கொலிச்' என்னும் பெயரில் உயர்தரப் பாடசாலைகள் சிலவற்றை ஆரம்பித்து உயர் கல்விக்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுத்தனர்.
- கல்வியைவிட மேலதிகமாக அநாதைப் பிள்ளைகளைப் பராமரித்தல் நோயாளர்களைப் பராமரித்தல் முதியோரைப் பராமரித்தல் கைத்தொழில் பாடசாலைகளை ஆரம்பித்தல் நலன்புரி அமைப்புக்கள் போன்ற இதர பணிகளையும் மேற்கொண்டனர்.

### 9.2.1.2 போர்த்துக்கேயர் காலத்தில் கரையோரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட கிறிஸ்தவ செயற்றிட்டங்கள்

**பிரான்சிஸ்கன் சபை மறைப் போதகர்கள்**

- பிரான்சிஸ்கன் சபை மறைப் போதகர்கள தமது பணியை முன்னெடுத்துச் செல்ல முடியாவிட்டாலும் கரையோரப் பிரதேசங்களில் சிறிய தேவாலயங்களைக் கட்டி இந்நாட்டில் இருந்த போர்த்துக்கேயருக்கும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய உள்நாட்டவர்களுக்கும்

சேவை செய்தனர். 1551ல் நீர்கொழும்பு, பாணந்துறை, களுத்துறை, பேருவளை, மக்கோனா, காலி, வெலிகம போன்ற கரையோரப் பிரதேசங்களில் ஆலயங்களும் பாடசாலைகளும் அமைக்கப்பட்டு மறைக்கல்வியும் வழங்கப்பட்டது. பிரான்சிஸ்கன் சபை மறைப் போதகர்களின் முன்மாதிரிகை இந்நாட்டில் பலர் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்வதற்கு காரணமாகியது. 1556ன் நடுப்பகுதியில் தர்மபால அரசன் பிரான்சிஸ்கன் சபை அருட்பணி ஜோண் டீ விலா டீ கொன்தே அடிகளாரினால் திருமுழுக்கும் பெற்றுக்கொண்டான். 2ம் எடாண் யுவான் ஜோண்டுயி போன்ற அரச குடும்பத்தின் இளவரசர்கள் கத்தோலிக்க மதத்தைத் தழுவிக்கொண்டனர்.

**இயேசு சபை**

- இயேசு சபையைச் சேர்ந்த குருக்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பகுதிகளில் பல்வேறு இடங்களில் துறவற மடங்களை நிறுவி அவ்விடங்களைச் சேர்ந்த மக்களுக்கும் பணியாற்றினர். குரு மடத்தில் ஒரு குருவாவது தங்கியிருந்தார். ஒவ்வொரு குருமடத்திற்கு அருகிலும் ஆலயங்கள் கட்டப்பட்டதுடன் அடுத்துள்ள கிராமங்களிலும் ஆலயங்கள் கட்டப்பட்டன. ஒவ்வொரு துறவற மடமும் ஒவ்வொரு பங்கின் மையமாக விளங்கியது. 1644 ஆண்டறிக்கையின்படி மட்டியகம, கம்மல, மாதம்பை, சிலாபம், முன்னேஸ்வரம், கற்பிட்டி, ஏத்தால போன்ற இடங்களில் இயேசு சபை துறவற மடத்தை மையமாகக்கொண்டு பங்குகள் உருவாகின என்பதை அறியமுடிகின்றது.

**அகுஸ்தீனார் சபை**

- அகுஸ்தீனார் சபையிடம் ஒப்படைக்கப்பட்ட 7 கோரளைப் பிரதேசத்தில் பங்குகள் நிறுவப்பட்டன. தூணகஹ, றம்புக்கண, பென்தோட்ட, களுகம, அத்தனகல, வலிவேரிய, மாப்பிட்டிகம, கல்லெலிய, அம்பே, பிட்டிக்கல்தெனிய, ஹொரணை, நாரஹென்பிட்டிய போன்ற இடங்களில் ஆலயங்கள் கட்டப்பட்டன. ஒவ்வொரு பங்கையும் ஆரம்பித்த அருட்தந்தையர்களின் பெயர்கள், ஆலயங்கள், அர்ப்பணிக்கப்பட்ட புனிதர்.ஃபுனிதை பற்றிய விபரம் பங்கு மக்களின் எண்ணிக்கை இயேசு சபை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**டொமினிக்கன்**

- டொமினிக்கன் சபையின் இலங்கைப்பணி பற்றிய விபரம் எதுவும் கிடைக்கப்பெற வில்லை. 1605ல் டொமினிக்கன் சபையின் குருக்கள் இருவர் கொழும்புக்கு வருகைதந்து செபமாலை மாதா பெயரில் ஆலயம் ஒன்றைக் கட்டிச் செபமாலை அணி ஒன்றை ஆரம்பித்தனர். இத்தேவாலயம் பற்றிய கல்வெட்டு ஒன்று கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கொழும்பு புனித செபஸ்ரியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயம் ஒன்று இச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த சப்பிரகமுவ (இரத்தினபுரி) மற்றும் 2கோரளைப் பகுதிகளில் அவர்களின் சேவைகளைப் பெற்ற 12 ஆலயங்கள் காணப்பட்டன. இது தவிர காலியில் டொமினிக்கன் சபையைச் சேர்ந்த இரு ஆலயங்கள் இருந்தன. இவற்றுள் ஒன்று நகரத்திலும் மற்றையது உள்ளூர் கிராமம் ஒன்றிலும் நிறுவப்பட்டிருந்தன.

**போர்த்துக்கேயரின் மறைப்பணி வெற்றியளித்தமைக்கான காரணங்கள்**

- மறைத்தூதுவர்களின் ஆழ்ந்த அர்ப்பணமும் முயற்சியும் அறியாத பிரதேசத்தில் தெரியாத மக்களுக்குப் பணியாற்றும்போது மொழி, கலாசாரம் எல்லாவற்றுக்கும் நன்கு பழக்கப்பட்டு தமது வாழ்நாளை அர்ப்பணித்தமை மறைத்தூதுவர்களின் வெற்றிக்குக் காரணமாகியது.
- மறைத்தூதுவர்கள் கடைப்பிடித்த பிரச்சார முறைகள்
  1. தேசிய மொழிகளைக் கற்று பிரச்சாரங்கள் மேற்கொண்டமை
  2. சமய நூல்களைத் தேசிய மொழிகளில் தயாரித்தமை
  3. சிறுபிள்ளைகளுக்கு மறையைக் கற்பிக்க ஆரம்பப் பாடசாலைகளை ஆரம்பித்தமை

4. பல்வேறு இரக்கப்பணிகளில் ஈடுபட்டமை

5. நாடகம், சுற்றுப்பிரகாரம், சுருபங்களின் உபயோகம் போன்றன மூலம் சமய விளிப்புணர்ச்சியை ஏற்படுத்தியமை

- மறைத்தூதுவர்களின் எளிமையான முன்மாதிரிகையான வாழ்க்கை

  கத்தோலிக்க மறைப்பணியாளர்கள் வாழ்ந்த எளிய வாழ்க்கை முறை இலங்கை மக்களின் வாழ்க்கை முறைக்கு ஒத்ததாகக் காணப்பட்டமையால் சமய நடவடிக்கைகளை இலகுவாக முன்னெடுக்கக்கூடியதாகக் காணப்பட்டது.

- இன மத குல பேதங்களைப் பொருட்படுத்தாது செயற்பட்டமை

  அக்காலத்தில் இலங்கையில் தொழிலை அடிப்படையாகக்கொண்ட சாதி முறைகள் காணப்பட்டன. பல்வேறு சமூக வகுப்பு ரீதியான பாகுபாடும் காணப்பட்டன. இதனடிப்படையில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பிரிவு உண்டாயிற்று. எனினும் போர்த்துக்கேய மறைப்பணியாளர்கள் அனைவரையும் சமமாகக் கருதித் தமது பணியை மேற்கொண்டனர்.

- கிறிஸ்தவ மதம் மீனவர்களோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமை இயேசுவின் சீடர்கள் மீனவர்களாக இருந்தனர். இதன் காரணமாக இந்நாட்டில் கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களிடையே கத்தோலிக்க மதம் பிரபல்யம் அடைவதற்கு இது காரணமாக அமைந்தது.

- மறைப்பணியாளர்களுக்குப் போர்த்துக்கேய ஆட்சியாளர்களிடமிருந்து கிடைத்த ஆதரவு

  போர்த்துக்கேயர் ஆட்சி செய்த பிரதேசங்களில் மறைப் பிரசாரத்திற்கு முழுச் சுதந்திரமும் உதவியும் போர்த்துக்கேய அரசினால் வழங்கப்பட்டது.

### 9.2.1.4 போர்த்துக்கேய மறைபரப்பின் குறைபாடுகள்

- போர்த்துக்கேயர் காலத்தில் 100 வருடங்களுக்கும் மேல் ஐரோப்பிய மறைப்பணியாளர்கள் இந்நாட்டில் பணியாற்றியபோதும் தேசிய அங்கத்தவர்கள் எவரையும் குருக்களாக பயிற்றுவிக்கவில்லை. இதன் பேறுபலனாக ஒல்லாந்தர் காலத்தில் குருக்கள் வெளியேற்றப்பட்டபோது இந்நாட்டில் குருக்கள் இல்லாது போனமையாகும்.

### 9.2.1.5 இலங்கையின் முதல் மறைசாட்சிகள்

- 1542ல் இந்தியாவிற்கு வருகைதந்த பிரான்சிஸ் சவேரியார் அடிகளார் தென்னிந்தியாவின் கரையோரத்தில் வாழ்ந்த மக்களுக்குப் பணியாற்றினார். அங்கு வாழ்ந்த பரவகுல மக்களுக்கும் கரையார மக்களுக்கும் கிறிஸ்தவ மறையை அறிமுகஞ்செய்து திருமுழுக்கு வழங்கினார். இதனைக் கேள்வியுற்ற மன்னார்த்தீவின் கரையோர மக்கள் தமக்கும் திருமுழுக்கு வழங்க இங்கு வரும்படி அவருக்கு அழைப்புவிடுத்தனர் இதன் நிமித்தம் அடிகளாரின் பிரதிநிதி ஒருவர் மன்னாருக்கு அனுப்பப்பட்டார்.
- இதன்போது நூற்றுக்கணக்கான இந்துக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவினர். இச்சம்பவத்தை இந்துக் குருக்கள் மூலம் கேள்வியுற்ற சங்கிலி அரசன் படையொன்றினை அனுப்பி 600 பேரளவான கிறிஸ்தவர்களைக் கொன்றொழித்தான். இவ்வாறு கொல்லப்பட்ட கிறிஸ்தவர்கள் 'மன்னார் மறைசாட்சிகள்' என அழைக்கப்பட்டனர்.

### 9.2.1.6 கிறிஸ்தவ மறையைத் தழுவிய அரச பிள்ளைகள்

**1. இளவரசர் தர்மபாலா**

7ம் புவனேகபாகு மன்னனின் பேரனான தர்மபாலா இளவரசன் டொன் யுவான் தர்மபாலா என்னும் பெயரில் திருமுழுக்குப் பெற்றான். போர்த்துக்கேயரின் உதவி தேவைப்பட்டதாலும் நாட்டு மக்கள் கத்தோலிக்கத்தைத் தழுவியதாலும் மறைத்தூதுவர்களின் முயற்சியினாலும் தர்மபாலா கத்தோலிக்க மதத்தைத் தழுவினான்.

**2. ஜயவீர பண்டார**

கண்டியை ஆட்சிசெய்த விக்கிரமபாகு மன்னனின் மகனாவான். போர்த்துக்கேயரின் உதவியைநாடி கிறிஸ்தவ மதத்தைத் தழுவியபோதும் சீதாவக்கை இராஜசிங்கனின் உதவி நிறுத்தப்பட்டவுடன் கத்தோலிக்க சமயத்தை மறுதலித்தான்.

**3. கரலியத்தே பண்டார**

இவன் ஜயவீர பண்டாரவின் மகனாவான். கண்டியில் சமயப் பிரசாரத்துக்கான சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தான். 1ம் இராஜசிங்கன் கண்டியை ஆக்கிரமித்தபோது போர்த்துக்கேயரிடம் பாதுகாப்புவேண்டித் திருகோணமலைக்குத் தப்பியோடியதோடு அரச குடும்பத்தில் அனைவரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர்.

**4. வீர சுந்தரபண்டார**

மலைநாட்டு இளவரசனான இவனைப் போர்த்துக்கேயர் கோவாவுக்கு அனுப்பிவைத்தனர். அங்கு விக்ரர் லேபானோ என்ற பெயரில் திருமுழுக்குப் பெற்றான்.

**5. டோனா கத்தரீனா (குசுமாசன தேவி)**

கரலியத்தே பண்டாரவின் மகளாவார். மலையக அரச பதவியைப் பெறுவதற்காகப் போர்த்துக்கேய படையினரால் கண்டிக்கு அழைத்துவரப்பட்டார். எனினும் போர்த்துக்கேயப் படை தோல்வியடைந்தமையால் டோனா கத்தரீனா விமலதர்ம சூரிய அரசனுக்கும் பின்னர் செனரத் அரசனுக்கும் அரசியானாள். இதனால் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுவதற்குத் தடை ஏற்பட்டது.

**6. டொன் யுவான் ஜமசிங்க**

கண்டி அரசன் பிலிப் ஜமசிங்கவின் மகனாவான். இந்தியாவின் கோவாவில் கல்வி கற்றுப் போர்த்துக்கலில் 'கொயின் பிறா' பல்கலைக்கழகத்தில் கற்றுக் குருவானார். லிஸ்பனில் டெல்கிறாஸ் என்னும் இடத்தில் தேவாலயம் ஒன்றையும் இவர் கட்டினார்.

யாழ்ப்பாண அரச குடும்ப இளவரச இளவரசிகள்

- பரராசசேகரனின் பிள்ளைகள் போர்த்துக்கேயரினால் கொழும்புக்கு அழைத்துவரப்பட்டு மகன் கொன்ஸ்தாந்தினு என்ற பெயரினாலும் புதல்வியர் இருவரும் இசபெல், மரியா என்ற பெயர்களினாலும் திருமுழுக்குப் பெற்றனர். மகன் கோவாவுக்கு அனுப்பப்பட்டு பிரான்சிஸ்கன் சபைக் குருவானார். புதல்வியர் இருவரும் கோவாவில் அகுஸ்தீனார் சபைத் துறவிகள் ஆனார்கள்.

**9.2.1.7 போர்த்துக்கேய ஆட்சியின் பெறுபேறுகள்.**

- போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்தமையினால் ஏற்பட்ட முக்கிய பலன் கத்தோலிக்க மதம் இந்நாட்டில் நிலை கொண்டமையாகும்.
- மேற்கத்தைய மொழிகளும் மேற்கத்தைய கல்வி முறைகளும் இந்நாட்டில் வளர்ச்சி பெற்றமை.
- முறைசார் பாடசாலைகளின் வழியாகக் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் முறையும் ஆரம்பிக்கப்பட்டமை.
- போர்த்துக்கேய கலாசாரம் செல்வாக்குச் செலுத்தியதால் இந்நாட்டுக் கலாசாரத்திலும் மக்களின் அன்றாட வாழ்விலும் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டன. (உ-ம்: போர்த்துக்கேய பாடல்கள், சங்கீதம், நடனம், கப்பறிஞ்ஞா, பைலா)
- போர்த்துக்கேய மொழிச் சொற்கள் தேசிய மொழியில் கலக்கப்பட்டமை. (உ-ம்: கொந்த,

குருசி, சுருவம், கொக்கீசு, அலுமாரி, பெட்டகம், பாண், ஆர்க்)

- திருமணத்தின் நிலையான தன்மை உறுதிப்படுத்தப்பட்டதுடன் உணவுப் பழக்கங்களிலும் மாற்றம் ஏற்பட்டது.
- கல்வியோடு சமயத்தையும் தொடர்பு படுத்தியமையால் இன்றுவரை சமயம் கல்வியில் ஒரு முக்கிய அம்சமாகக் கணிக்கப்படுகிறது.
- போர்த்துக்கேய இரக்கச் சங்கம் மூலம் ஏழைகளுக்கும் முதியோருக்கும் அநாதைகளுக்கும் உதவுவதற்காகச் சமூகப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- மேல்நாட்டு மருத்துவம் ஆரம்பிக்கப்பட்டதுடன் வைத்தியசாலைகளும் நிறுவப்பட்டன.
  - முதலாவது சிங்கள யுத்தகாவியம் எனப்படுகின்ற கொன்ஸ்தாந்தினு யுத்தம் இக்காலத்தில் எழுதப்பட்டது.
  - பிறப்பு இறப்புப் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் தோம்பு முறையும் கொண்டுவரப்பட்டது.

கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.

- ‘‘பத்ரோ ஆடோ’’ என குறிப்பிடப்படுவது என்ன என்பதனை விளக்குக.
- மாயா துன்னே அரசன் போத்துகேயரிடம் விண்ணபித்த கோரிக்கைகள் நான்கினை எழுதுக.
- போத்துகேயரின் மறை பணி வெற்றியளித்தமைக்கான ஆறு காரணங்களை எழுதுக.
- போத்துகேய ஆட்சி காலத்தில் இலங்கை பெற்ற 10 பெறுபேறுகளை எழுதுக.

**உசாத்துணை நூல்கள்**

1. டொன் பீற்றர். டபில்யூ. எல். ஏ (அருட்தந்தை) தேவதர்ம நிகேத்தன பிரகாசயன, இல 10, புபுது அச்சகம் தேவத்த, றாகம. 1995.

**தேர்ச்சி 9:0** : **இலங்கையில் கிறிஸ்தவ தனித்துவத்தின் மூலம் நற்செய்தியின் பணியாளராகச் சான்று பகர்வார்.**

**தேர்ச்சிமட்டம் 9:3** : **சவால்களை எதிர்கொள்வதோடு நம்பிக்கைக்குச் சான்று பகர்வார்.**

**பாடவேளைகள்** : **20**

**கற்றல் பேறுகள்**

- ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க மறை தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.
- தூய யோசேவாஸ் அடிகளாரின் தலைமைத்துவத்திலே ஒறட்டோரியன் சபையின் குருக்கள் இந்நாட்டில் கத்தோலிக்க திருச்சபைக்குச் செய்த சேவையினை வரவேற்பார்.
- சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- மறைபரப்பாளராகச் செயற்படுவார்.
- கத்தோலிக்க திருச்சபையை ஊட்டம் பெறச் செய்ய ஏனையோருடன் ஒத்துழைப்பார்.

### 9.3.1 ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் கிறிஸ்தவ மதம்

### இலங்கையில் ஒல்லாந்தரின் வருகை

- கோட்டை இராட்சியமும் யாழ்ப்பாண இராட்சியமும் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. எனினும் மலையக இராட்சியம் சுயாதீன சிங்கள அரசன் ஒருவனின் கீழ் இருந்தது. சிங்கள அரசருக்கும் நாட்டு மக்களுக்கும் போர்த்துக்கேயரின் ஆட்சி சுவையற்றுப் போவதற்குச் செல்வாக்குச் செலுத்திய பல காரணங்கள் உள.
    - தமது நாடு வெளிநாட்டவரின் கீழ் இருப்பது அரசருக்கும் நாட்டு மக்களுக்கும் விருப்பமின்மை.
    - சில போர்த்துக்கேய ஆட்சியாளரினதும் அதிகாரிகளினதும் கொடூரதன்மையும் முறையற்ற செயல்களும்.
    - போர்த்துக்கேயரின் யுத்தங்களினால் இரத்தம் சிந்துதலும் உயிர்ச்சேதமும் ஏற்படல்.
    - போர்த்துக்கேயர் தமது சமயத்தை முதன்மைப்படுத்தி இந்நாட்டுப் பௌத்தர்களுக்கு இடையூறு விளைவித்தமை.
- கி.பி 1602ல் மலைநாட்டை ஆட்சிசெய்த 1ம் விமலதர்மசூரிய மன்னன் ஒல்லாந்தருடன் நட்புறவை ஏற்படுத்திக்கொண்டான். கி.பி 1638ல் மலையக மன்னனான 2ம் இராஜசிங்கன் ஒல்லாந்த ஆளுனனான வெஸ்டர் வோல்ட் என்பவருடன் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து துரத்துவது தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டான். கி.பி 1638ல் செய்துகொள்ளப்பட்ட இவ் ஒப்பந்தத்தின்படி ஒல்லாந்தர் கரையோர பிரதேசங்களில் இருந்த போர்த்துக்கேய கோட்டைகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றினர். 1656ல் கொழும்புக் கோட்டையும் 1658ல் யாழ்ப்பாணக் கோட்டையும் ஒல்லாந்தர் வசமானதால் இலங்கைத் தீவின் போர்த்துக்கேயர் ஆதிக்கம் முடிவுற்று ஒல்லாந்தரின் ஆட்சி ஆரம்பிக்கப்பட்டது. இராஜசிங்க மன்னன் எதிர்பார்த்த விதத்தில் போர்த்துக்கேயரிடமிருந்து மீட்டெடுத்த பிரதேசங்களைச் சிங்கள அரசர்களிடம் ஒப்படைப்பதற்குப் பதிலாக அப்பிரதேசங்களில் தமது அதிகாரங்களை ஒல்லாந்தர் நிலைநாட்டினர்.

### போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் நிலவிய கருத்து வேறுபாடு

- 16ம் நூற்றாண்டில் ஏற்பட்ட புரட்டஸ்தாந்து மதச் சீதிருத்தத்தினால் போர்த்துக்கல்லில் கத்தோலிக்க மதத்துக்கும் ஒல்லாந்த ஜோண் கல்வினது புரட்டஸ்தாந்து மதத்துக்குமிடையில் பிரிவினை ஏற்பட்டது.
- சமயத்தையும் வர்த்தகத்தையும் முதன்மை நோக்காகக்கொண்ட போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்குமிடையே முரண்பாடுகள் ஏற்பட்டன.
- 16ம் நூற்றாண்டின் அரைப்பகுதியில் ஒல்லாந்து ஸ்பெயினின் ஆதிக்கத்திலிருந்து மீண்டு ஐரோப்பாவில் வல்லமையுள்ள நாடாகியது.

- ஒல்லாந்து பலமுள்ள நாடாவதற்கு விசேடமாக வர்த்தக சங்கங்கள் சில ஒன்றாக இணைந்து ஒழுங்குசெய்யப்பட்ட 'கீழைத்தேய வர்த்தக கம்பனி' உதவியளித்தது.
- இக்கம்பனியின் நோக்கமானது வர்த்தகத்தை முன்னேற்றுவதாகும்.
- கம்பனியின் பொது நடவடிக்கைகளில் கத்தோலிக்கருக்கு எதிரான கட்டளைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**ஒல்லாந்தரின் கத்தோலிக்கருக்கு எதிரான கொள்கை**

1682 ஜூலை முதலாம் திகதி கத்தோலிக்கருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட கொள்கைகள்

- வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ கூட்டங்கள் நடாத்துவது தடைசெய்யப்பட்டது.
- கத்தோலிக்க வழிபாடுகள் நடாத்துவது அவற்றில் பங்குபற்றுவது தடைசெய்யப்பட்டது.
- குரு இல்லாமல் சமய போதனைகளுக்குச் செவிமடுத்தல் பாட்டுப்பாடுதல் தடைசெய்யப்பட்டது.
- தமது வீடுகளில் கிறிஸ்தவ படங்கள், சிலைகள் வைத்திருப்பது தடைசெய்யப்பட்டது.
- எந்தவொரு குருவினாலும் வழிபாடுகள் நடாத்துவது தடைசெய்யப்பட்டது.
- குருக்கள் (எவருக்குமே) திருமுழுக்குக் கொடுப்பது தடைசெய்யப்பட்டது.
- இந்நிபந்தனைகளை மீறுவோருக்குத் தண்டம் வழங்குதல், சிறையில் அடைத்தல், கைதிகளுக்குக் கடுந்தண்டனை போன்றன் விதிக்கப்பட்டன.
- இவ்வாறான நடவடிக்கைகளில் வெளிநாட்டுக் குருக்கள் ஈடுபட்டுப் பிடிபட்டால் அவர்கள் நாடுகடத்தப்படுவர்.

**ஒல்லாந்தர் கத்தோலிக்கரைத் துன்புறுத்தியதற்கான காரணங்கள்.**

- கத்தோலிக்க சமயம் ஒல்லாந்தரினால் விருப்பமற்ற சமயமாகக் கருதப்பட்டது.
  கத்தோலிக்க மறையில் சுருபங்கள் உபயோகிப்பது, புனிதர்களை வணங்குவது, திருப்பலி போன்ற வழிபாட்டு முறைகளினால் அவர்கள் இதனைச் சிலை வழிபாட்டுச் சமயமாகக் கருதினர்.
- கத்தோலிக்க மறை இந்நாட்டில் கத்தோலிக்கருக்கும் போர்த்துக்கேயருக்குமிடையே நல்ல நட்புறவை ஏற்படுத்தும் என நினைத்தமையாலாகும்.
- சமயத் தொடர்புகளினால் கத்தோலிக்க மக்கள் ஒல்லாந்தருக்குப் பக்கச் சார்பில்லாமல் இருந்தனரெனவும் மீண்டும் போர்த்துக்கேயரை அழைப்பதற்கு முயற்சி செய்கிறார்கள் எனவும் அவர்கள் நினைத்தனர்.
- தேசிய மக்கள் கத்தோலிக்க மறையுடன் மிக நெருங்கிய தொடர்பை மீண்டும் மீண்டும் ஏற்படுத்திக்கொள்ளுதல் ஒல்லாந்தின் ஆட்சியை வெறுப்பதற்குக் காரணமாக அமையும் எனவும் ஒல்லாந்தர் எண்ணினர்.

**ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களை எதிர்கொண்ட இந்நாட்டுக் கத்தோலிக்கரின் பிரதிச் செயற்பாடுகள்**

- நீர்கொழும்பு, சிலாபம் ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த கத்தோலிக்கர் தாம் புரட்டஸ்தாந்து மதத்தைப் பின்பற்றவில்லையெனப் பகிரங்கமாகக் கூறியமை.
- நீர்கொழும்பு கத்தோலிக்கருக்கிடையே தலைமைத்துவம் வகிக்கவும் அப்பிரதேசத்துக்குப் பொறுப்பான அரசின் முக்கிய அதிகாரியான 'தொன் அல்போன்சு பெரேய்ரா' என்னும் பிரபு நியமிக்கப்பட்டமை.
- கொழும்புத் துறைமுகத்துக்குச் சென்று கத்தோலிக்க குருவுடன் வந்த கப்பலுக்குள் கத்தோலிக்கர் தமக்கு நேரிடக்கூடிய அபாயத்தையும் பொருட்படுத்தாது அருளடையாளங்களைப் பெற்றுக்கொண்டமை.
- ஞாயிறு தினத்தில் ஒன்றாகக் கூடி இறைஆராதனை நடாத்த முடியாதிருந்ததெனவும் ஒவ்வொரு கத்தோலிக்கரும் வீடுகளில் தமக்கு இயன்ற விதத்தில் செபித்தமை.

- தமது பிள்ளைகளுக்குச் செபிக்கக் கற்றுக்கொடுத்தமை.
- தாம் கத்தோலிக்கர் என்பதை வெளிப்படுத்தும் வெளியடையாளமாக செபமாலையையும் சிலுவையையும் அணிந்திருந்தமை.

**ஒல்லாந்தர் காலத்தில் கல்வி**

- போர்த்துக்கேயரைவிட முறையான ஒழுங்கமைக்கப்பட்ட தன்மை ஒல்லாந்தரின் கல்விச் செயற்பாடுகளில் இருந்தமை.
- ஒல்லாந்தர் காலத்தில் சகல பங்குகளிலும் பாடசாலை ஒன்று நிறுவப்பட்டமை.
- ஒல்லாந்தர் காலத்தில் எல்லாப் பிள்ளைகளும் பாடசாலைக்கு அனுப்பப்படவேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்பட்டது.
- பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது.
- பாடசாலைக்கு வருகைதராத பிள்ளைகள் பற்றிய விபரங்களைப் பெறுவதும் மறையாசிரியர் நியமனமும்
- 15 வயது வரை கட்டாயக்கல்வியாக்கப்பட்டதோடு கல்வி முடிவடைந்ததும் பாடசாலையியிலேயே பரீட்சை நடாத்தப்பட்டு 'லாகிரிடன்' என்னும் சான்றிதழும் வழங்கப்பட்டமை.
- பிள்ளைகளுக்கு 19 வயதுவரை தொடர் ஒழுங்குமுறை தயாரிக்கப்பட்டமை.
- மிகத் திறமையான பிள்ளைகளுக்கு உயர்கல்விக்கும், ஆசிரியர் பயிற்சிக்கும் சில வேளைகளில் உயர் கல்விக்காக வெளிநாடு செல்வதற்கும் பாடசாலை முறை வழிவகுத்தமை.
- அக்காலத்தில் கல்வி பற்றிய நேரடிப் பொறுப்பும் ஒல்லாந்து அரசினால் பொறுப்பேற்கப்பட்டமை.
- 'ஸ்கோலாகல் கொமிஷம்' என்னும் விசேட நிறுவனத்தின் வழியாக எல்லாச் செலவுகளையும் ஏற்று ஆசிரியர்களை நியமிப்பது, பயிற்சியளிப்பது, நிர்வாகம் பரீட்சகர்களின் வழியாக பாடசாலைப் பரீட்சைகளை நடாத்துதல் போன்றன மேற்கொள்ளப்பட்டமை.

**ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் காணப்பட்ட சிறப்பான பண்புகள்**

- வர்த்தகத்தில் முன்னேற்றம், பொருளாதாரரீதியில் தானிய உற்பத்தியில் ஈடுபட்டதனால் இந்நாட்டுப் பொருளாதாரம் உயிரூட்டப்பட்டமை.
- வர்த்தக நடவடிக்கைகளுக்கான வழிகளை வகுத்தல் வாய்க்கால்கள் அருவிகளை அமைத்தல், போக்குவரத்துக்கான நீர் வழிகளை ஏற்படுத்துவதும் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்தமை.
- உரோம ஒல்லாந்துச் சட்டம் இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. நீதிமன்றத்தினால் வழக்குகள் விசாரித்தல், சட்டப்படி தண்டனைகள் வழங்குதல் என்பன ஒல்லாந்தரினால் அறிமுகப்படுத்தப்பட்டமை.
- நிர்வாகச் செயற்பாடுகள் நல்ல முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததோடு கச்சேரிகள் ஆரம்பிக்கப்பட்டமையும் அதன் வழியாகப் பிள்ளைகளின் பிறப்பு திருமணம், மரணம் என்பவை பதியப்படுவதும் ஆரம்பிக்கப்பட்டமை. (தோம்பு)
- கல்வி நடவடிக்கைகள் சிறந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை.
- ஒல்லாந்து புரட்டஸ்தாந்து மதம் இந்நாட்டில் பரவியதால் இம்மதத்தின் போதனைகள் இந்நாட்டின் மக்கள் சமூகத்துடன் கலந்தமை.
- அச்சியந்திரங்களை இந்நாட்டில் அறிமுகஞ்செய்தல், திருவிவிலியத்தின் சிங்கள மொழி பெயர்ப்பும் மக்கள் மத்தியில் பரவியமை.
- 15 வயதுவரை கட்டாயக் கல்வி அமுல்படுத்தப்பட்டமை.

**புனித யோசவ் வாஸ் அடிகள் இலங்கையில் ஆற்றிய பணிகள்**

- ஓறத்தோரியன் சபையைச் சேர்ந்த இவர் 1687ல் மன்னார்க் கரைக்குக் கூலியாளாக வந்திறங்கினார்.
- இவர் பிச்சைக்கார வேடம் பூண்டு ஜோணுடன் மன்னார் பகுதியிலுள்ள கிறிஸ்தவர்களைத் தேடிச் சென்றார்.
- பொதுநிலையினருக்கான தலைமைத்துவப் பயிற்சியை வழங்கினார்.
- மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் வரை செபமாலையைக் கழுத்தில் அணிந்துகொண்டு கிறிஸ்தவர்களை தேடிச்சென்றமை.
- இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் ஏறத்தாழ 33 வருடங்களாக கத்தோலிக்க குருவானவர் ஒருவர் இல்லாத வேளையில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தமை.
- கண்டி மக்கள் வைசூரி நோயினால் பீடிக்கப்பட்டபோது அவர்களுக்குச் சிகிச்சை அளித்தமை.
- இரவு வேளைகளில் இரகசியமாக வீடுகளில் கூடி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டமை. அருளடையாளங்கள் நிறைவேற்றப்பட்டமை.
- சின்ன உரோம் என அழைக்கப்படுகின்ற சில்லாலைக் கத்தோலிக்க கிராமத்தை மையமாகக்கொண்டு அங்கிருந்து இரண்டரை வருடங்கள் வடக்கில் அருட்பணியாற்றியமை.
- பிச்சைக்காரனாக மாறுவேடம் பூண்டு கத்தோலிக்கரைத் தேடி வீடுகளுக்குச் சென்று தாம் ஒரு கத்தோலிக்க குரு என்பதை அறிமுகப்படுத்தியமை.
- மிகவும் இரகசியமாக கத்தோலிக்கரைச் சந்தித்தமை.
- இரவு வேளைகளில் இரகசியமாகத் திருப்பலி ஒப்புக்கொடுத்ததோடு அருளடையாளங்களை வழங்கிக் கத்தோலிக்கருக்குத் தேவ வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொடுத்தமை.
- இவர் தமிழ் சிங்கள மொழிகளைக் கற்று மக்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டதுடன் அவர்களுடன் நெருங்கிய உறவையும் வைத்திருந்தமை.
- வடக்கில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் அவரது சேவை இரகசியமாகத் தொடரப்பட்டமை.
- 1696ல் மலைநாட்டில் ஏற்பட்ட வறட்சியின் போது விமலதர்மசூரிய மன்னன் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப செபித்து மழையைப் பெய்யச் செய்தமை.
- இவர் 1711 ஜனவரி 16ல் இறைபதம் அடைந்தார்.
- “ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் செய்ய முடியாத எதையும் தன் மரணத்தறுவாயில் நிறைவேற்ற முடியாது” என்பது இவரது மரணத் தறுவாயில் கூறப்பட்ட விருதுவாக்கு.
- இலங்கையின் அப்போஸ்தலர் என 1995 ஜனவரி 21ம் திகதி அன்று தூய 2ம் ஜோண் போல் திருத்தந்தையால் அருளாளர் எனப் பிரகடனப்படுத்தப்பட்டார்.
- 2015 ஜனவரி 14ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸினால் காலி முகத்திடலில் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

**புனித யோசவ் வாஸ் அடிகளாரின் மறைத்தூதுக் கொள்கை**

- இவர் இந்நாட்டுக்கு வருகை தந்ததும் பணியாற்றியதும் தனியே கிறிஸ்துவின் பிரதிநிதியாக மட்டுமே ஆகும். எந்தவொரு அரசியல் தொடர்போ அரச உதவியோ இல்லாமலும் மத பிரசாரத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் என்பதைத் தனது பணி மூலம் கத்தோலிக்க உலகுக்குக் காட்டியுள்ளமை.
- வேற்றுமைகள் பாராது தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டமை
- தேசிய மொழிகளை நன்கு கற்று மறைத்தூதுப் பணியில் ஈடுபடல் மிகக் கடினமானது என ஏற்றுக் கொண்ட வாஸ் அடிகளார் சிங்களம் தமிழ் மொழிகளைத் தமது நன்மைக்காகவே நன்கு கற்றுக்கொண்டமை.

- இலங்கையில் கத்தோலிக்க மறைக்குத் தேசிய கலாசாரப் பண்புகளைத் தொடர்பு படுத்துவதற்கும் வாஸ் அடிகளார் முயற்சி செய்தார். அக்கால வழக்கத்திற்கேற்ப பொது வழிபாடுகள் இலத்தீன் மொழியில் நடைபெற்ற போதும் தேசிய மொழிகளில் செபிப்பதற்கு வழிசமைத்துக் கொடுத்தமை.
- போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கராக இருந்தவர்களுக்குத் தொடர்ந்தும் இருப்பதற்கு வழிவகுத்துக் கொடுத்தமை.
- ஒல்லாந்தரின் வருகையினால் புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவிய கத்தோலிக்கருக்கு உண்மையான திருச்சபை எதுவெனத் தெளிவுபடுத்தியதுடன் அவர்களை மீண்டும் கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துக்கொண்டமை.
- தமது நடமாடும் மறைத்தூதுப் பணியினால் மிகப்பெரும் பிரதேசங்களுக்கும் மக்களுக்கும் பணியாற்றியமை.
- குருக்கள் பற்றாக்குறையாக இருந்தமையால் சிறு குழுமங்களுக்குத் தலைவர்களை நியமித்தமை. உ-ம் அண்ணாவியார், சக்கிருஷ்டியான், மூப்பர்
- செபித்தலைத் தமது வாழ்வின் ஆபரணமாகக் கொண்டு எல்லாவற்றையும் கடவுளிடம் ஒப்படைத்தமை.

**யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் இலங்கையில் ஆற்றிய பணிகள்**

- இலங்கைக் கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை
- ஓறத்தோரியன் சபைக்குரு
- சிங்கள மொழியில் 22 நூல்களையும், தமிழ் மொழியில் 15 நூல்களையும், போர்த்துக்கேய மொழியில் 4 நூல்களையும், ஒல்லாந்து மொழியில் 1 நூலையும் எழுதியுள்ளார்.
- கத்தோலிக்க இலக்கியத்தின் முன்னோடியாக இருந்த இவர் - தேவ வேத புராணம், தேவ வேத சங்சேபய, அஞ்ஞான ஔசதய, வியாகுல பிரசங்கம், சுவிசேஷ விதர்ஷ னய, தேவ நீதி விசர்ஜனய. கத்தோலிக்க ஆலயம், பிரார்த்திக்கா யாவலிய, புதுமுள தேவ பரிகாரய, மாத்தறை பிரதக்ஷனய, தர்ம உத்தானிய, வேத காரயன்கேதர்கய, ஞானாக்யனய, சுகுன தர்ஷனய, தர்ம சங்யாவ போன்ற நூல்களை எழுதினார்.
- பக்திப்பாடல்கள்: தேவகாவிய, பசான்பாடல்கள், ஆனந்தக்களிப்பு, மங்களகீதம், லத்தோனி புத்தகம்
- இறையியல் கோட்பாட்டு விடயங்களை மிகவும் எளிய முறையில் விளக்கினார்.
- இசையாற்றல் நிறைந்துள்ள அடிகளார் கிறிஸ்தவ பக்திப்பாடல்கள் பலவற்றை ஆக்கியுள்ளார். உ-ம் ஒப்பாரிப் பாடல்கள், பொதுப்பாடல்கள்
- பசான், ஒப்பாரி என்பவற்றுக்குரிய கவிதையாக்கம், தாளஅமைப்பு ஆகியவற்றை ஆக்கிக் கத்தோலிக்க சிங்கள இசைக்குப் புத்துயிர் ஊட்டினார்.

**ஓறத்தோரியன் மறைத்தூதுவர்கள் ஆற்றிய பணிகள்**

- ஒல்லாந்தரின் துன்புறுத்தல் காலத்தில் கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாத்தமை.
- மறைத்தூதுவர் எவரும் இல்லாத காலத்தில் மறைப்போதக பணியை ஆற்ற முன்வந்தமை.
- கிறிஸ்தவ இலக்கியத்தையும் இசையையும் ஆரம்பித்தமை.
- மடுக்கோவில், புத்தளம், கொழும்பு, கொச்சிக்கடை, கல்கமுவ, கங்வெல்ல போன்ற பகுதிகளில் மறைப்பணி பரவியமை

**பிலிப் பல்தேயுஸ் பாதிரியார்**

- கி.பி 1658ல் ஒவ்வொரு ஒல்லாந்த இராணுவத்துக்கும் பொறுப்பாக பணியாற்ற இலங்கைக்கு வந்து காலியில் ஒல்லாந்தரின் படையில் குருப்பணிக்குப் பொறுப்பாகப் பணியாற்றினார்.
- 1659 – 1668 வரை யாழ் புரட்டஸ்தாந்து போதகராகப் பணியாற்றியமை.
- சமய நூல்களைத் தேசிய மொழியில் மொழிபெயர்த்து அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுத்தமை.
- எல்லாப் பங்குகளிலும் பரிஷ் பாடசாலைகளை ஆரம்பித்து அரச அனுசரணையுடன் மறைப்போதகப் பணிகளை முன்னெடுத்தமை.
- எல்லா ஆலயங்களுக்கும் அருகில் பாடசாலை அமைந்து அரச ஆதரவுடன் தமது மதத்தைக் கற்பிக்க நடவடிக்கை எடுத்தமை.
- பிற்காலத்தில் ஒல்லாந்த ஆட்சியாளருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக ஒல்லாந்துக்குச் சென்றமை.

**கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.**

- ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களை எதிர்கொண்ட இந்நாட்டு கத்தொலிக்கரின் பிரதி செயற்பாடுகள் ஆறினை எழுதுக.
- தூய யோசெப்வாஸ் அடிகளாரின் சேவையையும் மறைத்தூது கொள்கைகளையும் உள்ளடக்கி உரையாடல் ஒன்றினை எழுதுக.
- கீழே குறிப்பிடப்பட்டுள்ள மறைபணியாளர்கள் இலங்கையில் ஆற்றிய பணிகள் நான்கு வீதம் எழுதுக.
    1. யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார்.
    2. ஒறத்தோரியன் மறைத்தூதுவர்கள்.
    3. பிலிப் அல்தெரியுஸ் பாதிரியார்.

## உசாத்துணை நூல்கள்


1. டொன் பீற்றர். டபில்யூ. எல். ஏ (அருட்தந்தை) லக்திவ கத்தோலிக்க பீடன சமய, தேவதர்ம நிகேத்தன பிரகாசயன, கொழும்பு 8, 1996.
2. கொலமுன்னே, திமதீ (அருட்தந்தை), சிரிலக் கிதுசசுன முதலாம் வெளியீடு, பிரன்சிஸ்கன் இல்லம், போலவனாவ 1985
3. டொன் பீற்றர். டபில்யூ. எல். ஏ (அருட்தந்தை), கொன்சால்வேஸ் பன்டிவரயானோ, எஸ். கொடகே சகோதரர்கள், 675, பீ. த எஸ் குலரத்ன மாவத்த கொழும்பு 10. 1991.
4. பலகல்ல, ஜெயலத் (அருட்தந்தை), சங்கலோவ கரா, கத்தோலிக்க அச்சகம் கொழும்பு 8. 2015.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 9:0** | **:** | **இலங்கையில் கிறிஸ்தவ தனித்துவத்தின் மூலம் நற்செய்தியின் பணியாளராகச் சான்று பகர்வார்.** |
| **தேர்ச்சி மட்டம் 9:4** | **:** | **கிறிஸ்தவ மறைத்தூதுப்பணி ஊடாகப் பல்வேறு துறைகளுக்கு ஆற்றப்பட்ட பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வார்.** |
| **பாடவேளைகள்** | **:** | **25** |

**கற்றல் பேறுகள்**

- பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் கிறிஸ்தவ மறை பற்றிய தகவல்ளைச் சேகரிப்பார்.
- கிறிஸ்தவ மறைத்தூது சங்கத்தினூடாக இலங்கையில் சமய சமூகத் துறைகளுக்குக் கிடைத்த ஒத்துழைப்பை வரவேற்பார்.
- சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- உண்மைக் கிறிஸ்தவனாகச் செயற்படுவார்.
- சமய சுதந்திரத்தைப் பேண ஒத்துழைப்பார்.

### 9.4.1 பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க மதம்

**சமயச் சுதந்திரம்**

- பிரித்தானிய படைவீரரான ஜேம்ஸ் ஸ்ருவேட் என்பவர் 1796 – 08 – 03 அன்று கொழும்பில் ஆற்றிய உரையில் பின்வரும் விடயங்கள் அடங்கியிருந்தன.
  - இலங்கையில் சமயப் பணிகளைச் சுதந்திரமாக ஆற்றுவதற்குக் குருக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை.
  - கத்தோலிக்கரின் சமய சுதந்திரத்திற்கு எவ்வித தடையும் ஏற்படுத்தாமை.
  - கத்தோலிக்கர் தமது ஆலயங்களில் திருமணச் சடங்குகளை நிறைவேற்றுவதற்கு அனுமதி வழங்கியமை.
- 1வது பிரித்தானிய ஆளுனரான பிரடெரிக் நோத் 1798 செப்ரம்பர் 03 அன்று ஆற்றிய உரையில் பின்வரும் விடயம் அடங்கியிருந்தது.
  - மனச்சான்றின்படி மக்கள் அனைவரும் தமக்கு விருப்பமான மதத்தைப் பின்பற்றச் சுதந்திரம் உண்டு.
- இலங்கைக்குப் பூரண மதச்சுதந்திரத்தை 2வது பிரித்தானிய ஆளுனரான தோமஸ் மெய்ட்லன்ட் 'மக்னா காட்டா' சட்ட மூலம் பெற்றுக் கொடுத்தமை.
- 'மக்னா காட்டா' சட்டம் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டது பிரித்தானிய நாட்டின் ஆட்சியாளராக இருந்த 3வது ஜோண் மன்னனின் பிறந்த நாளான 1806 ஜனவரி 06 ஆகும்.
- அதன் பின்னர் கத்தோலிக்கருக்கு முழுமையான மதச் சுதந்திரம் உரித்தானது.

**இலங்கையில் வெளிநாட்டு மறைத்தூதுவர்களின் வருகையும் பணியும்**

- பிரித்தானியரால் இலங்கைக்கு பூரண மதச் சுதந்திரதம் உரித்தானதோடு பல்வேறு சபைகளைச் சேர்ந்த மறைத்தூதுவர்கள் மறைப்பணிக்காக வருகைதந்தனர்.

**லண்டன் மறைத்தூதுக் குழுவினர்**

- இங்கிலாந்துத் திருச்சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கி.பி 1805ல் இலங்கைக்கு வருகைதந்த 1வது மறைத்தூதுக்குழு இதுவாகும். இந்நாட்டில் அவர்களின் சபை இலங்கைத் திருச்சபை என அழைக்கப்பட்டது. தேவாலயங்களையும் பாடசாலைகளையும் கட்டி மறைத் தூதுப்பணியில் ஈடுபட்டதோடு கி.பி 1840ல் தேசிய குருக்களைப் பயிற்றுவிப்பதற்கான நிலையம் ஒன்றையும் இலங்கைத் திருச்சபை கொழும்பு, குருநாகல் போன்ற தியோகிசி

அதாவது மறைமாவட்டங்கள் இரண்டில் இன்று சேவையில் ஈடுபட்டுள்ளது. ஒவ்வொரு மறைமாவட்டமும் சுயமாகச் செயற்படும். உரிய மறைமாவட்ட ஆயர் துறவிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விசுவாசிகள் உட்படுத்தப்பட்ட தியோகீசி சங்கம் ஊடாக இம்மறை மாவட்டங்களின் கொள்கைகள், தீர்மானங்கள் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

**பப்ரிஸ்ட் மறைத்தூதுக் குழுவினர்**

- ஜேம்ஸ் கார்ட்டர் போதகர் லண்டனிலிருந்து இலங்கைக்கு வருகை தந்து அப்போதைய பிரித்தானிய ஆளுனரின் அனுமதியுடன் இச்சபையின் பணியை ஆரம்பித்தார். இவரின் பணி கிரான்பாஸ் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அவர்களின் சேவை கிழக்கு, வடமத்தி, மத்திய மாகாணங்களில் பரந்துசென்றது.

**வெஸ்ஸியன் மறைத்தூதுக் குழுவினர்.**

- இச்சபையைச் சேர்ந்த ஐவரைக் கொண்ட முதல் மறைபரப்புக் குழு கி.பி 1815ல் காலிக்கு வந்ததோடு இலங்கையில் மறைத்தூதுப் பணியை ஆரம்பித்தது. இக்குழுவினர் விசேடமாக மேற்குக் கரையோரப் பகுதிகளில் பணிபுரிந்தனர். மறையைப் போதித்தல், கல்வி, வைத்தியசாலையில் (சுகாதாரப் பணி) என்பவற்றில் விசேட கவனம் செலுத்தினர்.

**அமெரிக்க மறைத்தூதுக் குழுவினர்**

- இச்சபையைச் சேர்ந்த ஐவர் அடங்கிய குழு கி.பி 1815ல் காலிக்கு வருகை தந்து இலங்கையில் மறைத் தூதுப் பணியை ஆரம்பித்தது. மறைப் போதகம், கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் கவனம் செலுத்தினர்.

**சபை மறைத்தூதுச் சங்கம்**

- கி.பி 1818ல் இலங்கைக்கு வருகை தந்து மறைப் போதகத்தோடு கல்விப் பணியையும் மேற்கொண்டனர். மகளிர் வித்தியாலயம், கண்டி ஹில்வூட் வித்தியாலயம் இவர்களினால் உருவாக்கப்பட்டன.

**இரட்சணிய சேனையின் மறைத்தூதுக் குழுவினர்**

- கி.பி 1883ல் கப்டன் வில்லியம் கிளப்வின் என்பரால் கொழும்பு கோட்டை மணிக் கோபுரத்துக்கு அருகில் 1வது கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இரட்சிப்பு என்னும் தொனிப்பொருளின் கீழ் பல்வேறு பணிகள் ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெறுகின்றன. இரட்சணிய சேனையின் கிளைகள் இலங்கை முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

**இலங்கை வேதாகம சங்கம்**

- 1812 ஆகஸ்ட் 1ல் கொழும்பு அரச மாளிகையில் கொழும்புக் கிளையாக ஆரம்பிக்கப்பட்டது.
- 1812 ஆகஸ்ட் 5ல் வெளியிடப்பட்ட இலங்கை வர்த்தமானி அறிவித்தல் இல.568ன் கீழ் வேதாகமம் வெளியீடு செய்யப்பட்டது.
- 1வது தலைவராகச் சிறிமத் றொபேட் பிறண்றிக் ஆளுனர் இருந்தார்.
- 1வது பிரதம செயலாளராக ஜோர்ச் பிசட் போதகர் இருந்தார்.
- இலங்கை வேதாகம சங்கத்தின் அனுசரணையாளராகக் கொழும்பு மாவட்ட ஆயர் இருந்தார்.
- வேதாகமத்தை அச்சிடுவதற்கு 5000 தாள்கள் அலக்சாண்டர் ஜொண்ஸ்ரன் என்பரால் கொழும்புக் கிளைக்குக் கொடுக்கப்பட்டது. இவர் இலங்கையின் 1வது நீதியரசராவார்.
- 1812ல் பிரித்தானிய சிவில் சேவையாளரான வில்லியம் டொல்ப்பிறியின் வழிகாட்டலின் கீழ் பரிசுத்த வேதாகமம் சிங்கள மொழியில் மொழி பெயர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- 1907ல் புதியதொரு யாப்பின் கீழ் பிரித்தானிய மற்றும் வெளிநாட்டு வேதாகம சங்கத்தின் இலங்கைச் சங்கம் என்ற பெயரில் அறிமுகமானது.
- 1819ல் சிங்கள வேதாகமம் பகுதிகளாகப் பிரிவுகளாக அச்சிடும் பணி ஆரம்பமானது.
- 1830ல் முழுமையான சிங்கள வேதாகமம் வெளியிடப்பட்டது.
- 1838ல் சிங்கள வேதாகமத்தின் பழைய ஏற்பாடு அச்சிடப்பட்டது.
- 1946ல் தமிழ் வேதாகமத்தின் பழைய ஏற்பாடு பூரணமான வெளியீட்டின் உரிமை இலங்கை வேதாகம சங்கத்திற்கு வழங்கப்பட்டது.
- 1982ல் சிங்கள வேதாகமத்தின் புதிய ஏற்பாடு அச்சிடப்பட்டது.
- 1990ல் சிங்கள வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டின் 2ம் பதிப்பு அச்சிடப்பட்டது.
- 2006ல் சிங்கள வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டின் 3ம் பதிப்பு அச்சிடப்பட்டது.
- 1995 – 2002 வேதாகம கல்வி இதழ் 6 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.
- ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 1ம் ஞாயிறு வேதாகம ஞாயிறாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

### 9.4.2 பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க சபை (மறைமாவட்டங்களின் ஆரம்பம்)

- இலங்கைக்குக் கத்தோலிக்க மதச் சுதந்திரம் வழங்கப்பட்டதையடுத்துக் கத்தோலிக்க மக்களின் தொகை பெருகியது. இதனால் 1834ல் திருத்தந்தை 14வது கிறகோரியாரால் இலங்கை தனியான மறைமாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
- இந்த அப்போஸ்தலிக்க மறைமாவட்டத்தின் தலைமையகம் கொழும்பு எனப் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் இலங்கை திருச்சபையின் முழு உரிமையும் ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டது.
- 1847ல் திருத்தந்தை 9வது பியுஸ் அவர்களினால் வடக்குத் தெற்கு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டதுடன் இவற்றின் கேந்திர நிலையங்களாக முறையே கொழும்பு, யாழ்ப்பாணம் என்பன விளங்கின.
- 1883ல் இலங்கையில் 3வது மறைமாவட்டமாக கண்டி உருவாக்கப்பட்டது.
- காலி, மட்டக்களப்பு மறைமாவட்டங்கள் 1893லும் சிலாபம் 1939லும் உருவாக்கப்பட்டன.
- 1886ல் திருத்தந்தை 13வது லியோவினால் (சிங்கராயர்) கொழும்பு, யாழ், கண்டி ஆகிய மறைமாவட்டங்கள் மூன்றும் திருத்தூதரக மறைமாவட்டங்களாகவும் கொழும்பு உயர் மறைமாவட்டமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது.

**துறவற சபையினரின் வருகையும் சேவையும்**

**சில்வெஸ்ரர் பெனடிக்ற் மறைத்தூதுச் சபை**

- இலங்கைக்கு வருகைதந்த முதலாவது மறைத்தூதுவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஜோசவ் மேரி பிராவி அடிகளார் ஆவார். (கி.பி 1845ல் கிறாஷியா மற்றும் வுறொய்லானோ என்ற சில்வெஸ்ரர் பெனடிக்ற் சபை குருக்களுடன் இவர் இங்கு வந்தார்)
- தென் திருத்தூதரக மறைமாவட்ட பிரதேசத்தக்குப் பொறுப்பாளராகச் செயலாற்றியமை.
- கொட்டாஞ்சேனை தூய லூசியா பேராலயம் கட்டத்தொடங்கியமை.
- பாடசாலைகள் பல உருவாவதற்குச் செயற்பட்டமை. உ-ம் புனித பெனடிக்ற் கல்லூரி, கண்டி புனித அந்தோனியார் கல்லூரி
- நல்லாயன் கன்னியர் சகோதரிகளை இந்நாட்டுப் பணிக்காக அழைத்தமை. (1869)
- டி லாசால் சபையை இந்நாட்டுக்குக் கொண்டுவந்தமை.
- ஞானார்த்த பிரதீப என்ற கத்தோலிக்க சிங்களப் பத்திரிகையை வெளியிடப்பட்டமை. (1873)

- கத்தோலிக்க மெசஞ்சர் (கி.பி 1869) அச்சிட்டுப் பிரசுரித்தமை.
- கி.பி 1857 – 1883 வரை கொழும்பு மறைமாவட்டத்தை நிர்வகித்தமை.
- கண்டி மறைமாவட்டம் ஆரம்பிக்கப்பட்டு கி.பி 1883 -1973 வரை நிர்வகிக்கப்பட்டது.

**அமல மரித் தியாகிகள் சபை**

- கி.பி 1847ல் ஜோண் ஸ்ரீபன் செமாரியா குருவானவரும் மறைப்போதகர் நால்வரும் யாழ்ப்பாணத்தில் மறைத்தூதுப் பணிக்காக வருகை தந்தமை.
- அமல மரித் தியாகிகள் சபையின் 1வது ஆயர் ஜோண் ஸ்ரீபன் செமேரியா ஆண்டகை ஆவார்.
- கி.பி 1862ல் திருக்குடும்ப கன்னியர்கள் பிரான்சின் போடோ நகரிலிருந்து இலங்கையின் யாழ்ப்பாணப் பிரதேசத்துக்கு வருகை தந்தமை இவரது அனுசரணையினாலாகும்.
- இவர் தமது மறைமாவட்டத்தில் 2 துறவற சபைகளை ஆரம்பித்தார்.

  1. புனித சூசையப்பர் துறவற சபை
  2. புனித பேதுரு கன்னியர் மடம்

  தேசிய மொழியில் பாடசாலைகளில் கல்வியை வழங்குவதற்காகவே இவை இரண்டும் ஆரம்பிக்கப்பட்டன.
- புனித சூசையப்பர் அருட்சகோதரர்களைப் பயிற்றுவித்தல் அமல மரித் தியாகிகள் சபையின் குருவானவரிடமும் அருட் சகோதரிகளைப் பயிற்றுவித்தல் திருக்குடும்ப கன்னியர்களிடமும் ஒப்படைக்கப்பட்டன.
- இலங்கைக் கத்தோலிக்கர்களின் பிரசித்திபெற்ற யூலை மடுமாதா திருநாள் ஆயர் ஜோண் ஸ்ரீபன் செமேரியா ஆண்டகை காலத்தில் ஆரம்பமானது.
- மறைமாவட்டங்களுக்குத் தலைமைத்துவத்தை வழங்குதல் இச்சபையின் முக்கிய பணியாகும்.
- இலங்கையின் முதலாவது சிங்கள ஆயர் அமல மரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த எட்மன் பீரிஸ் ஆண்டகை ஆவர்.
- இலங்கையின் முதலாவது தமிழ் ஆயர் அமல மரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த யாழ் மறைமாவட்டத்திற்கு பொறுப்பான எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை ஆவர்.
- இலங்கையின் முதலாவது பேராயரும் கருதினாலும் அமல மரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த தோமஸ் பெஞ்ஜமின் கருதினால் கூறே ஆண்டகை ஆவர்.
- இலங்கையின் பிரதான கத்தோலிக்க கல்வி நிலையமான புனித மாட்டீன் சிறிய குருமடம், கொழும்பு புனித பேனாட் குருமடம், கொழும்பு புனித அலோசியஸ் குருமடம், அம்பிட்டிய தேசிய குருமடம், கொழும்பு புனித யோசப் கல்லூரி, கொழும்பு, அக்குவைனாஸ் நிறுவனம், யாழ் புனித பற்றிக்ஸ் கல்லூரி என்பன அமல மரித் தியாகிகள் சபைக் குருக்களால் நிர்வகிக்கப்பட்டன.
- தேவத்தை இலங்கை மாதா பேராலயம், இந்திக்கொல புனித யூதா ததேயு ஆலயம், மக்கோனா சிறுவர் சீர்திருத்த நிலையம், நுவரெலியா குருக்கள் விடுதி அன்டென் பாங், தேவத்தை ஞானொடுக்க நிலையம், தம்மிட்ட மறைப்போதக நிலையம் என்பன அமல மரித் தியாகிகள் சபையினால் ஆரம்பிக்கப்பட்டது.

**திருக்குடும்பக் கன்னியர் சபை**

- இச்சபையை ஆரம்பித்தவர் அருட்பணி பீற்றர் பியன்வனு நொக் அடிகளார் ஆவர்.
- திருக்குடும்பக் கன்னியர்கள் யாழ்ப்பாணத்தில் மகளிர் வித்தியாலயம் ஒன்றையும் விடுதி ஒன்றையும் அநாதைகள் விடுதி ஒன்றையும் பொறுப்பேற்று இலங்கையில் தூதுப்பணியை ஆரம்பித்தனர்.

- தற்போது யாழ்ப்பாணத்தில் திருக்குடும்பத் தேசிய பாடசாலை என்ற பெயரில் இயங்குகின்ற இப் பாடசாலை அக்காலத்தில் இவர்களால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஆங்கிலப் பாடசாலை ஆவதுடன் இலங்கையில் முதலாவது கன்னியர் மடமும் ஆகும்.
- இலங்கைக்கு வந்த முதலாவது துறவற கன்னியர்களான இவர்கள் ஆங்கிலக் கல்வியை விருத்திசெய்வதற்கு உதவினர்.
- இந்நாட்டில் பல பாடசாலைகளை ஆரம்பித்துக் கல்வியை வழங்கியது மட்டுமல்லாமல் வைத்திய சேவைகளையும் ஆரம்பித்தனர். (கி.பி 1892ல் குருநாகல் வைத்திய சாலையிலும் பின்னர் நாவலப்பிட்டி வைத்தியசாலையிலும் சேவை செய்தனர்)

**டிலாசால் சபை**

- புனித ஜோண் பப்ரிஸ்ட் முனிவரே இச்சபையின் ஸ்தாபகராவர்.
- பிரான்ஸ் றேய்ன்ஸ் நகரில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆலயம் ஒன்றில் பங்குக்குருவாகச் சேவையாற்றிய காலத்தில் இவர் பிரான்சின் வறிய ஆண்பிள்ளைகளுக்குக் கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கோடு 1680ல் டிலாசால் சபையை ஆரம்பித்தார்.
- குறிக்கோள் - வறிய பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியை மேற்கொள்ளல், புதிய கற்றல் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தல்.
- கிறிஸ்தவ ஆசிரியர்களின் முன்மாதிகையான புனிதர் இவராவர்.
- 1868ல் இலங்கைக்கு வந்து பணியை ஆரம்பித்த இச்சபையினர் கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ற் கல்லூரி, நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரி, முகத்துவாரம் புனித டிலாசால் கல்லூரி, கிரான்பாஸ் புனித யோசவ் கல்லூரி, கந்தானை டி மசனட் கல்லூரி போன்ற பல பாடசாலைகளை உருவாக்கினர்.
- 1963ல் தியகலயில் சிறுவர் விடுதி ஒன்றையும் ஆரம்பித்தனர்.

**நல்லாயன் கன்னியர் சபை**

- புனித மேரி யூவ்றெஷியாவினால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1869ல் இலங்கைக்கு வருகைதந்து கொட்டாஞ்சேனையில் தமது பணியை ஆரம்பித்தார்.
- இலங்கைக் கத்தோலிக்கரின் ஆங்கிலக் கல்வியை முன்னேற்ற தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றினார்.

**பிரான்சிஸ்கன் கன்னியர் சபை**

- 1886ல் இலங்கைக்கு வருகை தந்து மொறட்டுவ கன்னியர் மடத்தில் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார்.
- 1886ல் கொழும்பு வைத்தியசாலையில் பணியைத் தொடங்கினார்.
- 1916ல் ஹெந்தலையில் குஷ்ரரோக வைத்தியசாலையை ஆரம்பித்தனர்.

**ஏழைகளின் சிறிய சகோதரர் சபை**

- 1888ல் தமது பணியை மேற்கொள்ள இலங்கைக்கு வருகை தந்தனர்.
- இவர்களின் முக்கியமான தூதுப்பணி கைவிடப்பட்ட வயோதிபர்களைப் பராமரித்தல் ஆகும்.

**இரக்கத்தின் கன்னியர் சபை**

- 1896ல் இலங்கைக்கு வருகைதந்த இவர்கள் காலியில் தமது பணியை ஆரம்பித்தனர்.
- பின்னர் மாத்தளை, கேகாலை, இரத்தினபுரிப் பகுதிகளில் தமது சேவையைத் தொடங்கினர்.

**திருத்தூதர் கன்னியர் சபை**

- காலி மறைமாவட்டத்தின் ஆயர் வான்றீத் ஆண்டகை அவர்களினால் 1903ல் காலியில் தேசிய துறவற சபையாக ஆரம்பிக்கப்பட்டது.
- இலங்கையில் தற்போது செயற்படுகின்ற பழைய தேசிய துறவற சபையாகும்.
- இச்சபையின் பாதுகாவலர் புனித மிக்கேல் தேவதூதர் ஆவார்.
- இத்துறவற சபையினால் குளியாப்பிட்டி புனித தூதர் கல்லூரி, தங்கொட்டுவ மகளிர் வித்தியலயம் உட்படப் பல பாடசாலைகளின் நிருவாகத்தை ஆரம்பித்தனர்.

**மாறிஸ்ட் சகோதரர் சபை**

- 1911ல் இலங்கைக்கு வந்து மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியைப் பொறுப்பேற்றனர்.
- 1ம் உலக யுத்தத்தினால் பொருளாதார வீழ்ச்சி காரணமாக 1917ல் இவர்கள் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியைக் கைவிட்டு நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரியைப் பொறுப்பேற்றனர்.
- 1922ல் நீர்கொழும்பு மாரிஸ்ரலா கல்லூரியை ஆரம்பித்தனர்.
- கொழும்பு மறைமாவட்டத்திற்கு உரித்தான களுத்துறை திருச்சிலுவைக் கல்லூரி (1978) நுகேகொட புனித யோசப் கல்லூரி (1985) என்பன இச்சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டதோடு 2009ல் மீண்டும் களுத்துறை திருச்சிலுவைக் கல்லூரி கொழும்பு உயர் மறைமாவட்டத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

**அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினர்**

- 1922ல் இலங்கைக்கு வருகை தந்து திருகோணமலையில் முதலாவது கன்னியர் மடத்தை ஆரம்பித்தமை.
- கல்வியை முதன்மைத் தூதுப்பணியாகக் கொண்டு தங்குமிட வசதியுடன் சிறுவர் விடுதிகளை ஆரம்பித்து நடாத்திச் சென்றமை.

**பிரித்தானியர் காலத்தில் இலங்கையின் கல்வி**

- பிரித்தானியர் காலத்தில் இலங்கையின் கல்விக்காக ஒழுங்கமைக்கப்பட்ட மத்திய பாடசாலைக் ஆணைக்குழு (1841) மூலம் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- ‘கொழும்பு அக்கடமி’ மிகவும் உயர் மட்டத்தில் பேணப்பட்ட பாடசாலையாக மாறியமை
- ஆசிரியர் பயிற்சிக்காக ‘சாதாரண பாடசாலை’ ஆரம்பிக்கப்பட்டமை.
- கல்வியைப் போதிப்பதற்காக மத்திய பாடசாலைகள் மூன்று ஆரம்பிக்கப்பட்டமை (காலி, கண்டி, கொழும்பு)
- கொழும்பிலும் கண்டியிலும் உயர் மகளிர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை

**அருட்தந்தை கிறிஸ்தோப்பர் பொன்ஜின் அடிகளார்**

- உதவி பெறும் பாடசாலைகளை ஆரம்பித்த முன்னோடி
- தேசிய குருமாரைப் பயிற்றுவிப்பதற்காக இலங்கையின் முதலாவது செமினரியாக புனித மாட்டீன் குருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டமை. (1869)
- புனித பேனாட் குருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டமை. (1883)
- கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணியாற்றுவதற்காக முதன்முதலில் மரியாயின் பிரான்சிஸ்கன் சபைத் துறவிகளை ஈடுபடுத்தியமை. (1886 ஜூன் 22)

**உதவி பெறும் பாடசாலை முறை**

- இலங்கையின் கல்விமுறை தொடர்பாக ஆழமான ஆய்வொன்றினை மேற்கொண்டு அரசின் கல்விச் சபைக்கு அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிப்பதற்காக 1865ல் அருட்தந்தை கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் அடிகளார் அழைக்கப்பட்டார். அப்போது அவர் அது தொடர்பாக முழுமையான அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தார். அவ்வறிக்கை 96 பக்கங்கள் அடங்கிய புத்தகமாக 1867ல் வெளியிடப்பட்டது. அதில் பின்வரும் நான்கு பிரேரணைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.
    1. வீட்டைப் போன்றே பாடசாலையிலும் பிள்ளைகளின் கல்வி தொடர்புபட்டிருக்க வேண்டும்.
    2. அத்தகைய கல்வியை வழங்கும் பணியை அந்தந்த சமய அமைப்புக்களிடம் ஒப்படைக்க வேண்டும்.
    3. எந்தச் சமய அமைப்புக்களும் பாடசாலைகளை ஆரம்பித்து நடாத்துவதற்கு இடமளிக்க வேண்டும்.
    4. அரசினால் இத்தகைய பாடசாலைகளுக்குப் பண உதவி வழங்கப்பட வேண்டும்.

- அரசினால் இவ் ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பின்வரும் நன்மைகள் பயக்கப்பட்டன.
    1. எல்லாச் சமயத்தாருக்கும் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டமை.
    2. சிறந்த கல்வியை வழங்கும் பாடசாலைகளுக்கு அரச உதவி வழங்கப்பட்டமை.

- இதனால் கிறிஸ்தவ பாடசாலைகளுக்கு மட்டுமல்ல இதுவரை காலமும் அரசினால் கவனியாது விடப்பட்ட பௌத்த, இந்து, இஸ்லாம் சமயத்தாருக்கும் இது பெரும் உதவியாக அமைந்தது. இதனால் மத பேதமற்று எல்லா மதத்தைச் சார்ந்த பிள்ளைகளும் கல்வியைப் பெறுவதற்கான சிறந்த வழிமுறையாக உதவிபெறும் பாடசாலை முறையை ஆரம்பித்து வைத்த பெருமை அருட்தந்தை பொன்ஜீன் அடிகளாரைச் சார்ந்ததாகும். பல்வேறு மதங்களைச் சார்ந்தோருக்கும் இது மிகவும் பயனுடையதாக அமைந்தது.

**இலங்கையின் சுதந்திரத்துக்கான கிறிஸ்தவர்களின் பங்களிப்பு**

- அக்காலத்தில் இந்நாட்டிலிருந்த ஆங்கில ஆளுனருக்கு எதிராக ஆணையறிக்கை ஒன்றை இரகசியமாகத் தனது காலணியினுள் மறைத்து வைத்துக்கொண்டு பிரித்தானியாவுக்குச் சென்றவர் E. W. பெரேரா என்ற கிறிஸ்தவர் ஆவர்.
- 1915ல் சிங்கள முஸ்லிம் மோதலின்போது எல்லா இனத்தவர்களுக்கும் சமத்துவத்தைப் பெற்றுக்கொடுக்க முன்னின்று உழைத்தவர் கத்தோலிக்கரான அல்பேட் யு. விக்ரமசிங்க ஆவார்.
- இலங்கைத் தேசிய சங்கத்தின் 22வது கூட்டத்தொடரில் இலங்கையைச் 'சுயாதீன இராச்சியம்' ஆக்க வேண்டும் என திரு. J. R. ஜயவர்த்தன அவர்கள் ஆலோசனை கூறியபோது அதனை உறுதிப்படுத்தியவர் கத்தோலிக்கரான திரு. J. A. L. குரே ஆவார்.
- பிரித்தானியர் ஆட்சியை எதிர்த்துக் கத்தோலிக்கரான திரு. ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் பகிரங்கமாகக் கூட்டங்களை நடாத்தினார்.
- எனவே இச்செயற்பாடுகளை உற்றுநோக்கும்போது இலங்கையின் சுதந்திரத்துக்காகக் கத்தோலிக்கர்கள் முன்னின்று உழைத்தமை புலப்படுகின்றது.

**கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.**

- பிரித்தானியர் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டு மறைத்தூதுக் குழுவினர்கள் ஆறினை பெயரிடுக.

- ‘‘பிரித்தானிய காலத்தில் இலங்கையின் திருச்சபை’’ எனும் தலையங்கத்தின் கீழ் நூறு சொற்களுக்கு குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.
- பிரித்தானியர் காலத்தில் இலங்கையின் கல்வி பணிக்காக நிறுவப்பட்ட மத்திய பாடசாலை ஆணைக்குழுவினரால் (1841) முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டங்கள் மூன்றினை குறிப்பிடுக.
- இலங்கையின் சுதந்திரத்திற்காக கிறிஸ்தவர்கள் ஆற்றிய பங்களிப்பினை ஐந்து காரணிகள் ஊடாக விளக்குக.

**உசாத்துணை நூல்கள்**


1. கொலமுன்னே, திமதி (அருட்தந்தை), சிரிலக் கிதுசசுன இரண்டாம் வெளியீடு, பிரன்சிஸ்கன் இல்லம், போலவலான 2006.
2. கோமஸ், ஒஸ்வல்ட் (பேராயர்), கத்தோலிக்க யடகியாவ (ஸ்ரீ லங்காவ), போராயர் இல்லம், கொழும்பு 8, 2012.
3. டொன் பீற்றர். டபில்யூ. எல். ஏ (அருட்தந்தை) லக்திவ கதோலிக வியாப்தி சமய தேவதர்ம நிகேத்தன பிரகாசயன, கொழும்பு 8. 1995.
4. வெல் கம்பொல, ரீட்டா, லக்திவ இதுனு குரானய, கத்தோலிக்க வெளியீட்டு மத்திய நிலையம், பேராயர் இல்லம். கொழும்பு 8, 2003
5. தசனாயக, யூட் (அருட்தந்தை), ஸ்ரீ லங்கா கத்தோலிக்க சபா இத்தியாசய ஹ பெந்துனு ரதகுரு பதவி ஹ பெவிதி நிக்காயன் கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 8, 2013

**தேர்ச்சி 9:0 : இலங்கையில் கிறிஸ்தவ தனித்துவத்தின் மூலம் நற்செய்தியின் பணியாளராகச் சான்று பகர்வார்**

**தேர்ச்சி மட்டம் 9:5 : தேசிய தலத் திருச்சபையைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்வார்.**

**பாடவேளைகள் : 20**

**கற்றல் பேறுகள்**

- சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலத்தில் இலங்கையில் கிறிஸ்தவ மறை தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.
- சுதந்திரத்துக்குப் பின் தேசிய மயமாக்கலுக்காகத் திருச்சபை எடுத்த முயற்சிகளை வரவேற்பார்.
- கோவைப் படுத்திய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- இலங்கைத் திருச்சபையின் தேசிய மயமாக்கலுக்காகப் பாடுபடுவார்.
- தேசிய திருச்சபை ஊட்டம் பெற ஒத்துழைப்பார்.

### 9.5.1 சுதந்திர காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க மதம்

- சுதந்திர இலங்கையில் கடந்த 60 வருடத்துக்கு மேலான காலப்பகுதியில் பல்வேறுபட்ட பிரச்சினைகள், சவால்கள், இடையூறுகளைக் கடந்து இன்றைய நிலைக்கு திருச்சபை பயணித்து வந்த பாதை மிகவும் இலகுவானதாக, மகிழ்சியானதாக இருக்கவில்லை என்பது புலனாகின்றது. பல்வேறு காலகட்டங்களில் அரசியல், சமூக, பொருளாதார, சமய செல்வாக்குகள், சவால்கள், பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து உதவியைப் பெற்றுக்கொண்டது. அன்றைய சமய கோட்பாடுகளில் சற்றேனும் சளைக்காது பயமின்றிக் கிறிஸ்துவின் நற்செய்திக்குச் சாட்சியம் பகர்ந்து முன்னெடுத்து வந்த இந்த வருகை முழுக் கிறிஸ்தவ சபையினதும் பெரும்பேறு என்பது தெளிவாகின்றது. இங்கு மலைப்பொழிவின் போது கிறிஸ்து கூறிய ‘‘என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும்.’’ என்ற கூற்று திருச்சபையின் வளர்ச்சிக்கு மிகப்பெரும் சக்தியாகவும் பலமாகவும் விளங்குகின்றது.
- இன்றைய சமுதாயத்தில் இலங்கைத் திருச்சபையைப் பற்றி ஆராயும்போது கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறு கிறிஸ்தவ சபைகளினூடாக நடைபெறும் மறைபரப்புப்பணி மற்றும் கிறிஸ்தவ சான்று பகரும் வாழக்கை தொடர்பாகக் கவனம் செலுத்துதல் முக்கியமானதாகும்.
- இச்சபைகள் உத்தியோகபூர்வமாகவும் அதன் அங்கத்துவம் சுயாதீனமானதாகவும் தமது கிறிஸ்தவ அழைப்பினூடாகச் செயற்படுவதற்கும் இந்நாட்டில் பிறந்த மக்கள் தமது தாய் நாட்டிற்கு ஆதரவாகவும் உற்சாகத்துடனும் சேவை செய்தமை தெளிவாகின்றது. இந்நாட்டுக் கிறிஸ்தவர்கள் வெளிநாட்டு வாழ்க்கை முறையைப் பின்பற்றும் குழுவினரல்லர். இந்நாட்டில் பிறந்து இந்நாட்டுச் சமூகத்தில் வளர்ந்து, தமக்குரிய ஆற்றல்கள் திறமைகளைச் சமூக வளர்ச்சிக்காகவும் அபிவிருத்திக்காகவும் பயன்படுத்தும் குழுவினராவர். சுதந்திரப் போராட்டத்துக்காகப் பாடுபட்டு அர்ப்பணித்துப் பல்வேறு தியாகங்களைச் செய்த முன்னோர்கள் மத்தியில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்பது வெளிப்படை. அத்துடன் இந்நாட்டின் ஒற்றுமைக்காகவும் அமைதிக்காகவும் கடந்த 30 வருட காலமாக நிலவிய போர் மோதல்களில் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்தோர் மத்தியில் கிறிஸ்தவர்கள் பலர் இருந்துள்ளனர். இவ்வாறே இந்நாட்டின் கல்வி, பண்பாடு, கலை, நாடகம், எழுத்துக்கலை, சமூக நலன்புரி இரக்கப்பணிகள் ஆகிய பல்வேறு துறைகளில் கிறிஸ்தவ சபை நிறைவேற்றிய பணிகளும் தமது ஆற்றல்கள் திறமைகளைப் பயன்படுத்திக் கிறிஸ்தவர்கள் காட்டிய பங்களிப்பும் பல்வேறு மதிப்பீடுகளும் விமர்சனங்களும் உள்ளன. இவற்றுள் சில துறைகளில் முன்னோடிகள் கிறிஸ்தவர்கள் என்பதை வரலாறு உறுதிப்படுத்துகின்றது.

- சுதந்திரத்தின் பின் திருச்சபை எதிர்கொள்ள வேண்டிய மோதல்கள் சவால்கள் எவ்வளவோ அவற்றுக்கு முகங்கொடுத்துக் கசப்புகளை மறந்து திருச்சபை இன்னும் தமது பங்களிப்பைப் பல்வேறு துறைகளுக்கு வழங்கி வருகிறது. கிடைக்கப்பெற்ற குறுகிய காலத்தினுள் கல்வியிலும் கிறிஸ்தவ பங்களிப்பு முக்கியமானது. கிறிஸ்தவ பிள்ளைகளை கிறிஸ்தவ விழுமியங்களுக்குள் வளரப்பதற்கும் நடத்தை விருத்தியையும் ஆளுமையையும் கட்டியெழுப்பும் நோக்கத்தடனும் திருச்சபையினால் நடாத்தப்பட்ட பாடசாலைகளையும் கல்வி நிறுவனங்களையும் பிறசமயத்தவரும் விரும்பினர். கல்வி, தொடர்பாடல், பண்பாடு, சமூக இரக்கப்பணிகள் ஆகிய சகல துறைகளிலும் கிறிஸ்தவ சான்றினை முன்னெடுத்து கிறிஸ்தவ விழுமியங்கள் வழியாக அவற்றை நடாத்திச் சென்று சமூகத்தில் 'புளிப்புமாவைப்' போன்று ஏனையோருக்கும் முன்மாதிரியாக இருந்து கிறிஸ்துவின் நற்செய்திக்குச் சான்று பகரும் முகமாக தற்கால சமூகப் பின்னணியில் இலங்கை கிறிஸ்தவ சபை செயற்படுகின்றது. கிறிஸ்து எம்மைப்போன்று ஆசியாவில் பிறந்த ஆசிய கலாசாரத்தைக் கொண்ட சமூகத்தில் மனுவுரு எடுத்த இறைமகன் ஆவார். இதனால் அவற்றின் படிப்பினைகளில் உள்ளவற்றோடு எம்மைத் தொடர்புபடுத்துவதற்கு திருவழிபாடு, இறை ஆராதனைச் சடங்குகள் என்பவற்றைத் திருச்சபை ஒழுங்குசெய்வதில் பெருமுயற்சி எடுக்கின்றது.
- கடந்த காலத்தைப் போலல்லாது இன்று நம்நாட்டில் திருச்சபைத் தலைவர்கள், துறவிகள், பொது நிலையினர்களில் பெரும்பாலானோர் சுதேச மக்களாவர். எனவே பிறநாட்டு மிசனரிமார் இந்நாட்டில் திருச்சபையை நடாத்திய காலத்தைவிட இந்நாட்டுப் பண்பாட்டு விழுமியங்கள், இந்நாட்டுப் பழக்கவழக்கங்கள், நடத்தை என்பவற்றுக்குள் தேசிய தனித்துவம் நிறைந்த திருச்சபையைக் கட்டியெழுப்பவதற்கு உள்ள வசதிகள் முன்னரைவிட அதிகமாகும் என்பது தெளிவாகின்றது. எனவே தேசிய தனித்துவத்தைக் கட்டியெழுப்புவது ஒரு நீண்ட காலப்பணி மட்டுமன்றி ஒரு சவாலாகவும் உள்ளதென்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

  தற்காலத்தில் திருச்சபை முகங்கொடுக்க வேண்டியுள்ள சவால்கள் பல. பணியினைத் தொடர்ந்து ஆற்றும் போது எதிர்கொள்ளவேண்டிய எதிர்ப்புக்கள், தவறாக விளங்கிக்கொள்ளல், நிந்தனைகள் தீவிரவாதிகளின் தாக்கங்கள் என்பவற்றை எதிர்கொண்டு இந்நாட்டுச் சமூகத்தில் உண்மையான கிறிஸ்தவ பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு கிறிஸ்தவ பிரஜைகளாக நாட்டுக்காக தமது கடமைகளை நிறைவேற்றத் திருச்சபை பின்னிற்க முடியாது. இவ்வாறே இந்நாட்டிலுள்ள பௌத்த, இந்து, இஸ்லாம் தலைவர்களுடனும் அங்கத்தவர்களுடனும் புரிந்துணர்வோடு செயற்படுவதுடன் அவர்களுடன் அன்னியோன்னிய அன்போடு செயற்பட்டுக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் நற்செய்திக்குச் சான்றுபகர்தல் தற்கால திருச்சபையின் பொறுப்பாகும்.
- ஒரே திருச்சபையாக ஒரே கிறிஸ்தவர்களாக சான்று பகர்வதற்கு இதன் வழியாக இலங்கைச் சமூகத்துக்குக் கிறிஸ்து உயிருள்ள அடையாளம் ஆவதற்கு இந்நாட்டுக் கிறிஸ்தவர்கள் செயலாற்ற வேண்டும். இதற்காக இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளைத் திருச்சபை உச்ச அளவில் பயன்படுத்திச் செயலாற்ற வேண்டும்.

### 9.5.2 சுதந்திரத்தின் பின் திருச்சபை எதிர்கொண்ட சவால்கள்

- இலங்கைப் பிரித்தானிய பேரரசின் கீழ் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டுப் பின்னர் 1948 பெப்ரவரி 4ம் திகதி அரசியல் சுதந்திரம் அடைந்தது. அக்காலத்தில் நாட்டில் நிலவிய அரசியல், சமூக, கலாசார, பொருளாதாரப் பின்னணியில் மனுவுருவான கிறிஸ்துவின் மீட்பின் நற்செய்தியை இந்நாட்டில் பரவச்செய்து தூதுப்பணியில் ஈடுபடும்போது திருச்சபை முகங்கொடுக்க நேரிட்ட பிரச்சினைகள் பலவாகும். அவற்றுள் சில முக்கிய பிரச்சினைகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

**கல்வி மற்றும் பாடசாலைகளை அரசு சுவீகரித்தல்**

- 1960ல் இடம்பெற்ற தேர்தலில் ஆட்சிக்குவந்த அரசினால் உதவிபெறுகின்ற சமயப்

பாடசாலைகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டதும் அதன் விளைவுகளும் இந்நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் திருச்சபை எதிர்கொண்ட சவால்களில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. அன்று அரசு அத்தீர்மானத்தை எடுப்பதற்கான காரணம் எதுவாக இருப்பினும் அன்று முதல் அரைநூற்றாண்டு வரையான காலப்பகுதியில் இந்நாட்டுக் கல்வியின் முன்னேற்றம் மற்றும் ஒழுக்கம்பற்றிப் பேசுகின்ற நடுநிலமை வகிக்கும் விமர்சகர்கள் அத்தீர்மானத்தால் ஏற்பட்ட விளைவுகள் முழுநாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்திய விதம் பற்றி அடிக்கடி வெளிப்படுத்தியதை அறிகின்றோம்.

- பின்னர் 1886ல் கொழும்பின் பேராயராக நியமிக்கப்பட்ட மேதகு கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் ஆண்டகை இந்நாட்டுக் கத்தோலிக்க கல்வி மற்றும் பாடசாலை முறைகளின் முன்னேற்றம் கருதி அருட்தந்தையாக இருந்த காலத்திலிருந்தே அர்ப்பணிப்போடு அதற்கான அத்திவாரத்தை அமைப்பதில் முன்னோடியாக இருந்தார். உதவி பெறும் பாடசாலை முறைமைக்குச் சமனான ஆங்கில மொழியைப் போன்றே தேசிய மொழியும் கல்வியில் இணைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியவர் இவராவர். இவர் ஒழுங்குசெய்த உதவி பெறும் பாடசாலைத் திட்டமானது 1867ல் அரசின் கல்விச் சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு சமய உதவி பெறும் பாடசாலை என்னும் பெயர் வழக்கத்திற்கு வந்தது. இம்முறையின் கீழ் எல்லாப் பிரஜைகளும் தத்தமது சமயத்தை வழிபடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்தியதோடு தமது பிள்ளைகளின் கல்விக்காகத் தாம் விரும்பிய பாடசாலையைத் தெரிந்தெடுப்பதற்கும் பெற்றோருக்கு உரிமை உண்டெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

  இவ்வாறாக இந்த முறையின் கீழ் எல்லாச் சமயத்தாருக்கும் பாடசாலைகளை அமைப்பதற்கும், பாடசாலை நிர்வாகம், முகாமைத்துவம் தொடர்பாகவும் முழுமையான சுதந்திரம் கொடுக்கப்பட்டது. கத்தோலிக்க திருச்சபையால் நிர்வகிக்கப்பட்ட பாடசாலைகளில் நிலவிய ஒழுக்கம் ஒழுங்கு முறையான கல்வி, நுட்பம் என்பவை காரணமாக இப்பாடசாலைகள் பிற மதத்தினர் மத்தியில் பிரபல்யமாகின. பிறமதத்தினரும் தமது பிள்ளைகளை கத்தோலிக்கப் பாடசாலைகளில் அனுமதிப்பதற்கு முயன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கத்தோலிக்கர் அல்லாத மாணவர்கள் இப்பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவதற்கான காரணம் யாதெனில் கத்தோலிக்கப் பிள்ளைகளைப் போல் கல்வி மற்றும் ஒழுக்கம் எனபவற்றை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தமையாகும்.

- இவ்வாறான சமூகப் பின்னணி உருவாகியிருந்தபோது 1956ல் பொளத்த ஆணைக்குழுவின் அறிக்கையில் உதவி பெறும சமயப் பாடசாலைகள் அரசினால் சுவீகரிக்கப்படுதல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின்படி 1960ல் கத்தோலிக்க திருச்சபைத் தலைவர்களினதும் மக்களினதும் கடும் எதிர்ப்பின் மத்தியில் சமயப் பாடசாலைகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டன.

  இத்தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டதால் பாடசாலைகளின் கல்வி அணுகுமுறை, ஒழுக்கம் மற்றும் ஒழுக்கநெறிகள் நடத்தை உருவாக்கத்தில் ஏற்பட்ட தாக்கங்கள் பற்றி பின்னர் இலங்கைச் சமூகத்தில் ஏற்பட்ட நிகழ்வுகள் என்பவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது விளங்கிக்கொள்ளமுடியும். பாடசாலைகள் மட்டுமன்றி ஆசிரியர் கல்லூரிகளும் அரசினால் சுவீகரிக்கப்பட்டன. 40 பாடசாலைகள் அரசினால் உதவி பெறாது மாணவர்களுக்கு எவ்வித உதவியுமின்றி நடாத்திச் செல்வதற்கு அனுமதி கிடைத்தபோதும் அப்போதைய பொருளாதார வீழ்ச்சி காரணமாக அவற்றுள் சில அரசின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டன. 1980ல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தனா அவர்களின் பணிப்புரையின்படி ஏனைய பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு அரசினால் சம்பளம் வழங்கப்பட்டது.

- இப்பிரச்சினை திருச்சபைக்குப் பெரியதொரு இடையூறினை எற்படுத்தியது. கத்தோலிக்க பாடசாலைகளின் மாணவர்களுக்கு சமயக் கல்வியை வழங்குதல் மறுக்கப்பட்டதோடு பல பாடசாலைகளில் கத்தோலிக்க ஆசிரியர்களும் அதிபர்களும் இல்லாமற்போயின.

  பங்குமட்டத்தில் மறைப்பாடசாலைகள் நாளுக்குநாள் வளர்ச்சியடைந்தன. கத்தோலிக்க திருச்சபையினுள் பங்குத்தந்தையர்களுக்கும் பெற்றோருக்கும், மாணவர்களுக்கும் இடையில்

நெருங்கிய தொடர்பு உறவு ஏற்பட்டது.

**துறவற சகோதரிகள் அரச மருத்துவமனைகளில் சேவையாற்றுவது நிறுத்தப்பட்டமை**

- 1956ல் பௌத்த ஆணைக்குழு அறிக்கையின்படி இலங்கை அரசினால் மருத்துவமனைகளில் சேவையாற்றும் துறவிகள் நீக்கப்படவேண்டும் என்ற கட்டளை 1958 ஒக்டோபர் 1ம் திகதி முதன்முதலாகக் கொண்டுவரப்பட்டது.
- 1964ல் மரியாவின் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த 64 துறவிகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் 11பேர் ஹெந்தல குஷ்ரரோக வைத்தியசாலையிலும் 7பேர் மாந்தீவு குஷ்ரரோக வைத்தியசாலையிலும் பணியாற்றினர். அரசு இத்துறவறசபையோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கவில்லை. இவர்களுக்கு 1964 மார்ச் 15ம் திகதிக்குமுன் இவ்வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறும்படி கூறியது. அதன்படி நோயாளர்களினதும் வைத்தியசாலைப் பணியாளர்களினதும் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இவர்கள் அரசாங்க வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறினார்கள். இவர்களின் துறவற கன்னியர் மடங்கள் வைத்தியசாலைகளில் இருந்து அகற்றப்பட்டாலும் தேவாலயங்கள் அகற்றப்படாமல் அன்றுதொட்டு இன்றுவரை குருக்களால் திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவ்வாறு தாதிச் சேவையிலிருந்து நீக்கப்பட்ட கன்னியர்கள் வேறு நாடுகளால் வரவேற்கப்பட்டனர். 1927 மார்ச் 1ம் திகதி தொடக்கம் நாவலப்பிட்டி பெரிய வைத்தியசாலையில் பணியாற்றிய திருக்குடும்ப கன்னியர்கள் 1964 மார்ச் 11ம் திகதி அங்கிருந்து நீக்கப்பட்டனர்.
- 1929 ஜனவரி 22ம் திகதி தொடக்கம் ராகமை கயரோக வைத்தியசாலையில் பணியாற்றிய சதாசகாய அன்னையின் துறவிகள் 1963 ஜூன் 22ம் திகதி அங்கிருந்து நீக்கப்பட்டனர்.

  1936 ஜூன் 1ம் திகதி தொடக்கம் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் பணியாற்றிய திருச்சிலுவைக் கன்னியர்கள் 1963 ஜூன் 1ம் திகதியும் 1938 நவம்பர் 30ம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் பணியாற்றிய திருச்சிலுவைக் கன்னியர்கள் 1963 நவம்பர் 30ம் திகதியும் அங்கிருந்து நீக்கப்பட்டனர். 1948 ஒக்ரோபர் 1ம் திகதி தொடக்கம் வெலிசற கயரோக வைத்தியசாலையில் பணியாற்றிய துறவிகளும் 1963 ஒக்ரோபர் 1ம் திகதி பணியிலிருந்து நீக்கப்பட்டனர்.

  1949 ஆகஸ்ட் 31ம் திகதி தொடக்கம் கண்டி பெரிய வைத்தியசாலையில் பணியாற்றிய மெரி னோல் துறவிகள் 1962ல் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். 1954 மாரச் 1ம் திகதி குருநாகல் வைத்தியசாலையில் பணியாற்றிய இரட்சிப்பின் துறவிகள் 1959 பெப்ரவரி 28ல் பணியிலிருந்து நீக்கப்பட்டனர்.

**துறவிகளின் 'VISA' குடிவரவுச் சீட்டு செல்லுபடியற்றதாக்கப்பட்டமை**

இலங்கையரல்லாத துறவிகளின் விசா செல்லுபடியற்றதாக்கியமையால் வெளிநாட்டு மறைபரப்பாளர்கள் 300பேர் அளவில் இந்நாட்டிலிருந்து வெளியேறினர்.

**கிறிஸ்தவ சமயத்தவர்கள் மீதான இரக்கமற்ற விமர்சனங்கள்**

- கிறிஸ்தவ சமயத்தவர்கள் மீதான இரக்கமற்ற விமர்சனங்களும் போர்த்துக்கேயர் காலத்தில் சில போர்த்துக்கேய தளபதிகளினதும் படைவீரர்களினதும் கொடூர செயல்களை எடுத்துக்காட்டி அக்குற்றங்களை கத்தோலிக்கர் மீது சுமத்தி இரக்கமற்ற விதத்தில் விமர்சித்ததும் கத்தோலிக்கர் போர்த்துக்கேயரின் ஒரு மக்கள் பிரிவு என்பதால் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிந்தனைகளுக்கு உட்படுத்துவதும் இங்கு அவதானிக்கக்கூடியதாக இருந்தது. தேசிய பழக்கவழக்கங்களின் காப்பளராக இருந்த உயர்மட்ட சமூகத்தினர் கிறிஸ்தவர்களை விமர்சித்தும் கிறிஸ்தவர்களின் தேசிய கலாசாரத்தை மதிக்காத வித்தியாசமான போக்குடையவர்கள் என்றும் குற்றம் சாட்டினர்.
- நற்செய்தியைப் பரப்பும் தூதுப்பணியாகிய கிறிஸ்தவ கடமை 'கத்தோலிக்க முற்றுகை'என முறையற்ற விமர்சனத்துக்கு உள்ளானமை திருச்சபை முகங்கொடுக்க நேர்ந்த முக்கிய சவாலாக இருந்தது.

**இன ரீதியான மோதலும் அமைதிச் செயற்பாடும்**

- 1970இன் முன்னரைப்பகுதியில் இலங்கைச் சமூகத்தில் தோன்றிய சிங்கள – தமிழ் மோதலின்போது ஏற்பட்ட அழிவுகள் இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் சொற்பமானதல்ல. சிலரால் இன ரீதியான கலகமாகவும் பயங்கரவாதமாகவும் விளக்கம் கூறப்பட்ட இம்மோதல்களையும் துன்புறுத்தல்களையும் எதிர்கொண்டு நற்செய்திக்கேற்ப செயலாற்றுவதற்கு இந்நாட்டு கத்தோலிக்க திருச்சபை முன்னெடுத்த செயற்பாடுகள் வெளிச்சமூகம் பிழையாக விளங்கிக் கொள்வதற்குக் காரணமானதோடு அவை திருச்சபைக்கு விடுக்கப்பட் முறைப்பாடுகளிலிருந்து தெளிவாகின்றன. திருவிவிலிய சிந்தனைகளும் கண்ணோட்டமும் துன்புறுத்தல்களையும் போர் மோதல்களையும் முற்றாக எதிர்க்கின்றது. மனித மாண்பை மாசுபடுத்தும் மனித உரிமைகள் மீதும் இம்சையான கொள்கைகளை ஆதரிக்க கிறிஸ்துவைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களுக்கும் கத்தோலிக்க திருச்சபைக்கும் முடியாது. இவ்வாறே இக்கலகங்களுக்கு அடிப்படையான சிங்கள – தமிழ் இனங்களுக்காக வடக்கையும் தெற்கையும் இணைப்பதன் வழியாக ஒரே திருச்சபையின் ஒரே பிள்ளைகளாக இருப்பதும் ஒரே இறைவனை வழிபடும் இறைவனின் பிள்ளைகள் என்ற காரணத்தினால் இனவாத பிரிவினைகளையும் துன்புறுத்தல்களையும் நீக்கிக் கலந்துரையாடல் வழியாகவும் அமைதிச் செயல்கள் வழியாகவும் தீர்வுகளைப் பெற்று அரசியல் தீர்வுக்குச் செல்லுமாறு சம்பந்தப்பட்ட பிரிவினர்களுக்கு அறிவுறுத்தவும் அச்சமின்றி முன்னிற்க வேண்டிய நிலை திருச்சபைக்கு ஏற்பட்டது. இக்குறிக்கோள் காரணமாகக் கிறிஸ்தவர்கள் இந்நாட்டிற்கு அன்பில்லாதவர்கள் என்றும் பயங்கரவாதத்துக்குத் துணைபோகின்றவர்கள் என்றும் ஊடகங்கள் மூலம் நீதியற்ற விமர்சனங்களுக்கு உள்ளாகியமை திருச்சபை எதிர்நோக்கிய சவாலாக இருந்தது. எனினும் ‘‘அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்’’ என்ற கிறிஸ்துவின் கூற்றுக்கேற்ப அமைதியான அரசியல் தீர்வுக்காக முன்னிற்பதோடு இம்சைகளையும் மோதல்களையும் சகித்து உண்மையான கிறிஸ்துவைச் சான்றுபகரத் திருச்சபை முன்வந்தது. உண்மையான அமைதியை உருவாக்க அனைவரினதும் உரிமைகளை மதித்து அனைவருக்கும் நீதி கிடைக்கவேண்டுமென்றும் திருச்சபையின் போதனைக்காக முன்னிற்பதும் சமூகத்தின் சவாலாகும் என்பது தெளிவாகின்றது.

**பிரிந்து சென்ற கிறிஸ்தவ இயக்கங்கள்**

- அண்மைக்கால வரலாற்றில் திருச்சபை எதிர்கொள்ள வேண்டியேற்பட்ட பாரிய பிரச்சினையானது சிலரால் அடிப்படைவாதிகள் என அழைக்கப்படும் பிரிந்து சென்ற கிறிஸ்தவ சமய இயக்கங்கள், இவற்றைப் பின்பற்றுபவர்கள், அவர்கள் பின்பற்றும் மறைப்பிரசார அணுகுமுறைகள் என்பனவாகும். நல்லொழுக்கத்திற்கு எதிரான செயல்கள் வழியாக பிறமறையினரைத் தமது மறைக்கு மாற்றுவதற்காக முறைப்பாடு செய்வதோடு அதனைக் கட்டாய மதமாற்றம் எனவும் வரைவிலக்கணம் வழங்கப்பட்டது. பாரம்பரியமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கிறிஸ்தவ சபைகளுக்கும் இந்த கிறிஸ்தவ சமய இயக்கங்களுக்குமிடையிலுள்ள தெளிவான வேறுபாட்டைத் தெரிந்தும் தெரியாமலும் இதைப்பற்றிய பிற சமயத் தலைவர்களும் அமைப்புக்களும் கத்தோலிக்க சபையையும் முக்கியமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாரம்பரிய சபைகளையும் விமர்சனம் செய்தனர்.
- இந்த விமர்சனங்களும் அடிப்படைவாத சமய இயக்கங்களினதும் ஒழுக்கமற்றதாக அழைக்கப்படும் செயற்பாடுகள் இந்நாட்டுத் திருச்சபைக்குப் பிரச்சினையானது. இதனைப்பற்றிச் சமூகத்தில் நிலவுகின்ற சிந்தனைகள் எந்தளவு உக்கிரம் அடைந்துள்ளதெனப் பார்க்கையில் மதமாற்றத் தடைச்சட்டப் பிரதியொன்று 2004ல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதனைப்பற்றிய பல்வேறு உரையாடல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அடிப்படைவாதிகளின் செயற்பாடுகளைக் காரணங்காட்டி இலங்கைத் திருச்சபை எதிர்பாராத விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தமை பாரதூரமான பிரச்சினையாக உள்ளது.

**தேசியமயப்படுத்தலுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.**

- திருவழிபாட்டின் உத்தியோகபூர்வ மொழி இலத்தீன் எனினும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்னர் சுயமொழிகளில வழிபாடுகளை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டதோடு இலங்கையின் சிங்கள தமிழ் மொழிகளில் திருவழிபாடுகளை நடாத்த முடிந்தது.
- திருவழிபாட்டுச் சடங்குகளில் செயற்பாடுள்ள பங்களிப்பு முக்கிய இடம் வகித்ததால் திருவழிபாட்டில் செயற்பாடுள்ள பங்களிப்பு வளர்ச்சியடைந்தது. சுயமொழிகளில் பாடல்களைத் தயாரிக்கவும் அனுமதி அளிக்கப்பட்டது. தேசிய இசைக்கேற்பவும் பாரம்பரியத்திற்கேற்பவும் பாடல்கள் தயாரிக்கப்பட்டன. திருவழிபாட்டுச் சடங்குகளில் குறிப்பிடப்பட்ட பணிகளுக்காக அவ்வப் பதவிகளுக்குரியதான பணிகளை அர்த்தமுள்ள முறையில் நிகழ்த்திட வழிபிறந்தமை. திருவழிபாட்டில் பாவிக்கப்படும் திருப்பலிப் பொருட்களும் உடைகளும் உள்நாட்டுப் பண்புகள் பழக்கங்களுக்கேற்பத் தயாரிக்கப்பட்டமை.
- ஆலயங்களைக் கட்டும்போது உள்நாட்டுக் கலைகளுக்கும் கட்டிடக் கலைக்குமேற்ப நிர்மாணிக்கப்படல்
- திருமணம் மற்றும் பல்வேறு திருவிழாக்களின்போது உள்நாட்டுச் சம்பிரதாயங்களின்படி அலங்காரம், கலையம்சங்கள் என்பவற்றைச் சேர்த்துக்கொள்ளல்.
- இறைவார்த்தைக்கு முக்கிய இடம்கொடுத்தலும் அதற்கு உயிரூட்டமுள்ள அன்பையும் மரியாதையையும் அளித்தல்.
- உரோமன் சடங்குகளில் தனித்துவத்தைப் பாதுகாப்பதைப்போல திருவழிபாட்டு நூல்களைச் சுயமொழிகளில் மொழிபெயர்க்க அனுமதி கிடைத்தமையால் சுயமொழிகளிலான நூல்களை திருவழிபாடுகளில் பயன்படுத்துதல்

**சுதந்திர காலத்தில் மேற்றிராசன வெளியீடு**

- 1944 டிசம்பர் 6ம் திகதி கொழும்பு மேற்றிராசனத்தின் பெயர் 'இலங்கைக் கொழும்பு உயர் மறைமாவட்டம்' எனத் திருத்தந்தை 12ம் பத்திநாதர் அவர்களால் மாற்றப்பட்டது. மீண்டும் 1972 மே 22ம் திகதி திருத்தந்தை 6ம் பவுலினால் 'கொழும்பு பேராயர் மறைமாவட்டம்' என்ற பெயர் சூட்டப்பட்டது.
- 1939ல் சிலாப மறைமாவட்டமும், 1972ல் பதுளை மறைமாவட்டமும், 1981ல் மன்னார் மறைமாவட்டமும், 1982ல் அநுராதபுர மறைமாவட்டமும், 1987ல் குருநாகல் மறைமாவட்டமும், 1995ல் இரத்திபுரி மறைமாவட்டமும், 2012ல் திருகோணமலை மறைமாவட்டமுமாக 11 மறைமாவட்டங்கள் இலங்கையில் காணப்படுகின்றன.

**கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.**

- சுதந்திரத்தின் பின் திருச்சபை எதிர்கொண்ட சவால்கள் மூன்றினை சுருக்கமாக விளக்குக.
- சுதந்திர காலத்தில் இலங்கையின் கத்தோலிக்க மதம் தொடர்பான காரணிகள் 10 எழுதுக.
- இலங்கை திருச்சபை தேசிய மயமாக்கப்பட எடுத்த நடவடிக்கைகள் ஐந்து குறிப்பிடுக்.

**உசாத் துனை நூல்கள்**


1. கொலமுன்னே, திமதி (அருட்தந்தை), சிரிலக் கிதுசசுன இரண்டாம் வெளியீடு, பிரன்சிஸ்கன் இல்லம், போலவலான 2006.
2. தசனாயக, யூட் (அருட்தந்தை), ஸ்ரீ லங்கா கத்தோலிக்க சபா இத்தியாசய ஹ பெந்துனு ரதகுரு பதவி ஹ பெவிதி நிக்காயன் கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 8" 2013"
3. கோமஸ், ஒஸ்வல்ட் (பேராயர்), கத்தோலிக்க யடகியாவ (ஸ்ரீ லங்காவ), போராயர் இல்லம், கொழும்பு 8, 2012.

**தேர்ச்சி 10.0 : மனித மாண்பைப் பாதுகாப்பதோடு வேற்றுமையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 10.1 : இன்றைய சமூக வாழ்விலே கிறிஸ்தவ கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவார்.**

**பாடவேளைகள் : 15**

**கற்றல் பேறுகள் :**

- மனித மாண்பைப் பேணக் கிறிஸ்தவர்கள் செயற்பட வேண்டிய முறை பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.
- ஏனையோருக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- மனித முன்னேற்றத்திற்காக உழைப்பார்.
- மோதல்களைக் களைந்து சமாதானமாக வாழ்வார்.

### 10.1.1 மனித மாண்பு

இவ்வுலகில் பிறக்கும் எல்லா மனிதர்களுக்கும் இயற்கையாகவே விசேட தன்மை வாய்ந்த மதிப்பும் மேன்மையும் உண்டு. மனிதனின் நிலைப்பாடு, வளர்ச்சி மற்றும் சமூகச் செயற்பாடுகள் பற்றி நோக்கும் போது எல்லா விலங்குகளினதும், உயிரினங்களினதும் மத்தியில் அறிவாற்றலாலும், ஞானத்தாலும், சிந்திக்கும் ஆற்றலாலும் தொடர்பு கொள்ளும் ஆற்றலாலும் நிறைந்த உயர் விலங்கு மனிதன் ஆவான். எல்லா மதங்களும் மனிதத்துவம் பெறுவதை மிகவும் உயர்ந்த நிலையாக கருதுகிறது.

**மனிதத்துவத்தின் மாண்பு பற்றிய திருவிவிலிய சிந்தனை**

- இறைவன் மனிதனைத் தனது சாயலாகவும், பாவனையாகவும் படைத்தார். (தொ.நூ : 1:27,28)
- இறைவன் தாம் படைத்த எல்லாவற்றையும் ''நல்லது'' என்று கண்டார். ஆயினும் படைப்பின் சிகரமான மனிதனைப் படைத்த நாளில் மட்டும் 'மிக நல்லது' என இறைவன் கூறுகிறார். (தொ.நூ :1:31)
- அனைத்துப் படைப்புக்கள் மத்தியிலும் இறைவனின் உயிர் மூச்சு மனிதனுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. அதன் மூலம் மனிதனின் மாண்பு வெளிப்படையாகிறது. (தொ.நூ :2:7)
- இறைவனால் அனைத்தும் படைக்கப்பட்ட போதும், மனிதனே அவற்றுக்குப் பெயரிட்டான். அவ்வாறு செய்வதன் மூலம் படைப்பின் மீது மனிதனுக்கு அதிகாரம் வளங்கப்பட்டுள்ளது. (தொ.நூ :2:19)
- இறைமகனாகிய இயேசு மனித சாயல் எடுத்து மனுவுருவானார். அவர் மனித சாயல் எடுத்தது மனிதனைப் பாவ அடிமைத்தனத்தில் இருந்து விடுவிப்பதற்கே ஆகும். (யோவா 1:14, மத் 1:20, லூக் 1:35)
- மனிதன் பெற்றுள்ள சுதந்திரம் அவனுள் உள்ள இறைசாயலின் அடையாளமாகும். சுதந்திரமாக முடிவெடுக்கும் ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உரிய கொடையாகும். ஆயினும் விலங்குகளுக்கு அவ்வாறு முடிவெடுக்கும் ஆற்றல் இல்லை. இயல்பூக்கத்தினால் செயற்படும் ஆற்றல் மட்டுமே விலங்குகளுக்கு உண்டு.
- மனிதன் மாண்புடையவனாக இருப்பதற்கான காரணம் அவனுக்கே உள்ள சிறப்புப் பண்பான மனச்சாட்சியினால் ஆகும்.

**பெண்கள் பற்றிய கிறிஸ்தவ சிந்தனை**

- சமகால யூத சமூகத்திலுள்ள பெண்களுக்கு மிகவும் கீழ்த்தரமான இடமே வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தூய வேதாகமத்தில் பெண் உயர்ந்த நிலையில் எடுத்துக்காட்டப்பட்டாள்.
- படைப்பின் முதலாம் கதையின்படி ஆணும் பெண்ணும் கடவுளின் உருவிலேயே படைக்கப்பட்டனர். (தொநூ.1:27) ஆகையால் ஆண் பெண் இடையே சமத்துவம் நிலவுகின்றது. ஒருவர் மற்றவரைவிட மேன்மையானவரோ தாழ்ந்தவரோ அல்ல.
- கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கிப் பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் எனக் கூறியது ஆண் பெண் இருவருக்குமே. (தொ.நூ. 1:28)
- தொ.நூ 2:18ன் படி தனியாக வாழும் மனிதனின் தனிமையைப் போக்குவதும் பூரணத்துவம் அடைவதும், மிருகங்கள், மரம், செடிகளாலன்றி துணைவியான பெண்ணாலேயே. துணைவி என்பதன் கருத்து ''துணையாக இருப்பவள்'' என்பதாகும்..
- தொ.நூ 2:21-22ற்கேற்ப ''ஆண்டவராகிய கடவுள் தாம் மனிதரிடமிருந்து எடுத்த விலா எலும்பை ஒரு பெண்ணாக உருவாக்கி மனிதனிடம் அழைத்து வந்தார்.'' விலா எலும்பை இருதயத்திற்கு மிக நெருங்கிய இடத்திலிருந்து எடுத்தார்.
- தலை → தலைவி

  பாதத்தில் → அடிமை

  ஆகையால் தலைவியோ அடிமையோ அல்ல. ஆணின் விலா எலும்பு ஒன்று குறைவாக உள்ளது. ஆகையால் நிறைவுபெறச் செய்ய இருவரும் அவசியம். குறைந்த நிலையில் உள்ள மனிதன் பெண் ஊடாக முழுமை பெறுகின்றான். இரத்தபந்தம், அழிக்க முடியா உறவு மற்றும் சமத்துவம் ஆகியவை விலா எலும்பினூடாக எடுத்துக்காட்டப்படுகிறது. தூய வேதாகமத்திற்கேற்ப பெண் ஆணின் பூரணத்துவத்திற்குக் காரணியான துணைவியாவாள்.
- மீட்பின் வரலாறு முழுவதிலும் மீட்புத் திட்டத்தில் பல்வேறு வழிகளில் பங்கெடுத்த பெண்கள் பலரைப் பற்றித் திருவிவிலியத்தைக் கற்கும் போது எம்மால் அறிந்து கொள்ள முடியும்.
- இறைவன் பாவிகளான மானிட சமூகத்தைப் பாவத்திலிருந்து மீட்க இயேசுவின் தாயாக தேர்ந்தெடுத்தது கன்னி மரியாளையே (கலா. 4:4). ஆகையால் மரியாள் பெண்களிடையே விசேட இடத்தைப் பெறுகிறாள். இயேசு கிறிஸ்து சிலுவையில் இருந்து தமது தாயாரைத் தான் அன்பு செய்த சீடரிடம் ஒப்படைத்ததன் மூலம் அவர் திருச்சபையின் தாயாராகின்றார் (யோவா. 19:25-26).
- கிறிஸ்து இயேசுவின் மறைப்பணியின் போது அவரைப் பின்தொடர்ந்து அவருக்குச் சேவை செய்த பெண்களுள் இலாசரின் சகோதரிகளான மார்த்தாளும், மரியாளும் விசேட இடத்தைப் பெறுகின்றார்கள். இயேசு கிறிஸ்துவுடன் ஏற்படுத்திக் கொண்ட நெருங்கிய விசேட தொடர்பினால் அவர்களின் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக அமைந்தது என நற்செய்தி விளக்குகின்றது.
- சமுகத்தில் ஒதுக்கப்பட்ட பெண்கள் மட்டில் இரக்கத்துடன் செயற்பட்ட இயேசு கிறிஸ்து அவர்களுக்குக் காட்டிய அன்பினை நயின் ஊர் கைம் பெண் மகனை உயிர்ப்பித்த சம்பவம் மூலமும், (உடலூனமுற்ற) கூனிப் பெண்ணை ஓய்வுநாளில் குணமடையச் செய்ததன் மூலமும் தெளிவாகக் காணமுடிகிறது.
- சமூகத்தின் இழிவுபடுத்தலுக்கும், அவதூறுக்கும் ஆளான சமாரியப் பெண் போன்றவர்களை இயேசுகிறிஸ்து சந்தித்ததன் ஊடாக தம் வாழ்வை மாற்றியமைத்துக் கொண்டதுடன் அவள் ஒரு மறைதூதுவராகவும் மாறினாள்.
- இயேசுகிறிஸ்துவுடன் மிகவும் நெருங்கியிருந்த சீடர்கள் அவரைக் கைவிட்டுச் சென்றாலும் யொவன்னா, மரியாள், மரிய மதலேனாள் - மரியா போன்ற பெண்கள் அவரை விட்டுச்

செல்லவில்லை. இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு நற்செய்தியில் முதல் சாட்சியானதும் மகதலேனாள் மரியாள் ஆனதுடன் சீடர்களுக்கு நற்செய்தியை எடுத்துச் சென்ற பெருமையும் அவளுக்கே உரித்தானது.

**மனிதனின் சமூக வாழ்வு பற்றிய கிறிஸ்தவ சிந்தனை**

- இறைவனின் மேலான படைப்பான மனிதன் சமூகத்திற்கு உரித்தானவன் (சமூக விலங்கு) என்பதை வேதாகமம் விளக்கப்படுகிறது (தொ.நூ.2:18). படைப்பின் செயற்பாட்டின்போது மனிதன் தனிமையாக வாழாமல் ஆண் பெண் உறவினை ஏற்படுத்திக் குடும்பமாக வாழவேண்டும் என்பது இறைவனின் நோக்கமாகும்.
- எவ்வித மானிட சமூகமானாலும் அதன் மிகச் சிறிய கூறாக அமைவது குடும்பமாகும். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நடைபெறும் திருமணம் குடும்பத்தின் அடித்தளம் ஆகும். வேதாகமத்திற்கேற்ப ஆதாம், ஏவாள் எனும் முதல் பெற்றோர்களான முதல் ஆணும் பெண்ணும் சமூகரீதியாக குடும்பமாக வாழ்வது இறைவிருப்பாகும். தனிமையாக வாழ்ந்த மனிதன் - ஆதாம் தமக்குச் சமனான பெண்ணான ஏவாளின் ஊடாக முழுமை அடைந்தான்.
- நம் ஆதிப் பெற்றோர் முதல் தொடர்ந்து வருகின்ற ஆண் பெண் உறவு இறையன்பிற்குச் சான்று பகர்கின்றது. திருமணத்தைத் திருவருட்சாதனமாக உயர்த்தியமை ஊடாக மெய்விவாகத்தின் தூய்மை பற்றிய இயேசு கிறிஸ்துவின் விருப்புத் தெளிவாகின்றது.
- திருமண பந்தத்தில் இணையும் இருவரது அன்பு, பிரமாணிக்கம் மற்றும் ஒருவரை ஒருவர் மதித்தல் போன்ற வாக்குறுதி மூலம் அர்ப்பண வாழ்வுக்குள் உட்படுகின்றனர். மெய்விவாகம் எனும் அருட்சாதன வாழ்வின் வழியாக அவரவர்களது கடமைகளையும் பொறுப்புக்களையும் நன்கு நிறைவு செய்து வாழும் விசேட அழைப்பினைப் பெறுவர். திருமணப்பந்தத்தில் இணையும் ஆணும் பெண்ணும் குழந்தைகளைப் பெற்று அவர்களை வளர்த்து அவர்களுக்குரிய கல்வி பெற்றுக்கொடுத்து சமூகத்தின் மிகச் சிறிய கூறான குடும்ப நிறுவனத்தினைக் கட்டியெழுப்புவர்.
- திருமண வாழ்வின் தூய்மையைப் பற்றி எடுத்துரைக்கும் திருத்தூதர் பவுல் அவர்கள் கணவர் மனைவியிடையே இருக்கவேண்டிய உறவினை இவ்வாறு எடுத்துரைக்கின்றார். கணவன் மனைவிக்கிடையே இருக்க வேண்டிய உறவு மிக உயர்ந்ததும் தூய்மையானதும் ஆகும். திருத்தூதர் பவுல் கணவன் மனைவிக்கு இடையேயுள்ள உறவினை இயேசு கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையேயுள்ள உறவுக்கு ஒப்பிடுகின்றார். இத்தொடர்பின் அடித்தளம் அன்பு ஆகும். கிறிஸ்து இயேசு திருச்சபையை அன்பு செய்ததுபோல கணவன் தன் மனைவியிடம் அன்பு செலுத்த வேண்டும். கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாய் இருப்பது போல கணவன் மனைவிக்குத் தலையாய் இருக்கிறார். இது அதிகாரத்தில் அல்ல அன்பின் தலைமைத்துவமே (எபே.5:22-30).
- கணவர் மனைவியருக்கிடையே உள்ள அன்பு ஒருவருக்கொருவர் பணிபுரியும் உயர்ந்த தூய்மையான அன்பாகும்.
- பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் மட்டிலுள்ள பொறுப்புக்களை எடுத்துக்கூறும் திருத்தூ தர் பவுல் அடிகளார் பிள்ளைகளை எரிச்சல் மூட்டாமல் ஆண்டவருக்கு ஏற்ற முறையில் கண்டித்துத் திருத்தி அறிவூட்டி வளர்க்க வேண்டும் என்கிறார் (எபே. 6:4).

**மானிட அபிவிருத்திக்கான கிறிஸ்தவ பங்களிப்பு**

- இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் மானிட அபிவிருத்திக்குப் பங்குதாரராக வேண்டும் என்பது இறைவனின் விருப்பமாகும் (தொ.நூ 1:28).
- இறைவன் மனிதனுக்குக் காட்டும் அன்பை வேதாகமம் எடுத்துரைக்கிறது. மனிதத்துவத்தை மதித்தல் மானிட அபிவிருத்திக்குப் பங்களித்தல் மனிதனின் கடமையாகும்.

- கிறிஸ்து இயேசுவினால் எடுத்துரைக்கப்பட்ட நல்ல சமாரியன் உவமை (லூக்10:25-37) ஊடாக மனிதத்துவத்திற்காக நேரத்தினை, உழைப்பை, பணத்தினைச் செலவிட வேண்டும் என விளக்குகிறது. அதற்கு இனம், மதம், ஏற்றத்தாழ்வு என்பன தடையாக அமையக்கூடாது. இலாசரும் செல்வரும் உவமை ஊடாகத் தம் சகோதரர் மட்டில் எவ்வாறு விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதை அவர் எடுத்துரைக்கிறார் (லூக். 16:19-31).
- மலைப்பொழிவின்போது தர்மம் மறைவாகச் செய்யவேண்டும் எனும் இயேசு கிறிஸ்துவின் கற்பித்தல் ஊடாக மானிட அபிவிருத்திக்குத் தர்மத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றது (மத். 6:1).
- மானிட விருத்திக்காகக் அன்பின் முக்கியத்துவத்தை யோவான் முதல் திருமுகம் எடுத்துரைக்கின்றது. தம் கண் முன்னே உள்ள சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்தாது கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது என்பது யோவானின் கூற்றாகும் (1யோவா. 4:20-21).
- மானிட அபிவிருத்திக்கான கிறிஸ்தவனின் பங்களிப்பு இறுதித் தீர்ப்பின் போது அவன் தீர்ப்புக்குள்ளாகக் காரணமாகும் என்பதினை விளக்குகிறது.
- மானிட அபிவிருத்திக்காக கிறிஸ்தவ பங்களிப்பு எந்த அளவுக்கு முக்கியமானது என்பதைப் புரிந்துகொண்ட திருத்தந்தை 23ம் அருளப்பர் மனிதர் இயற்கையாகவே சமூகத் தன்மை உள்ளவனாகையால் அயலாருடன் இணைந்து ஒவ்வொருவரினது நன்மைக்காக வேலை செய்வது மிக முக்கியம் என்பதினை அவனியில் அமைதி என்ற சுற்றுமடலின் ஊடாக விளக்குகின்றார்.
- மானிட அபிவிருத்திக்காக ''பொதுநலத்தை உருவாக்கும் அவசியத்தை இன்றைய உலகில் திருச்சபை விளக்குகிறது. அதாவது பொதுநலம் என்பது சமூகத்தில் வாழும் சகல இனத்தவரும் சகல மக்களும் முழுமை அடைய வழிவகுப்பதாகும்.'' (இல.26).

**பிரச்சினைகளைத் தீர்த்தல் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்**

- இரு நபர்களுக்கிடையே, இரு குழுக்களுக்கிடையே அல்லது இரு கருத்துக்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படாமல் முரண்பாடுகள் உச்சக்கட்டத்தை அடையும் போது பிரச்சினை ஏற்படும். மேலும் நீதியை, சமத்துவத்தை கட்டியெழுப்ப வேண்டும். படைப்புகள் அனைத்தையும் இறைபரிசாக மனிதனுக்கு வழங்கிய இறைவனின் விருப்பு மனிதன் படைப்புடன் சமாதானமாக ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதாகும். சண்டை சச்சரவுகள், துன்புறுத்தல், யுத்தம் ஆகியன இறைவனின் விருப்பமல்ல. சமாதானம் என்பது இயற்கையாக ஏற்படுவது ஒன்றல்ல. உரிமைகள் புறக்கனிக்கப்படும் போது, துன்புறுவோரைச் சுரண்டும் போது, ஏழைகளைத் தாழ்த்தும் போது சமாதானம் சீர்கெடுகின்றது.
- சமாதானம் எனும் கொள்கை எப்போதும் நியாயமான வேண்டுகோள்கள், நீதியான எதிர்பார்ப்புகள் மற்றும் உரிமைகளுடன் பின்னிப் பிணைந்துள்ளன. அவை நிறைவேறும்போது சமாதானம் ஏற்படுதல், எனும் நிறைவை அடையும் சந்தர்ப்பம் உருவாகிறது.
- சமாதானத்துக்காகப் பயன்படும் சொல் ''ஷாலோம்'' என்பதாகும். ஒருவரது நியாயமான எதிர்பார்ப்புக்கள், பிரார்த்தனைகள் நிறைவேறுவதால் அவருள் ஏற்படுகின்ற திருப்தியான சந்தோசம் என்பது அதன் கருத்தாகும். அது ஒருவரிடம் ஏற்படுகின்ற நிறைவின் அனுபவம் என விளக்கலாம்.
- சமாதானம் என்பது யுத்தமில்லாமல் மாத்திரம் இருப்பது அல்ல. மக்களிடமுள்ள வளங்களைப் பாதுகாப்பது ஒருவருக்கொருவர் இடையே உள்ள சுதந்திரமான தொடர்பு, தனி, பொது மரியாதை வழங்குதல் மற்றும் சகோதரத்துவத்தை ஏற்படுத்துவதன் ஊடாக இவ்வுலகில் சமாதானத்தை ஏற்படுத்தலாம் .
  - மனித நடத்தையில் உள்ள அமைதி
  - நியாயம் ஏற்படுதல் மற்றும் இரக்கத்தின் பிரதிபலன் என்பது க.தி.ம 234ல் வழங்கப்பட்டுள்ளது.

- திருத்தந்தை 23ம்அருளப்பர் எழுதிய ‘‘அவனியில் அமைதி’’ எனும் சுற்று மடலிலும் (1963) வத்திக்கான் வெளியீடான ‘‘இன்றைய உலகில் திருச்சபை’’ எனும் தொகுப்பிலும் (1968) சமாதானத்தைக் கட்டியெழுப்பல் தொடர்பான திருச்சபையின் நிலைப்பாடு உறுதிப்படுத்தப்படுகின்றது.

**சூழலைப் பாதுகாத்தல் தொடர்பான கிறிஸ்தவ பொறுப்பு**

- தொடக்கநூலில் குறிப்பிடப்பட்டுள்ள படைப்பின் கதையின் அடிப்படை நோக்கமாவது உலகிலுள்ள அனைத்துப் படைப்புகளுக்கும் மேலாக இறைவனின் ஆட்சியையும் வல்லமையையும் உறுதிப்படுத்துவதே. படைப்புகள் அனைத்தும் இயற்கை எனும் சூழல் உருவாகுவதும் இறைவனின் ஆட்சியூடாகவே.
- அவ்வாறே இறைசாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் சூழலின் பொறுப்பாளனாகவும் வழிகாட்டியாகவும் இருக்கின்றான். இறைகட்டளை ஊடாகச் சூழலைப் பாதுகாக்க மனிதன் கடமைப்பட்டுள்ளான் (தொ.நூ. 1:28).
- இயேசுகிறிஸ்துவின் மறைதூதுப் பணி பலஸ்தீன இயற்கை எழிலுடன் தொடர்புபட்டுள்ளமையை நற்செய்தி நூல்கள் ஊடாகக் காணலாம். இயற்கைக்கும் சூழலுக்கும் அதிபதி இயேசுகிறிஸ்து ஆவார். ஆகையால் இயற்கை அவருக்குக் கீழ்ப்படிந்துள்ளது (மாற். 4:39). அவரது போதனையின் போது இயற்கையுடன் தொடர்புள்ள சம்பவங்களைப் பயன்படுத்திக்கொண்டார் (மத். 6). மேலும் பாலஸ்தீனாவில் உள்ள பாலைவனங்கள் மலைக்குன்றுகள், மரஞ்செடிகள், வயல்வெளிகள், மிருகங்கள், பறவைகள், ஆறுகள், கடல், வானம், காற்று அவருக்கு எப்போதும் புதியனவல்லை.
- சூழலை அன்பு செய்த அவர் தமது போதனைகளுடாக அவற்றைப் பயன்படுத்தியதூடாக அவற்றின் மேன்மையை எடுத்துக்காட்டுகிறார்.
- இறைவன் தாம் உருவாக்கிய அனைத்தும் நன்றாக இருந்ததாகக் கண்டார். இயற்கை கிறிஸ்து இயேசுவின் வாழ்விற்கு மிக நெருக்கமாக அமைந்தது. மனிதனின் பேராசை, சுயநலம் ஆகியவற்றால் தினந்தோறும் சூழல் அழிந்து கொண்டே செல்கிறது. தற்கால மனிதனுக்கு முகம் கொடுக்க நேரிடும் பயங்கரமான அழிவுகளுக்குக் காரணமாய் அமைவது சூழலை மாசடையச் செய்து அழிப்பதாகும்.
- இயற்கை எழில் அழிந்து போவதைத் தடுத்து அவற்றை மாசடையச் செய்யும் வழிகளைத் தடுத்து அதனைப் பாதுகாத்து வழிநடத்தத் தேவையான செயற்பாட்டைச் செய்வது மனிதனின் தலையாய பொறுப்பும் கடமையும் ஆகும்.

**கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.**

- மனித மான்பினை பாதுகாப்பதற்காக கிறிஸ்தவனாகிய நீர் செயற்படும் முறைகள் ஐந்தினை குறிப்பிடுக.
- ‘‘பெண்கள் தொடர்பான கிறிஸ்தவ சிந்தனை’’ எனும் தலைப்பில் பத்திரிகைகளுக்கான ஒரு கட்டுரையை வரைக.
- கிறிஸ்தவனாக சூழலை பாதுகாக்கும் பொருப்பினை எவ்வாறு நிறைவேற்றுவீர் என எழுதவும்.

**உசாத் துணை நூல்கள்.**


1. திருவிவிலியம்,
2. இன்றைய உலகில் திருச்சபை எனும் தொகுப்பு, இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு.

**தேர்ச்சி 10.0 : மனித மாண்பைப் பாதுகாப்பதோடு வேற்றுமையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 10.2 : ஒரே திருச்சபையைக் கட்டியெழுப்புவதில் ஒற்றுமையாகச் செயற்படுவார்.**

**பாடவேளைகள் : 15**

**கற்றல் பேறுகள் :**

- கிறிஸ்தவ திருச்சபையின் ஒற்றுமை தொடர்பான தகவல்களைத் திரட்டுவார்.
- திருச்சபையின் ஒற்றுமைக்காகச் செயற்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- சபை ஒருமைப் பாட்டிற்காகச் செபிப்பார்.
- ஏனைய சபைகளுக்கு மதிப்பளிப்பார்.

**கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பு**

- மீட்பின் திட்டத்தை மானிட சந்ததிக்கு இறுதிவரை எடுத்துச் செல்ல இயேசுகிறிஸ்து திருத்தூதர் பேதுருவின் தலைமைத் துவத்தின் கீழ் திருச்சபையை நிறுவினார்.
- ஒரே இறைவனால் அழைப்புப் பெற்று ஒரே இறைவனுக்கு உரிய ஒரே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட ஒரே திருச்சபையின் ஒன்றிப்பு வெளிவாரியாக தெளிவுபடுத்தப்படவேண்டும். இயேசு கிறிஸ்து ஒரே திருச்சபையை மாத்திரம் நிறுவினார். திருச்சபைகள் பலவற்றை நிறுவவில்லை. திருச்சபையில் கட்டாயமாகக் காணப்பட வேண்டியதும் ஒன்றில் இருந்து ஒன்றைப் பிரிக்க முடியாததுமான பண்புகள் நான்கு இங்கே தரப்பட்டுள்ளன.
    1. ஏகம்
    2. பரிசுத்தம்
    3. கத்தோலிக்கம்
    4. அப்போஸ்தலிக்கம்
- ஏகம் என்றால் திருச்சபையின் ஒற்றுமை. திரித்துவம் திருச்சபையின் ஒற்றுமையின் அடிப்படையாக அமைகிறது. சகல விசுவாசிகளும் இறைவனால் அழைக்கப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டுள்ளனர். ஆவியானவர் விசுவாசிகள் அனைவருடனும் வாழ்ந்து அவர்களைச் சகோதர அன்பால் பிணைக்கிறார். (L.C.C. 813) ஆகையால் பரிசுத்த ஆவியானவரே திருச்சபையை ஒற்றுமைப்படுத்துகிறார். ஏகம் பரிசுத்த ஆவியின் செயற்பாடு ஆகையால் அது ஒருபோதும் அழியவோ, குறைந்து போகவோ இடமளிக்கப்படமாட்டாது.
- ஆகையால் இருப்பது ஒரே திருச்சபையே. கிறிஸ்து தம்மை வெளிப்படுதியுள்ள 7 முறைகளுள் ஒன்றான ஏகம் திருச்சபையினுள் வெளிக்கொணரப்படுகிறது (எபே. 4:4-6). அதற்கேற்ப திருச்சபைக்கு ஒரே எதிர்பார்ப்பு, ஒரே ஆவியானவர், ஒரே இறைவன், ஒரே விசுவாசம், ஒரே திருமுழுக்கு, ஒரே இறைதந்தை மாத்திரமே உள்ளன.
- ஆகையால் திருச்சபை இயல்பில் ஒரே திருச்சபை ஆக இருக்க வேண்டும்.
- திருச்சபையில் பிளவுகள் ஏற்படும்போது அதன் ஒருமைக்குப் பங்கம் ஏற்படுகின்றது. ஒரே கத்தோலிக்க, அப்போஸ்தலிக்க திருச்சபை கி.பி 1504ம் ஆண்டு நடைபெற்ற மகா பெரும் சபை பேதகத்தினால் கீழைத்தேய, மேலைத்தேய எனவும், 15ம் நூற்றாண்டில் நடைபெற்ற மறுமலர்ச்சியால் கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்தாந்து எனவும் பிரதான சபைகள் எனவும், அடிப்படைவாத சபைகள் எனவும் பிரித்துள்ளனர். அதனால் திருச்சபையின் ஏகம் மாத்திரம் அல்ல பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம் ஆகிய பண்புகளும் பாதிக்கப்பட்டன. இப்பிளவினைக் காரணியாகக் கொண்டு திருச்சபையினுள் பல பிரச்சனைகள் ஏற்பட்டது.

அதாவது பிரிந்துள்ள சபைகள் ஒரே மறைதூதுப்பணியை எவ்வாறு செய்யலாம். ஒரே கிறிஸ்துவைப் பற்றி எவ்வாறு போதிக்கலாம் அதற்கேற்ப திருச்சபையின் இப்பிளவு அதன் திருத்தூதுப்பணிக்குத் தடையாக அமைகிறது. ஏனைய மதத்ததவருக்கு எடுத்துக்காட்டாக அமையவில்லை.

- 20ம் நூற்றாண்டிலே பிரிந்து சென்ற கிறிஸ்தவச் சபைகளை ஒன்றிணைக்கும் செயற்பாடுகள் ஆரம்பமானது. புரட்டஸ்தாந்து சபையே அதற்கு முன்னிலை வகுத்தது.
- இலங்கையில் பிரதான கிறிஸ்தவ சபைகள் 8.

அவையாவன:

1. கத்தோலிக்க திருச்சபை
2. இலங்கை சபை (இங்கிலாந்து சபை)
3. மெதடிஸ்த சபை

4 பப்டிஸ் சபை

5 ஒல்லாந்த புரட்டஸ்தாந்து சபை (கிறிஸ்தவ புரட்டஸ்தாந்து சபை)

6 பிரஸ்பிடேரியன் சபை

7. தென்னிந்தியச் சபை
8. இரட்சணிய சேனை

- தேசிய கிறிஸ்தவ சபைகளின் கீழ் பதியப்பட்டடுள்ளன. (இச்சபைகளுள் இலங்கை சபை, மெதடிஸ்த சபை, பப்டிஸ் சபை ஆகியவற்றை 9ம் தேர்ச்சியில் கற்றோம்.

**கத்தோலிக்க திருச்சபை**

- உரோமன் கத்தோலிக்க திருச்சபை என்று கூறப்படும் இச்சபை இயேசு கிறிஸ்துவினால் ஸ்தாபிக்கப்பட்ட சபை ஆகும். ''நான் உனக்குக் கூறுகிறேன். உன் பெயர் பேதுரு இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்.... விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருகிறேன்'' (மத்.16:18-19).
- அப்போஸ்தலரான புனித பேதுருவின் வழிவருபவராக உரோமையின் ஆயர் பதவியை வகிக்கும் திருத்தந்தையினர் இச்சபையின் அகில உலக ஆயனாக தலைமைத்துவத்தை வகிப்பார். திருத்தந்தையின் தலைமையின் கீழ் பல மறைமாவட்டங்களில் ஆயர்கள் ஒன்றிணைந்து மறைதூதுப் பணியில் ஈடுபடுவர்.
- இலங்கையில் அதிகமான கிறிஸ்தவர்கள் கத்தோலிக்க திருச்சபையில் அங்கம் வகிப்பதுடன் 12 மறை மாவட்டங்கள் உள்ளன. ஆயரின் தலைமைத்துவத்தின் கீழ் அம்மறைமாவட்டங்களின் திருத்தூதுப்பணி நடைபெறும்.

**ஒல்லாந்தர்**

- இச்சபை 1647ல் இலங்கையில் தம் தூதுப்பணியை ஆரம்பித்தது.
- ஆரம்ப காலத்தில் ஒல்லாந்தருக்கு மாத்திரம் உரித்தான இச்சபை இலங்கை மக்களிடையே பரவியது.
- ஒல்லாந்தர் இலங்கையை ஆக்கிரமித்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இச்சபை இலங்கையின் பழமை வாய்ந்த புரட்டஸ்தாந்து சபையாகும்.

**பிரஸ்பிடேரியன் சபை.**

- இச்சபை 1747ம் ஆண்டு காலி நகரில் ஆரம்பிக்கப்பட்டது.
- ஒல்லாந்தர் சபையின் ஆதரவைப் பெற்று இச்சபை வேகமாகப் பரவியதுடன் இதன் தூ துப்பணி கொழும்பு, கண்டி ஆகிய இடங்களிலும் இடம் பெற்றது.

**தென்னிந்திய திருச்சபை**

- அங்கிலிக்கன், மெதடிஸ்ற், பிரஸ்பிடேரியன், கொன்கிரிகேசனல் போன்ற பல்வேறு சமய மரபுகள் உள்ள பல சபைகளின் ஒன்றிப்பின் பிரதிபலனாக 1947ம் ஆண்டு புரட்டாதி 27ம் திகதி இச்சபை இந்தியாவில் உருவாகியது.
- ஆயரின் ஆன்மீக வழிகாட்டலின் கீழ் செயற்படுவதுடன் ஆயர் பதவியை நிர்வகிப்பது SYNOD ஆகும். இச் SYNOD இனால் ஆயர் நியமிக்கப்படுவார்.

**கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்புக்கான வேதாகம படிப்பினைகள்**

- கிறிஸ்தவ ஒன்றிப்புத் திருச்சபையின் திருத்தூதுப் பணிக்கு அத்தியவசியமான ஓர் அங்கமாவதோடு சபைகளுக்கிடையான ஒன்றிப்பும் அத்தியாவசிய காரணியாகும்.
- பல்வேறுபட்ட சபைச் சம்பிரதாயங்களைச் சார்ந்த கிறிஸ்தவர்கள் அவர்களிடையே நெருங்கிய ஓர் உறவை ஏற்படுத்திக் கொள்ளவும் புரிந்து கொள்ளவும் ஒன்றாயிருந்து செயற்படவும் எடுக்கும் முயற்சி கிறிஸ்தவ சபையின் ஒன்றிப்பு எனப்படும்.
- சபையின் மறைதூதுப் பணிக்குச் சபைகளின் ஒற்றுமை அத்தியாவசியம் ஆவதுடன் சபைகளுக்கு இடையான ஒற்றுமைக்கும் ஊன்றுகோலாக அமைகின்றது.
- இயேசுகிறிஸ்து தமது உன்னத குருத்துவ வேண்டுதலின்போது எதிர்காலச் சபைகளின் ஒற்றுமைக்காக வேண்டினார். ''அவர்களுக்காக (திருத்தூதர்களுக்காக) மட்டும் நான் வேண்டவில்லை. அவர்களுடைய வார்த்தையின் வழியாக என்னிடம் நம்பிக்கை கொள்வோர்க்காகவும் (எதிர்கால சபை) வேண்டுகிறேன். எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக. தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக'' (யோவா. 17:20-23).
- புனித பவுல் திருச்சபையின் ஒற்றுமையின் அவசியத்தை 1 கொரிந்தியர் 1:10-13 ஊடாக வலியுறுத்துகிறார்.
- சகல சபைகளும் ஒன்றாகச் சிந்திக்கவும் கலந்தாலோசிக்கவும், செயற்படவும், வழிபடவும் ஒருவருக்கொருவர் உதவவும் மாத்திரம் அல்ல, ஒருவருக்கொருவர் சவாலாக அமைதல், திருத்துதல், தர்க்கித்தல் என்பவற்றின் ஊடாக வளர்ச்சியடையச் செயற்படுவார்.

  ஆகையால் அவர்கள்

  - ஒரே விசுவாசத்தில் நற்கருணை நாதருடன் ஒன்றிணைவர்.
  - தூதுரைப் பணிக்காகச் சான்று பகர்வார்.
  - மனிதனுக்காகச் சேவை செய்யவும் அநீதியை எதிர்த்து நிற்கவும், சமாதானத்தைக் கட்டியெழுப்பவும் இயற்கையைப் பாதுகாக்கவும் கடமைப்பட்டுள்ளனர்.
  - மறுமலர்ச்சியினூடே ஒற்றுமை, வழிபாடு, சேவை, திருத்தூதுப்பணி ஆகியவற்றுக்காகத் தம்மை அர்ப்பணிப்பார்.

**திருமுழுக்கு, திருப்பலி, மற்றும் போதகர் பதவி (லீமா ஆவணம்) - BEM**
**Baptism, Eucharist and Ministry (Lima Text)**

- W.C.C. யினால் 1982 தை 15ம் திகதி பேரு நாட்டில் லீமா நகரில் வெளியிடப்பட்ட ஒரு ஆவணம்.
- லீமா ஆவணம் எனக் குறிப்பிடப்படும். இவ் ஆவணம் சபை வாழ்க்கை மற்றும் விசுவாசம் தொடர்பான உடன்பாடு மற்றும் உடன்பாடின்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்ட ஒன்றாகும்.
- அகில உலக கிறிஸ்தவ ஆவணமாக ஏற்றுக் கொள்ளவும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் இன்றும் பயன்படும்.

- BEM எனும் குறுகிய பெயரினால் குறிப்பிடப்படும் இவ் ஆவணத்தில் திருமுழுக்கு திருப்பலி மற்றும் போதகர் பதவி ஆகியவற்றைப் பற்றி விளக்குவது அதற்காகக் கட்டியெழுப்பப்படும் ஒற்றுமையை எடுத்துக்காட்டவே.

திருமுழுக்கு - கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வுக்கு உட்புகுதல்.
- அவரின் மரணம் மட்டும் உயிர்ப்பில் பங்கேற்பதால் புதிய வாழ்வுக்கு அடித்தளம் இடப்படும்

திருப்பலி - நன்றி செலுத்துதல், நினைவு கூரல், பங்கேற்றல் அல்லது திரு உணவு எனக் குறிப்பிடுவர்.
- கிறிஸ்து இயேசுவின் வாழ்க்கைத் தியாகத்தினால் வெளிப்படும் சமூக மற்றும் மானிட உணர்வுகள் திருப்பலியின் ஊடாக வெளிக்கொணரப்படும்

போதகர் பதவி - போதகர் பதவி சபையின் அப்போஸ்தலிக்கத்தை எடுத்துக்காட்டும் சேவைக்காக வழங்கப்படும் அதிகாரம்
- கிறிஸ்துவிடமிருந்து பெற்றக்கொள்ளும் இப் பதவியினைத் தனிப்பட்ட முறையிலும் குழுவாகவும் பயிற்றுவிக்க வேண்டும்.

- ஆயர் பதவி மறைமாவட்டத்திற்குள் கற்பிக்கவும் தலைமைதுவம் தாங்குவது போன்று ஏனையோருக்காகத் தன்னை அர்ப்பணிக்கவும் கடமைப்பட்டுள்ளார் என லீமா ஆவணத்தில் கூறப்படுகிறது. ஆகையால் BEMல் போதகர் பதவியின் செயற்படும் மேய்ப்புப் பணி போன்றே செயன்முறையில் ஒன்றிணைந்ததாக இருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.
- புரட்டஸ்தாந்து புரட்சியின் பின் ஏற்பட்ட புரட்டஸ்தாந்து சபையின் கடுமையான சட்ட திட்டங்களினால் சுயாதீன சபைகள் உருவாவதனைத் தடுக்க முடியாத ஒரு காரணமாகியது. ஆகையால் கிறிஸ்தவ சபைகளிடையே ஓர் அளவுக்குப் பொதுவான உடன்பாட்டினை ஏற்படுத்துவதற்கு 20ம் நூற்றாண்டில் (Ecumenical Movement) உருவானது.
- இவ் இயக்கம் இரு செயலூக்கமுள்ள நோக்கங்களை முன்வைத்து நடைமுறைப் படுத்தப்படுகின்றது. செயன்முறைமிக்க கருத்துக்களைக் கொண்டு இன்று நடாத்தப்படும்.

  1. பொதுவான செயற்பாடுகளின் போது ஓரளவு பங்கேற்றலை பல்வேறுபட்ட சபைகளிடையே ஏற்படுத்தல் ஆகும்.

  2. இயன்றளவு எல்லா இடங்களிலும் பல்வேறுபட்ட சபைகளிடையே ஒன்றுடன் ஒன்று இணைப்பை ஏற்படுத்தலாகும்.
- முதலாவது நோக்கம் தொடர்பாக மாபெரும் வெற்றி ஈட்டியது 1948ல் நடாத்தப்பட்ட சர்வதேச சபைகள் சம்மேளனம் (World Council of Churches) எனும் பெயரில் வெளிநாட்டுச் சபைகளின் பங்கேற்போடு நடாத்தப்பட்டபோதே ஆகும்.

**சர்வதேச சபைகள் சம்மேளனம் (Wold Council of Church)**

- W.C.C என்பது திருவிவிலியத்தின் படி இயேசுகிறிஸ்துவைக் கடவுள் ஆகவும் மீட்பர் ஆகவும் நம்பிக்கையை வெளிப்படுத்தும் நட்புறவான இயக்கமாகும்.
- ஆகையால் அவர்கள் பிதா சுதன் பரிசுத்த ஆவியை மகிமைப்படுத்தும் போது அழைத்தலாக அதனை நிறைவேற்றிக் கொள்ள நட்புறவில் ஒன்றிணையும் குழு ஆவர்.
- யோவான் 17:21ன் படி ''உலகம் நம்பும்'' என்பதற்காக அவர்கள் கூறுவது ஒரே நம்பிக்கையை அறிக்கையிடும் ஒரே நற்கருணை ஊடாக இறைவனை வழிபடும் மற்றும் பொது வாழ்வினுள் ஒற்றுமையை ஏற்படுத்துவதன் ஊடாகவே.
- தற்காலச் சபைகளை விட WCC வேறுபட்டிருப்பது சர்வதேச சபையாக அல்லது ஒன்றுபட்ட

இயக்கமாக இருப்பதால் ஆகும். மிகப் பிரபல்ய முறையில் Ecumenical Movement ஆகவே அவர்களின் அடிப்படை நோக்கம் கிறிஸ்தவ ஒற்றுமை ஆகும்.

- உலகளாவிய பிரசித்தி பெற்ற சர்வதேச சபைகளின் திட்டம் ஆகையால் WCC 110 நாடுகளுக்கு மேலாக 500 கோடி அளவிலான அங்கத்தவர்களைக் கொண்ட இயக்கமாக இருப்பதாலாகும்.
- இதன் அங்கத்துவத்தை வகுக்கும் சபைகளாக Orthodox Churches, இங்கிலாந்து சபை, பப்டிஸ், இலத்தரன், மெதடிஸ்ட் மற்றும் மறுமலர்ச்சி சபைகள் (Reformed Churches) ஆகியன உள்ளடங்கும்.
- இவ்வாறு ஒன்றிணையும் சபைகளின் எண்ணிக்கை 348
- எவ்வாறாயினும் உரோமன் கத்தோலிக்க திருச்சபை இதில் அங்கத்துவம் வகிக்கவில்லை.

**இங்கிலாந்து உரோமன் கத்தோலிக்க சர்வதேச ஆணைக்குழு**
**(ARCIC - Anglican Roman Catholic Internatinal Commission)**

- காண்டற்பெரியில் பேராயரான மேதகு மைக்கல் ரம்சி (Michael Ramsey) மற்றும் திருத்தந்தை 6ம் சின்னப்பர் ஆகியயோரால் 1967ல் ஆரம்பிக்கப்பட்டது.
- உரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கும் இங்கிலாந்து திருச்சபைக்கும் இடையிலான புரிந்துணர்வால் நற்செய்தியை அளித்தலில் சாட்சிகளாவதும் கிறிஸ்தவ அழைப்பிற்கேற்ப நிறைவாழ்வு வாழ்வதும் இதன் நோக்கமாகும்.
- உள்நாட்டு மற்றும் உலக சபைகள் மற்றும் அவற்றின் சேவைகள் ஊடாகப் செயற்படும் ARCIC சபையின் நல்லொழுக்கம் பற்றிக் கற்பித்தலில் கவனம் செலுத்தப்படும்.
- இங்கிலாந்துச் சபையும், உரோமன் கத்தோலிக்க சபையும், சர்வதேச ஆணைக்குழுவும் இரு சந்தர்ப்பங்களில் செயற்படுத்தப்படும்.

  இது கிறிஸ்தவ சபையின் ஒன்றிப்புக்காக இறையியல் பின்னணியை உருவாக்கும் ARCIC -II ஊடாக வெளியிடப்பட்ட 1970ல் இருந்து 1981 வரையான அறிக்கையில் திருப்பலி போதகர் பதவி, சபையின் அதிகாரம் தொடர்பான விடயங்களை அதிகமாக விபரித்துள்ளமையைக் காணலாம்

  ARCIC-II ஊடாக 1986-2005 வரையான காலப்பகுதியில் மீட்பும் சபையும் 1986, ஒன்றிணைப்பின் சபை 1991, கிறிஸ்தவ வாழ்வு, நல்லொழுக்கம் ஒன்றிணைப்பின் சபை 1993, அதிகாரத்தின் பரிசாக 1999, மரி அன்னை கிறிஸ்துவினுள் அரும்கொடையும் எதிர்பார்ப்பும் 2005 ஆகிய பரந்த அலகுகள் ஊடாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதாக அறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

**கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.**

- தேசிய கிறிஸ்தவ சபைகளின் கீழ் பதியப்பட்ட எட்டு சபைகளை பெயரிடுக.
- லீமா ஆவனத்தைப் பற்றி சுருக்கமாக விளக்குக.
- திருச்சபையில் கட்டாயமாக கானப்பட வேண்டிய நான்கு பண்பினை குறிப்பிட்டு அவற்றை சுருக்கமாக விளக்குக.

## உசாத் துணை நூல்கள்.


1. திருவிவிலியம்- சிங்கள புதிய பிரதி மூன்றாம் திருத்தம் 2006. இலங்கை வேதாகம சங்கம்.
2. கிறிஸ்தவம் அல்லாத சமயங்களோடு திருச்சபைக்கான உறவு பற்றிய அறிக்கை. (NA)
3. சமய சுதந்திரம் பற்றிய அறிக்கை (DHC)
4. இன்றைய உலகத்தின் திருச்சபை பற்றிய அருட்பணிகள் கோட்பாடு விளக்கம் (GS)
5. கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித் தொகுப்பு (UR)
6. தசனாயக. யூட். (அருட்தந்தை), ''அப்போஸ்துலுவன்கே பெவத என எகம சுத்தொ கத்தோலிக்க சபாவ'', பான் டெம்ப, சுமித் லக்ஸ்மன் பிரின்டஸ், 2009. ஜனவரி - மார்ச் 21-26
7. தாம் தியம்ப மூன்றாம் வெளியீடு 2004 சமயங்களுக்கிடையிலான உரையாடல்.